Sangathamil
# சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
குரல் – 83 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 அக்டோபர் 2024




## உங்களுக்காக
## நாங்கள் மடிகின்றோம் ஈழத்தில்!

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

NISHANTHAN LAW OFFICE

SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney

NOTARY SERVICES

NEW LOCATION

Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com

39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT

- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING

Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
Ontario
For all your vehicle repair and Service needs
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call
Subas
Cell:
416-206-9489
Office:
416-628-4399

| | |
|---|---|
| AC | $119.99 + |
| OIL CHANGE | $59.99 + |
| USED TIRE | $74.99 + |
| BRAKES JOB | $299.99 + |

7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்

Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

வெள்ளி அச்சுப் பதிப்பக நூல் வெளியீட்டாளர்கள்
Silver Print House
Digital Printing, Graphics & Publication
உங்களது தேவையே எங்களது சேவை
4775 Yarmarok Crt,
Mississauga Ontario L5R 0A6.
Contact: Muhunthan (437) 423 - 5460
மேலதிக தொடர்புகளுக்கு : முகுந்தன் சிவதாசன்
silverprinthouse@gmail.com

RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kenndy Rd, Unit 03
Scarborough ON M1P 2L5
Office: 416.270.1111
Fax: 416.270.7000
Kajenpillai@gmail.com
www.remaxace.com
Kajan Kasippillai
Sales Representative
Dir: 416.930.4608

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

விளம்பரத் தொடர்புக்கு அழையுங்கள்: 437.345.4203


Sangathamil
சங்கத்தமிழ்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
சர்வதேச மின் செய்தித்தாள்
www.sangathamil.ca

2025 உலக வணிகம்
ULAGA VANIKAM
உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.ca
ulagavanikam@gmail.com

## தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

**வன்முறையை மென்முறையால் வெற்றி கொள்ள முடியாது என்பதை உணர்ந்து கொண்டதால்தான் நாம் வன்முறைப் போராட்டத்தை தழுவிக் கொண்டோம்.**






# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபோசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# விடுதலையின் பாதையில் அழியாத தடம்

## லெப். கேணல் ராகவன்

1999 நவம்பர் இரண்டாம் நாள். உலகின் செய்திக் கதவுகளெல்லாம் பொங்கிப் பிரவாகித்த 'ஓயாத அலை' களின் வீச்சுக்கு வழிவிட்டன. உலக இராணுவச் சரித்திரத்தில் நிலைபெற்ற ஓயாத அலைகள் மூன்றின் முதலாம் நாள் தமிழீழத்தின் சிறந்த போர்த் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் ராகவனையும் தன்னுடன் அணைத்துக் கொண்டது. வெற்றிமுரசு கொட்டிச் சிங்களம் செய்த பெரும் போர் நடவடிக்கைகளின் போதெல்லாம் எதிர்த்து நின்று போரிட்ட புலிகளின் போர்த் தளபதி அவன். உலக வரலாற்று ஏடுகளிற் பெரும் சரித்திரப் பதிவுகளாகிய தலைவர் பிரபாகரனின் படை நடத்தல்களிலெல்லாம் முன்நின்று உழைத்த வீரப்புலி அவன். அவனும் 'ஓயாத அலைகள் 03' இன் சரித்திரத்திற்காகத் தலைசாய்க்க அச்சமர் பெருமை மிகு வெற்றியோடு நிறைவுபெற்றது.

ராகவன் இரவும் பகலும் ஓயாது உழைத்து வளர்த்துவிட்ட சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் போராளிகள் எதிரியரண்களை உடைத்து உட்புகுந்து புளியங்குளம் வரையும் கைப்பற்றிச் சற்று ஓய்வெடுத்த போது 'எங்கட சண்டைகளையும் வெற்றிகளையும் பார்த்துச் சந்தோசப்பட ராகவன் அண்ணை இல்லாமற் போய்ட்டாரே' என்று அங்கலாய்த்தனர். 'எதிரி அவரைத் தடையிலேயே வீழ்த்திப் போட்டான். பாவம் எதிரி அவனுக்கு எப்படித் தெரியும் ராகவன் அண்ணை தான் இப்பவும் எங்கட மனங்களுக்குள்ள இருந்து எங்களை வழிநடத்திறார் எண்டு' அதுதான் உண்மையில் நடந்தது. ஆம்... தானில்லாத வேளைகளிலும் வீரர்களை வெற்றியின் பாதையில் வழிநடத்தக்கூடிய வழிகாட்டலின் உயரிய தலைமைப் பண்ப எங்கள் தலைவன் வளர்த்தெடுத்த அந்த தளபதியிடம் இருந்தது.

ராகவன்! அற்புதமான போராளி ஆற்றல் மிக்க போர்த்தளபதி எல்லோரையும் நேசித்ததால் எல்லோராலும் நேசிக்கப்பட்ட ஓர் உயரிய மனிதன் நீண்ட - ஈடிணையற்ற விடுதலைப் போர் வரலாற்றில் அவன் ஓர் அத்தியாயத்தின் பதிவு. அவனின் வரலாற்றை எழுதுவதானால் ஈழப்போரில் தொண்ணூறுகளில் போரியலில் முக்கியமான வரலாற்றுக் கட்டமொன்றை எழுதியேயாக வேண்டும். அக்கால கட்டத்தின் முக்கியத்துவமான போர்க்களங்களில் எல்லாம் சரித்திரம் படைத்த வீரனவன்.

90-91 காலப்பகுதியில் மாவட்டரீதியில் நடந்த சிறுசிறு தாக்குதல்கள் பலவற்றில் பங்கு கொண்டவன் ராகவன். அந்தப் புலிக்குள்ளிருந்த இராணுவ ஆற்றல்களையும். போராட்டப்பற்றையும். உறுதியையும் மணலாற்றின் சிங்களப் படைகளின் 'ஒப்பரேசன் மின்னல்' வெளிக்கொணர்ந்தது. வன்னி மாவட்டத்தின் 1.9 படையணியில் தளபதி தீபனின் வீரர்கள் நூற்றைம்பது பேர் கொண்ட அணியிற் சாதாரண போராளியாக ராகவனும் களம் இறங்கினான். போராட்ட வரலாற்றில் மிகவும் கடுமையான போர்க்களங்களில் 'மின்னல்' களமும் முக்கியமானது. ஆனையிறவிற் பாய்ந்த புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி விட்டதாக கற்பனை செய்த சிங்களம் தமிழீழத்தின் இதய பூமியை ஆக்கிரமித்து விடுதலைப் போருக்கு முடிவுகட்ட எண்ணியது. பல்லாயிரம் எனத்திரண்டு. நவீனரக ஆயுதங்களை ஒன்றிணைத்து. சிங்களப்படைகள் போரிற் குதித்திருந்தன. எறிகணைகளும் போர்விமானங்களும் இதய பூமியை அதிரவைக்க. குண்டு மழையுட் குளித்தபடி மண்காத்த மறவர்களுள் ராகவனும் ஒருவனாகப் போரிட்டான்.

எந்தவொரு போர்வீரனுக்கும் கடினமான போர்க்களம் அது. அந்தப் போர்க்களத்தின் ஒவ்வொரு நாளும் ராகவனை நன்கு இனங்காட்டியது. உணவும் நீருமின்றி நாட்கணக்காய்ப் போரிட்ட பொழுதெல்லாம் சுறுசுறுப்பாக இயங்கி முன்மாதிரியாகச் செயற்பட்ட அந்த வீரனின் செயல்கள் எமது அணித் தலைவருக்குக்கூட உற்சாகத்தை கொடுத்தனவென்றால் அது மிகையல்ல. 'மின்னல்' களத்திலேயே சமரின் குறுகிய நாட்களில் தளபதி தீபன் அவர்களால் ஏழுபோர் கொண்ட அணியொன்றின் தலைவனாக்கப்பட்டான். ஒவ்வொரு புலி வீரனும் வரலாற்றிற் பெருமைகொள்ளத்தக்க அந்தச் சமரிற் பங்கு கொண்ட 1.9 படையணியில் இறுதியாகத் திரும்பிய ஐவருள் ராகவனும் ஒருவன்.

'மின்னல்' முடிந்து சில நாட்களிலேயே சிங்களப் படைக்குப் பேரிடி கொடுத்த முல்லைத்தீவு இராணுவ முகாமின் 3ஆம் கட்டை மினி முகாமின் மீது பாய்ந்த புலியணியில் ராகவன் 15 பேர் கொண்ட அணியின் பொறுப்பாளனாக இருந்தான். சிங்களப்படையினர் பத்துப்பேரின் உடல்களும் பெருமளவு ஆயதங்களும் கைப்பற்றப்பட்ட அந்தத் தாக்குதலில் ராகவனின் அணி தனது பணியைச் செவ்வனே செய்தது.

1992ஆம் ஆண்டில் ராகவன் நன்கு இனங்காணப்பட்ட அணித் தலைவனாகி விட்டான். அவனது ஒவ்வொரு செயற்பாட்டிலும் அவனது ஆளுமை வெளிப்பட்டது. இந்தக் காலப்பகுதியில் அந்த வீரன் செய்த பல வெற்றிகரமான அதிரடித் தாக்குதல்கள் சிங்களப்படைகளைக் கதிகலங்கச் செய்தன. வண்ணாங்குளம். கொம்பாவெள, செட்டிகுளம்... என இக்காலப்பகுதியில் மட்டும் பதின்மூன்றுக்கும் மேற்பட்ட வெற்றிகரமான தாக்குதல்களில் அவன் பங்குகொண்டான். குறுகிய காலத்திலேயே வளர்ச்சி கண்ட அந்தப் போர் வீரன் அப்போது 45 பேர் கொண்ட அணியொன்றின் பொறுப்பாளனாக்கப்பட்டிருந்தான். வன்னியில் எதிரியிருந்த மூலைமுடுக்குகளிலெல்லாம் அந்தப் புலிவீரனின் துப்பாக்கி சடசடத்தது. வழிநடத்தும் அவனின் குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.




2ஆம் கட்ட ஈழப்போரிற் புலிகள் இயக்கத்தின் போரியல் ஆற்றலை வெளிக்கொணர்ந்து. சிங்களத்தின் போர். அரசியல் அரங்குகளை அதிரவைத்து. உலகின் புருவங்களை உயர வைத்த 'இதயபூமி 01'. 'யாழ்தேவி' ஆகியவற்றுக்கெதிரான முறியடிப்புச் சமர்கள். 'ஒப்பரேசன் தவளை' ஆகிய களங்களில் தனது அணியுடன் முக்கிய சண்டைகளில் இறங்கி காத்திரமான வெற்றியை ஈட்டினான்.

ஒவ்வொரு சண்டையிலும் அந்தப் புலியின் ஆளுமை புடமிடப்பட்டது. அந்த வீரனுக்கு அதிஷ்டவசமாக எண்ணிலடங்காச் சண்டைக் களங்கள் கிடைத்தன என்பதை விட அந்த இடங்களிலெல்லாம் அவனின் தேவை அவசியப்பட்டதென்றே சொல்ல வேண்டும். அதனாலேயே ராகவனின் சண்டைப் பட்டியல் நீண்டு கொண்டே போனது. வன்னியில் நிலை கொண்டிருந்த சிங்களத்துப் படைகளுக்கு ஒவ்வொரு முனைகளிலும் ராகவன் பாடம் புகட்டினான். 1995 இல் 3ஆம் கட்ட ஈழயுத்தம் மூண்ட போது ராகவனின் பணி யாழ்ப்பாணம் வரை விரிந்தது. குடாநாட்டைப் பிடிக்கத் தன் பலத்தின் முழுமையையும் திரட்டி இறங்கிய சிங்களத்தின் 'சூரியக்கதிர்' நடவடிக்கையை அங்குலக் கணக்கில் நகர வைத்த போர்களத்திலும் ராகவன் போரிட்டான். 'சூரியக்கதிர்' முடித்து புலிகள் இயக்கம் முழுதாக வன்னிக்கு வந்து சேர்ந்த போது ராகவன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையில் இணைக்கப்பட்டான்.

ராகவன் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிக்கு வந்ததும் அவனிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகள் அனைத்தும் மிகுந்த முக்கியத்துவமானவை. தலைவர் நம்பிக்கையுடன் அவற்றை அவனிடம் ஒப்படைத்த போது அக்கறையெடுத்து. தனது கடின உழைப்பால் அவற்றையெல்லாம் நேர்த்தியாகச் செய்து முடித்தான்.

யாழ்க் குடாநாட்டை ஆக்கிரமித்து திமிர் கொண்டிருந்த சிங்களத்தின் இராணுவக் கற்பனைகளை அர்த்தமற்றதாக்கிய. 'புலிகள் ஒய்ந்துவிட்டார்கள்' எனப் பகற்கனவு கண்டவர்களுக்கு நெத்தியடி கொடுத்த 'ஓயாத அலைகள் 01' இல் மிகவும் முக்கியமான பணியொன்று ராகவனிடம் ஒப்படைக்கப்பட்டது. உறுதிப் படுத்தப்பட்ட வெற்றிக்காக இரவு பகலாய் உழைத்த தலைவர் அந்தப்பணியை அவனிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த போது அதைத் திறம்படச் செய்து முடித்தான். அத்தளத்தின் பிரதான முகாமின் உயர்பாதுகாப்பு அரண்களைப் பிரித்தெறிந்து. உள் நுழைந்து அவற்றைக் கைப்பற்றுவதில் தான் வெற்றியின் நிச்சயத்தன்மை தங்கியிருந்தது. தலைவரின் நம்பிக்கைக் கேற்ப அவன் அதை வெற்றிகரமாகச் செய்து முடித்தான். அதனால் தளம் எமது கைகளில் வீழ்ந்தது.

மோதல்கள். சண்டைகள், சமர்கள் எனத் தமிழீழ போரரங்குகளிலெல்லாம் சுற்றிச்சுழன்றான் ராகவன். சண்டைகளால் ராகவன் புடமிட்டான் என்பதிலும், சண்டைகளை ராகவன்



புடமிட்டான் என்பதே பொருத்தமாக இருக்கும். ஆம், அப்படித்தான் இருந்தது நிலைமை. அறிவாலும் அனுபவத்தாலும் போரியலில் அவன் உயர்ந்து நின்றான். தனது களச்செயற்பாடுகளில் அவற்றை வெளிக்காட்டித் தலைவரின் தனிப்பட்ட விருப்பைப் பெற்றிருந்தான். தளபதி ஒருவருக்கான கடமைகள் அவனிடம் ஒப்படைக்கப்பட்டன.

போர்முனையில் இறுக்கமான கட்டங்களிலெல்லாம் ராகவன் தேவைப்படுவான். எமது படைநடவடிக்கைகள் இறுக்கமான கட்டங்களைச் சந்தித்த பல சந்தர்ப்பங்களில் அவற்றை உடைத்தெறிந்து எமக்குச் சாதகமான நிலைமைகளைப் பெற்றுத்தந்திருக்கிறான். நெருக்கடியான வேளைகளில் எங்கள் மூத்த தளபதியின் கண்களுக்குத் தெரிபவர்களுள் ராகவன் முக்கியமானவன். ‘இக்கட்டான வேளைகளில் நேரிலேயே களமிறங்கி நிற்கும் தலைமைப் பண்பு அவனிடம் இருந்தது’ என்றார் தளபதி கேணல் தீபன். ‘முன்னரங்கப் போர் நிலைகளில் தனது போராளிகளுக்குச் சண்டையில் வைத்தே சண்டை பழக்கும் தளபதி அவன்’ என்று ராகவனின் தலைமைத்துவத்தை நினைவு கூர்ந்தார் களத்தில் நின்ற தளபதியொருவர்.

1997 ஜனவரியில் படைத்தளத்திற் புளியடி பிரதான முகாம் ராகவனின் அணிக்குரிய இலக்காக இருந்தது. வேவு நடவடிக்கையின் படி திட்டமிடப்பட்டு, உரிய முறையிற் பயிற்சிகளெல்லாம் ஆனையிறவு – பரந்தன் படைத்தளங்களிற் புலிகள் இயக்கத்தின் படையணிகள் பாய்ந்த போது முக்கிய முனையொன்றில் ராகவனின் படைநடத்தல் இவனின் அதீதப் போராற்றலை வெளிக்காட்டியது. ஆனையிறவுப் வழங்கப்பட்டிருந்தன. ஆனாற்கள நிலைமைகளோ தலைகீழாக இருந்தன. எதிர்பார்த்ததற்கு முற்றிலும் மாறான கள நிலைமையது. எதிரி உசாரடைந்திருந்தான். எமது நகர்வுகளை அவன் அவதானித்து விட்டதையே எதிரியின் செயற்பாடுகள் வெளிப்படுத்தின. ஒட்டுமொத்தமாகச் சண்டையே குழம்பிவிடுமோ என்று அச்சங் கொண்ட வேளை களத்தில் நேரில் நின்று, தனது இராணுவ அறிவால் துணிச்சலுடன் முடிவெடுத்து, தனது இலக்கை வெற்றி கொண்டு, 120 மி.மீ பீரங்கிகள் சிலவற்றையும் மீட்டெடுத்துத்தந்து வெற்றிவாகை சூடினான் ராகவன்.

போரியலில் உயர்ந்து நின்ற எங்கள் போர்த்தளபதி லெப். கேணல் ராகவன் சிங்களத்தின் நம்பிக்கை நட்சத்திரமான ‘ஜெயசிக்குறுய்’ நடவடிக்கையைச் சுக்குநூறாக்குவதற்காக கடுமையாக உழைத்தான். ஜெயசிக்குறுவின் தென்முனையிற் பனிக்க நீராவியிலிருந்து மாங்குளம் வரையிலும் வடமுனையிற் கிளிநொச்சியில் ஒவ்வொரு அங்குல நிலத்திலும் அந்தத் தளபதி தன் உயிர்கொண்டு வீரம் விதைத்தான். அவனது உழைப்பின் அறுவடைதான் வரலாற்றிற் பொறிக்கப்பட்டு விட்ட புளியங்குளத்திற் புலிகள் இயக்கம் புரிந்த சாதனைகள். எதிரியின் பாரிய மரபுவழிப் படையெடுப்பை மறித்துப் புளியங்குளத்திலே முகாம் அமைத்து நிலைகொள்வதெனத் தலைவர் அவர்கள் முடிவு செய்த போது தளபதி தீபனுக்கு துணையாக நின்று தள அமைப்புக்காக ராகவன் கடுமையாகத் தன்னை வருத்தினான். புளியங்குளம் முகாமில் தாக்குால் அணிகளின் பொறுப்பை ஏற்றிருந்த அவன், எதிரியை எதிர்கொள்வதற்கெனச் சகல ஏற்பாடுகளையும் நேரில் நின்ற செய்தான் செய்வித்தான். புளியங்குளத்தை ‘புலிகளின் புரட்சிக் குளம்’ ஆக மாற்றியதில் ராகவனின் உழைப்புக்கும் அவன் சிந்திய வியர்வைக்கும் முக்கிய பங்கு இருந்தது.

புளியங்குளத்தில் உடலைப் பிழிந்து உழைத்த ராகவனுக்கு ஓய்வு கிடைக்கவில்லை. ஓமந்தையில் ‘ஜெயசிக்குறுய்’ படைகளுக்கெதிரான ஊடுருவித் தாக்குதலிற் பிரதான தாக்குதல் அணியின் தலைவனாக அவன் களமிறங்கினான். அந்தச் சண்டையிற் கடின உழைப்பைத் தந்த ராகவனையும் அவனது அணியையும் ஓய்வுக்காக பிண்ணணிக்கு அனுப்பி வைத்தார் தளபதி தீபன். ஆனால் விரைவிலேயே களத்தைத் திறந்து முக்கிய நகர்வொன்றை எதிரி ஆரம்பித்தான். அப்போது அங்கே ராகவன் தேவைப்பட்டான்.

புளியங்குளத்தில் முகாம் அமைத்து நிலைகொள்ள எடுத்த எமது இயக்கத்தின் முடிவிற்குச் சவாலாக அமைந்திருந்தது எதிரியின் அன்றைய நகர்வு. எமது பாதுகாப்பு அரண்கள் இல்லாத பகுதியை நோக்கிச் சன்னாசிப்பரந்தன் ஊடாக புளியங்குளத்தை நெருங்கிக் கொண்டிருந்தான் எதிரி. இக்கட்டான சூழல், எதிரியின் முன்னேற்றத்தை உடனடியாகவே முறியடித்தாக வேண்டும். அந்தப் பலப் பரீட்சையில் நிச்சயம் நாம் வென்றேயாக வேண்டும். தளபதி தீபனின் கண்களுக்குள் ராகவன் நின்றான். ‘நான் செய்து முடிப்பன்’ ராகவனின் உருவம் சொல்லாமற் சொன்னது. ராகவன் உடனடியாகவே களமிறக்கப்பட்டான்.

போராளிகள் முப்பது பேரை மட்டுமே கொண்ட அணியுடன் ராகவன் களமிறங்கினான். எதிரியை வழிமறித்து, ஊடறுத்து எமது பாதுகாப்பு நிலைகளை அமைக்கக் கூடிய பகுதியொன்றினூடாக ராகவன் தனது அணியுடன் உட்புகுந்தான். எதிரியோ மிகக் கடுமையாகச் சண்டை செய்தான். எந்தக் கட்டத்திலும் விட்டுக் கொடுக்க எதிரி தயாரில்லை. களத்தில் ராகவன் நின்றதால் எல்லோர் மனத்திலும் நம்பிக்கை இருந்தது. தங்களுடன் ராகவனும் நின்றதால் களத்திலிருந்த போராளிகளிடம் உற்சாகம் பிறந்தது. இறுதியில் எதிரியைச் சின்னாபின்னமாக்கி அந்தக் கடினமான சண்டையை எல்லோரும் நம்பிக்கை வைத்தபடியே செய்து முடித்தான் அந்தப் புலிப்போர்த் தளபதி. புளியங்குளத்தைப் புலிக்குகையாக்க உழைத்த அந்த வீரன் இறுதியிற் சவாலாக வந்த எதிரியின் நகர்வை எதிர்கொண்டு அந்தப் புலிக்குகையைக் காத்தான். எதிரிக்கு புலிகள் பற்றிப் பாடம் புகட்டினான்.

தென்முனையில் தமது இயலாமையை உணர்ந்து கொண்டு, வடமுனையிற் கிளிநொச்சி ஊடாக புதிய களமுனையொன்றைத் திறப்பதற்கு எதிரி தயாராகி வந்த போது ‘ஜெயசிக்குறுய்’ எதிர்ச் சமரின் துணைக் கட்டளைத் தளபதி கேணல் தீபனுடன் கிளிநொச்சிக் களமுனைக்குப் புறப்பட்டான் ராகவன். அங்கே அந்தப் போர்த்தளபதி தமிழீழத்தின் புகழ்பூத்த சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதியானான். அப்போது கிளிநொச்சித் தளத்தின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக அந்த வீரன் நிறைய உழைக்க வேண்டியிருந்தது. 1998 பெப்ரவரியிற் கிளிநொச்சித் தளத்தின் மீது புலிகள் பாய்ந்து தளத்தின் தென்பகுதியை வீழ்த்திய போது அப்பகுதியிற் சண்டைக்காக நியமிக்கப்பட்ட எமது ‘ராங்கி’ அணியின் நகர்வு வழிநடத்துனனாக ராகவன் இருந்தான். அதன்பின் எமது முன்னணி அரண்களை எதிரிக்குக் கிட்ட நகர்த்தி, எதிரியை அச்சுறுத்திப் பாதுகாப்புப் பணியில் அவன் நின்றான். அவனது உழைப்புக்குச் சவாலாக எதிரி எழுந்த ஒவ்வொரு தடவையும் ராகவன் பாடம் புகட்டினான். அவன் புகட்டிய பாடங்கள் இலங்கை இராணுவத்தின் வரலாற்றில் அவர்களால் என்றைக்குமே மறக்கமுடியாத அளவு முக்கியத்துவம் பெற்றவை.

1998 ஜூன் நான்காம் நாளன்று கண்டி வீதிக்கு மேற்குப் புறமாகப் பல முனைகளில் எமது பாதுகாப்பு நிலைகளை உடைத்து எதிரியின் முன்னணிப் படையணிகள் உட்புகுந்து விட்டன. முன்னணி அரண்களிற் குறிப்பிடக்கூடிய பகுதியை எதிரி கைப்பற்றிவிட்டான். அப்பகுதியில் நிலைகொண்டிருந்த எமது அணிகளும் சேதமடைந்தன. மிகவும் நெருக்கடியானதொரு களநிலைமை. உடனடியாகவே எதிரியை முறியடிக்க வேண்டும். தளபதி கேணல் தீபன் அனுப்பிவைத்த உதவியணிகனை வைத்து அவரின் கட்டளையின் கீழ் களத்தில் நின்று படை நடத்தினான் ராகவன். நீண்ட நேர ‘மரணச்சண்டையின்’ பின் எதிரியை ஊடறுத்து. முற்றுகைக்குள்ளாக்கி உள்நுழைந்தவர்களை அழித்து முடித்துத்தான் மூச்சுவிட்டான். சிங்களத்தின் முன்னணித் தாக்குதற் படையில் 200 பேருக்கும் மேலான வீரர்கள் சிதறிச் சின்னாபின்னமாகி வீழத் தமிழர் சேனை வெற்றிவாகை சூடியது. எதிரியின் 50 உடல்களும் ஏராளம் ஆயுதங்களும் மீட்கப்பட அந்த வெற்றித் தாக்குதலை நேர் நின்று செய்வித்தவன் தளபதி ராகவன்.

மீண்டும் நான்கு நாட்களில் அடிபட்ட பாம்பு போற் சீறிச் சிங்களப் படைகள் முன்னேறி வந்தன. இம்முறையும் சிங்களத்தின் குறி ராகவனின் அதே பகுதி தான். எமது காவலரண் வரிசையைப் பலமுனைகளால் உடைத்து உட்புகுந்து விட்டான் எதிரி. இம்முறையும் அதே இறுகிய சூழல், சென்ற தடவை போலவே இப்போதும் சிங்களப்படைகளுக்குப் பாடம் புகட்டினான் ராகவன். சீறிய பாம்புகள் உயிரைவிட, எஞ்சியவை பெட்டிப்பாம்பாக அடங்கிப் போயின. அந்த நாட்களில் எங்கள் தளபதியின்

www.sangathamil.ca



படைநடத்தலாற் கிளிநொச்சி மண் தமிழர் வரலாற்றில் முக்கிய பதிவுகளைப் பெற்றுக் கொண்டது.

போரியலில் முதிர்ச்சி பெற்றிருந்த அந்த வேங்கை இப்போது எதிரியாலும் நன்கு அறியப்பட்டிருந்தான். ராகவன் என்றால்



யார் என்பதைத் தனது படைநடத்தல் மூலம் எதிரிக்குச் சொல்லி வைத்திருந்தான் அவன். ராகவன் நிற்கும் பகுதியென்றாலே எதிரி அதீத கவனம் எடுப்பான். ஏனெனில், ராகவனிடம் 'பாடம் படிப்பதற்கு' சிங்களத் தளபதியால் இனியும் உயிர் விலை செலுத்த முடியாது.

1998 ஒக்டோபர் மாதத்தில் ராகவனின் சுமை இரட்டிப்பானது. 'ஓயாத அலைகள் 02' இற்காக இயக்கம் தயாராகிக்கொண்டிருந்த காலப்பகுதி அது. ஓய்வுறக்கமின்றித் திரிந்தான் ராகவன். முன்னணி நிலைகளில் எமது பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண்காணித்து அவற்றின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது. பயிற்சியில் ஈடுபட்ட போராளிகளை உற்சாகப்படுத்தி அதைத் திறம்படச் செய்விப்பது என எல்லாவற்றிலும் அவன் உழைத்தான்.

'ஓயாத அலைகள்02' புலிகள் பாய்வதற்கான நாள் வந்தது. தலைவனைச் சந்தித்துத் திட்டங்களை அறிந்து புலிச்சேனை தயாராகியது. பிரதான பகுதியொன்றின் துணைத்தளபதியாக ராகவன் நியமிக்கப்பட்டான். எனினும். அந்தக் களப்பகுதியில் அவனையொத்த அனுபவம் வாய்ந்தவர்கள் களமிறக்கப்பட்டிருந்ததால் தளபதி கேணல் தீபனின் கட்டளை மையத்தில் ராகவன் நிற்கப் பணிக்கப்பட்டான். அந்த நடவடிக்கையில் முன்னணிக் காவலரண்களைக் கைப்பற்றுவதற்குப் பொறுப்பாக இருந்த தளபதி தீபனுக்கு உதவியாக அவன் செயற்பட்டுக் கொண்டிருந்தான்.

முதல்நாட் சண்டை உக்கிரமான கட்டத்தை எட்டியது. எமது கைகளிற் காவலரண்கள் வெற்றிகரமாக வீழ்ந்தன. ஆயினும், அன்றைய தொடர் சண்டையில் அவற்றில் அநேகம் எதிரியின் கைக்கு மீண்டும் மாறின. சண்டை நிலைமைகள் எதிரிக்குச் சாதகமாக மாறிவிட்ட சூழல். எப்படியாவது அந்த நிலைமையை மாற்றியமைத்தேயாக வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு கணமும் சிக்கல்களை அதிகரித்துக் கொண்டே இருக்கும். அப்போது ராகவன் களத்திற்குப் போக வேண்டியிருந்தது. நிலைமையை உணர்ந்து கொண்டு தளபதி தீபனிடம் அனுமதி பெற்று அணியொன்றுடன் எமக்கச் சாதகமற்ற பட்டப்பகலிற் களமிறங்கினான் ராகவன்.


எதிரி மிகுந்த உளவியற் பலத்துடன் உற்சாகமாகச் சண்டையிட்டுக் கொண்டிருக்க, எமது அணிகள் பின்னடைவைச் சந்தித்து நின்ற முனையொன்றினூடாக ராகவன் களமிறங்கினான். எதிரியின் அத்தனை துப்பாக்கிகளும் உதவியணிகளைத் தடுக்கும் பொருட்டு ராகவனின் அணியைக் குறிவைத்துத் தாக்கின. எதிரியின் குண்டு மழைக்குள்ளால் தனது அணியுடன் உள்ளே போய்ச் சேர்ந்தான் எங்கள் தளபதி. ஏதிரியை அடித்துப் பின்நகர்த்திக் காயப்பட்ட, வீரச்சாவடைந்த போராளிகளை பின்னே அனுப்பி வைத்துவிட்டு, அணிகளை ஒழுங்கமைத்துச் சண்டையைத் தொடர்ந்தான் அவன். எதிரியின் முறியடிப்புப் பற்றிய கற்பனைகளையெல்லாம் தகர்த்துச் சண்டையணிகளை முன்னகர்த்திக் களநிலையை மாற்றியமைத்தான் ராகவன். 'ராகவன் ஓயாத அலைகள் 02 வெற்றியின் திறவுகோல்' என்றார் தளபதி கேணல் தீபன்.

'ஓயாத அலைகள் 02' இன் சில மாதங்களின் பின் ராகவனை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையின் சிறப்புத் தளபதியாக தலைவர் நியமித்தார். தலைவரால் பற்பல எதிர்பார்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட புகழ்பூத்த படையணியொன்றிற்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்ட ராகவன், தலைவரின் எதிர்பார்ப்பைத் திறம்படச் செய்து முடிக்க வேண்டும் என்ற பேரவாவுடன் மேலும் மேலும் கடுமையாக உழைத்தான். படையணிக்குப் புதிதாக வந்த போராளிகளை வைத்து அந்தச் சண்டைப் படையணியின் போர்த்திறனை மேலும் மேலும் வளர்க்க ராவகன் அயராது பாடுபட்டான். அவனது உழைப்பின் அறுவடைக்கான நாளும் வந்தது.

'ஓயாத அலைகள் 03' தாக்குதல் திட்டம் விளக்கப்பட்டது. பிரதானமான சண்டை முனையொன்றின் நேரடித் தளபதியாக ராகவனைத் தலைவர் நியமித்தார். நம்பிக்கையுடன் தலைவர் தன்னிடம் ஒப்படைத்த பணியைத் தனது படையணியை வைத்து வெற்றிகரமாகச் செய்து முடிப்பதற்காக அவனது மூளை இடையறாது சிந்தித்தது. விடுதலைக் களத்தில் ஓயாது சுழன்ற அந்தப் புயல் 'ஓயாத அலைகள் 03' இன் அத்தியாயத்தைத் திறந்து வைத்தது. பரதான முனையொன்றினூடாகக் களத்தைத் திறந்தது சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி. சண்டை இறுக்கமான சூழலிற் சிக்கியிருந்தது. போராளிகள் தடுக்கத் தடுக்க ராகவன் எப்போதும் போலவே தனக்கான எல்லையைக் கடந்து முன்னேறினான். குண்டு மழைக்குட் குளித்தபடி சண்டையணியின் முன்வரிசையில் எங்கள் தளபதி நின்றான். குண்டொன்று நேராய் அவன் நெற்றியைத் துளைக்க ராகவன் வீழ்ந்தான். பறிபோகவிருந்த எத்தனையோ வெற்றிகளை மீட்டுத்தந்த அந்தத் தளபதி அமைதியாக அடங்கிப் போனான்.

நினைவுப்பகிர்வு – அ. பார்த்தீபன்

விடுதலைப்புலிகள் இதழ் (ஐப்பசி, கார்த்திகை 1999), நெருப்பாற்று நீச்சலிற் பத்தாண்டுகள் நூல்






# உலகச் சிறுவர் நாளை முன்னிட்டு வடக்கு கிழக்கில் கவன ஈர்ப்பு போராட்டம்!

01.10, 2024



சர்வதேச சிறுவர் தினத்தினை முன்னிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் இன்று செவ்வாய்க்கிழமை (01) காலை நடைபெற்ற நிலையில் சிறுவர்கள் பங்குகொண்ட கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில் சிறுவர் தினத்தினை முன்னிட்டு இறுதி யுத்தத்தின்போது ஒப்படைக்கப்பட்ட சிறுவர்களுக்கான நீதி கோரி இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் மட்டக்களப்பு காந்தி பூங்கா முன்பாக முன்னெடுக்கப்பட்டது.

இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்ட எங்கள் பிள்ளைகளுக்கு இறப்பு சான்றிதழ்தான் பதில் என்றால் கொலைசெய்தவன் யார்?, பிள்ளைகளை தினம் தேடிக்கொண்டே இறந்து கொண்டு இருக்கின்றோம், கையளிக்கப்பட்ட சகோதரங்கள் எங்கே? என்கின்ற வாசகங்கள் அடங்கிய பதகைகளை






ஏந்தியவாறு கவனயீர்ப்பை முன்னெடுத்தனர்.

அதேபோல் வவுனியாவிலும் ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையில் எத்தனையோ சிறுவர் அமைப்புக்கள் இருந்தும் காணாமல் ஆக்கப்பட்ட எமது குழந்தைகளுக்கான நீதிப்பொறிமுறையினை ஒருவரும் ஏற்படுத்தி தரவில்லை. எனவே நாம் சர்வதேச நீதிகோரி எமது போராட்டங்களை முன்னெடுத்துவருகின்றோம். இந்நிலையில் எமது போராட்டங்களை குழப்பும் விதமாக சில விசமிகள் திட்டமிட்டு செயற்ப்பாடுகளை முன்னெடுத்துவருகின்றனர். இருப்பினும் எமக்கான நீதி கிடைக்கும் வரை நாம் இந்த போராட்டங்களை கைவிடப்போவதில்லை என்றனர்.

ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழ்குழந்தைகள் பயங்கரவாதிகளா, சிறுவர்தினம் நீதி தேடும் தினம், பச்சிளம் குழந்தைகள் ஆயுதம் ஏந்தினரா போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களை எழுப்பியிருந்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் ஐஓஎம் அலுவலகத்திற்கு முன்பாக இன்று செவ்வாய்க்கிழமை (01) காலை போராட்டம் நடைபெற்றது.



இதன்போது வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் சிறுவர்கள் காணாமலாக்கப்பட்டமை தொடர்பாக நீதி கோரி கோஷங்களை எழுப்பினர்.



# “நாம் உள்ளகப்பொறிமுறையில் நம்பிக்கை இழந்துவிட்டோம்”

## வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள்

02.10. 2024

நாம் உள்ளகப்பொறிமுறையில் நம்பிக்கை இழந்திருப்பதுடன், சர்வதேச நீதிப்பொறிமுறையில் மாத்திரமே முழுமையாக நம்பிக்கை கொண்டிருக்கிறோம் என வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்துள்ளனர்.


மேலும் ‘இறுதிக்கட்டப் போரின்போது எமது அன்புக்குரியவர்கள் சரணடைந்த இராணுவ சோதனைச்சாவடிகளுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகளை விசாரணை செய்வதன் ஊடாகவே எமது பிள்ளைகள் உள்ளடங்கலாக அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறிய முடியும்.

இவ்விடயத்தில் சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் சபையும் ஒன்றுபட்டு செயற்படுமா?’ என்றும் வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடம் கேள்வி எழுப்பியுள்ளனர்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி சர்வதேச சிறுவர் தினமான நேற்று வட, கிழக்கு வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினால் ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

செவ்வாய்க்கிழமை (01.10.2024) சர்வதேச சிறுவர் தினமாகும். உலகளாவிய ரீதியில் சிறுவர்களின் நலனை மேம்படுத்தும் நோக்கில் 1954 ஆம் ஆண்டு யுனிசெப் அமைப்பினால் சர்வதேச சிறுவர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. அத்தினம் பரிசுகள் மூலம் சிறுவர்களை மகிழ்விக்கும் வகையில் கொண்டாடப்பட்டுவருகிறது.

அதேவேளை தமது அனுபவங்களின் ஊடாக சமூகத்தின் மேம்பாட்டில் பெரும் பங்காற்றிய வயது முதிர்ந்தவர்களை கௌரவிக்கும் நோக்கில் ஒக்டோபர் முதலாம் திகதி சர்வதேச முதியோர் தினமாகவும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. இருப்பினும் யுனிசெப் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் ஏனைய கிளை கட்டமைப்புக்கள் இலங்கையின் வட, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் முதியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பது பற்றிய கரிசனையுடன் செயற்பட்டனவா?




இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின்போது பால் மற்றும் கஞ்சிக்காக வரிசைகளில் காத்திருந்த சிறுவர்கள் மற்றும் வயது முதிர்ந்தவர்கள் எத்தனை பேர் குண்டுத்தாக்குதல்களில் கொல்லப்பட்டனர்? எத்தனை பேர் அங்கவீனமாக்கப்பட்டனர்? அதுமாத்திரமன்றி தமது பாதுகாப்புக்காகப் பலர் தமது பிள்ளைகளுடன் படையினரிடம் சரணடைந்தனர்.

அவ்வாறு தமது பெற்றோருடன் சரணடைந்த குழந்தைகள் உள்ளிட்ட 29 சிறுவர்களின் விபரங்களை நாம் கடந்த 2019 ஆம் ஆண்டு சிறுவர் தினத்தன்று வெளியிட்டோம். அவ்விபரங்கள் சர்வதேச இராஜதந்திரிகளிடமும் கையளிக்கப்பட்டன. இருப்பினும் இன்று வரை அச்சிறுவர்கள் தொடர்பில் எந்தவொரு தரப்பினரும் அக்கறை காண்பிக்கவில்லை.

தமது பிள்ளைகளுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் 250 க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் உயிரிழந்திருக்கிறார்கள். நாமும் மரித்துப்போவதற்கு முன்பதாக எமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்று ஏன் யாராலும் கூறமுடியவில்லை?

நாம் உள்ளகப்பொறிமுறையில் நம்பிக்கை இழந்திருப்பதுடன், சர்வதேச நீதிப்பொறிமுறையில் மாத்திரமே முழுமையாக நம்பிக்கை கொண்டிருக்கிறோம். இறுதிக்கட்டப் போரின்போது எமது அன்புக்குரியவர்கள் சரணடைந்த இராணுவ சோதனைச்சாவடிகளுக்குப் பொறுப்பாக இருந்த இராணுவ அதிகாரிகளை விசாரணை செய்வதன் ஊடாகவே எமது பிள்ளைகள் உள்ளடங்கலாக அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதைக் கண்டறியமுடியும். இவ்விடயத்தில் சர்வதேச சமூகமும், ஐக்கிய நாடுகள் சபையும் ஒன்றுபட்டு செயற்படுமா?

அதேபோன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இனியும் தாமதிக்காமல், பொருத்தமான சர்வதேச நீதிப்பொறிமுறை ஒன்றை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக இலங்கையைப் பொறுப்புக்கூறச்செய்வதற்கும், நாம் உயிருடன் இருக்கும்போதே எமக்கு நீதியைப் பெற்றுத்தருவதற்கும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# திருகோணமலை ஆறாம் கட்டையில் காணிகளிற்கான பாதைகளை தடை செய்துள்ள தனிநபர்!

01.10. 2024

திருகோணமலை நிலாவளி வீதியில் ஆறாம் கட்ட பிரதேசத்தில் இலட்சுமி நாராயணன் கோவிலுக்கு அருகில் உள்ள காணிகளின் பாதைகள் தனியார் ஒருவரால் தடைப்படுத்தப்பட்டு அது தொடர்பான முப்பது குடும்பங்களின் மேல் பாதிக்கப்பட்டு உள்ளதாக அப் பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தங்களுடைய பிரச்சினைகள் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை (01.10.2024) ஊடகங்களுக்கு தெளிவு படுத்தினர்.

குறித்த நடவடிக்கைகள் முன்னால் கிழக்கு ஆளுனரின் தலையீட்டில் ஏற்படுத்தப்பட்டதாக அப் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த 40 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில் அவர்கள் உறுதி காணிகள் தான் வசித்து வந்த நிலையில் பிரான்சிலிருந்து வருகை தந்த ஒரு நபர் தன்னுடைய காணி என்று கூறிய நிலையில் இவ்வாறான செயற்பாடு ஒன்று இடம்பெற்று தற்போது வழக்கு நடந்து கொண்டிருப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

குறிப்பாக ஒரு கிறிஸ்தவ மதஸ்தலம் ஒன்று பாதை மூடப்பட்டு முடக்கப்பட்டுள்ளது அதற்கு வழி வரும் மக்கள் அநேகர் பிரச்சினை எதிர்கொள்வதாக குறித்து கிறிஸ்தவ மத பாதிரியார் தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

இங்கு கிறிஸ்தவ தேவாலயம், பாலர் பாடசாலை செல்லும் பாதைகள் தடைப்படுவதனால் மாணவர்களின் கல்வி நிலை பாதிக்கப்பகுவதாகவும் தெரிவிக்கின்றனர்.



1982ம் ஆண்டில் காணியை கொள்வனவு செய்து சட்ட ரீதியான குடியேற்றங்களை அமைத்து வந்தோம் தற்போது ஒருவர் தன்னுடைய காணி என அப்பட்டமாக உரிமை கோருகிறார் இதன் மூலம் பாரிய மன உளைச்சல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளோம் என அப் பிரதேச மக்களை கவலை வெளியிடுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியும் எந்த தீர்வும் கிடைக்கவில்லை எனவும் ஒரு சில காடையர்களை கொண்டு தங்களுக்கு உயிர் அச்சுறுத்தல் விட்டனர் எனவே எங்களது பூர்வீக குடியிருப்பு காணிகளை பாதுகாத்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.ன தெரிவித்து வழக்கை நீதிவான் முடிவுறுத்தியுள்ளார்.

# சிறீலங்கா இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட 1000 சிறுவர்கள், 39 கைக்குழந்தைகளுக்கு என்ன நடந்தது?

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம்**

03.10.2024



வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தை திட்டமிட்டு ஒடுக்க முயற்சிக்கும் செயற்பாட்டை வன்மையாக கண்டிப்பதாக வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினது நிர்வாகிகள் கூட்டாக கண்டன அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு, வடக்கு, கிழக்கில் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட 1000க்கும் மேற்பட்ட சிறுவர்கள், 39க்கும் மேற்பட்ட கைக்குழந்தைகளுக்கு என்ன நடந்தது எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இது தொடர்பாக இச்சங்கத்தினர் வவுனியாவில் இன்று (3) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

எட்டு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உறவுகளாகிய நாம் சர்வதேசத்திடம் நீதி கோரிய எமது போராட்டமானது பல இன்னல்களையும் துன்பங்களையும் சுமந்த போராட்டமாக பதினைந்து வருடங்கள் கடந்துள்ளது.

இங்கு மாறி மாறி ஆட்சிக்கு வரும் இலங்கை அரசிடம் பல வழிகளிலும் நீதி கேட்டு நின்றோம். நீதி கிடைக்காத நிலையில் சர்வதேச நீதியை தேடி 2018ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை ஜெனிவா மற்றும் ஏனைய நாடுகளுக்கு சென்று வருகின்றோம்.

எட்டு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளுக்கும் தலைமைகளுக்கும் சிறீலங்கா காவல்துறை விசாரணை, புலனாய்வுத்துறை விசாரணை என அதிகளவில் மன உளைச்சல்கள், எண்ணிலடங்காத அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் நாம் எப்போதும் எமக்கான, நீதிக்கான போராட்டத்தை கை விடப்போவதில்லை என உறுதி எடுத்துக்கொள்கின்றோம்.

இந்நிலையில் சர்வதேச சிறுவர் தினத்தன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளுக்கு சர்வதேச நீதி கோரி கவனயீர்ப்பு போராட்டத்தை மேற்கோண்டோம்.

வடக்கு, கிழக்கில் 1000க்கு மேற்பட்ட சிறுவர்கள், 39க்கும் மேற்பட்ட கைக்குழந்தைகள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். அந்த குழந்தைகளுக்கு என்ன நடந்தது என மீண்டும் மீண்டும் கேட்டு நிற்கிறோம்.

இந்த குழந்தைகளை வலிந்து காணாமலாக்கிய விடயத்தில் உலகளாவிய ரீதியில் சிறீலங்கா முதலாம் இடத்தை பெற்று நிற்கிறது.

அண்மையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவி எஸ்.ஜெனித்தா அவர்களின் தலைமையில் வவுனியா பழைய பேருந்து நிலையத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

போராட்டம் நடந்துகொண்டிருந்தபோது போராட்ட இடத்துக்கு வந்த ஒரு நபர் தான் அநுரவின் ஆள் எனவும் இங்கு போராட்டம் செய்யவேண்டாம் எனவும் எச்சரித்தார். அதற்கு தாய்மார் இது ஜனநாயக போராட்டம். நாம் இதை ஏன் நிறுத்த வேண்டும் என்று கேட்டனர். அதற்கு அந்த நபர் மிக மிக மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி கத்தினார். அவருடைய தொனியில் எமது போராட்டத்தை குழப்புவதற்காக அனுப்பப்பட்ட ஒருவராக எமக்கு தெரிந்தது.

இதையெல்லாம் கதைக்க நீர் யார் என்று கேட்ட போது, அந்த நபர் நான் அநுரவுடன் ஒன்றரை வருடமாக இருக்கின்றேன். அவர் ஜனாதிபதியாக வந்துவிட்டார். அதனால் உங்களை போராட்டம் செய்ய விடமாட்டேன் என்று இறுமாப்புடன் கூறினார். அதுமட்டுமல்ல, உங்களை எல்லாம் கைது செய்யப் போகிறேன் என்று தகாத வார்த்தைகளால் பேசி எமது தாய்மாரை மன உளைச்சலுக்கு உள்ளாக்கினார்.

இவர் ஜனாதிபதி அநுரவின் ஆளோ அல்லது பொலிசாரின் ஆளோ அல்லது புலனாய்வுத்துறையின் ஆளோ அல்லது வேறு யாருடைய ஆளோ என்று தெரியாது. இங்கு குழப்பத்தை ஏற்படுத்தியவருக்கும் அவரை இயக்குபவருக்கும் நாம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும், எமது போராட்டத்தை குழப்ப வரும் எவரானாலும் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் உறவுகளை உயிருடன் ஒப்படைத்துவிட்டு அவர்களை தேடிக்கொண்டிருக்கின்றோம்.

இந்த போராட்டத்தில் எம்முடன் இருந்த 280க்கும் மேற்பட்ட உறவுகளை நாம் இழந்துவிட்டோம். இதற்கு யாருமே பதில் சொல்ல முன்வரவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றோம். ஆகவே எமது போராட்டம் எமக்கு சர்வதேச நீதி கிடைக்கும் வரை தொடரும் என பிரகடனப்படுத்துகின்றோம் என்றனர்.

இந்த ஊடக சந்திப்பில் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் தலைவி எம். உதயச்சந்திரா, செயலாளர் ரி .செல்வராணி உட்பட ஏனைய மாவட்ட நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# யாழ். நீர்வேலியில் புதிய மதுபானசாலைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்!

04.10 2024

யாழ்ப்பாண நீர்வேலிப்பகுதியில் திறக்கப்படவுள்ள மதுபான சாலையினை எதிர்த்து பொதுமக்கள் வெள்ளிக்கிழமை (4) ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.



தற்போது அரசாங்கம் மதுபானசாலை அனுமதிகளை தடை செய்கின்ற போதும் புதிதாக வழங்கப்பட்ட அனுமதியின் பிர



காரம் நீர்வேலிப்பகுதியில் மதுபானசாலை ஒன்றினை தொடர்ந்து திறப்பதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றவரும் நிலையில் அதனை உடனே நிறுத்துமாறு கோரி கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு முன்பாக வெள்ளிக்கிழமை (4) மாலை இந்த ஆர்ப்பாட்டம் எடுக்கப்பட்டது.

நீர்வேலி பகுதியில் அத்தியார் இந்துக்கல்லூரி, கந்தசுவாமி கோவில் என்பவற்றிற்கு அருகிலே குறித்த மதுபான சாலை திறக்கப்படவுள்ளதால் பாடசாலை மாணவர்கள் கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் இதனால் பாதிக்கப்படுவதாகவும் இதனை உடனடியாக நிறுத்த கோரியும் பிரதேசவாதிகள் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.



குறித்த விடயம் அடங்கிய மகஜர் ஒன்றினையும் கோப்பாய் பிரதேச உதவி பிரதேச செயலர் சஞ்சீவன் ராதிகாவிடம் பொது மக்கள் கையளித்தனர்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

www.sangathamil.ca

# 11 தமிழ் மாணவர்களை படுகொலை செய்தவரை சிறீலங்கா துறைமுக அதிகார சபையின் தலைவராக ஜே.வி.பி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்!

04.10. 2024

திருகோணமலை “கன்சைட்” வதை முகாமில் கடற்படை அதிகாரிகளால் பணத்திற்க்காக படுகொழுலை செய்ய பட்ட 11 கொழும்பு தமிழ் மாணவர்கள் தொடர்புபட்ட வழக்குடன் சம்பந்தப்பட்ட கடற்படை அதிகாரிகளுக்கு உதவிய மூத்த அதிகாரியாக அடையாளம் காணப்பட்டு இருந்தார்.

குறிப்பாக இவ் வழக்கின் பிரதான சந்தேகநபர்களில் ஒருவரான சுமித் ரணசிங்க பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் அவரை Commodore (Senior Naval Rank) ஆக அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க பதவியுர்த்தி இருந்தார்.

அதே போன்று தனது மேலதிகாரிகளுடன் பரிமாறிய இரகசியக் கடிதம் ஒன்றின் மூலம் பிணையிலிருந்த சுமித் ரணசிங்கவை கடற்படையின் புலனாய்வுப் பணியில் ஈடுபடுத்த அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க ஏற்பாடு செய்து இருந்தார்.

இது மாத்திரமின்றி பிணையில் விடுவிக்கப்பட்ட சுமித் ரணசிங்கவிற்கு ஆயுதமேந்திய பாதுகாப்பு வழங்கவும் அட்மிரல் சிறிமேவன் சரத் சந்திர ரணசிங்க உத்தரவு பிறப்பித்திருந்தார்.

சுமித் ரணசிங்கவிற்கு எதிராக சாட்சியமளித்த கடற்படை அதிகாரிகளின் தொலைபேசி உரையாடல்களை உளவு பார்க்கும் வசதியையும் அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்க சுமித் ரணசிங்கவிற்கு வழங்கி இருந்தார்.

அதே சமயம் 2009 -2012 காலப்பகுதியில் திருகோணமலை “கன்சைட்” வழுதை முகாமில் நடந்த பல விடயங்கள் தொடர்பாக அறிந்திருந்த அதிகாரிகளில் ஒருவராக அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்க அவர்களை The International Truth and Justice Project அடையாளம் காட்டி இருந்தது.

இந்த உண்மைகளுக்கு மத்தியில் அரச நிறுவனங்களின் தலைவர்களாக தங்கள் கட்சி உறுப்பினர்களையும் நண்பர்களையும் நியமித்து வரும் ஜேவிபி அதன் தொடர்ச்சியாக அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்க அவர்களை இலங்கை துறைமுக அதிகார சபையின் தலைவராக நியமித்து உள்ளது.

தண்டிக்க வேண்டிய கிரிமினல் குற்றவாளிகளை அதிகாரத்தில் நியமித்து பாதுகாக்க முயலும் கோட்டபாய ராஜபக்சே கால நுட்பத்தை எந்த வகையிலும் சகிக்க முடியாது.

அதிகாரத்திற்கு வந்து வெறும் இரண்டு வாரம் தானே என சப்பைக்கட்டு நியாயம் சொல்ல முடியாது.

வசந்த கரன்னகொட உட்பட High Profile கடற்படை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட படுகொலைகளை விசாரித்த நிஷாந்த சில்வா அவர்களை கொல்ல கடற்படை உயரமட்டத்தில் நடத்த சதிகள் அம்பலமாகியிருந்த போதும் பிண்ணனி இதுவரை கண்டறியப்படவில்லை.

அட்மிரல் சிறிமேவன் சரத்சந்திர ரணசிங்க உட்பட அதிகாரிகளை நீதியின் முன் நிறுத்தினால் இந்த வழக்கு நிஷாந்த சில்வா கொலை முயற்சி மட்டுமின்றி கடற்படை வலையமைப்பு சம்பந்தபட்ட பல நூறு கடத்தல் காணாமலாக்குதல்,கொலை சூத்திரங்களை கண்டறிய முடியும்.

ஆனால் ஜேவிபி இதை செய்யுமா என்பது தான் கேள்வியாக உள்ளது.

குறிப்பு: பதிவில் குறிப்பிடப்படும் சுமித் ரணசிங்க பிள்ளையானை திருகோணமலையில் வைத்து இயக்கி இருந்தார்.



# திருகோணமலை குச்சவெளியில் மக்களின் விவசாய நிலங்களை தொல்பொருள் நிலம் என கூறும் சிங்கள பௌத்த பிக்கு!

05.10. 2024

திருகோணமலை மாவட்டம் குச்சவெளி பிரதேச செயலக பிரிவில் உள்ள மக்களின் விவசாய நிலங்களை தொல்பொருள் நிலம் என பௌத்த பிக்கு ஒருவர் கூறி வருவதால் அப்பகுதி மக்கள் பாரிய இடையூறுகளை சந்தித்து வருகின்றனர்.









புதிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் ஆட்சியிலாவது இதற்கு உரிய தீர்வை பெற்றுத்தர வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருகோணமலை திரியாய்க் கிராமத்தின் பூர்விக வயல் நிலங்களில் முக்கிய வயல் வெளிகளான வளத்தாமரை, ஆதிக்காடு, ஒட்டுப்புல்மோட்டை, நீராவிக்கண்டல் மற்றும் வேடன்குளம் என உள்ளடக்கிய வயல் வெளிகளில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வயற்செய்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் புல்மோட்டை அரிசிமலைப் பிக்கிவினால் அடாவடியாக கையகப்படுத்தப்பட்ட 88 ஏக்கர் பொதுமக்களின் உறுதிக் காணியில் விவசாயம் மேற்கொள்ள பாரிய சிரமத்தை மக்கள் எதிர்கொள்கின்றனர்.

வருடா வருடம் பெரும் போக வயற்செய்கையின் போதும் இவவிதமான நெருக்கடிகளை மக்கள் எதிர்கொள்வதும் பின் பிக்குவின் அடாவடியினால் பயந்து இருப்பதுமான அவல நிலையில் மக்கள் இருக்கின்றனர்.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின்
நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து
அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

# அரச பயங்கரவாதத்தினால் 06.10.1990 அன்று அனலைதீவிலிருந்து தமிழ்நாடு நோக்கி சென்ற அகதிகள் படகு விபத்துக்குள்ளாகி உயிர் நீத்த மக்களின் 34 ஆம் ஆண்டு நினைவேந்தல்

அக்டோபர் 06, 2024

சிறீலங்கா அரச பயங்கரவாதத்தினால் அனலைதீவிலிருந்து தமிழ்நாடு நோக்கி அகதிகளாக சென்ற படகு விபத்துக்குள்ளாகி உயிர்நீத்த உறவுகளினது நினைவாக அனலையில் இன்று 34ஆம் ஆண்டு நினைவேந்தல் நினைவுகூறப்பட்டது.



**06.10.1990 அன்றைய நாள் கடலில் உயிர்நீத்த உறவுகளின் விபரம்:-**

1. திருமதி. குகதாசன் பரமேஸ்வரி 45, வட்டாரம் 2 , அனலைதீவு
2. செல்வி. குகதாசன் பிரியதர்சினி(பூரணி) 22, வட்டாரம் 2, அனலைதீவு
3. 3. செல்வி.குகதாசன் பிரியனந்தினி 20, வட்டாரம் 2, அனலைதீவு
4. செல்வி. குகதாசன் நிவேதிகா 18, வட்டாரம் 2, அனலைதீவு
5. செல்வி. குகதாசன் சிவப்பிருந்தா 16, வட்டாரம் 2, அனலைதீவு
6. செல்வி. குகதாசன் இராதிகா 14, வட்டாரம் 2, அனலைதீவு
7. திரு. கணேசையர் கோபாலகிருஷ்ணன் குருக்கள் 48, வட்டாரம் 3, அனலைதீவு
8. திருமதி. கோபாலகிருஷ்ணன் வாலாம்பிகாதேவி 40, வட்டாரம் 3, அனலைதீவு
9. செல்வன். கோபாலகிருஷ்ணன் ரமேஷ் 20, வட்டாரம் 3, அனலைதீவு
10. செல்வன். கோபாலகிருஷ்ணன் ராஜேஷ் 18, வட்டாரம் 3, அனலைதீவு
11. செல்வி. கோபாலகிருஷ்ணன் சித்திரா 17, வட்டாரம் 3, அனலைதீவு
12. செல்வன். கோபாலகிருஷ்ணன் ஜெகதீஷ் 15, வட்டாரம் 3, அனலைதீவு
13. திருமதி. சண்முகம் சின்னாச்சி 55, வட்டாரம் 3, அனலைதீவு
14. செல்வி. திருநாவுக்கரசு சசிகலா 18, வட்டாரம் 3, அனலைதீவு
15. செல்வன். திருநாவுக்கரசு சசிகரன் 16, வட்டாரம் 3, அனலைதீவு
16. திரு. நாகமுத்து கணபதிப்பிள்ளை 70, வட்டாரம் 3, அனலைதீவு
17. திருமதி. கணபதிப்பிள்ளை சிவக்கொழுந்து 60, வட்டாரம் 3, அனலைதீவு
18. செல்வி. கணபதிப்பிள்ளை உருத்திராதேவி 27, வட்டாரம் 3, அனலைதீவு
19. செல்வி. கணபதிப்பிள்ளை கௌரி 20, வட்டாரம் 3, அனலைதீவு
20. செல்வி. சண்முகநாதன் சந்தலோயினி 21, வட்டாரம் 3, அனலைதீவு
21. செல்வி. சண்முகநாதன் வசந்தலோயினி 19, வட்டாரம் 3, அனலைதீவு
22. செல்வி. தம்பையா சத்தியானந்தி 22, வட்டாரம் 3, அனலைதீவு
23. பொன்னம்பலம் இந்திரநாதன் 34, வட்டாரம் 3, அனலைதீவு
24. செல்வன். இந்திரநாதன் சுஜாகரன் 08, வட்டாரம் 3, அனலைதீவு
25. திருமதி. குமாரசாமி ஈஸ்வரி (சின்னம்மா) 59, வட்டாரம் 4, அனலைதீவு
26. திரு. சிவராசா உருத்திரநாதன் 36, வட்டாரம் 4, அனலைதீவு
27. திருமதி. உருத்திரநாதன் சற்குணம் 30, வட்டாரம் 4, அனலைதீவு
28. செல்வன். உருத்திரநாதன் மோகனதாஸ் 1.5 , வட்டாரம் 4, அனலைதீவு
29. திருமதி. கிருஷ்ணமூர்த்தி குருக்கள் சாவித்திரி 27, வட்டாரம் 4, அனலைதீவு
30. செல்வி. கிருஷ்ணமூர்த்தி அரிகரப்பிரியா (பிரியா) 12, வட்டாரம் 4, அனலைதீவு
31. செல்வி. கிருஷ்ணமூர்த்தி சிவப்பிரியா 09, வட்டாரம் 4, அனலைதீவு
32. செல்வி. கிருஷ்ணமூர்த்தி ஜனனி 08, வட்டாரம் 4, அனலைதீவு
33. திருமதி. குமாரசாமி கனகலெட்சுமி (மணி) 45, வட்டாரம் 5, அனலைதீவு
34. திருமதி. விக்னேஸ்வரன் சூரியவதனி 20, வட்டாரம் 5, அனலைதீவு
35. செல்வி. விக்னேஸ்வரன் ஜீவிதா 10 மாதம், வட்டாரம் 5, அனலைதீவு
36. செல்வி. குமாரசாமி மலர்வதனி 16, வட்டாரம் 5, அனலைதீவு
37. செல்வன். குமாரசாமி அரிகரகுமாரன் 12, வட்டாரம் 5, அனலைதீவு



38. திருமதி. செல்லத்துரை கமலாம்பிகை (சின்னம்மா) 52, வட்டாரம் 5, அனலைதீவு
39. செல்வி. சதாசிவம் யோகேஸ்வரி (சுரபி) 15, வட்டாரம் 5, அனலைதீவு
40. திருமதி. பத்மநாதன் பவனேஸ்வரி (கீதா) 20, வட்டாரம் 5, அனலைதீவு




41. செல்வி. பத்மநாதன் மகிழினி 03, வட்டாரம் 5, அனலைதீவு
42. திருமதி. சபாபதி அன்னலட்சுமி (அன்னம்) 51, வட்டாரம் 5, அனலைதீவு
43. திருமதி. கனகசபை செல்லம்மா 50, வட்டாரம் 5, அனலைதீவு
44. செல்வன். க. கந்தசாமி விக்னேஸ்வரன் (அப்பன்) 15, வட்டாரம் 5, அனலைதீவு
45. செல்வன். கு. கந்தசாமி அரிகரன் (கரன்) 14, வட்டாரம் 5, அனலைதீவு
46. திரு. சந்தியான் அந்தோனி 26, வட்டாரம் 5, அனலைதீவு
47. திரு. வயிரவநாதன் தில்லையம்பலம் 56, வட்டாரம் 6, அனலைதீவு
48. திருமதி. தில்லையம்பலம் திருப்பதி 53, வட்டாரம் 6, அனலைதீவு
49. செல்வி. தில்லையம்பலம் சிவசோதி (ராணி) 21, வட்டாரம் 6, அனலைதீவு
50. செல்வன். தில்லையம்பலம் சிவகுமார் (குமார்) 14, வட்டாரம் 6, அனலைதீவு
51. செல்வி. தில்லையம்பலம் வசந்தா 11, வட்டாரம் 6, அனலைதீவு
52. திரு. இந்திரநாதன் சுஜீதா 22, வட்டாரம் 6, அனலைதீவு
53. திரு. இந்திரநாதன் சுஜீகரன் 32, வட்டாரம் 6, அனலைதீவு
54. திரு. பொன்னம்பலம் பொன்னுச்சாமி 64, புளியங்கூடல்
55. திருமதி. பொன்னுச்சாமி அன்னலெட்சுமி 60, புளியங்கூடல்
56. பொன்னுச்சாமி சிவநாதன் 35, புளியங்கூடல்
57. பொன்னுச்சாமி கணநாதன் 29, புளியங்கூடல்
58. திரு. நாகராசா குகதாசன் 17, புளியங்கூடல்
59. திருமதி. கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் 60, வட்டாரம் 2, எழுவைதீவு
60. செல்வி. கிருஷ்ணபிள்ளை சுந்தரேஸ்வரி 14, வட்டாரம் 2, எழுவைதீவு
61. திருமதி. நடராசா இராசாம்பாள் 24, வட்டாரம் 2, எழுவைதீவு
62. செல்வி. நடராசா வாணி 1.5, வட்டாரம் 2, எழுவைதீவு
63. வே. அன்னலிங்கம் 70, மண்டைதீவு
64. திருமதி. அன்னலிங்கம் 55, மண்டைதீவு
65. செல்வி. அன்னலிங்கம் வசந்தா 30, மண்டைதீவு
66. தேவன் 24, கரம்பொன்





# நாடாளுமன்றத் தேர்தலில் எந்தவொரு வகிபாகத்தினையும் எடுப்பதில்லை: தமிழ்மக்கள் பொதுச் சபை தீர்மானம்!

07.10. 2024

நவம்பர்-14 ஆம் திகதி இடம்பெறவுள்ள சிறீலங்காவின் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்மக்கள் பொதுச்சபை எந்தவொரு வகிபாகத்தினையும் எடுப்பதில்லை எனச் சனிக்கிழமை (05.10. 2024) திகதிய பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானித்துள்ளது. தமிழ்மக்கள் பொதுச்சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து அமைப்புகளும் இந்தத் தேர்தல் தொடர்பாக பொருத்தமான தீர்மானங்களைத் தங்கள் அமைப்புச் சார்ந்து மேற்கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகின்றார்கள் எனத் தமிழ்மக்கள் பொதுச்சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் தமிழ்மக்கள் பொதுச்சபை ஞாயிற்றுக்கிழமை (06.10.2024) வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ்மக்கள் பொதுச்சபை ஈழத்தமிழ் மக்களின் விடிவை நோக்கிய பயணத்திற்கு மக்களை ஒன்றுதிரட்டி ஒருங்கிணைக்கும் தொலைநோக்குடன் உருவாகியது. அது தன்னைப் போதியளவில் ஒழுங்கமைத்து வலுவூட்டி விரிவாக்குவதற்கு முன்னரேயே மிகக் குறுகிய காலத்தில் அறிவிக்கப்பட்ட சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலை ஈழத்தமிழ் மக்களை ஒருங்கிணைக்கும் பரீட்சார்த்தக் களமாக கையாளுவதற்கு முன்வந்தது. இம்முயற்சியில் வெற்றிபெற்றது மாத்திரமல்லாது ஒரு புதிய அரசியல் அணுகுமுறைக்கூடாக ஒடுக்கப்படும் மக்கள் எவ்வாறு தங்கள் ஒற்றுமையினையும், திரட்சியினையும் தேசமாய் முன்நிறுத்தலாம் என்ற மாதிரியையும் உலகின் முன் துணிவுடன் காட்டியுள்ளது.

சிறீலங்காவின் ஜனாதிபதித் தேர்தலைத் தமிழ்மக்கள் பொதுச்சபை ஒரு தேர்தலாகவோ, பதவிக்கான போட்டியிடலாகவோ கொண்டிருக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து சில நாட்களுக்குள் அறிவிக்கப்பட்ட நாடாளுமன்றத் தேர்தல் பதவிகளுக்கான போட்டி அரசியலாகவும், மக்களை அரசியல் கட்சிகள் மற்றும் தனிநபர்கள் சார்ந்து கூறுபடுத்திச் சிதறடிக்கும் செயற்பாடுகளை முதன்மையாகக் கொண்டுள்ளது என நாங்கள் அறிவோம். இத்தகைய நிலையில் தமிழர்தரப்பு அரசியல் கட்சிகளை அவர்களது இருப்புக்கான, பதவிக்கான நலன்களுக்கு அப்பால் அழைத்துச் சென்று தேசத்திற்காய் ஒருங்கிணைக்கக் கால அவகாசமோ, சாத்தியமோ தமிழ்மக்கள் பொதுச்சபைக்குத் தற்போதைய நிலையில் இல்லை.

அதேவேளையில் பதவி நோக்கங்களுக்காக எதிரணியாகப் பிரிந்து நின்று மக்களின் ஒற்றுமையினைச் சிதறடிக்கும் போட்டி



அரசியல் தமிழ்மக்கள் பொதுச்சபை வரித்துக் கொண்ட "தேசமாய் ஈழத்தமிழர்களை ஒன்றுதிரட்டுதல்" என்ற உன்னத குறிக்கோளுக்கு முற்றிலும் விரோதமானது என்பதனையும் மீண்டும் நினைவூட்டுகின்றோம்.

இந்தத் தேர்தலின் பின்பு தமிழ்மக்கள் பொதுச்சபை வலுவூட்டப்பட்டதாகவும், விரிவுபடுத்தப்பட்டதாகவும் ஈழத்தமிழர் தேசத்தைக் கட்டமைப்பதற்காக மக்களை ஒன்றுதிரட்டும் தனது குறிக்கோள் நோக்கிய பணியில் தளராது பயணிக்கும் என்பதனையும் இவ்விடத்தில்உறுதியாகத் தெரிவிக்கின்றது என்றுள்ளது.

# முல்லைத்தீவில் ஆசிரியருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்: இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டனம்!

08.10. 2024

முல்லைத்தீவு - முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் கல்வி கற்பிக்கும் ஆசிரியர் ஒருவரின் வீடு மற்றும் அவரது மோட்டார் சைக்கிள் எரியூட்டப்பட்ட சம்பவம் குறித்து இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கம் குறிப்பிடுகையில்,

"வடக்கு - கிழக்கு மாகாணங்களில் மாணவர் சமுதாயத்தை திட்டமிட்டு சீரழிக்கும் செயற்பாடுகளுக்கு துணை நின்ற அரசாங்கங்களும் நெறிபிறழ்வான கலாசாரங்களையும் போதைபொருள் பாவனையையும் வேண்டுமென்றே கண்டுகொள்ளாமல் இருக்கும் பொலிசாரினதும் செயற்பாடுகள் தான் இன்று ஆசிரியர்கள் கூட பாதுகாப்பாக வாழ முடியாத நிலைமையை உருவாக்கியுள்ளது.



அதுமாத்திரம் அல்லாமல், நெறிபிறழ்வான நடத்தை உள்ளவர்களையும், ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டவர்களையும் வலயக் கல்விப் பணிப்பாளர்களாக தொடர்ந்தும் பணியாற்ற அனுமதித்த அதிகாரிகளினதும் - ஆட்சியாளர்களதும் - அமைச்சர்களதும் அரசியல் தலையீடுகளுமே கல்விப் புலத்தை சீரழித்து வருகின்ற மற்றுமொரு காரணியாகும்.

அத்தகைய முறையில் செயற்படும் வலயக் கல்விப் பணிப்பாளர் ஒருவரினால் சீரழிந்து கொண்டிருக்கும் கல்வி வலயங்களில் முல்லைத்தீவு கல்வி வலயமும் ஒன்றாகும்.

முல்லைத்தீவு - முள்ளியவளை தேசிய பாடசாலையின் அதிபரின் நிதி மற்றும் நிர்வாக முறைகேடுகள் தொடர்பாக் நீண்ட காலங்களாக பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்துள்ள போதிலும், அவை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்காததன் முரண்பட்ட நிலையே இன்று ஆசிரியர் ஒருவரின் சொத்துக்களை அழித்து உயிர் அச்சுறுத்தல் விடுக்கும் நிலையை தோற்றுவித்துள்ளது.

குறித்த அதிபரின் முறைக்கேடுகள் குறித்து பாடசாலை ஆசிரியர் களும், இலங்கை ஆசிரியர் சங்கமும் வலக்கல்விப் பணிப்பாளர் - மத்திய மற்றும் மாகாண கல்வியமைச்சுக்களின் கவனத் துக்கு கொண்டு சென்றிருந்த போதும் நடவடிக்கை எடுக்கா திருந்ததன் விளைவே இந்தப் பாரதூரமான சம்பவத்துக்குப் பிரதான காரணமாகும்.

இந்த விளைவுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினர் அனைவரும் பொறுப்பு கூறவேண்டும்.

முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி அதிபர் தொடர்பான குற்றச்சாட்டுக்களை மூடிமறைத்து துணை நின்ற முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் மத்திய கல்வியமைச்சின் தமிழ் மொழிப்பிரிவின் பணிப்பாளர்கள் மற்றும் மத்திய கல்வியமைச்சின் செயலாளர் உள்ளிட்டோரின் பொறுப்பற்ற செயற்பாடுகளே பாரதூரமான இந்த விளைவுக்குக் காரணமாகும்.

அதுமட்டுமல்ல நெறிபிறழ்வு செயற்பாட்டில் ஈடுபட்ட ஒருவர் முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளராக செயற்பட்டு வரும் நிலையில், அவற்றை நன்கு அறிந்திருந்தும் அவரை வழிப்படுத்த முடியாது துணைநின்ற கல்வியமைச்சின் அதிகாரிகள், வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர் உள்ளிட்ட வடக்கு மாகாண கல்வி அதிகாரிகளும் இந்தச் சம்பவத்துக்கு பொறுப்பேற்க வேண்டும்.

இந்தச் சம்பவம் நடைபெறுவதற்கு பாடசாலை அதிபரின் தொடர்ச்சியான செயற்பாடுகளே பிரதான காரணமாய் அமைந்ததென்பதும் குறித்த பாடசாலையில் அதிபர் ஆசிரியர்களுக்கிடையில் ஏற்பட்டிருந்த முரண் நிலைகளின் நியாயமான காரணங்களுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாக இருந்தால் இத்தகைய சம்பவம் தவிர்க்கப்பட்டிருக்கும் என்பதே இலங்கை ஆசிரியர் சங்கத்தின் நிலைப்பாடாகும்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிசாரும், வடக்கு மாகாண ஆளுநரும், திணைக்கள அதிகாரிகளும் உரிய நீதியை ஆசிரியருக்குப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குற்றவாளிகள் விரைவில் கைது செய்யப்பட்டு சட்ட



நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியின் அதிபர் உடனடியாக இடமாற்றப்பட்டு அவருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் குறித்து விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதுடன், குறித்த அதிபர் தொடர்பான குற்றச்சாட்டுக்களை மூடி மறைக்க துணைநின்ற முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளருக்கு எதிராகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றோம்" என கூறியுள்ளது.

# தமிழர் பிரதேசக் காணி அபகரிப்பை தடுக்க கோரும் மக்கள்!



09.10. 2024

அப்பாவிப் பொது மக்களின் காணிகளை அரச திணைக் களங்கள் கபளீகரம் செய்து எல்லையிடப்பட்டுள்ள நிலையில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குவதாக மக்கள் தெரி விக்கின்றனர்.

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச சபை எல் லைக்கு உட்பட்ட வெல்வேரி கிராமத்தினை சேர்ந்த பொதுமக் களும் இது தொடர்பில் தங்கள் ஆதங்கங்களை வெளிப் படுத்தி யுள்ளனர். இதற்காக அரசியலமைப்பில் சொல்லப்பட்ட அடிப் படை மனித உரிமைகளை வென்றெடுக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய காரியாலயத் தில் முறைப்பாடு ஒன்றை அண்மையில் (30.09.2024) பதிவு செய்தனர்.

குறித்த பகுதியில் வசித்துவந்த 31 குடும் பத்தினர்களது 42 ஏக்கர் குடியிருப்புக் காணிகள் இன்னும் விடுவிக்கப்படாத நிலை யில் அந்த காணிகளில் 35 ஏக்கர் காணிப்பகுதியானது பெரும் பான்மையினத்தினை சேர்ந்த தனி நபர் ஒருவருக்கு அரசினால் குத்தகை அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

உள்நாட்டு யுத்தம் காரணமாக குறித்த கிராமத்தவர்கள் இடம் பெயர்ந்திருந்த நிலையில் அவர்கள் மீளக் குடியேற முற்பட்ட போது அவர்களது காணிப்பகுதிகளை அரசானது கையகப்படுத் தியுள்ளதை அறிந்த பாதிக்கப்பட்ட மக்கள் மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிட்டுள்ளனர்.

1983ம் ஆண்டு ஏற்பட்ட கலவரத்தின் போது தாம் இடம் பெயர்ந்து மீளக் குடியமர்ந்ததன் பின்னர் 1990களிலும் இடம் பெயர நேரிட்டதாகவும் அதன் பின்னராக அவர்களது வீடுகள் இருந்த பகுதிகளில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்ததால் அப்போது மீளவும் குடியேற முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கின்றனர்.

அதன் பின்னராக வனஜீவராசிகள் திணைக்களம் குறித்த பகுதியில் எல்லையிட்டதன் பின்னராக தற்போது அங்கு செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவ்வாறு எல்லையிடப்பட்ட பகுதிகள் அரசின் ஆதரவுடன் பெரும்பான்மையினத்தினை சேர்ந்த தனி நபர் ஒருவருக்கு நீண்ட கால குத்தகை அடிப்படை யில் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருவதாகவும் தெரிவித்தனர்.

மேலும் அது தொடர்பில் பலதரப்பட்ட மட்டங்களில் முறையிடப் பட்டிருந்த போதிலும் தகுந்த பதில் கிடைக்கப்பெறாத நிலையில் குறித்த விடயம் தொடர்பில் மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிட வருகை தந்திருப் பதாகவும் இதன்போது அவர்கள் குறிப்பிட்டனர்.

எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் வடக்கு கிழக்கு சிறுபான்மை சமூகத்தின் உரிமைகள் கேள்விக்குறியே. தற் போது ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க இது தொடர்பில் தீர் வினை பெற்றுக் கொடுக்க முன்வர வேண்டும். ஜனாதிபதி தேர்தலில் வடக்கு கிழக்கில் தேசிய மக்கள் சக்திக்கு மக்களது ஆதரவு குறைவு அது போன்று வாக்குகளும் குறைவாகவே கிடைத்தன. எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலை இலக்கு வைத்து களநிலவரம் எப்படி அமையப்போகிறது என்பது பற்றி எம்மால் ஊகிக்க முடியாது .

தேர்தல் கால வாக்குறுதிகளில் ஒன்றாக வேட்பாளர்களால் கூறப்படும் ஒன்று காணி விடுவிப்பு. இது நடந்தால் மகிழ்ச்சி. கிழக்கு மாகாணத்தில் பல ஏக்கர் வயல் நிலங்கள், விவசாய, குடியிருப்பு பூமிகளை தனியாருக்கு சொந்த மானதை எல்லை யிட்டு அபகரிப்பு செய்துள்ளனர்.

இவ்வாறான தனியாருக்கு சொந்தமான மக்கள் காணிகளை வன ஜீவராசிகள் திணைக்களம், தொல்பொருள் திணைக் களம், இலங்கை துறை முக அதிகார சபை போன்றன கையகப் படுத்தியுள்ளதால் அன்றாட ஜீவனோபாயத்தில் பல்வேறு அசௌகரியங்களை மக்கள் எதிர்நோக்கியுள்ளனர்.

இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திரு கோணமலை பிராந்திய காரியாலயத்தில் முறைப்பாடளித்த ஐயா சாமி கிருஷ்ண ரூபன் இவ்வாறு தெரிவித்தார் "வெல் வேறியன் காணி எங்களுக்கு சொந்தமானது. தற்போது வனத் திணைக்களத்தினர் எல்லையிட்டு எங்களை அங்கு செல்லாது தடுத்து நிறுத்துவதுடன் நில அளவைத் திணைக்களம் பிரதேச செயலகம் ஊடாக தெரியப்படுத்திய போது அது ஹெட்டி யாராச்சி என்பவருக்கு சொந்தமான காணி என தெரிவிக்கின்றனர். வனஜீவராசிகள் திணைக்களம் என்று எல்லையிடப்பட்ட போது எப்படி இவ்வாறு கூறுவது. எனவே சட்டரீதியாக பல விட யங்களை செய்தபோதும் தோல்வி கண்டுள்ளோம். இறுதியாக மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு புகார ளிக்க வந்தோம்" என்றார்.

இது தவிர திருகோணமலை மாவட்டத் தின் குச்சவெளி பகு தியில் சுமார் 2000 ஏக்கர் காணிகள் விகாரைக்காக ஒதுக்கப் பட்டு 31 விகாரைகள் கட்டுமானப் பணிகளுக்காக நடைமுறைப் படுத் தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

திரியாய் பகுதியில் 3000 ஏக்கர் மக்களது விவசாய காணிகள் சூறையாடப்பட்டு, அரச திணைக்களங்கள் சில கையகப்படுத் தியுள்ளதாகவும் தெரியவருகிறது.

"1970களில் எங்கள் காணிகளில் குடியிருந்து யுத்த சூழ்நிலை காரணமாக 1977ல் அங்கும் இங்கும் ஓடி இடம் பெயர்ந்த போது மீண்டும் எமக்கு அந்த காணிகளை வழங்காது வனஜீவராசி திணைக்களத்தினர் கையகப்படுத்தியதை அறிய முடிகிறது. எங்கள் பூர்வீக பூமி எங்களுக்கு வேண்டும்" என வயோதிப பெண் ஒருவர் தனது காணி இழந்ததை பற்றி இவ்வாறு விபரித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் 41 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களது விவசாய காணிகளை கபளீகரம் செய்துள்ளதாகவும் இதனை அரச திணைக்களங்களான தொல்பொருள், வன ஜீவராசி, துறை முக அதிகார சபையினர்களே இவ்வாறு அடாத் தாக கையகப்படுத்தியதாகவும் திருகோணமலை மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசன் அண்மையில் மக்களுடனான சந்திப்பின் போது தெரிவித்தார். ஆனாலும் இதனை மீட்பதற்கான நடவடிக்கைகள் எடுத்தது பற்றி விபரங்கள் வெளியாகவில்லை. தேர்தல் காலத்தில் வாக் குறுதிகளை மக்கள் மத்தியில் அள்ளி வீசுவார்கள் பொறுத் திருந்து தான் பார்க்க வேண்டும்.

"எங்களுடைய நிலத்தை பெற்றுத் தாருங்கள் தற்போதைய ஜனாதிபதி இலஞ்ச ஊழலற்ற நாட்டை உருவாக்குவதாக கூறுகின்றார்.

எமக்கான காணிகளை பெற்றுத் தாருங்கள். உடனடியாக வனஜீவராசிகள் திணைக் களத்தினரிடத்தில் இருந்து விடு வியுங்கள்" என ஒரு காணி உரிமையாளர் இதன் போது தெரிவித்தார்.

நில அபகரிப்பை நிறுத்தக்கோரிய போராட்டங்கள் வடக்கு கிழக் கில் கடந்த அரசாங்கத்திலும் இடம் பெற்றன. முழுமையான தீர்வு கிடைக்கவில்லை, தற்போதைய அரசாங்கம் இம் மக் களுக்கான தீர்வுகளை முன்வைப்பார்களா என அங்கலாய்க் கின்றனர். தமிழ், முஸ்லிம் சமூகம் காலா காலமாக பல விவசாய, குடியிருப்பு பூமிகளை இழந்து தவிக்கின்றனர். இந்த அரசாங்கத்துக்கு சிறுபான்மை சமூகமும் ஆதரவளித்திருந் தனர். இருந்த போதிலும் திருப்திப்படக்கூடிய தீர்வு கிட்டுமா என்பது கேள்விக்குறியே .

# தராகி சிவராமின் மரணம் உட்பட்ட ஏழு முக்கிய சம்பவங்களின் விசாரணைகள் ஆரம்பம் (?)

13.10. 2024

ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராம் படுகொலை லலித் குகன் காணாமலாக்கப்பட்டமை உட்பட முக்கிய ஏழு சம்பவங்கள் குறித்து விசாரணைகளை துரிதப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மத்திய வங்கி பிணைமுறி மோசடி குறித்த விசாரணைகளையும் தீவிரப்படுத்துமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு வேண்டுகோள் விடுத்துள்ளது.

பதில்பொலிஸ்மா அதிபருக்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த சம்பவங்கள் தொடர்பில் சிஜடியினருடனும் உரிய பொலிசாருடனும் இணைந்து செயற்படுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு தரப்பு பதில்பொலிஸ்மா அதிபரை கேட்டுக் கொண்டுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பிரபல வர்த்தகர் தினேஸ் ஸ்காப்டரின் மரணம், வெலிகமவில் டபில்யூ 15 ஹோட்டலிற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கொல்லப்பட்டமை குறித்தும் விசாரணைகளை துரிதப்படுத்து மாறுபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டுள்ளது.





"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள்
நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவ்களே,
எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரிது."

*தமிழீழ தேசியத் தலைவர் மேதகு. வே. பிரபாகரன் அவர்கள்*

# பெரியநீலாவனையில் சவப் பெட்டியை ஏந்தி மக்கள் மதுபானசாலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!

10.10. 2024

கல்முனை பிரதேச செயலகத்தை உட்பட்ட பெரியநீலாவனையில் ஏற்கனவே ஒரு மதுபானசாலை உள்ள நிலையில் மீண்டும் புதிதாக ஒரு மதுபானசாலை திறந்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்கள் சவப் பெட்டியைத் தூக்கி புதன் கிழமை (09) ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.



இந்த ஆர்ப்பாட்டம் பாடசாலை மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் இடையூறா இருப்பதாகவும் போராட்டதாரர்கள் தெரிவித்ததுடன், பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபர் ஆகியோரை கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஆர்ப்பாட்டகாரர்கள் கோரிக்கை முன்வைத்தனர்.

ஏற்கனவே ஒரு மதுபானசாலை நீண்ட நாட்களாக உள்ள நிலையில் புதிதாக ஒரு மதுபானசாலை இங்கு அவசியம் இல்லை எனவும், சிறிய கிராமமான இக் கிராமத்திற்கு இரு மதுபானசாலை தேவையில்லை எனவும் இது எங்கள் சமூகத்தைச் சீரழிக்கவே ஆரம்பித்துள்ளதாகவும் ஆர்ப்பாட்டதாரர்கள் தெரிவித்திருந்தனர்.

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உரிய உன்னிச்சை என்ற விலாசம் கொண்ட லேபல் பொறிக்கப்பட்ட மதுபானசாலையாக இது அம்பாறை மாவட்டத்தில் இயங்குவதாகவும் ஆர்ப்பாட்டதாரர்கள் இதன்போது சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்த பிரதேசத்திற்கு வருகை தந்த கல்முனை வடக்கு பிரதேச



செயலாளர் ரி. ஜே.அதிசயராஜ் மதுபான சாலை உரிமையாளரிடம் தற்காலிகமாக மூடுமாறும் தெரிவித்து ஆர்ப்பாட்டக் காரர்களை கலைந்து செல்லுமாறும் குறித்த மதுபான சாலையை அகற்றுவதற்கான நடவடிக்கையை மதுவரி திணைக்களத்துடன் கலந்துரையாடி மேற்கொள்வதாகவும் உறுதி அளித்த நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

# யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படியில் இந்திய இராணுவத்தினால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல்!

12.10. 2024

யாழ்ப்பாணம் கொக்குவில் பிரம்படி படுகொலையின் 37ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றைய தினம் சனிக் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பிரம்படி பகுதியில் அமைந்துள்ள நினைவு தூபியில் சுடரேற்றி மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.



கடந்த 1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 11ஆம் மற்றும் 12 ஆம் திகதிகளில் கொக்குவில் பிரம்படி பகுதியில் 50க்கும் மேற்பட்ட பொது மக்களை இந்திய இராணுவத்தினர் படுகொலை செய்திருந்தனர்.




# மன்னார் ‘சதோச’ மனிதப் புதைகுழி தொடர்பான சான்றுகள் சிறீலங்கா கொழுப்பிற்கு!

12.10. 2024

மன்னார் “சதோச” மனித புதைகுழி தொடர்பான உரிய சான்றுப் பொருட்களை கொழும்பில் உள்ள நிறுவனங்களுக்கு எடுத்துச் சென்று அகழ்வாராய்ச்சி செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சார்பாக மன்றில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிறைஞ்சன் தெரிவிக்கையில் மன்னார் நீதவான் நீதிமன்றத்தில் “சதோச” மனித புதைகுழி தொடர்பான வழக்கு கடந்த திங்கட்கிழமை(7) தொடக்கம் நேற்று வெள்ளிக்கிழமை (11) வரை ஏற்கனவே சதோச மனித புதைகுழியில் அகழ்வு செய்யப்பட்ட மனித எலும்புக்கூட்டு தொகுதிகளோடு, காணப்படும் வேறு பொருட்கள் காணப்படும் பெட்டிகள், பொதி செய்யப்பட்டு, நீதிமன்ற வளாகத்தில் வைக்கப் பட்டிருந்தன.

பல வருடங்களுக்கு பிற்பாடு, குறித்த ஐந்து நாட்களும், பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினரும், சட்ட வைத்திய அதிகாரி குழுவும் மன்னார் நீதவான் முன்னிலையில், காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தினரும் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக மன்றில் ஆஜராகும் சட்டத் தரணிகளும் நீதிமன்ற அலுவலகர்களும் இணைந்து தரம் பிரித்தல் நடவடிக்கைகளை முன்னெடுத்தனர்.


இதன் போது மனித எலும்பு தொகுதிகள் தனியாகவும், அதனுடன் எடுக்கப்பட்ட பிற பொருட்கள் தனியாகவும் பிரித்தெடுக்கப்பட்டு, பொதி செய்யப்பட்டு பாதுகாப்பாக நீதிமன்ற வளாகத்தில் வைக்கப்பட்டது.

இது தொடர்பான மேலதிக விடையங்கள் சம்பந்தமாக மனித எலும்புகள் குறித்து சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கையும், மீட்கப்பட்ட ஏனைய பொருட்கள் குறித்து களனி பேராசிரியர் ராஜ் சோம தேவவின் தொல்பொருள் அறிக்கையையும் நீதி மன்றம் கோரியுள்ளது.

அவர்கள் குறித்த விடயங்கள் தொடர்பாக எதிர் வரும் புதன் கிழமை(16) குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் போது, இவ்விடயம் தொடர்பாக தீர்மானிக்கப்பட வுள்ளது.

அவர்கள் உரிய சான்றுப் பொருட்களை கொழும்பில் உள்ள தமது நிறுவனங்களுக்கு எடுத்துச்சென்று அகழ்வாராய்ச்சி செய்து அவை எக்காலப்பகுதிக்கு உரியது என தொல்பொருள் திணைக்களமும், அந்த எலும்புக் கூட்டுத்தொகுதிகளில் இறப்புக்கான காரணம், வயது, பாலினம் போன்ற விடயங்கள் தொடர்பான அறிக்கையையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கான கால அளவுகள் எதிர்வரும் புதன்கிழமை நீதிமன் றத்தில் தெரியப்படுத்தப்படும்.



# யுத்தத்தை தீவிரப்படுத்தி, முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அரங்கேற்றியவர்கள் மக்கள் விடுதலை முன்னணியினரே!

**சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல்**

13.10. 2024



தமிழர்களுக்கு எதிராக தமது உறுப்பினர்களை உள்நுழைய வைத்து யுத்தத்தை தீவிரப்படுத்தியதோடு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அரங்கேற்றியவர்களும் மக்கள் விடுதலை முன்னணியினரே. இவர்களின் காலத்தில் அரசியல் தீர்வுக்கும் வழியில்லை என சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும், அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா. சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவர் இன்று (12) வெளியிட்டுள்ள தனது ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் மேம்படுத்தல் எனும் தலைப்பிலான ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் 51/1 இலக்க தீர்மானத்தினை ஏற்க மாட்டோம் என ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான இடைக்கால அரசு தீர்மானித்து. ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கும் அதனை அறிவித்துள்ளது. இது வியப்புக்குரிய விடயமல்ல.

ஆனால், தெற்கின் மாற்றத்துக்கான அரசியலோடு நாமும் இணைவோம் எனக் கூறி தேசிய மக்கள் சக்தியின் கட்சி சின்னத்தில் வட கிழக்கில் வாக்கு கேட்பவர்களும் மாற்றம் எனும் முகத்தோடு சுயேட்சையாக வாக்கு கேட்பவர்களும், தமிழர்களின் வாக்குகளால் வென்ற பின்னர் அரசுக்கு முண்டு கொடுப்போம் என சிந்தித்துக்கொண்டிருப்பவர்கள் தங்கள் முடிவை மீள் பரிசீலனை செய்யுமாறு கேட்கின்றோம்.

இல்லையேல், முள்ளிவாய்க்கால் இரண்டுக்கு வழிவகுத்த தமிழினத் துரோகிகளாக வரலாற்றில் இடம்பிடிப்பீர்கள் என்பதையும் கூற விரும்புகின்றோம்.

தேர்தல் நெருங்கிக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் சூழ்நிலையை தேசிய மக்கள் சக்தியினர் பயன்படுத்தி சிங்கள பௌத்த பேரினவாதிகளும் அவர்களால் கட்டமைக்கப்பட்டுள்ள படைத்தரப்பினரும் வடகிழக்கின் வாக்குகள் இன்றி எங்களை வெல்ல வையுங்கள் என்று நேரடியாக கூறுவதற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்திக்கொண்டுள்ளனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் 3/2 பெரும்பான்மை ஆசனங்களை குறிவைத்து தேசிய மக்கள் சக்தி கவர்ச்சி அரசியலை செய்துவரும் சூழ்நிலையே ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்துக்கு பதில் அளித்துள்ளதன் மூலம் தமிழர் விரோதப் போக்கை வெளிப்படையாகவே கையில் எடுத்துள்ளதோடு, தமது அரசுக்கு பேரினவாத கருத்தியல் கொண்டவர்களும் அவர்களினால் கட்டமைக்கப்பட்ட படையினரும் தமக்கு பாதுகாப்புக் கவசமாக இருக்க வேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ள பௌத்தத்துக்கான முன்னுரிமையை நாம் பாதுகாப்போம் என ஏற்கனவே தேசிய மக்கள் சக்தியினர் கூறியுள்ளதோடு இடைக்கால அரசாங்கம் அமைத்ததும் பௌத்த தலைமைகளை தேடி தேடிச் சென்று உங்கள் கட்டுக்குள் இருப்போம் என்பதன் அடையாளமாக தங்கள் கைகளில் பிரித்து நூலை கட்டிக்கொள்வதோடு அவர்கள் காலில் விழுந்து ஆசியும் பெற்றுக்கொள்கின்றனர். இங்கு பக்திக்கு அப்பால் அரசியலே மேலோங்கியுள்ளது எனலாம்.

கடந்த 1971 மற்றும் 1988 /89 காலப்பகுதியில் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணி அரசுக்கு எதிராக மேற்கொண்ட போராட்டத்தின்போது முன்னணியினரின் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் சித்திரவதைக்குள்ளாகி கொல்லப்பட்டனர். சமூக புதைக்குழிக்குள் தள்ளப்பட்டனர். இதனை செய்த படையினரை அடையாளம் காட்டி நீதி கேட்க இன்று வரையுமா துணியவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அரசியலுக்காக ஊடகவியலாளர் திஸ்ஸநாயகம் (இவரை 20 வருட சிறைக்குள் தள்ளிய மகிந்த சர்வதேச அழுத்தத்தின் காரணமாக விடுதலை செய்தது பழைய கதை) அவர்கள் தயாரித்த அறிக்கையை ஐ.நாடுகள் மனித உரிமை பேரவைக்கு கொண்டு சென்று நீதி கேட்ட காலமும் உண்டு. ஆனால், மக்கள் விடுதலை முன்னணி அவர்களின் உறுப்பினர்களாக கருதப்பட்டவர்களின் சமூக புதைகுழி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் மாத்தளையில் கண்டுபிடிக்கப்பட்டபோதும் அதற்கான விசாரணையை தொடர்வதற்கு முன்வரவில்லை. இதுவே இவர்களின் அரசியல்.

அத்தகைய படை கட்டமைப்புக்குள் தமிழர்களுக்கு எதிராக தமது உறுப்பினர்களை உள்நுழைய வைத்து யுத்தத்தை தீவிரப்படுத்தியதோடு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை அரங்கேற்றியவர்களும் மக்கள் விடுதலை முன்னணியினரே. இவர்கள் சர்வதேச விசாரணையை எந்த வகையிலும் அனுமதிக்காததோடு உள்நாட்டு விசாரணை என தமிழர்களின் கண்களிலும் சர்வதேசத்தின் கண்களிலும் மண்ணைத் தூவுவதற்கே முயற்சிக்கின்றனர். இவர்களின் காலத்தில் அரசியல் தீர்வுக்கும் வழியில்லை.

தற்போதைய ஆட்சியாளர் காலத்தில் தமிழர் தேச மக்களாக அரசு பயங்கரவாதத்தின் உச்சத்தை அனுபவிப்போம் என்பது மட்டும் உண்மை. இதற்கு முகங்கொடுக்க ஜனநாயக வடிவில் 2009க்கு முன்னரான நிலையில் தேசமாக அரசியல் எழுச்சி கொள்ளல் வேண்டும். தற்போதைய நிலையில் தேர்தல் அரசியல் அதற்கு முழுமையாக உதவப்போவதும் இல்லை.

காரணம், தமிழர் தேசத்தை அழிக்கும் தமிழ் தேச புல்லுருவிகள் தேசம் என்றும் படர்ந்துள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையாளிகளும் தேசமெங்கும் பலமாக முகாம் அமைத்துமுள்ளனர்.

சுயேட்சை முகத்தோடும், தமிழர் தேசிய கவசத்தோடும் தேர்தல் களத்தில் முகமூடியோடு நிற்கின்றனர். வாக்காளர்களை கவர்ந்து பேசி அதிகார நாற்காலிகளை தமதாக்குவதே இவர்களது நோக்கம். இவர்களை அடையாளம் காண்போம்.

தேர்தல் அரசியலுக்கு அப்பால் பலமான மக்கள் அரசியலை முன்னெடுக்கவேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம். அரசியல் யாப்பின் பாதுகாப்போடு கட்டமைக்கப்பட்டுள்ள சிங்கள பௌத்த பேரினவாதம் முள்ளிவாய்க்கால் 2க்குள் எமைத் தள்ளி பூகோல அரசியலுக்குள் எம் அரசியலை கரைத்துவிடும் அபாயமும் உள்ளது.

இந்தியா அரசியல் சுயநலம் மிக்கது. இனி என்றுமே எமக்கு உணவுப் பொட்டலத்தை வானத்திலிருந்து போடாது என்பதை மனதில் இருத்தி, சுயநல அரசியலுக்கு அப்பால் பயணிக்க வழிவகுப்போம் என்றார்.

# பொதுக்கட்டமைப்பு தற்போது இல்லை: மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம்!

13.10. 2024




மக்கள் நாணயமானவர்களுக்கும், கறைபடியாதவர்களுக்கும் தேச திரட்சிக்காக உழைப்பவர்களுக்கும் மக்கள் வாக்களிக்க வேண்டும் என பொதுக்கட்டமைப்பை சேர்ந்த நிலாந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதி தேர்தலை கையாண்ட போன்று, மற்றைய தேர்தல்களை கையாள முடியாததால் நாடாளுமன்ற தேர்தலில் விலகி இருக்கின்றது.

ஜனாதிபதி தேர்தலில் பாவித்த சங்கு சின்னத்தை பாவிக்க வேண்டாம் என கோரினோம். கட்சிகள் விரும்பி இருந்தால் சங்கு சின்னத்தை எடுக்காது இருந்து இருக்கலாம். அதனையும் மீறி எடுத்துள்ளார்கள்.

சங்கு சின்னத்திற்கும், தமிழ் மக்கள் பொதுச்சபைக்கும், பொது கட்டமைப்புக்கும் எந்த தொடர்பும் இல்லை.

தமிழ் மக்கள் பேரவையின் கூர்ப்பாகவே தமிழ் மக்கள் பொதுச் சபையாகும். பொதுச் சபை அடுத்த கூர்ப்புக்கு போன பின்னரே தேர்தல்களை எதிர்கொள்ள முடியும்.

தமிழ் மக்கள் பொதுச்சபை ஜனாதிபதி தேர்தலில் தேச திரட்சியை எதிர்பார்த்து, அதில் வெற்றியும் பெற்றோம். அது சில நாட்களில் நாடாளுமன்ற தேர்தல் அறிவிப்புடன் மீள சிதறியுள்ளது.

நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் பலம் தமிழ் மக்கள் பொதுச்சபையிடம் இல்லாததால், அதில் இருந்து விலகி இருக்கிறோம்.

எனவே மக்கள் நாணயமானவர்களுக்கும் கறைபடியாதவர்களுக்கும் தேச திரட்சிக்காக மக்கள் வாக்களிக்க வேண்டும்.

சங்கு சின்னம் புனிதமானது இல்லை. அதற்கு யாரும் உரிமை கோர முடியாது. அது ஒரு பொது நிலைப்பாட்டிற்கான குறீயிடு. பொதுக்கட்டமைப்பில் இருந்த பலர் வெளியில் நிற்கும் போது சிலர் மட்டும் அதனை பயன்படுத்துவது அறமில்லை.

சங்கு சின்னத்திற்கு, நாடாளுமன்ற தேர்தலில் சங்கு சின்னத்தில் போட்டியிடுபவர்கள் மட்டும் உழைக்கவில்லை. பலரின் உழைப்பு அதில் உண்டு. தேர்தல் பிரச்சாரத்திற்கு பலர் முன்னரங்கில் வந்து உழைக்காமல் பின்னின்று உழைத்தவர்களும் உண்டு.

தேச திரட்சியை உருவாக்க முயன்று வெற்றி கண்டு சில நாட்களில் அது சிதறுண்டு போயுள்ளது. அதற்காக நாம் மக்களிடம் மன்னிப்பு கோருகிறோம். அத்துடன் பொதுக்கட்டமை தற்போது இல்லை என தெரிவித்தார்.

# திருகோணமலை
# புனித பூமி என்ற போர்வையில் ஜனாஸாவை அடக்கம் செய்ய விடாமல் சிங்கள பௌத்த பிக்கு அட்டகாசம்!

13.10. 2024

திருகோணமலை, குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புல்மோட்டை - பொன்மலைக்குடா பகுதியில் ஜனாஸா நல்லடக்கத்திற்கு சிங்கள பௌத்த பிக்கு தடை விதித்ததால் அப்பகுதியில் பதற்றமான நிலை தோன்றியது. குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

புல்மோட்டை பொன்மலைக்குடா பகுதியில் முஸ்லீம் பெண் ஒருவர் மரணமாகியிருந்த நிலையில் குறித்த ஜனாஸாவை நல்லடக்கம் செய்வதற்காக குறித்த பகுதியில் மயானத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த காணியில் ஜனாஸா நல்லடக்கம் செய்வதற்காக குழி தோண்டப்பட்டது. இதன்போது புல்மோட்டை அரிசிமலை விகாரையின் விகாராதிபதி குறித்த காணி “பூஜா பூமி” என புல்மோட்டை காவல்துறை சிலரை அப்பகுதிக்கு அனுப்பி ஜனாஸா நல்லடக்கத்தை தடை செய்திருந்தார். இதனையடுத்து அப்பகுதியில் பதற்றமான சூழல் தோன்றியது.

பின்னர் குறித்த விடயம் பிரதேச செயலாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டதையடுத்து குறித்த 2 ஏக்கர் காணியானது மயானத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள காணி எனவும் குறித்த பகுதியில் ஜனாஸாவை நல்லடக்கம் செய்யுமாறு பிரதேச செயலாளர் தெரிவித்ததையடுத்து குறித்த பகுதியில் இருந்து காவல்துறையினர் வெளியேற்றப்பட்டு அப்பகுதியில் ஜனாஸா நல்லடக்கம் செய்யப்பட்டது.



குறித்த பகுதியை நீண்டகாலமாக மையவாடியாக தாம் பயன்படுத்தி வருவதாகவும் இதில் பல ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், குறித்த பகுதியில் உள்ள மக்களுடைய காணிகளை பூஜா பூமி என்றுகூறி அரிசிமலை விகாராதிபதி அபகரித்து வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# வாங்காள விரிகுடாவில் காற்று சுழற்சி: பொதுமக்களுக்கு எச்சரிக்கை!

13.10. 2024

தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் காணப்படும் காற்று கூழற்சி இன்று 14.10.2024 காலை காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது நாளை ஆழந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி மேற்கு வடமேற்கு திசை நோக்கி நகரும் என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாண பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா. பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது எதிர்வரும் (17.10.2024) அல்லது (18.10.2024) அன்று தமிழ்நாட்டின் வட பகுதிக்கும் ஆந்திராவின் தெற்கு பகுதிக்கும் இடையில் ஆழந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக (கடல் மேற்பரப்பு வெப்பநிலை 30 பாகை செல்சியஸ் இனை விட உயர்வாக இருப்பதாலும் மேடன் யூலியன் அலைவு சாதகமாக இருப்பதனாலும் இரு ஒரு தீவிர தாழமுக்கமாகவே இருக்கும்.) கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் நாளை அதிகாலை முதல் கன மழை கிடைக்க தொடங்கும்.

இடையிடையே இது இடி மின்னலோடு கூடிய மழையாக இருக்கும் இந்த மழை எதிர்வரும் (18.10.2024) வரை தொடரும்.

உள் நிலப்பகுதிகளில் காற்று மணிக்கு 40 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் வீசும் என எதிர்பாக்கப்படுகிறது.

தாழமுக்கம் காரணமாக கடற் பகுதிகள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும் என்பதனால் நாளை முதல் மறு அறிவித்தல் வரை மீனவர்கள் கடலுக்கு செல்வதை தவிர்ப்பது சிறந்தது.

அதே வேளை எதிர்வரும் (22.10.2024) அன்றும் வங்காள



விரிகுடாவில் மீண்டும் ஒரு தாழமுக்கம் உருவாகும் வாய்ப்புள்ளது.



எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும்.
நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில்
உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு
தமிழ் மக்களாகிய எம்முடையது மாத்திரமே.



# கனடிய செய்திகள்

# அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து பழங்குடியின மக்கள் அதிருப்தி!

01.10. 2024

கனடிய மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பில் பழங்குடியின மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக வதிவிட பாடசாலைகளில் கற்று உயிர்தப்பிய பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் இந்த குற்றச்சாட்டை சுமத்தியுள்ளனர்.

பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்தவர்கள் வதிவிட பாடசாலைகளில் அனுபவித்த சித்திரவதைகள் மற்றும் கொடுமைகளை வெளிக்கொணர்வதற்கு அரசாங்கம் தயக்கம் காட்டுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வதிவிட பாடசாலைகளில் கொல்லப்பட்ட சிறுவர்களின் சடலங்களை கண்டுபிடிக்கும் நடவடிக்கை மற்றும் வதிவிட பாடசாலைகளில் கற்ற மாணவர்கள் பற்றிய பதிவுகளை வெளிக்கொணரும் பணிகளுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்வதை குறைத்துக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு நிதி ஒதுக்கீடு குறைபாடு வதிவிட பாடசாலைகளில் சித்திரவதைகளை அனுபவித்தவர்களுக்கு செய்யும் துரோகச் செயல் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

வதிவிட பாடசாலைகளில் கற்ற சிறுவர்கள் பல்வேறு துன்புறுத்தல்களையும் சித்திரவதைகளையும் எதிர் நோக்க நேரிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த பாடசாலைகளில் கற்ற பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.



எனவே இந்த உண்மைகளை வெளிக்கொணர்வதற்கு போதிய அளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# கனடாவில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி!

02.10. 2024

கனடாவில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடிய புள்ளி விபரவியல் திணைக்களம் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக நாட்டில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கனடாவில் அதிக அளவு குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்த மாகாணமாக பிரிட்டிஷ் கொலம்பியா கருதப்படுகின்றது.

கடந்த 2022 மற்றும் 2023 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது.

உலகில் குழந்தை பிறப்பு வீதம் குறைந்த நாடுகளின் வரிசையில் கனடா இணைந்து கொண்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

தென்கொரியா, ஸ்பெயின், இத்தாலி மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளும் இந்த வரிசையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொருளாதார காரணிகளினால் இவ்வாறு குழந்தை பிறப்பு தொடர்பில் இளம் தலைமுறையினர் கூடுதல் சவால்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.



இதன் காரணமாகவும் நாட்டில் குழந்தை பிறப்பு வீதம் வீழ்ச்சி அடைந்துள்ளது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ஒன்ராரியோ மாகாணத்தில் ஆசிரியர் தட்டுப்பாடு குறித்து எச்சரிக்கை!

03.10. 2024

ஒன்ராரியோ மாகாணத்தில் ஆசிரியர் தட்டுப்பாடு குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாகாண கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட ஆவணம் ஒன்றில் இது தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு அளவில் ஆசிரியர் பற்றாக்குறை நிலைமை மோசமடையும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் சேர்க்கை எண்ணிக்கை மற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெறும் எண்ணிக்கை என்பன அதிகரித்து செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் மூலம் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் அதேவேளை, ஆசிரியர்கள் ஓய்வு பெறும் எண்ணிக்கையும் அதிகரிப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

எனவே ஆசிரியர்களுக்கு கடும் தட்டுப்பாடு நிலவும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் புதிய கல்வி அமைச்சர் ஆவணம் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தகுதி வாய்ந்த ஆசிரியர்களை தக்க வைத்துக் கொள்வதில் சவால்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# ஏதிலிகளின் உரிமைகள் உறுதிசெய்யப்பட வேண்டும்!

## கனடியப் பிரதமர் ஜஸ்டின் ரூடோ

07.10. 2024

ஏதிலி கோரிக்கையாளர்களின் அடிப்படை உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டும் என பிரதமர் ஜஸ்டின் ரூடோ தெரிவித்துள்ளார்.

கியூபிக் மாகாண முதல்வர் பிரான்கோயிஸ் லெகுலாட் ஏதிலி கோரிக்கையாளர் விவகாரம் தொடர்பில் கடும் விமர்சனங்களை வெளியிட்டுள்ளார்.

பிரான்சில் நடைபெற்று வரும் மாநாடு ஒன்றில் பிரதமர் ரூடோ பங்கேற்றுள்ளார்.

இவ்வாறான பின்னணியில் முதல்வர் லெகுலேட்டின் கருத்துக்கு பிரதமர் பதிலளித்துள்ளார்.

ஆக்கபூர்வமான விடயங்களை மேற்கொள்வதற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை உறுதி செய்வதற்கும் தாம் இங்கு கூடி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

கியூபிக் மாகாண முதல்வரும் தற்பொழுது பிரான்சிக்கு விஜயம் செய்துள்ளார். மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என பிரதமர் ரூடொ தெரிவித்துள்ளார்.

கியூபெக்கில் குடியேறியுள்ள ஏதிலிகளை பலவந்தமாக வெளியேற்ற வேண்டும் என மாகாண முதல்வர் கோரி வருகின்றார்.



எனினும் இந்த கோரிக்கையை பிரதமர் நிராகரித்துள்ளார்.

www.sangathamil.ca

# ஒன்ராரியோவில் ஆகஸ்ட் மாதத்தில் வெள்ளம் காரணமாக 100 மில்லியன் டொலருக்கு மேல் சேதம்!

10.10. 2024

கடந்த ஆகஸ்ட் மாதம் ஒன்ராரியோ மாகாணத்தில் ஏற்பட்ட வெள்ள நிலைமைகளினால் 100 மில்லியன் டொலர் வரையில் நட்டம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசிய காப்புறுதி கூட்டமைப்பு இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

கடந்த ஆகஸ்ட் மாதம் ரொரான்ரோ பெரும்பாகப் பகுதிகளிலும், தென் ஒன்றாறியோ பகுதியிலும் கடுமையான மழை வெள்ள நிலை ஏற்பட்டது.

இந்த காலநிலை சீர்கேடு காரணமாக கட்டிடங்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டிருந்தது.

இவ்வாறு காலநிலை அனர்த்தம் காரணமாக ஏற்பட்ட சேதங்களின் மொத்த தொகை மதிப்பீடு 100 மில்லியன் டாலர்களை கடந்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆகஸ்ட் மாதம் 17 18 ஆம் திகதிகளில் கடும்மழை, இடி, மின்னல் தாக்கம் மற்றும் பலத்த காற்று போன்ற அனர்த்தங்களினால் பாதிப்புகளை மக்கள் எதிர்நோக்கி இருந்தனர்.

குறிப்பாக மிசிசாகா, இடோபிகொக் மற்றும் ரொரான்ரோ



பெரும்பாகப் பகுதிகளில் கூடுதல் சேதங்கள் ஏற்பட்டிருந்தன.

இந்த ஆண்டில் ஒன்ராரியோ மாகாணத்தில் காலநிலை சீர்கேடுகள் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

# ரொரான்ரோவில் புதைபடிவ எரிபொருள் வகைகளுக்கான விளம்பரங்களுக்கு தடை!

13.10. 2024

ஒன்ராரியோவின் ரொறன்ரோ மாநகர சபையில் புதைபடிவ எரிபொருள் வகைகளை பிரசாரம் செய்யும் விளம்பரங்களுக்கு தடை விதிக்கப்பட உள்ளது.

ரொரான்ரோ நகர பேரவை இது தொடர்பான யோசனையை முன்மொழிந்துள்ளது. புதைமை வடிவ எரிபொருள் தொடர்பில் பிழையான விடயங்கள் உள்ளடங்கிய விளம்பரங்கள் தடை செய்யப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சுற்றுச்சூழல் தொடர்பிலான போலியான விளம்பரங்களும் தடை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

ரொரான்ரோ நகர சபை உறுப்பினர்கள் இது தொடர்பான தீர்மானத்திற்கு தங்களது ஆதரவினை வெளிப்படுத்தியுள்ளனர்.

புதைபடிவ எரிபொருள் வகை பயன்பாட்டில் இருந்து விடுபடுவதற்கு உந்து சக்தியாக அமையக்கூடிய விளம்பரங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மாறாக மக்களை பிழையாக வழிநடத்தக் கூடிய விளம்பரங்கள் தடை செய்யப்பட வேண்டும் என கனடிய சுற்றாடல் தொடர்பான மருத்துவ பேரவையின் பேச்சாளர் டாக்டர் மிலி ரோய் தெரிவித்துள்ளார்.




# ரொரான்ரோ நோர்த் யோர்க் பகுதிப் பாடசாலை ஒன்றின் மீது இரண்டாம் தடவையும் துப்பாக்கிச்சூடு!

13.10. 2024

ரொரான்ரோவின் நோர்த் யோர்க் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றின் மீது இரண்டாவது தடவையாக துப்பாக்கி சூடு நடத்தப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள யூத மகளிர் பாடசாலை ஒன்றின் மீது இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டில் இதற்கு முன்னரும் ஒரு தடவை குறித்த பாடசாலை மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது.

வாகனத்தில் வந்த சந்தேக நபர்கள் பாடசாலை மீது துப்பாக்கி சூடு நடத்தியதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் பாடசாலையில் எவரும் இருக்கவில்லை எனவும் இதனால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

காணொளிகளின் அடிப்படையில் இந்த துப்பாக்கி சூட்டு சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்த துப்பாக்கி சூடு தொடர்பில் பொலிசார் இதுவரையில் தகவல்கள் எதையும் வெளியிடவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலை நடத்திய சந்தேகம் நபர்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

யூத மத எதிர்ப்பு விழிப்புணர்வு சந்தர்ப்பமாக இந்த தாக்குதல் சம்பவத்தை கருதுவதாக மா நகர மேயர் ஒலிவியா சொள தெரிவித்துள்ளார்.







# தமிழக செய்திகள்



# இலங்கை ஜனாதிபதி போர்க்குற்ற விசாரணைகளிற்கு ஒத்துழைக்கவேண்டும்!

**பா.ம.க நிறுவனர் இராமதாஸ்**

01.10. 2024

இலங்கையை ஆட்சி செய்த கட்சிகள் அல்லாத புதிய கட்சியைச் சேர்ந்த ஒருவர் அதிபராகியுள்ள நிலையில் ஈழத்தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என, இலங்கை செல்லும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் வலியுறுத்த வேண்டும்" என்று பாமக நிறுவனர் இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் "இலங்கையின் புதிய அதிபராக சிங்கள பேரினவாத அமைப்பான ஜனதா விமுக்தி பெரமுனா கட்சியின் தலைவர் அநுரா குமார திச நாயக்க பொறுப்பேற்ற பிறகு முதல் வெளிநாட்டுத் தலைவராக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் வரும் 4-ம் தேதி இலங்கை செல்கிறார். இரு தரப்பு உறவுகளை வலுப் படுத்தும் நோக்குடன் அவர் மேற்கொள்ளவிருக்கும் இந்தப் பயணம் அங்குள்ள தமிழர்களுக்கு பயனும் அதிகாரமும் அளிக்கும் வகையில் அமைய வேண்டும்.

இலங்கைப் போர் முடிவடைந்து 15 ஆண்டுகள் ஆகும் நிலையில் அங்கு நிகழ்த்தப்பட்ட கொடிய போர்க்குற்றங்களுக்கு காரணமானவர்கள் எவரும் இதுவரை தண்டிக்கப்படவில்லை. இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13-ம் திருத்தத்தின்படி தமிழர்களுக்கு அதிகாரம் அளிக்க வேண்டும் என்று இந்தியா வலியுறுத்தினாலும் கூட எந்தப் பயனும் ஏற்படவில்லை.

இத்தகைய சூழலில் இலங்கை செல்லும் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் குறித்த ஐநா மனித உரிமை ஆணையத்தின் விசாரணைக்கு முழுமையாக ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும்.

13-ம் அரசியல் சட்டத் திருத்தத்தின்படி தமிழர்களுக்கு உறுதி யளிக்கப்பட்ட அதிகாரப் பரவல் என்பது மிக மிக குறைவானது தான் என்றாலும் கூட அதுவும் கூட 35 ஆண்டுகளாக சாத்திய மாகவில்லை. கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக இலங் கையை ஆட்சி செய்த கட்சிகள் அல்லாத புதிய கட்சியைச் சேர்ந்த ஒருவர் அதிபராகியுள்ள நிலையில் ஈழத்தமிழர்களுக்கு அதி காரம் அளிக்க வேண்டும் வடகிழக்கில் தமிழர்கள் அதிகம் வாழும் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை தடுத்து நிறுத்த வேண்டும் பிரிக்கப்பட்ட வடக்கும் மற்றும் கிழக்கு மாநிலங்களை இணைந்து தேர்தல் நடத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படி இலங்கை அதிபரை அமைச்சர் ஜெய்சங்கர் கண்டிப்புடன் வலியுறுத்த வேண்டும்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய் யப்படுவது தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இன்றைய நிலையில் தமிழக மீனவர்கள் 162 பேர் கைது செய்யப்பட்டு இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரையும் விடுதலை செய்யும்படியும் மீனவர் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காண கூட்டுப் பணிக்குழுவை அமைக்கும் படியும் இலங்கை அதிபரை வலியுறுத்த வேண்டுமென்று வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரைக் கேட்டுக் கொள்கிறேன்."



# இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்ட இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு வலியுறுத்தி தங்கச்சிமடத்தில் மீனவர்கள் உண்ணாவிரதப் போராட்டம்!

03.10. 2024

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக சிறீலங்கா கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட மீனவர்களை உடனடியாக படகுடன் விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி இராமேசுவரம் தங்கச்சிமடத்தில் மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் குடும்பத்தினர் இன்று வியாழக்கிழமை (3) உண்ணாநோன்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சிறையில் அடைக்கப்பட்ட மீனவர்களை உடனடியாக மீட்டுத் தருமாறு கோரி மீனவர்களின் குடும்பத்தினர் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளனர்.






கடந்த சனிக்கிழமை (28) ராமநாதபுரம் மாவட்டம் இராமேசு வரம் மீன்பிடித் துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 17 இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக சிறீலங்கா கடற்படையினர் கைது செய்தனர்.



இந்த 17 மீனவர்கள் உட்பட முன்னதாக சிறைபிடிக்கப்பட்ட சுமார் 150க்கும் மேற்பட்ட மீனவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் சிறீலங்கா கடற்படை வசமுள்ள நாகை, புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி முதலான மாவட்டங்களைச் சேர்ந்த 175க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மற்றும் நாட்டுப் படகுகளை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி இன்று காலை முதல் தங்கச்சி மடம் வலசை பேருந்து நிலையத்தில் விசைப்படகு மீனவர்கள் மற்றும் சிறையில் உள்ள மீனவர்களின் உறவினர்கள் உண் ணாநோன்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

வயிற்றுப் பிழைப்புக்காக மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களை கைது செய்து சிறையில் அடைத்துள்ளமை மிகுந்த வேதனை அளிக்கிறது. எனவே, சிறீலங்கா சிறையில் உள்ள தங்கள் உற வினர்களை விரைந்து மீட்டு தாயகம் அழைத்து வருவதற்கு மத்திய, மாநில அரசுகள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணீர் மல்க மீனவர்களின் உறவினர்கள் தமிழக அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதனிடையே மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தி இராமேசுவரம் விசைப்படகு மீனவர்கள் இன்று மூன்றாவது



நாளாகத் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்திலும் ஈடுபட்டு வருகின்றனர்.

# தனியார் நிறுவனங்களில் தமிழர்களுக்கு 80 % பணிகளுக்கான சட்டம் இயற்ற பாமக வலியுறுத்தல்!

08.10. 2024

“வேலை நிறுத்தத்தைத் தொடரும் சாம்சங் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப் படுவதற்கு அரசு துணை நிற்க வேண்டும். அத்துடன் தமிழகத் தில் உள்ள தனியார் நிறுவனங்களில் 80% வேலைவாய்ப் புகளை தமிழர்களுக்கு வழங்குவதற்கான சட்டத்தை உடனடி யாக கொண்டு வந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.” என்று பாமக நிறுவனர் இராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “காஞ்சி புரம் மாவட்டம் சுங்குவார்சத்திரம் அருகில் செயல்படும் சாம்சங் தொழிற்சாலையில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் ஊதிய உயர்வு, 8 மணி நேர வேலை, தொழிற்சங்க உரிமை உள் ளிட்ட 8 கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்தம் மேற் கொண்டு வந்த நிலையில், தமிழக அமைச்சர்கள் முன்னிலை யில் நேற்று நடைபெற்ற பேச்சுகளில் சாம்சங் நிறுவனத்துக்கும், தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கும் இடையே உடன்பாடு எட்டப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. தொழிலாளர்களில் இன் னொரு பிரிவினர் வேலை நிறுத்தத்தை தொடரப்போவதாக அறிவித்துள்ளனர்.

உண்மையில் சாம்சங் தொழிலாளர்கள் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. மாறாக தொழிலாளர்களிடையே பிரி வினை ஏற்படுத்தப்பட்டு, சாம்சங் நிறுவன நிர்வாகம் தப்ப வைக் கப்பட்டுள்ளது. தொழிலாளர்களிடையே பிளவை உண்டாக்கி, ஒரு பொம்மை அமைப்பை உருவாக்கி அதற்கு மகுடம் சூட்டும் பழைய சூழ்ச்சியையே திமுக அரசு மீண்டும் செய்திருக்கிறது.

சாம்சங் தொழிலாளர்கள் சிக்கலுக்கு தீர்வு காண வேண்டிய கடமை தமிழக அரசுக்கு இருந்த நிலையில், தொழிலாளர் களுக்கு ஆதரவாக இருந்து அவர்களின் கோரிக்கைகள் நிறை வேற உறுதுணையாக இருந்திருக்க வேண்டும். ஆனால், தமிழக அரசோ தொழிலாளர்களின் நலன்களை அடகு வைத்து விட்டு சாம்சங் நிறுவனத்தின் நலன்களை பாதுகாத்திருக்கிறது. இதன் மூலம், தொழிலாளர்களுக்கு பெருந்துரோகம் செய் திருக்கிறது. இது கண்டிக்கத்தக்கது.



தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு பதவியேற்ற நாளில் இருந்தே தொழிலாளர்களின் நலன்கள் காவுகொடுக்கப்பட்டு வருகின்றன. தமிழக வரலாற்றில் இது வரை இல்லாத வகையில் 12 மணி நேர வேலை முறையை திணிக்க சட்டம் கொண்டு வந்தது திமுக அரசு தான். கடுமை யான எதிர்ப்புக்குப் பிறகு தான் அதை திரும்பப் பெற்றது. சாம்சங் தொழிலாளர்கள் கோருவதும் 8 மணி நேர வேலை, தொழிற் சங்க உரிமை போன்ற நியாயமான கோரிக்கைகள் தான். தொழிலாளர்களின் பக்கம் அரசு நின்றிருந்தால், அந்த கோரிக் கைகளை சாம்சங் நிறுவனம் ஏற்றுக் கொண்டிருக்கும்.

ஆனால், இந்த விவகாரத்தில் நீதிபதியாக செயல்படவேண்டிய தமிழக அரசு, சாம்சங் நிறுவனத்தின் முகவராக மாறி தொழி லாளர்களிடையே பிளவை ஏற்படுத்தியுள்ளது. இதை தொழி லாளர் சமுதாயம் ஒருபோதும் மன்னிக்காது.

சமூக நீதி அரசு என்று மூச்சுக்கு முன்னூறு முறை கூறிக் கொள்ளும் திமுக அரசு ஒருபோதும் தொழிலாளர்கள் பக்கம் நின்றதில்லை மாறாக, பன்னாட்டு நிறுவனங்களின் மனம் கோணக்கூடாது என்பதில் தான் திமுக அரசு கவனமாக இருந்து வருகிறது. 2021-ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின் போது, தமிழகத்தில் தனியார் நிறுவனங்களில் 80% வேலை வாய்ப்புகள் தமிழர்களுக்கே வழங்கப்படுவதை பாமக உறுதி செய்யும் என வாக்குறுதி அளித்திருந்தோம். அதற்குப் போட்டி யாக திமுக ஆட்சிக்கு வந்தால் 75% வேலைவாய்ப்பை தமிழர் களுக்கு வழங்க சட்டம் இயற்றுவோம் என திமுக அரசு வாக் குறுதி அளித்தது. ஆனால், இதுவரை அதை செயல்படுத்த வில்லை. காரணம், முதலாளிகளின் நலன்கள் பாதிக்கப்பட்டு விடக் கூடாது என்ற விசுவாசம் தான்.

தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்த எந்த அரசும் நீடித் ததாக வரலாறு இல்லை. இதை திராவிட மாடல் அரசு உணர்ந்து கொள்ள வேண்டும். வேலை நிறுத்தத்தைத் தொட ரும் சாம்சங் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்படுவதற்கு அரசு துணை நிற்க வேண்டும். அத்துடன் தமிழகத்தில் உள்ள தனியார் நிறுவனங் களில் 80% வேலைவாய்ப்புகளை தமிழர்களுக்கு வழங்கு வதற்கான சட்டத்தை உடனடியாக கொண்டு வந்து நிறை வேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்,” என்று அவர் கூறி யுள்ளார்.

# காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்தில் அமைந்துள்ள ‘சாம்சங்’ தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் கடந்த 32 நாட்களாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டம்!

10.10.2024

காஞ்சிபுரம் மாவட்டம், சுங்குவார்சத்திரத்தில் அமைந்துள்ள ‘சாம்சங்’ தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள், எட்டு மணி நேர வேலை, ஊதிய உயர்வு, தொழிற்சங்க அங் கீகாரம் உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை நிறைவேற்றக் கோரி, கடந்த 32 நாட்களாக தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.





சாம்சங் பெருநிறுவனத்திற்கு ஆதரவாக நின்று போராட்டத்தை ஒடுக்கும் விதமாக, தொழிலாளர்களின் வீடுகளுக்குள் நள் ளிரவில் புகுந்து, தேடி தேடி அடித்து, சிறைப்படுத்தி, அவர்களின் குடும்பத்தினரை மிரட்டும் திராவிட மாடல் திமுக அரசின் கொடுங்கோன்மைச்செயலைக் கண்டிக்கும் விதமாகவும், சாம்சங் தொழிலாளர்களின் போராட்டக் கோரிக்கைகளை உட னடியாக நிறைவேற்ற வலியுறுத்தும் விதமாகவும், இன்று 10-10-2024 நாம் தமிழர் கட்சியின் தொழிற்சங்கப் பேரவை நிர்வாகிகளுடன் நேரில் சென்று போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தொழிலாளர்களைச் சந்தித்து அவர்களது கோரிக்கைகளை தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கேட்டறிந்தார்.

www.sangathamil.ca

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

# உலக செய்திகள்

## இசுரவேல் மீது அலை அலையாக ஈரான் ஈரான் எவுகணை தாக்குதல்!

01.10 2024

ஹிஸ்புல்லாவின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா மற்றும் ஈரானிய புரட்சிகர இராணுவத்தின் தளபதி அப்பாஸ் நில்ஃபோரௌஷான் மற்றும் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டதிற்கு பதிலடியாக இசுரவேல் மீது ஈரான் சரமாரி யான எவுகணை தாக்குதல்களை நடத்தியது.



இதனால் யூதர்கள் நிலக்கீழ் பதுங்குழி அறைகளுக்குள் சென் றனர். அவர்கள் மிகவும் நீண்ட நேரம் பதுங்கு குழிக்குள் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அத்துடன் மத்திய கிழக்குப் பிராந்தியம் முழுவதுமாக போர் பற்றிய அச்சத்தை எழுப்பியது.

நடந்த தாக்குதலின் போது இசுரவேல் முழுவதும் அலாரங்கள் ஒலித்தது மற்றும் ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் ஆகிய இடங்களில் வெடிக்கும் சத்தம் கேட்டது.

இஸ்மாயில் ஹனியே, ஹசன் நஸ்ரல்லா மற்றும் நில்ஃபோ ரூஷன் ஆகியோரின் தியாகத்திற்கு பதிலளிக்கும் விதமாக, நாங்கள் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களின் இதயத்தை குறி வைத்தோம் என்று IRGC ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

டெல் அவிவில் மூன்று இராணுவ தளங்களை குறி வைத் தாக ஈரானியப் புரட்சிகர இராணுவம் தெரிவித்தது.

பல நூற்றுக்கணக்கான ஏவுகணைகள் ட்ரோன்கள் மூலம் முதல் அலை இரண்டாவது அலை என தாக்குதல்கள் நடத்தப் பட்டது. முதல் அலையில் 104 ஏவுகணைகள் ஏவப்பட்டன. சில ஊடகங்கள் 400 ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்கள் விழுந்து வெடித்தாக கூறியுள்ளன. இரண்டாவது தாக்குதல் சிரியாவின் கோலன் குயிற்ஸ் (Golan Heights) நோக்கியும் வந்தாகக் கூறப்படுகிறது.

பல ஏவுகணைகள் மற்றும் டெல் அவிவில் விழுந்து வெடித் துள்ளன. அத்துடன் இராணுவ விமானத் தளத்திலும் விழுந்து வெடித்துள்ளன.

இசுரவேலின் எரிவாயு தயாரிக்கும் நிலையத் மீதும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.



இசுரவேலிய இராணுவ மையங்கள் மற்றும் வசதிகள் எங்கள் இலக்குகளாக இருந்தன.




இசுரவேல் மீண்டும் தவறு செய்தால் இன்னும் அழிவுகரமான இரண்டாவது அலையை உருவாக்கும் ஈரான் எச்சரித்துள்ளது.

தற்போது ஈரானிய தாக்குதலில் பல இழப்பு ஏற்பட்டதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஈரானின் தாக்குதல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்றும இது ஒரு தோல்வியான தாக்குதல் என இசுரவேல் மற்றும் அமெரிக்கா கூறியுள்ளன.

## இசுரவேலின் வான்படைத்தளம் மற்றும் மொசாட் தலைமையகம் ஈரானின் தாக்குதலின் இலக்கு!

02.10 2024

இசுரவேல் மீது ஈரான் தாக்குதலை நடத்துவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்னர் தாக்குதல் குறித்த விடயங்களை ஈரான் அமெரிக்காவிடம் அறிவித்ததாக ஈரான் தெரிவித்துள்ளது.

அத்துடன் இசுரவேலில் பொதுமக்கள் இலக்கு வைக்கப்பட வில்லை என்றும். தாக்குதல் இலக்குகள் அனைத்தும் இராணுவமே என்று ஈரான் அறிவித்தது.

குறிப்பாக மொசாட் தலைமையகம் மீது நடத்தப்பட்ட தாக் குதலில் ஏவுகணை ஒன்று 30 மீற்றர் தொலைவில் விழுந்து வெடித்ததில் சேதங்கள் ஏற்பட்டுள்ளனர். விழுந்து இடத்தில் பேரிய குழி ஏற்பட்டது.

இதேபோன்று இசுரவேலின் எரிவாயு நிலையத்திலும் தாக் குதல் நடத்தப்பட்டது.

டெல் அவிவில் அமைந்துள்ள இசுரவேலின் பலம் பொருந்திய வான்படைத் தளமாக நோஃப் ஏர்பேஸ் மீதும் ஏவுகணைகள் விழுந்து வெடித்தன. இதனால் அங்கு தரித்து நிறுத்தப்பட்ட போர் விமானங்களும் கடுமையான சேதமடைந்ததாக ஈரான் செய்கோள் படங்களை வெளியிட்டது.



## ஐ.நா. பொதுச் செயலாளர் இசுரவேலுக்குள் நுழையத் தடை விதித்தது இசுரவேல்!

03.10 2024

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் இசுரவேல் நாட்டுக்குள் நுழையத் தடை விதிக்கப் பட்டுள்ளது என இசுரவேல் கூறியுள்ளது.

இசுரவேல் நாட்டுக்குள் அன்டோனியோ குட்டெரெஸ் நுழை வதற்கு அனுமதியில்லை என இசுரவேலின் வெளியுறவு அமைச்சர் காட்ஸ் கூறினார்.

இசுரவேல் மீதான ஈரானின் கொடூரமான தாக்குதலை சந் தேகத்திற்கு இடமின்றி கண்டிக்க முடியாத எவரும் இசுரவேலிய மண்ணில் காலடி வைக்கத் தகுதியற்றவர் என்று காட்ஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது இசுரவேலுக்கு எதிராக ஐ.நா பொதுச் செயலாளர் செயற் படுகிறார். ஈரான் மற்றும் தெஹ்ரான் ஆதரவு போராளிக் குழுக்களான ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா போன்றவற்றை குட்டெரெஸ் ஆதரிப்பதாகவும் காட்ஸ் குற்றம் சாட்டினார்.

இசுரவேல் மீது ஈரான் நடத்திய தாக்குதல்களை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ் கண்டிக் கவில்லை என இசுரவேல் கூறியது. இதனால் ஐக்கிய நாடுகள் சபை ஒரு தலைப்பட்சமாக இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

ஆனால் ஈரானின் தாக்குதலுக்குப் பின்னர் குடெரெஸ் பிராந் தியத்தில் வன்முறை அதிகரிப்பதைக் கண்டித்தார். அதில் ஈரானின் பெயரைக் அவர் குறிப்பிடவில்லை.

இந்நிலையில் இசுரவேலுக்கு நுழையத் தடை விதிக்கப் பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போது மத்திய கிழக்கில் பழிவாங்கும் வன்முறையை நிறுத்துமாறு அழைப்பு விடுத்தார்.

இசுரவேல் மீது ஈரானின் நேற்றைய பாரிய ஏவுகணைத் தாக் குதலை நான் மீண்டும் கடுமையாகக் கண்டிக்கிறேன் என்று



குட்டரெஸ் கூறினார். கொடிய வன்முறைச் சுழற்சி நிறுத்தப்பட வேண்டும்" என்று கூறினார்.

# இசுரவேலுக்கு ஆயுத விநியோகத்தை நிறுத்திய பிரான்ஸ் அதிபர் மேக்ரான்!

06.10. 2024

இசுரவேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை பிரான்ஸ் நிறுத்தியதாகவும் மற்ற நாடுகளும் ஆயுத விநியோகத்தை நிறுத்த வேண்டும் என்றும் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

காஸாவில் இசுரவேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருவதைத் தொடர்ந்து அரசியல் ரீதியாக இதற்கு தீர்வு காண்பதற்காக இசுரவேலுக்கு ஆயுதங்கள் வழங்குவதை நிறுத்தியதாகவும், போரை நிறுத்த மற்ற நாடுகளும் இதனை முன்னெடுக்க வேண்டும் என பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரான் தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ் பாதுகாப்பு அமைச்சகத்தின் அறிக்கையின்படி கடந்தாண்டு மட்டும் 30 மில்லியன் யூரோக்கள் மதிப்பில் ஆயுதங்களை இசுரவேலுக்கு பிரான்ஸ் வழங்கியுள்ளது. ஆனால், இசுரவேலும் அதிகளவில் ஆயுதங்கள் வழங்கும் முதன்மை நாடாக பிரான்ஸ் இருந்ததில்லை.

"இன்றைய அரசியல் ரீதியான தீர்வுக்கு என்ன தேவை என்றால் காஸாவில் நடத்தப்படும் போருக்குத் தேவையான ஆயுதங்கள் வழங்குவது நிறுத்தப்பட வேண்டும். பிரான்ஸ் இசுரவேலுக்கு ஆயுதங்கள் எதையும் வழங்காது.

"போர் மேலும் நடப்பதைத் தடுப்பதே இப்போது எங்களின் எண்ணம். லெபனான் நாட்டு மக்கள் தியாகத்திற்கு முன்வரக் கூடாது. லெபனான் மற்றோரு காஸாவாக மாறக்கூடாது" என அதிபர் மேக்ரான் இன்று பேசியுள்ளார்.

பிரான்ஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜீன் நோயல் பாரட் 4 நாள்கள் அரசு பயணமாக மத்தியக் கிழக்கு நாடுகளுக்குச் சென்றுள்ளார். வருகிற திங்களன்று (அக். 7) இசுரவேல் சென்று தனது பயணத்தை அவர் முடிக்கவுள்ளதால் பிரான்ஸ் அதிபரின்



இந்த அறிவிப்பு அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகிறது

# சிறீலங்கா தொடர்பான எந்தவொரு ஜெனீவா தீர்மானத்திற்கும் சிறீலங்கா புதிய அரசு எதிர்ப்பு!

08.10.2024

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51/1 நகல்வடிவையும் சிறீலங்கா தொடர்ந்து எதிர்க்கும் என அமைச்சரவை பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.



இலங்கையில் இடம்பெற்ற யுத்த குற்றங்கள் குறித்த ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறிமுறைக்கான அதிகாரங்களை நீடிக்கும் எந்த தீர்மானத்தையும் இலங்கை ஏற்றுக் கொள்ளவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அமைச்சரவையின் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தற்போதைய அமர்வில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

எனினும்உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் உட்பட மனித உரிமை பிரச்சினைகளிற்கு தீர்வை காண்பது குறித்து அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை மனித உரிமை பேரவையுடனும்,வழமையான மனித உரிமை பொறிமுறையுடனும்,தொடர்ந்தும் ஒத்துழைப்பு அர்த்தபூர்வமான பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.
புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டுள்ளார், தேர்தலின் பின்னர் புதிய அரசாங்கம் தெரிவு செய்யப்படும் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான விஜிதஹேரத் நாங்கள் எங்கள் நிலைப்பாட்டை ஜெனீவாவிற்கு



தெரியப்படுத்துவோம் என குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது, மனித உரிமைகளை பாதுகாப்பதற்கு இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் எனினும் இதற்கு காலம் தேவை, நாளை ஜெனீவாவில் இந்த நிலைப்பாட்டை தெரியப்படுத்துவோம் என விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

# இசுரவேலின் தாக்குதலில் காசாவில் 42 ஆயிரத்திற்கு மேல் பலி!

09.10. 2024

காசா முனை மீது இசுரவேல் ஓராண்டாக அதிரடி தாக்குதலை நடத்தி வருகின்ற நிலையில் குறித்த தாக்குதலில் இதுவரையில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதன்படி, காசா முனையில் இசுரவேல் நடத்தி வரும் தாக்குதலில் தற்போதுவரை 42,010 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 97,720 பேர் காயமடைந் துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உயிரிழப்பு, காயம் தொடர்பான தரவுகள் காசா முனையில் ஹமாஸ் ஆயுதக்குழுவின் கீழ் செயல்பட்டுவரும் சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், பாலஸ்தீனத்தின் மேற்குகரையில் ஏற்பட்ட மோதலில் 700க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.




# அமெரிக்காவின் புளோரிடாவை புரட்டிபோடும் மில்டன் சூறாவளி!

10.10 2024

மில்டன் சூறாவளி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தை தாக்கி கடும் பாதிப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

புளோரிடாவில் 80,000-க்கும் மேற்பட்ட மக்கள் முகாம்களில் தஞ்சம் புகுந்துள்ளனர். முப்பது இலட்சத்திற்கும் அதிகமான வீடுகள் மற்றும் வணிக இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளன.

செயின்ட் லூசி கவுன்ட்டியின் கிழக்கு கடற்கரையில் மில்டன் சூறாவளியால் 16 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு கடற்கரையில் உள்ள செயின்ட் பீட்டர்ஸ்பர்க்கில், தண்ணீர் விநியோகம் துண்டிக்கப்பட்டது.

அதே நேரத்தில் புளோரிடாவில் வரும் நாட்களில் மேலும் வெள்ளப்பெருக்கு ஏற்படலாம் என அம்மாகாண ஆளுநர் ரான் டிசாண்டிஸ் தெரிவித்துள்ளார்.

“சில வாரங்களுக்கு முன்பு புளோரிடாவை தாக்கிய ஹெலன் சூறா வளியினால் ஏற்பட்ட பாதிப்பை விட தற்போது ஏற்பட்டிருப்பது மோசமான சூழ்நிலை அல்ல” என்றும் ஆளுநர் ரான் டிசாண்டிஸ் கூறினார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.


மில்டன் சூறாவளி அதி தீவிர பாதிப்பை ஏற்படுத்தும் ஐந்தாம் வகை (Category 5) சூறாவளி ஆகும். இந்த சூறாவளி மணிக்கு 270 கிலோமீட்டர் வேகத்தில் காற்றை வீசியது.

ஹெலன் சூறாவளி தாக்கிய இரண்டு வாரங்களுக்குள், புதன் கிழமை அன்று இரவு கடும் வேகத்தில் மில்டன் சூறாவளி புளோரிடாவை தாக்கியது.

பல ஆண்டுகளாக இல்லாத அளவிற்கு மக்களை வெளியேற்றும் பணியை அம்மாகாண அரசு மேற்கொண்டு வந்தபோது, “இது வாழ்வா சாவா என்ற விஷயம்” எனக்கூறி அமெரிக்க அதிபர் ஜோ பைடன் புளோரிடா மக்களை தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுமாறு எச்சரிக்கை விடுத்தார்.

பல்வேறு மக்கள் சூறாவளியில் இருந்து தப்பிக்க புளோரிடாவை விட்டு வெளியேறியதால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது. விமான நிலையங்களும் மூடப்பட்டன.

ஒரு நூற்றாண்டு காலத்தில் இந்த பகுதியைத் தாக்கும் மிக மோசமான சூறாவளியாக இது இருக்கலாம் என்று அதிகாரிகள்



தெரிவித்தனர்

புயலுக்கு முன் 31 கவுன்டிகள், மக்களை வெளியேறுமாறு உத்தரவு பிறப்பித்ததால் 70,000க்கும் மேற்பட்ட புளோரிடா மக்கள் அரசாங்க முகாம்களில் இருப்பதாக அமெரிக்க மத்திய அவசரகால மேலாண்மை ஆணையத்தின் தலைவர் டீன் கிறிஸ்வெல் தெரிவித்தார்.

புளோரிடாவில் பெரும்பாலான பகுதிகளைத் தவிர, ஜார்ஜியா மற்றும் தெற்கு கரோலைனா பகுதிகளிலும் மில்டன் சூறாவளி பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது.

# சிறீலங்காவின் புதிய அரசாங்கத்தின் தீர்மானம் ஏமாற்றமளிக்கின்றது!

**சர்வதேச மன்னிப்புச்சபை**

11.10. 2024

சிறீலங்காவின் புதிய அரசாங்கம் கடந்த கால கொள்கைகளை தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது என சர்வதேச மன்னிப்புச்சபையின் தென்னாசியாவிற்கான பிரதி பிராந்திய இயக்குநர் பாபு ராம் பண்ட் தெரிவித்துள்ளார்

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை இலங்கை தொடர்பான தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளமை இலங்கையில் காணப்படும் மனித உரிமைகள் கரிசனை குறித்து சர்வதேச சமூகம் தொடர்ந்தும் கவனம் செலுத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் விதத்தில் அமைந்துள்ளது.

புதிய தீர்மானத்தின் மூலம் ஆணை நீடிக்கப்பட்டமை பொறுப்புக்கூறலிற்கு ஆதரவளிப்பதை நோக்கிய வரவேற்கத்தக்க விடயம், எனினும் இந்த தீர்மானம் மேலும் ஒரு வருடகாலத்திற்கு மாத்திரம் நீடிக்கப்பட்டுள்ளமை ஏமாற்றமளிக்கின்றது.

சிவில் சமூகத்தினரும் சர்வதேச அமைப்புகளும் ஆணையை இரண்டு வருடங்களிற்கு நீடிக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

சமீபத்தில் ஜனாதிபதி தேர்தல் இடம்பெற்ற அடுத்த மாதம் பொதுத்தேர்தல் இடம்பெறவுள்ள நாடு என்ற வகையில் அரசியல் மாற்றத்தை எதிர்கொண்டுள்ள நாடு என்ற வகையில் இலங்கை கடந்த காலங்களில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்டு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் அலுவலகத்துடன் சிறந்த ஈடுபாட்டை பேணுவது அவசியம்.

இதன் காரணமாக சிறீலங்காவின் புதிய அரசாங்கம் கடந்த கால கொள்கைகளை தொடர்வதற்கும் ஆதாரங்களை சேகரிக்கும் பொறிமுறையை எதிர்ப்பதற்கும் தீர்மானித்தமை ஏமாற்றமளிக்கின்றது.

பாரதூரமான மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்பு கூறுவதற்கு கிடைத்துள்ள வளங்களை பயன்படுத்து அரசாங்கம் தயாராகவுள்ளதா என்ற சந்தேகத்தை இது எழுப்பியுள்ளது.

ஆழமா வேரூன்றியுள்ள தண்டனையின்மை தொடரும் ஆபத்தும் உள்ளது.

இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையில் சர்வதேச சமூகம் நீதி உண்மை இழப்பீட்டு விவகாரங்களில் அர்த்தபூர்வமான முன்னேற்றத்தை அடைவதற்காக சர்வதேச சமூகம் சிறீலங்கா அரசாங்கத்துடன் தொடர்ந்தும் ஈடுபாட்டை பேணவேண்டும்.

அதேவேளை சிறீலங்கா ஐக்கியநாடுகளின் பொறுப்புக்கூறும் திட்டம் உட்பட ஐநாவின் மனித உரிமை பொறிமுறைகளுடன் முழுமையான ஒத்துழைப்பை பேணவேண்டும், இலங்கையின் மூன்று தசாப்த யுத்தத்தின்போது இழைக்கப்பட்ட பாரதூரமான மனிதஉரிமை மீறல்கள், சர்வதேச சட்டத்தின் கீழான ஏனைய சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள் உயிர் பிழைத்தவர்கள் பல வருடங்களாக நீதிக்காக பொறுப்புக் கூறலிற்காக காத்திருக்கின்ற நிலையில் சிறீலங்கா அரசாங்கம் இது குறித்த அர்ப்பணிப்பை வெளிப்படுத்தவேண்டும்.

# சாசா பகுதி மீது இசுரவேல் மேற்கொண்டுவரும் போரில் இதுவரை 17,000 சிறுவர்கள் பலி!

13.10. 2024

கடந்த ஒரு வருடமாக காசா பகுதி மீது இசுரவேல் மேற் கொண்டுவரும் தாக்குதல்களில் இதுவரையில் 16756 சிறுவர்கள் கொல்லப்பட்டதுடன், அங்கு 41990 பேர் கொல்லப்பட்டும் ஏறத்தாள ஒரு இலட்சம் மக்கள் காய மடைந்தும் உள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

கொல்லப்பட்ட சிறுவர்களில் பலர் காசா பகுதி மீது இசுரவேல் மேற்கொண்டு வரும் தொடர் பொருளாதார தடைகளினால் பாதிப்புக்களைச் சந்தித்த வாறு வாழ்ந்து வந்தவர்கள். அந்த பிராந்தியம் சிறுவர்களின் புதை குழியாக மாறி வருகின்றது. 17,000 இற்கு மேற்பட்ட சிறுவர்கள் தமது பெற்றோர்களில் ஒருவரை அல்லது இருவரையும் இழந்து வாழ்கின்றனர் என ஐ.நா மேலும் தெரிவித்துள்ளது.

பல ஆயிரம் மக்களின் உடல்கள் இடிபாடுகளுக்குள் சிக்கியிருப்பதால் இறப்பு விகிதம் மேலும் அதிகரிக்கலாம் என காசாவின் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அங்கு சராசரியாக தினமும் 115 பேர் கொல்லப்படுவதுடன், 266 பேர் காய மடைகின்றனர் அவர்களில் 46 பேர் சிறுவர்கள், 31 பேர் பெண்கள். 902 குடும்பங்கள் முற்றாக அழிந்துள்ளன என அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, காசா முற்றாக தரைமட்டமாவதற்கு முன்னர் உலகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட Medical Aid for Palestinians என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. அங்கு எஞ்சியுள்ள வைத்திய சாலையையும் அழித்து ஒரு முழுமையான அழிவை ஏற்படுத்த இசுரவேல் முயன்று வருவதாக அது குற்றம் சுமத்தியுள்ளது.



# 50 ஆண்டுகளுக்கு பின் சஹாரா பாலைவனத்தில் பெய்த கனமழை!

13.10. 2024

கடந்த 2 நாட்கள் தென்கிழக்கு மொராக்கோ பகுதியில் பெய்த கனமழையால் வெள்ளக்பெருக்கு ஏற்பட்டு றண்ட சஹாரா பாலைவனம் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது.

மொராக்கோ தலைநகர் ரபாத்திலிருந்து 450 கிமீ தெற்கே அமைந்துள்ள டகோனைட் கிராமத்தில் செப்டம்பர் மாதம் 24 மணித்தியாலங்களில் 100 மிமீ மழை பதிவாகியுள்ளதாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதனிடையே, ஜகோராவிற்கும் டாடாவிற்கும் இடையே பல வருடங்களாக நிரம்பாமல் இருந்த ஏரிகள் நிரம்பியுள்ளது நாசாவால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

குறுகிய கால இடைவெளியில் அதிகளவான மழை பெய்து 30 முதல் 50 ஆண்டுகள் ஆகிவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் சஹாரா பாலைவனம், வடக்கு, மத்திய மற்றும் மேற்கு ஆப்பிரிக்கா முழுவதும் 9 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்பளவில் பரவியுள்ளது.



புவி வெப்பமடைதல் மற்றும் தீவிர வானிலை காரணமாக அதிகரிப்பு அதிகரிக்கும் என்றும் எதிர்காலத்தில் இந்த அளவிலான புயல்கள் இப்பகுதியில் அடிக்கடி ஏற்படக்கூடும் என்றும் விஞ் ஞானிகள் எச்சரிக்கின்றனர்.

முன்னதாக, மொராக்கோவில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் 18 பேர் உயிரிழந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.


## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com


AFFORDABLE
REFRIGERATION
SERVICES INC
Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers
We Sell. Install
used & new
Walk in Cooler
Walk in Freezer
kapil.afr@gmail.com
Kapil: 647.515.8643


AR
GROUP
Arasan
ARASAN
RAJADURAI
Real Estate & Developments
Realtor
C: 416.500.9550
B: 905.831.3300
F: 905.831.8147
hello@argroup.ca
argroup.ca
RE/MAX
HALLMARK FIRST GROUP REALTY
RAISING THE BAR
1154 Kingston Rd
Pickering, ON
L1V 1B4 CA


Build Your Dream Home
SABESAN
உங்கள்
அனைத்து வீட்டு
வேலைகளிற்கும்
அழையுங்கள்
We build 10,000 Sq.Ft (Minimum)
warehouse from $139.00 Per Sq.Ft.
400 Kilometre per hour
Wind resistance
Termite Proof
Compare Traditional Building
Energy Savings
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன்
இணைந்தபடி
மேலதிக இருப்பிட
வசதியை ஏற்படுத்த
விரும்புகிறீர்களா?
அழையுங்கள்
Sabesan
விருது பெற்ற தொழில்துறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# எதிரியை விட துரோகிகளே மிகவும் ஆபத்தானவர்கள்

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



“நாம் எமது விடுதலைப் பயணத்தை ஆரம்பித்து முப்பது ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. விபரிக்கமுடியாத துன்பங்களும் வியக்கத்தக்க தியாகங்களும் நிறைந்த ஒரு மகத்தான வீர காவியமாக எமது விடுதலை வரலாறு நீண்டுசெல்கிறது. இரத்தத்தால் எழுதப்படும் எமது இனத்தின் விடுதலை வரலாறு மனித குலத்தின் விடுதலை எழுச்சிக்கு ஒரு உன்னத எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

உலகில் எங்குமே நிகழாத கொடுமைகள் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்டன. மனித நாகரீகமே வெட்கித் தலைகுனியுமள விற்கு எதிரி எம்மீது மிருகத்தனமாக நடந்து கொண்டான். எமது பழைய தலைமையின் துரோகத்தனம் காரணமாக, நம்பி, நம்பி ஏமாந்த வெகுளித்தனம் காரணமாக, நாம் என்றுமில்லாதபடி பாரிய அழிவுகளை சந்திக்கவேண்டியிருந்தது. தமிழின ஒழிப்பையே இலட்சியமாகக் கொண்டு செயல்படும் ஈவிரக் கமற்ற எதிரியுடன் கொஞ்சிக்குலாவி, சலுகைகள் கேட்டு, சமரஸ ஒப்பத்தங்கள் செய்து, சப்பாணிப் போராட்டம் நடத்தி, தமிழினத்தைப் பெரிய, அழிவுப்பாதையில் இட்டுச் சென்ற பெருமை எமது காந்தியவாத தலைவர்களையே சாரும்.

குட்டக் குட்டத் தலைகுனிந்து, அடிமைகளாக, அவமானத்துடன் வாழ்ந்த தமிழனை, தலைநிமிர்த்தி, தன்மானத்துடன் வாழவைத்த பெருமை எமது விடுதலை இயக்கத்தையே சாரும். உண்மையில் எமது வீரசுததந் திரப் போராட்டம் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோற்றத்திலிருந்தே ஆரம்பமாகிறது என்பதை எவரும் மறுக்க முடியாது. கடந்த பத்து ஆண்டகால ஆயுதப் போராட்ட வரலாற்றில் எமது இயக்கம் ஒப்பற்ற சாதனைகளை நிலைநாட்டியது. எத்தனையோ இடையூறுகள் மத்தியில், எத்தனையோ கஷ்டங்கள் மத்தியில், எத்தனையோ சோதனைகள் மத்தியில், சலிப்படையாது, நம்பிக்கை தளராது, இரும்பையொத்த உறுதியுடன் தொடர்ச்சியான, தீர்க்கமாக ஆயுதப்புரட்சிப்போராட்டத்தை நாம் முன்னெடுத்து வருகின்றோம். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற ஒழுக்கவிதிகளில் நெறிப்படுத்தப்பட்டு, அஞ்சா நெஞ்சம் படைத்த இலட்சிய வீரர்களை உருவாக்கிய எமது விடுதலை இயக்கம் இன்று முழு உலகமுமே வியக்கத்தக்க முறையில் சிங்கள அரச பயங்கரவாதிகளையும் அவர்களுக்கு முண்டு கொடுத்துவரும் சர்வதேச நாசகார சக்திகளையும் தனித்துநின்று சமர் புரிந்து விரட்டியடித்து வருகிறது. விடுதலைப்புலிகளின் வியப்பூட்டும் இராணுவ சாதனைகள் காரணமாகவே இன்று எமது விடுதலைப் போராட்டம் உலக அரங்கில் மிகப்பிரசித்தி பெற்றதாக விளங்குகிறது. சமாதானப் பேச்சு என்றும், சமரஸத்திட்டம் என்றும், போர்நிறுத்தம் என்றும் சிங்கள அரசு இன்று வெள்ளைக்கொடி காட்டுவதும் எமது போராட்ட சாதனைகளின் விளைவாகத் தான், இந்தப்பத்தாண்டு கால விடுதலை யுத்தத்தில் எமது விடுதலை வீரர்கள் நெஞ்சத்தைப் பிளக்கும் தியாகங்களைப் புரிந்தனர் மக்களின் விடுதலை என்ற ஒரே இலட்சியத்துக்காக, மக்களை இன அழிவிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக, மக்கள் சுபீட்சமாக, நிம்மதியாக வாழ வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுக்காக இளம் புலி வீரர்கள் களத்தில் தமது உயிரை அர்ப்பணம் செய்து வருகின்றனர்.

இன்று வடக்கில் பல பகுதிகள் விடுதலைப் பிரதேசங்களாக எமது கட்டுப்பாட்டில் எமது நிர்வாகத்தில் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. தமிழ்மக்களை நரவேட்டை ஆடிவந்த சிங்கள இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிக்கிடக்கின்றது. மக் களின் ஒரே பாதுகாப்பு அரணாக இன்று எமது இயக்கம் தமிழீழம் எங்கும் தன்னை நிலைப்படுத்தி பலப்படுத்தி வருகிறது.

தமிழீழத் தனியரசு என்ற எமது இலட்சிய நட்சத்திரம் அடிவானத்தில் பிரகாசிக்கத்தொடங்கியிருக்கிறது நீண்ட, கடினமான விடுதலைப் பயணத்தின் பயனாக நாம் சுதந்திர மலையின் சிகரத்தை அண்மித்துக் கொண்டிருக்கிறோம். எமது விடுதலை வரலாற்றின் இந்த முகியமான கால கட்டத்தில், எமது வெற்றிகளை நாம் நிலைப்படுத்தி வடிவை நோக்கி விரைந்து செல்ல வேண்டிய இந்த நேரத்தில், எமது போராட்டத்தை முறியடிக்கவும், எமது விடுதலை இயக்கத்தை அழித்துவிடவும் எமது எதிரி ஒருபுறமும், மற்றும் தீய சக்திகள் மறுபுறமுமாக ஈடுபட்டுவருகின்றன எண்ணற்ற தியாகங்கள் புரிந்து, எத்தனையோ உயிர்ப்பலிகள் கொடுத்து, இத்தனை ஆண்டுகளாக கண்ணிரும் வியர்வையுமாக நாம் கட்டி எழுப்பிய எமது வீர சுதந்திரப் போராட்டம் இந்த சக்திகார சக்திகளினால் இன்று ஒரு ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொண்டு நிற்கிறது. இந்த இக்கட்டான சந்தர்ப்பத்தில் நாம் விழிப்புடன் செயற்படத்தவறினால் இத் தனை ஆண்டு காலமாக நாம் செய்த தியாகங்கள், நாம் புரிந்த சாதனைகள், நாம் அடைந்த வெற்றிகள், நாம் அனுபவித்த துன்ப துயரங்கள், நாம் கொடுத்த உயிரிழப்புகள், பொருளிழப்புகள், எல்லாமே அர்த்தமற்றவையாய் போய் விடுவதுடன் நாம் மீண்டும் அடிமை வாழ்வில் தள்ளப்பட நேரிடும்.”

(தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைப் போராட்டத்திற்கு விரோதமான முறையில் எதிரியோடு இணைந்து செயற்படும் இனத்துரோகிகள் மீது மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி, 1985ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தலைவர் வெளிவிட்ட அறிக்கையின் ஒருபகுதியை இங்கு பிரசுரிக்கிறோம்)


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
416 - 587 - 8000
மின்னும் பொன் நகை மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6
சிங்கப்பூர் மற்றும் டுபாய் நகைகள் மிகவும் மலிவு விலையில்..
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் பலவகையான டிசைன்களில் மோதிரம் குறிப்பிட்ட நேரத்தில் செய்து தரப்படும்



HIGH EFFICIENCY HEATING
& COOLING AIR SOLUTIONS
24 h EMERGENCY SERVICES
ALL MAKES & MODEL
★ Furnance ★ Air Conditioner
★ Tankless Water Heater ★ Heat Pump
★ Duct Less ★ Airmax Velocity ★ Air Handlers
★ Boilers ★ Fire Places ★ HRV ★ Attic Insulation
★ Gas Line for BBQ, Stove & Dryer
LENNOX
WHY UPGRADE TO TANKLESS?
Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos
KD Navien
The Leader in Condensing Tankless Technology
FREE ESTIMATE
Sales, Service & Repair
S.Kumar
416-993-8001
Airehvac70@gmail.com
FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000


K
★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# நேற்றைத் துயர் தொலைய நிகழ்காலம் எம்பக்கம்!

கண்ணெதிரே கரைந்துபோகிறது கனவு.
மண்ணெனவே உதிர்ந்துபோகிறது மனம்.
நெஞ்சுக்குள்ளே கோடுகளால் வரைந்த உருவம்கூட
ஒப்பேறமுன்னரே உருகிப்போகிறது.
நடைவழித்துணையாக நம்பிக்கை மட்டுமே
நம்பிக்கைமட்டும் நமக்கற்றுப் போயிருந்தால்
வெம்பிப்யோ் என்றோ விழுந்திருப்போம்.
நாளை நமக்கெனும் நம்பிக்கையிற்தானே
வாழ்வு வசப்படுமென வரலாறே நகர்கிறது.
ஒருநாள் மட்டுமே உயிர்வாழுகின்ற
ஈசல்களுக்கேன் இறக்கை முளைக்கிறது?
நீண்டநாள் பறப்பேனென அதற்கு நினைப்பு
அதனால் முளைக்கிறது.
மாலையில் கருகும் மலர்களெல்லாம்
காலையில் என்னவாய் கண்சிமிட்டுகின்றன.
நாட்கள் பலவாக வாழ்வோமெனும் நம்பிக்கை
பூக்களுக்கிருப்பதாற்தானே அவை புன்னகைக்கின்றன.
எவரெஸ்ட் சிகரத்தை டென்சிங் தொட்டான்
அதற்குமுன்
எத்தனைமுறை ஏறியிறங்கினான்.
என்றோ ஒருநாள் தொடுவேனென்ற நம்பிக்கை
அவனுக்கிருந்தது அதனாலே வென்றான்.
நடக்கவேண்டுமா எழுந்து பார்.
கடக்கவேண்டுமா பாய்ந்து பார்.
எப்படிச் சாத்தியமாகுமென இடிந்து போனால்
இப்படியே கிடக்கவேண்டியதுதான்.
துரையப்பாவை தலைவர் சுட்டபோது
ஏன்சுட்டதென்று எவரும் கேட்கவில்லை.
எவர் சுட்டதென்றுதானே கேட்டார்கள்.
பின்னர் பிரபாகரனென்ற பெயரை
பிரமிப்புடன் உச்சரித்துக் கொண்டனர்.
பொன்னாலைப்பாலத்தில் புதைத்தகுண்டு வெடிக்காதபோது
என்னாலினி முடியாதென தலைவர் நினைத்திருந்தால்
ஆனையிறவைவெல்ல அவரால் முடிந்திருக்குமா?
எத்தனைபேர் அவருடன் நின்றார்கள்
பின்னர் சென்றார்கள்.
எத்தனைபேர் அவருடன் வந்தார்கள்.
பின்னர் போனார்கள்.
கூட இருந்தவர்கள் அகன்றபோதும்
ஆடவில்லையே அந்த ஆலமரம்.
வெல்வேனென்ற வீரியமும்
செல்வேனென்ற நம்பிக்கையும்
வல்வைமைந்தனக்கு வாய்த்திருக்காவிடில்
ஈழத்தமிழருக்கு எப்போதோ
ஆண்டுத்திவசம் முடிந்திருக்கும்.
நம்பிக்கையே பலம் பொருந்திய தும்பிக்கை.
தளராதிருக்க வேண்டும் தமிழரே.
வன்னிக்கு வரும்போது வாழ்வே முடிந்ததென
எண்ணியிருந்தோமானால்
இதுவரைக்குள் எல்லாமும் தொலைத்திருப்போம்.
உன்னிணெழுந்தோம்
ஊர்புகுவோம் என்றுரைத்தோம்.
இன்று செம்மணியில் நின்று சிரிக்கின்றோம்.
நம்பிக்கைதானே நாற்றங்கால்.
ஒரு நாளும் தளராதிருப்பவனே பெருவாழ்வுபெறுவான்.
முடியுமாயிதுவென மலைத்துப் போறவன்
பிடிமானமேதுமின்றிய பொசுங்கிப்போய் விடுவான்.
ஊர்போக வேண்டும்?
போவேனென நம்பு.
உயிர்வாழ வேண்டுமா?
சாகேனென நம்பு.
நம்பிக்கைதானே நாட்களை நகர்த்துகின்றது.
பிரபாகரனென்ற பெயர்
ஒரு மனிதனின் பெயர் மட்டுமல்ல
நம்பிக்கைக்கு இன்னொரு நாமம்.
வாழ்வு வசப்படுமென யார் நம்பினாலும்
அவனுக்கு வாசல் திறந்து கொள்ளும்.
ஈழத்தமிழரின் சோதனைக் காலம் முடிந்துவிட்டது
இனிச்சாதனைக் காலம்.
இருள்வாழ்வு எமக்கினி எப்போதுமில்லை
வெற்றியின் முகமே எமக்கினி விளங்கும்.
எங்கள் மூச்சுக் கலந்த காற்றுக்கு முன்பாக
நிற்கும் பலம் உலகத்தில் எவருக்கும் இல்லை.
நாங்கள் வேர்படர்ந்த அறுகம்புல்
கொத்திப் புரட்டினாலும் முளைப்போம்.
கொழுத்தி எரித்தாலும் துளிர்ப்போம்.
நிமிர்ந்த வாழ்வுவருமென நினை.
உருத்தி உழை.
தமிழீழம் வருமென நம்பு.
தளராது போரிடு.
உன்னை யாரழித்தல் கூடும்?
உமித்துகளல்ல உன்னை யாரும் ஊதித்துள்ள
கைவிலங்கற்று வீசும்காற்றை அவாவுவோம்.
வாசலில் வரவேற்கும் பூக்களை விரும்புவோம்.
சிறகடித்துப் பறக்கிறதே பறவை
அதன் சங்கீதத்துக்கு தாளமிடுவோம்.
விட்டு விடுதலையாகும் விடுதலை வேண்டும்
கட்டுக்களற்று
எந்தக்காயங்களுமற்று
தொட்டுமகிழ எமக்குச் சுதந்திரம் வேண்டும்.
முன்னரெமக்கொரு நிலமிருந்தது.
அந்த வாழ்விலொரு வாழ்விருந்தது.
அந்த வாழ்விலொரு வாசமிருந்தது.
வாசத்தைத் தொலைத்து எத்தனை வருடங்கள்?
போரிடுவோம்
தொடர்ந்து போராடுவோம்.
பிரபாகரனென்ற நம்பிக்கையுடனும்,
புலிகளென்ற தும்பிக்கையுடனும்
போராடுவதுதான் பெருமைதரும்.
காடுகளையும், மலைகளையும் கடப்போம்.
மேடுகளிலும் பள்ளங்களிலும் நடப்பொம்.
கால்கள் வலிக்குதெனக் களைப்பாறும் போதுதான்
பகைவனின் குதிரைகள் பக்கத்தில் வந்துவிடுகின்றன.
அனதால்,
நடக்கத்தொடங்கினால் இளைப்பாறல் கூடாது.
தொடர்ந்து நடப்போம்
சூரியன் கைக்கெட்டும் தூரத்தில்தான் சுடர்கிறது.
தமிழீழம்
அது எங்கள் உயிர்க்கோளம்.
உருவாகிவிட்டது சிசு
கருவாய் திறப்பதற்காகவே காத்திருக்கின்றோம்.
நடுகல்வரிசையை நாளும் தரிசித்து
விடுதலைக்கான வேகத்தை விரைவுபடுத்துவோம்.
ஆவிநிகர்த்து எம் “அன்னை நிலத்தேவி”
தன் அளகபாரம் நீவிமுடித்தாள்.
முத்துப்பரல்களைக் கொட்டிச்சிரித்தாள்.
பகைமுழுதும் தீயும் திசையுரைத்தாள்.
வரமளித்து வல்லமை நல்கினாள்.
உரம் கொண்டெழுந்தது ஓயாத அலை
இனி ஊர் முழுதும் எமதாக்கியே ஓயும்.
தாயின் துயரழித்தே தணியும்.
பகைவரை மட்டுமல்ல
துரோகிகளையும் அள்ளிவந்து
எம் காலடி எற்றும்.
காற்று எம்பக்கம்
கடலும் எம்பக்கம்
நேற்றைத் துவர் தொலைய
நிகழ்காலம் எம்பக்கம்
தாழ்வுற்று எம்தலைகுனிந்தது போதும்
வாழ்வு சமைப்போம் வாருங்கள்.

- விடுதலைப்புலிகள் - ஐப்பசி - கார்த்திகை 2000






# குடாநாட்டைப் பாதுகாத்த புலோப்பளைச் சமர்

## 29.09.1993



நான்குமணி நேரத்தில் நடந்து முடிந்த மாபெரும் சமரைக் கொண்ட மறக்கமுடியாத நாள்.

மரபுவழிச் சண்டை முறையில், எமது போராட்ட வரலாற்றில், முக்கிய இடம் பெற்றுவிட்ட ஒரு சாதனை நாள்.

வெட்டவெளியூடாக நன்கு திட்டமிட்டு நகர்ந்த எதிரியின் கவச வாகனப்படையை, புலிகளின் மனிதக் கவசம் உடைத்தெறிந்து காவியம் படைத்த நாள்.

யாழ். குடாநாட்டுக்கு ஏற்படவிருந்த பேரழிவைத் தற்காலிக மாகத் தடுத்த இந்த வரலாற்றுச் சமரில், 125 படையினர் கொல் லப்பட்டுள்ளனர், 284 பேர் படுகாயமடைந்துள்ளனர் என, சிங்கள அரசே அறிவித்துள்ளது. அத்துடன் சிங்களப்படை இந்தச் சமரில் ரி - 55 ரக டாங்கிகள் இரண்டையும் "பவல்" கவச வாகனம் ஒன்றையும் முற்றாக இழந்துவிட்டது. அதேவேளை மேலும் இரண்டு கவச வாகனங்கள் சேதடைந்துள்ளன.

வெட்டவெளியில் நடந்து முடிந்த இந்த புலோப்பளைச் சமர் புலிகள் இயக்கம் பெற்றுவரும் போரிடும் ஆற்றலின் ஒருபடி வளர்ச்சியைத் துல்லியமாக வெளிப்படுத்தியிருப்பதுடன் இரா ணுவ ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஒரு திருப்பு முனையையும் கொடுத்துள்ளது.

இந்தச் சமரைச் சிங்களப்படைத் தரப்பில் நின்று வழிநடாத்திய - அதில் காயமடைந்த - கேணல் சரத் பொன் சேகா கூறினார்: "விடுதலைப் புலிகள் எம்மைச் சுற்றிவளைத்து கடுமையாகத் தாக்கினர்."


இந்தச் சாதனைச் சமரில், புலிகளின் சேனைக்கு தலைமை தாங்கி வழிநடாத்திய படைத் துறைத் துணைத் தளபதி பால்ராஜ் விபரிக்கின்றார்...

"இந்தச் சமரில் மூன்று விடயங்கள் எதிரிக்குத் திகைப்பையும், அச்சத்தையும் கொடுத்திருக்கும் ஒன்று. மிகக்குறைந்த நேரத்

ஏறக்குறைய 5,000 பேர்கொண்ட சிங்களப்படையணிகள் கிளாலி நோக்கி நகரத் தொடங்கின.

புலிகளின் தந்திரோபாய விலகல் காரணமாக - ஆனையிறவி லிருந்து நீரேரிக்கரை யோரமாகப் புலோப்பளை வீதி வரை உள்ள - சுமார் 4 கிலோ மீற்றர் தூரத்தைச் சிங்களப் படைகள் சுலபமாகக் கடந்து சென்றன. அன்றிரவு புலோப்பளையில் தரித்து நின்ற படையினர், 29ஆம் திகதி காலை 8:00 மணிக்கு எறிகணைகளைச் சரமாரியாக வீசிக்கொண்டு கவசவாகனப் படையின் உதவியுடன் அல்லிப்பளை நோக்கி நகரத் தொடங் கினர். சில நூறு மீற்றர்கள் கடந்தபின், அந்த வெட்ட வெளிப்

யான அரண்களோ (கவர்) அல்லது உருமறைப்புச் செய்வதற் குரிய பொருட்களோ கிடைக்கவில்லை. நேரமும் விடிந்து கொண்டிருந்தது. எனவே, வரப்போரங்களிலும் பற்றைக் கரைகளிலும் கைகளாலும் தடிகளாலும், உடலை மறைக்கக் கூடிய பள்ளங்கள் தோண்டி, எதிரியின் விமானங்களுக்குப் புலப்படாமலும் நகர்ந்து வரும் படையினரின் கண்களுக்குத் தெரியாமலும் உருமறைப்புச் செய்தோம். விடிந்தபின்பும் எதிரி எமக்கருகில் வரும்வரை நாம் பொறுமையுடன் காத்திருந் தோம்." இவ்வாறு தளபதி தீபன் தனது அனுபவத்தைக் கூறினார்.




தில் சிங்களப் படை சந்தித்த பாரிய ஆள் - ஆயுத இழப்பு. இரண்டு, சிங்களச் சிப்பாய்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிவரும் கவசவாகனப் படை புலிவீரர்களால் சிதறடிக் கப்பட்டதுடன், அவர்களின் கண்முன்னாலேயே - பட்டப்பகலில் - டாங்கிகளையும் கவச வாகனங்களையும் இழந்தது. மூன்று, சிங்களப்படைக்குச் சாதகமான இந்த வெட்டவெளிச் சமரில் புலிகள் வெளிப்படுத்திய அபாரத் துணிச்சலும் தாக்குதல் தந்திரோபாயங்களும்." இவ்வாறு இந்தச் சாதனைச் சமரைத் தளபதி பால்ராஜ் மதிப்பிடுகின்றார்.

"ஒப்பரேஷன் யாழ்தேவி" எனப் பெயரிட்டுவிட்டு - பெரியதொரு எதிர்பார்ப்புடன் 28.09.1993 அன்று ஆனையிறவில் இருந்து

பகுதியில், திடீரென நிலத்துள் இருந்து முளைத்தெழுந்த புலிவீரர்கள், ஆச்சரியமூட்டும் வகையில் தாக்குதலைத் தொடுத் தார்கள்.

இந்தத் திடீர்த் தாக்குதலைத் தொடக்கிவைத்த அணிகளுக்குத் தலைமை வகித்த, வன்னி மாவட்ட சிறப்புத் தளபதி தீபன் கூறுகின்றார்...

"ஒரு திடீர்த் தாக்குதலைத் தொடுத்து எதிரிப் படையைச் சிதைக் கும் நோக்குடன், இரவோடிரவாக தகுந்த இடத்தைத் தேர்வு செய்ய முயன்றோம். மணற்பாங்கான நில அமைப்புடன் அங் கொன்றும் இங்கொன்றுமாக சிறுசிறு பற்றைகளையும், புற்கள் அற்ற வரப்புகளையும் தவிர துப்பாக்கிச் சண்டைக்குத் தேவை

இந்த சமரில் பங்குகொண்ட ஏனைய போராளிகள் சொல்லுகின் றார்கள்...

புலோப்பளை வீதியிலிருந்து அல்லிப்பளை நோக்கி முன்னேறி வந்த படையினர், அங்கிருந்த வீடுகள் எல்லாவற்றையும் தீமூட்டி எரித்தபடி முன்னேறிக்கொண்டிருந்தனர். எறிகணை வீச்சுகளுக்கு மத்தியில் எதிர்த்தாக்குதலுக்குத் தயாராக நிலத் தில் புதைந்து கடந்த புலிகளின் அணி ஒன்றுக்கு மிக அருகில், 15-20 மீற்றர் தூரத்தில் - சிங்களப்படைகள் வந்ததும், புலி களின் இலகு இயந்திரத்துப்பாக்கி ஒன்று, இந்த வரலாற்றுச் சமரைத் தொடக்கிவைத்தது. இந்த நிலையில், சிங்களப் படையின் "சலாடின்" ரக கவச வாகனம் ஒன்று, மிக அருகில்



வைத்து போராளிகளின் இயந்திரத் துப்பாக்கித் தாக்குதலுக்கு உள்ளான போது, அக்கவச வாகனம் பின் வாங்கிப் பாதகாப்புத் தேடி ஓட, பின்னாலிருந்த டாங்கி சண்டையின் முன் முனைக்கு வந்தது.

ரி-33 ரக டாங்கி தனது தாக்குதலைத் தொடங்கமுன்னர், புலிகளின் ஆர்.பி.ஜி. ஒன்று டாங்கியைத் தாக்கியது. இதனால் அதிர்ச்சியடைந்த டாங்கி அணி சற்றுப் பின்வாங்கி, தன்னை நிலைப்படுத்தி மீண்டும் தாக்குதலைத் தொடங்கி முயன்றது.

ஆனால் இன்னொரு முனையிலிருந்து மீண்டும் புலிகளின் ஆர்.பி.ஜி. ஒன்று டாங்கியைத் தாக்கிய அதேவேளை, தத்தமது நிலைகளிலிருந்து எழுந்து புலிவீரர்கள், கவசவாகனப் படையுடன் நின்ற எதிரிப் படையைப் பாய்ந்து சென்று தாக்கத் தொடங்கினர். ஆச்சரியமூட்டும் விதத்தில் - வேகமகா நடந்த புலிகளின் படை நகர்த்தலைக் கண்ட சிங்களப்படை அதிர்ச்சிக்குள்ளாகியது. இந்த அதிர்ச்சியிலிருந்து சிங்களப்படை மீளமுன்னர் பல முனைகளிலிருந்து எதிரிப் படைக்குள் நுழைந்த புலி வீரர்கள், கவச வானங்களுடன் சேர்த்து சிங்களப் படையை வேட்டையாடத் தொடங்கினர். “சமர் முனையில் டாங்கிகள் பின்னோக்கி ஓட்டமெடுத்த காட்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன” என ஒரு புலிவீரன் மகிழ்ச்சியுடன் தெரிவித்தான்.

இந்தப் பலமுனைத் தாக்குதல்களில், வன்னி மாவட்டச் சிறப்புத் தளபதி தீபனது அணியுடன், மன்னார் மாவட்ட சிறப்புத் தளபதி ஜானினது அணி ஒரு முனையூடாகவும், மகளிர் படையணியின் சிறப்புத் தளபதி ஜெனாவின் தலைமையிலான அணி இன்னொரு முனையாலும் உள்நுழைந்து, சிங்களப் படையைச் சிதைத்து அவர்களுக்குப் பேரழிவை உண்டுபண்ணினார்கள்.

காலை 8:30 மணியளவில் தொடங்கிய இந்தச் சமர், மதியம் 12:30 மணியளவில் ஓய்வுக்கு வந்தது. அப்போது சிங்களப் படைகள் ஒரு கிலோ மீற்றர் தூரம் வரை - புலோப்பளை வீதிவரை - பின்னோக்கி அடித்து விரட்டப்பட்டன.

அதன் பின் மேலும் இரண்டு நாட்கள் அதே இடத்தில் தரித்து நின்று காயமடைந்த, இறந்த சிப்பாய்களை அப்புறப்படுத்தி அதற்குப் பதிலாக புதியவர்களைச் சேர்த்துப் படையை புனரமைத்துவிட்டு, கிளாலியை நோக்கி சிங்களப்படை முன்னேறியது. கிளாலியைச் சென்றடைந்ததும் புலிகளின் கண்ணிவெடியில் சிக்கி மேலும் இரண்டு வாகனங்களை சிங்களப்படை இழந்ததுடன், உயிர்ச் சேதத்தையும் சந்தித்தது. இந்த நிலையில், 04.10.1993 அன்று அதாவது “யாழ்தேவி” இராணுவ நடவடிக்கை தொடங்கிய 6ஆம் நாள், தனது இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டுப் பலத்த ஏமாற்றத்துடனும் - சோகத்துடனும் ஆனையிறவுத் தளத்திற்கே சிங்களப்படைகள் திரும்பிச் சென்று விட்டன.



இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்வியை ஏற்றுக்கொள்ள விரும்பாத சிங்களப் படைத்துறைத் தலைமை, நகைப்பிற்கிடமான விளக்கங்களையும் - வியாக்கியானங்களையும் ஒன்றுக்கொன்று முரணாகக் கொடுத்தது.

“இடத்தைக் கைப்பற்றுவதல்ல; புலிகளை இயன்றளவு கொல்லுவதே இந்த படை நகர்த்தலின் நோக்கம்” என, ஒரு இராணுவ உயர் அதிகாரி கூறியிருந்தார்.

“வெட்ட வெளியில் சண்டை பிடித்தபடியால்தான் படையினர் தரப்பில் அதிக இழப்பு ஏற்பட்டுள்ளது” என, ஒரு இராணுவ அதிகாரி சமாதானம் சொன்னார்.

ஆனால் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமண, “வெட்டவெளிக்கும் புலிகளை இழுத்துவருவதுதான் எமது பிரதான குறிக்கோள், அப்போது தான் புலிகளைக் கொன்று இடங்களைக் கைப்பற்றமுடியும்” என விளக்கமளித்தார்.

இதேவேளை, இப் பின்வாங்குகைக்குப் படைத்துறைத் தலைமை விளக்கமளித்து அறிக்கை விடுத்துள்ளது.

கிளாலிப் போக்குவரத்துப் பாதையை மூடுவதுதான் இராணுவ நடவடிக்கையின் நோக்கம். அதைப் படையினர் சாதித்து விட்டனர். கிளாலி இறங்குதுறையை அழித்து, புலிகளின் முகாம்களைத் தகர்த்து கடற்பணயத்தை தடுத்துவிட்டதாக அந்த அறிக்கை கூறுகின்றது.

கொழும்புத் துறைமுகத்தைப் போன்றுதான் கிளாலி இறங்குதுறையும் இருக்கும் என்று நம்பும் சிங்கள மக்களை, படைத்துறைத் தலைமையின் அறிக்கை திருப்திப்படுத்தியிருக்கும்.

ஆனாலும் படைத்துறைத் தலைமை இந்த அறிக்கையை எழுதத் தொடங்க முன்னரே, புலிகளின் விசைப்படகுகள் கிளாலிக் கடல் நீரேரியில் நீரைக்கிழித்தபடி பயணம் போய்க்கொண்டிருந்த காட்சிகளை, நாகதேவன்துறையிலிருந்த கடற்படைத்தள ராடர்கள் அழகாகக் காட்டிக்கொண்டிருந்திருக்கும். ஆனால் அது சிங்கள தேசத்துக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லைத்தானே! அப்படித் தெரிந்திருந்தாலும் அது கிளாலிக் கடலில் செல்லும் படகல்ல; தொண்டமானாறு கடலேரியில் செல்லும் படைகெனப் பதிலறிக்கைவிடச் சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு அதிக நேரமெடுக்காது.

ஆனாலும் இந்த “யாழ்தேவி” இராணுவ நடவடிக்கையின் நோக்கம் விசாலமானது இது ஒரு பெருந்திட்டம். பல கட்டங்களாகப் பல்லாயிரம் படைவீரர்கள் பங்குகொண்டு, பாரிய நிலப் பகுதியைக் கைப்பற்றும் ஒரு நாசகாரத் திட்டம். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆனையிறவு, பூநகரி, காரைநகர், பலாலி ஆகிய தளங்களில் சுமார் இருபதாயிரம் படையினர் காத்துக்






























**புலோப்பளைச் சமரின் போது, கைப்பற்றப்பட்ட நிலையில் – அழிக்கப்படுவதற்கு முன் – ரி–55 ரக டாங்கிகளுள் ஒன்று "... சிங்களச் சிப்பாய்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிவரும் கவச வாகனப் படை, புலிவீரர்களால் சிதறடிக்கப்பட்டது. தங்களது கண்முன்னாலேயே – பட்டப்பகலில் – டாங்கிகளையும், கவசவண்டிகளையும் இழந்தது, சிங்களப்படையினரை அதிர்ச்சியிலும் – அச்சத்திலும் ஆழ்த்தி விட்டது..."**





**சிங்களப் படைவீரனை வீழத்தி ஆயுதம் எடுக்கும் புலிவீரன்.**

**புலிகள் இயக்கம் பெற்றுவரும் போரிடும் ஆற்றலின் ஒரு படிவளர்ச்சியை, இந்தச் சமர், துல்லியமாக வெளிப்படுத்தியுள்ளது. இது, மரபுவழிச் சண்டை முறையில் இடம்பெற்று விட்ட ஒரு முக்கிய சாதனை.**



ஆனாலும், முன்னரைப்போல நீண்டகாலம் தாமதித்திருக்காது இம்முறை விரைவில் அடுத்த படையெடுப்பை வேறொரு முனையிலிருந்து தொடுக்க ஆயத்தங்களைச் செய்கின்றது.

இவ்விதமானதொரு பெரும் படையெடப்பை விரைவில் செய்ய வேண்டிய தேவை சிறீலங்காவின் ஜனாதிபதி விஜேதுங் காவுக்கு உண்டு; படைத்துறைத் தலைமைக்கும் அது அவசியம்.

இராணுவ வழிமுறைகள்மூலம் தான் இனப்பிரச்சினையை அணுகவேண்டும் என்ற கடும்போக்கை கூறி சிங்கள மக்களின் ஆதரபைப் பெற்ற விஜேதுங்கா இந்த இராணுவ நடவடிக்கையின் தோல்வியை ஏற்றுச் சும்மா இருப்பார் என்று கூறமுடியாது. அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தலும் வருகின்றது. அத்துடன்,

"யாழ்தேவி" இராணுவ நடவடிக்கையில் பங்குகொள்ள வந்த சுமார் இருபதாயிரம் துரப்புக்கள், குடாநாட்டைச் சூழ உள் முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றனர்.

எனவே மிகவிரைவில் மீண்டும் மொரு படையெடுப்பை குடாநாடு மீது நடாத்த வேண்டும் என்பதில், படைகளும் அரசம் உறுதியாகவே இருக்கின்றன. இந்த நிலைப்பாட்டிற்கு சிங்கள தேசமும் தனது முழு ஆதரவையும் தெரிவித்துக்கொண் டிருக்கின்றது.

- விடுதலைப்புலிகள் புரட்டாதி – ஐப்பசி 1993




# தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

# இந்திய இராணுவத்தினரால் யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலை 21,22.10.1987

யாழ் நகரத்தின் கிழக்குப் புறமாக நகரில் அமைந்துள்ள யாழ். போதனா வைத்தியசாலை யாழ் குடாநாட்டில் வாழ்கின்ற எட்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களிற்கு மட்டுமன்றி அயல் மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களிற்கும் பிரதான வைத்தியசாலையாக உள்ளது. தினசரி ஆயிரம் பேர் வரையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதோடு, பல கட்டட வசதிகளுடன், சத்திரசிகிச்சைப் பிரிவு, அவசர சத்திரசிகிச்சைப் பிரிவு எனப் பல பிரிவுகளுடனும் 1970 களிலிருந்து இயங்கி வருகிறது.



1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் பத்தாம் நாள் இந்தியப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தொடங்கியதிலிருந்து தொடர்ச்சியாக நடைபெற்ற போரின் மூலம் யாழ்நகரைக் கைப்பற்றும் முயற்சியில் இந்திய இராணுவத்தினர் ஈடுபட்டார்கள். யாழ்ப்பாணக் கோட்டையில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் யாழ் நகரப்பகுதி மீது பெருமளவு எறிகணைத் தாக்குதல், விமானத் தாக்குதலை மேற்கொண்டிருந்தபோதும் யாழ். வைத்திய சாலையில் வைத்தியர்கள், ஊழியர்கள், தாதிமார் தமது உயிரையும் பொருட்படுத்தாமல் மக்களுக்கான வைத்திய சேவையை வழங்கிப் பல உயிர்களைக் காப்பாற்றிக் கொண்டிருந்தார்கள்.

1987 ஒக்டோபர் இருபத்தோராம் திகதி இந்தியப்படையினர் எறிகணை வீச்சு, விமானத் தாக்குதல்களை நடத்தியவாறு யாழ். நகரை நோக்கி முன்னேறினார்கள். யாழ். வைத்தியசாலையில் பணிகளில் ஈடுபட்ட வைத்தியர்கள், ஊழியர்கள், சிகிச்சை பெறவந்த நோயாளர்கள் போன்றோர் பாதுகாப்பிற்காக, வைத்தியசாலை எக்ஸ்றே பிரிவு அலுவலகம் அமைந்துள்ள இடத்தில் பாதுகாப்பு தேடினார்கள். பிற்பகல் 3:00 மணியளவில் யாழ் நகரப் பகுதிக்குள் இந்திய இராணுவம் உள்நுழைந்தது. பின்னர் 4:30 மணியளவில் யாழ். போதனா வைத்திய சாலைக்குள் நுழைந்த இந்திய இராணுவம் அலுவலகப் பகுதியில் வைத்தியசாலைச் சீருடையுடன் இருந்த ஊழியர்கள், நோயாளர் வண்டில், கட்டில், பாய். வாங்குகளிற் படுத்திருந்த நோயாளர்கள் என எல்லோரையும் சுட்டுப்படு கொலை செய்தது.



**இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர் கூறுகையில்**

“1987 ஒக்ரோபர் இருபத்திதோராம் திகதி மாலை 4:30 மணியளவில் வைத்தியசாலையினுள் வந்த இந்திய இராணுவத்தினர் மறுநாள் காலை 10:00 மணி வரை வைத்தியசாலையில் மக்கள் மீது தாக்குதலை நடத்தினார்கள். தாக்குதலிற் காயப்பட்டவர்கள் சத்தமிடும் போது அவர்கள் மீது கைக்குண்டினை எறிந்ததுடன், துப்பாகியாலும் சுட்டார்கள். மறுநாள் காலை 6:00 - 7:00 மணிக்கிடையில் வைத்திய சாலையின் இருபத்தாறாவது நோயாளர் விடுதிப்பக்கமிருந்து சம்பவ இடத்திற்கு வந்த வைத்தியர் திரு. சிவபாதசுந்தரம் அவர்களும், இரண்டு தாதியினரும் இந்தியச் இராணுவத்தினருடன் கதைத்து எஞ்சியிருக்கும் பொதுமக்களைக் காப்பாற்ற முயற்சித்தார்கள். ஆனால் இராணுவத்தினர் ஓடிச் சென்று துப்பாக்கியினை எடுத்து வைத்தியரையும் கூடச்சென்றவர்களையும் சுட்டதில் அவர்கள் அனைவரும் உயிரிழந்தார்கள். காலை 10:00 மணியளவில் ஏனைய வைத்தியர்கள் எடுத்த முயற்சியினால் சம்பவத்தில் காயமடைந்து உயிருடனிருந்தவர்கள் காப்பாற்றப்பட்டார்கள். சம்பவத்தில் உயிரிழ்நத மூன்று வைத்தியர்கள், இரண்டு தாதிமார்கள், மேற்பார்வையாளர், ஊழியர்கள் உப்பட இருபத்தொரு மருத்துவமனை பணியாளர்களும், நோயளார் விடுதிகளிற் சிகிச்சை பெற்றுவந்த நாற்பத்தேழு நோயாளர்களுமாக மொத்தம் அறுபத்தெட்டுப் பேர் உயிரிழந்தார்கள். உயிரிழந்த அனைவரது உடல்களையும் வைத்தியசாலை பின்வாசற் பக்க முள்ள பிண அறைக்கு அருகிற் போட்டு இந்தியப்படை யினர் எரியூட்டினர்.” எனத் தெரிவித்தார்.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் இருபத்தோராம், இருபத்திரண்டாம் திகதியில் கடமையின்பால் உயிர் நீத்த வைத்தியர்கள் உட்பட இருபத் தொரு ஊழியர்களையும் அவர்களுடன் உயிரிழந்த நோயாளர்கள் நாற்பத்தேழு பேரையும் யாழ். மருத்துவமனை ஒவ்வொரு வருட மும் நினைவுகூர்ந்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

**21,22.10.1987 அன்று யாழ். போதனா வைத்தியசாலைப் படுகொலையில் கொல்லப்பட் டோர் விபரம்:-**

1. சூடாமணி அவுடை யம்மா (55)
2. இராஜதுரை மகேஸ்வரி (46)
3. இராயப்பு சூசைப்பிள்ளை (74)
4. இராமநாதன் மங்கையற் கரசி (31)

5. இராமசாமி இலங்கேஸ் வரன் (25)
6. இராமலிங்கம் சுகுமார் (24)
7. இராசு சுப்பிரமணியம் (46)
8. இராசரத்தினம் இரத்தினராஜா (28)
9. நடராஜா ஜெயசீலன் ( 21)
10. கந்தையா செல்வராஜா (50)
11. கந்தையா செல்வராஜா (56)
12. கந்தையா வேதா ரணியம் (27)
13. கந்தையா சிவராஜா (25)
14. கந்தன் மார்க்கண்டு (39)
15. கதிர்காமு பரிமேலழகர் ( 40)
16. கிருபாகரன் இந்திராணி (32)
17. குருசுமத்து ஜோன்பீற்றர் ( 24)
18. கணபதி கிருஸ்ணராஜா (50)
19. கணபதி சிவலோகநாதன் (23)
20. பஸ் தியாம் பிள் ளை யோன் அரியமலர் (60)
21. பஸ் ரியாம் பிள் ளை நொய் லா விஜயந்தி (20)
22. வைத்திலிங்கம் சண் முகலிங்கம் (49)
23. துரைச்சாமி இரா ஜேந்திரா ( 70)
24. துரைச்சாமி மகேந்திரா (73)
25. துரைச்சாமி ஆறுமுகம் (72)
26. தம்பிப்பிள்ளை கனக லிங்கம் (64)
27. தம்பிப்பிள்ளை கிருபா கரன் (33)
28. தியாகராசா மதியரசன் (17)
29. திருமதி வடிவேலு (48)
30. தங்கவேலு சவுந்தரராஜா (06)
31. மார்க்கண்ட தியாகராசா (48)
32. முத்தையா லீலாவதி (28)
33. முத்துக்குமாரு துரை ராஜா (26)
34. அந்தோனிமுத்து அந் தோனி விக்ரர் (35)
35. அப்பையா மாணிக்கம் (76)
36. அரியகுட்டி இராச ரத்தினம் (53)
37. அரியரட்ணம் லில்லி நேசம் (75)
38. அருணாசலம் சிவபாத சுந்தரம் (-)
39. அல்பிரட் அந்தோனிப் பிள்ளை (65)
40. அல்பிரட் மேரியோ செப்பின் (37)
41. ஜெபமணி கீதபொன் கலன் (43)
42. ஜோன் சின்னையா (65)
43. யோன் சிமியோன் (67)
44. கோபாலப்பிள்ளை உருத் திரன் (24)
45. பொன்னம்பலம் வரத ராஜன் (28)
46. பெலிசியன் சதீஸ் யோகேந்திரன் (15)
47. தோம ஸ் பேரின் பநாயம பஸ்தியாம்பிள்ளை (66)
48. செபஸ்தியன் தம்பிராஜா (55)
49. சேதுசிகாமணி கணேச ரட்ணம் (29)
50. செல்லையா தங்கமணி (58)
51. செல்லர் சிவபுரம் (-)
52. வேலுப்பிள்ளை சரவண முத்து ( 60)
53. ஞானப்பிரகாசம் செந்தூர் முருகன் (40)
54. சுப்பிரமணியம் ஜெண மோகன் (32)
55. சத்தியசீலன் ஜெயசீலன் (17)
56. சின்னப்பு ஜெயநாதன் (36)
57. சின்னத்தம்பி வேலுப் பிள்ளை (75)
58. சின்னவி சின்னத்துரை (57)
59. சிவலை குணரட்ணம் (49)



**காயமடைந்தவர்களின் விபரம்**

1. யூலியஸ் பிரதீபன் (06)
2. ந. அன்னம் (90)
3. நா. நவரத்தினம் (54)
4. நா. செல்லையா (21)
5. நடராசா தனபாலசிங்கம் (20)
6. நவரத்தினம் சந்திரகுமார் (18)
7. பூ. விஸ்ணுதாசன் (34)
8. பத்மநாதன் தனபாக்கிய லட்சுமி (43)
9. பற்குணராஜா கமலா (25)
10. தா. இராசேந்திரன் (44)
11. மா. அன்னலட்சுமி (75)
12. அ. சண்முகராசா (36)
13. அ. கந்தசாமி (36)
14. கே. பாலையா (44)
15. செ. பத்மநாதன் (46)
16. செ. தவராஜன் (22)
17. சின்னப்பொடி தெய் வானை (65)
18. வா. மதிஜீவன் (23)
19. ராஜரட்ணம் ஜனார்த் தனன் (20)




# அராலித்துறைப் படுகொலை 22.10.1987

அராலித்துறை யாழ் மாவட்டத்தின் வலிகாம் மேற்கு சங்கானைப் பிரதேச எல்லைக்குள் அமைந்துள்ளது. இலங்கை இராணுவம் யாழ்கோட்டைப்பகுதியில் நிலை கொண்டிருந்ததால், யாழ் கோட்டைப் பகுதியின் அருகாமையிலுள்ள பண்ணைப் பாலம் ஊடான போக்குவரத்துத் தடைப்பட்டிருந்தது. இதன் காரணமாக தீவுப் பகுதிக்கான போக்குவரத்துப் பாதையாக அராலித்துறை விளங்கியது. அக்காலப்பகுதியில் தீவுப்பகுதி மக்கள் அராலித்துறைப் பாதையினூடாகப் போக்குவரத்தில் ஈடுபட்டனர்.

1987 ஆம் ஆண்டு ஒக்டோபர் இருபத்திரண்டாம் நாள் தீவுப் பகுதியிலிருந்து யாழ் நகரம் நோக்கி பதினைந்து வரையான இயந்திரப் படகுகளில் முந்நூறிற்கும் மேற்பட்ட மக்கள் பயணம் செய்தனர். அன்று மதியம் அராலித்துறைக் கரையில் தரையிறங்கிய பொதுமாக்கள் மீது இந்திய இராணுவத்தின் உலங்கு வானூர்தி மூலம் தாக்குதல் நடத்தியதால் அச்சமடைந்த மக்கள் அராலித்துறை மட்தில் தஞ்சம் புகுந்தனர். பாதுகாப்புத்தேடி ஓடிய, தஞ்சமடைந்த மக்களை இலக்கு வைத்து ஏழிற்கும் மேற்பட்ட றொக்கட் குண்டுகள் வீசப்பட்டது. இதனால் அராலித்துறை மடத்தடியில் தஞ்சம் புகுந்த பயணிகள் முப்பத்தைந்து பேர் உயிரிழந்தனர். முப்பதிற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தார்கள். ஏழிற்கும் மேற்பட்ட படகுகள் முழுமையாக சேதமடைந்தன. சில படகுகள் பகுதியளவில் சேதமடைந்தன. இறந்தவர்களின் சடலங்கள், காயப்பட்டவர்கள் மீள மறுகரைக்கு செல்லப்பட்டன. இறந்தவர்களில் தீவுப்பகுதியைச் சேர்ந்த அரச உத்தியோகத்தார்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் இடங்குவர்.

**22.10.1987 அன்று அராலித்துறைப் பாடுகொலையில் கொல லப்பட்டோர் விபரம்**

1. யேசுதாசன் ஜீவகுமார் (06)
2. ஆரோக்கியம் (40)
3. யேசுதாசன் குமுதினி (09)
4. செ. சேவியர் (70)
5. கிறிஸ்ரிராஜா நீற்றம்மா (31)
6. கிறிஸ் ரிராஜா சகாய நாயகி (06)

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை






# கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடுகொலை 24.10.1987

கொக்குவிற் கிராமம் யாழ். மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலக பிரிவினுள் அமைந்துள்ளது. யாழ். நகரிலிருந்து காங்கேசன்துறை வீதியூடாகச் செல்லும் வழியில் ஏறக்குறைய யாழ் நகரிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள கொக்குவிற் சந்திக்குக் கிழக்குப் புறமாக கொக்குவில் இந்துக்கல்லூரி அமைந்துள்ளது.



1987 ஒக்டோபர் பத்தாம் நாள் இந்திய இராணுவத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் யுத்தம் தொடங்கிய பின்னர் இந்திய இராணுவத்தின் பரவலான விமானக்குண்டு வீச்சு மற்றும் ஏறிகணைத்தாக்குதலுக்கு அஞ்சி கொக்குவில் கிழக்கு, ஆனைக் கோட்டைப் பகுதியைச் சோந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதுகாப்புக்கருதி கொக்குவில் இந்துக்கல்லூாயீல் தஞ்சமடைந்தார்கள். அத்துடன் தங்களை அகதிகள் என அடையாளப்படுத்தும் நோக்குடன் பாடசாலையின் முக்கிய இடங்களில் வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டனர்.

1987 ஒக்டோபர் இருபத்துநான்காம் நாள் காங்கேசன்துறை வீதி வழியாக யாழ் நகரம் நோக்கிக் கவசவாகனங்கள், டாங்கிகள் சகிதம் முன்னேறிய இந்தியப் படையினர் கொக்குவில் இந்துக் கல்லூரியை வந்தடைந்ததும், கவசவாகனங்களிலிருந்து அங்கு அடைக்கலம் புகுந்திருந்த பொது மக்கள் தங்கியிருந்த பாடசாலைக் கட்டடங்களின் மேல் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர். இதனால் பாடசாலை வகுப்பறையில் தங்கியிருந்த இருபத்தாறு பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்கள்.

படுகாயமடைந்தவர்களில் பதின்நான்கு பேர் மருத்துவ வசதிகளற்று உள்ளூர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லும் வழியிலும், மருத்துவமனைகளிலும் உயிரிழந்தனர். இச்சம்பவத்தில் யாழ் பல்கலைக் கழக கல்வியற்துறைப் பீடாதிபதி பேராசிரியர் சந்திரசேகரம் உட்பட மொத்தம் நாற்பது பேர் உயிரிழந்ததுடன், எண்பது பேர் படுகாயமடைந்தனர்.

உரிய முறைப்படி தகனம் செய்வதற்கான சூழ்நிலையில்லாததால் இறந்தவர்களின் சடலங்கள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஒரோ குழியில் வைத்து அடக்கம் செய்யப்பட்டது.

**24.10 அன்று கொக்குவில் இந்துக்கல்லூரிப் பாடு கொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசையா பஞ்சலிங்கம் (43)
2. இராசையா செல்வராணி (37)
3. இராமு இராசு (60)
4. நாகரத்தினம் விஜயரத்தினம் (46)
5. நடராசா இராசகுமாரன் (44)
6. நடராசா இராசராசேஸ்வரி (24)
7. நடராசா குணராணி (35)
8. நடராசா தமிழ்ச்செல்வி (10)
9. நடராசா சபேஸ்குமார் (06)
10. நடராசா ரமதி (13)
11. நடேசு பரமேஸ்வரி (51)
12. நல்லையா பாக்கியம் (50)
13. கந்தையா சங்கரப்பிள்ளை (65)
14. கந்தவனம் மகேஸ்வரி (52)
15. குணபாலசிங்கம் பத்மசிறி (08)
16. பரமு தங்மணி (24)
17. பரமேஸ்வரன் மனோன்மணி (35)
18. பரமேஸ்வரன் மாலினி (01)
19. தர்மலிங்கம் நிசாந்தன் (02)
20. துரைச்சாமி குமாராசாமி (72)
21. தம்பிராசா நடராசா (61)
22. வேணுகோபால் மகாதேவன் (41)
23. மகாதேவன் இராசம்மா (28)
24. மகாதேவன் பாலமுருகன் (09)
25. மகாதேவன் வேணுகிருஸ்ணா (07)
26. மகாதேவன் விக்கினேஸ்வரன் (10)
27. அன்னசிங்கம் கமலாதேவி (33)
28. பெரியதம்பி இராசையா (30)
29. பேராசிரியர் சோ. சந்திரசேகரம் (-)
30. செல்வநாயகம் மாணிக்கரத்தினம் (69)
31. செல்லர் திரவியம் (53)
32. சுப்பிரால் கோவிந்தசாமி (73)
33. சிவகுரு செல்லத்துரை (85)
34. விஸ்வநாதி விஜயரத்தினம் (40)

# அளவெட்டி ஆச்சிரமப் படுகொலை 26.10.1987

அளவெட்டிக் கிராமம் யாழ் மாவட்டத்தில் வலிகாமத்தின் வடக்குப் பகுதியில் தெல்லிப்பளைப் பிரதேச செயலகப் பிரிவினுள் அமைந்துள்ளது. அளவெட்டி அம்பனைப் பகுதியில் அளவெட்டி — மல்லாகம் ப. நோ.கூ.சங்கம் அமைந்துள்ள கட்டடத்திற்கு முன்பா அளவெட்டி இந்து ஆச்சிரமம் அமைந்துள்ளது.

அளவெட்டிப் பிரதேசத்திலுள்ள இந்த இந்து ஆச்சிரமம் இந்து மக்களின் வயோதிபர் மடமாகவும், கடந்த கால வன்செயல்களால் கடும் பாதிப்புற்ற இளஞ்சிறார்கள் கல்வி கற்கும் இடமாகவும் செயற்பட்டுக்கொண்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் இருபத்தாறாம் நாள் இந்திய இராணுவத்தினரின் தாக்குதல்கள் ஆரம்பித்ததன் பின்னர் அளவெட்டியில் அமைந்துள்ள இந்து ஆச்சிரமத்தின் மீது இந்திய இராணுவத்தினரின் “முதலை” என்னும் எம்.ஐ. 24 ரக உலங்குவானூர்தியால் நடத்திய றொக்கட் தாக்குதலில் ஆச்சிரமத்திலுள்ள வயோதிபர்கள், சிறார்கள் உட்பட பதினைந்து பேர் உயிரிழந்தனர். பன்னிரண்டு பேர் படுகாயமடைந்தனர்.

**26.10.1987 அன்று அளவெட்டி ஆச்சிரமப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இராசரத்தினம் கோமதி (15)
2. இராசரத்தினம் ஞானகணேசன் (21)
3. குணசீலன் கோணேஸ்வரி (38)
4. பத்மநாதன் செல்வச்சந்திரன் (12)
5. தர்மலிங்கம் சிறிஸ்கந்தராசா (25)
6. துரைசிங்கம் மதி (01)
7. தம்பிராசா சிறீபவன் (12)
8. அமிர்தநாதர் நேசம்மா (50)
9. சின்னத்துரை தங்கலிங்கம் (47)
10. சின்னத்தம்பி தம்பிராசா (56)
11. சின்னத்தம்பி இரத்தினம் (47)
12. சின்னையா இராசரத்தினம் (62)
13. சிவகுருநாதன் சிவபாக்கியநாதன் (41)
14. விஜயரத்தினம் பத்மராணி (33)
15. வினாசித்தம்பி ஐயாத்துரை (80)



# சாவகச்சேரிசந்தைப் படுகொலை 27.10.1987

யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குத் திசையில் யாழ் நகரையும், வன்னிப் பெருநிலப் பரப்பையும் இணைப்பது தென்மராட்சிப் பிரதேச மாகும். யாழ்-கண்டி பிரதான நெடுஞ் சாலையில் யாழ். நகரத் திலிருந்து ஏறக் குறைய பதினைந்து கி.மீ. தூரத்தில் அமைந் துள்ள சாவகச்சேரி நகரமானது, தென்மராட்சி பிரதேசத்தின் பிரதான நகரமாகும். 1987 ஒக்டோபர் இருபத்தேழாம் திகதியன்று கந்த சட்டி சூரன் போர் ஆகையால், நகரத்திலிருந்த ஆலயத்திலிருந்து சூரன் வீதியால் வீதியுலா சென்று கொண்டிருந்த நேரம் மதியம் 12 மணியளவில் வானில் வந்த இந்திய இராணுவத் துக்குச் சொந்தமான இரண்டு எம்.ஜ 24 ரக உலங்குவானூர்திகள் மக் கள் மீது தாக்குதலை மேற்கொண்டன. பீதி யடைந்த மக்கள் என்ன செய்வதென்று தெரி யாது அங்குமிங்குமாகச்சிதறி ஓடினர். தொடர்ச்சி யாக மக்கள் மீது உலங்குவானூர்தி ஏவிய றொக்கட் குண்டகளால் சந்தைக்கு வந்த அறுபத்தொட்டுப் பொதுமக்கள் உயிரிழந் தார்கள். நூற்றி எழுபத்தைந்து பேர் காய மடைந்தார்கள். இந்து ஆலயத்தில் வீதியுலா சென்ற சூரன் சிலையும் சேதமடைந்தது.

**27.10.1987 அன்று சாவகச் சேரி சந்தைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்**

1. இளையதம்பி நாகராசா (50)
2. இராசையா திரவியம் மரியாம்பிள்ளை (32)
3. இராசநாயகம் நந்தினி (20)
4. இராசநாயகம் அருந்தவ ராசா (13)
5. இராசா சிறிதரன் (26)
6. இராசதுரை இராசேந்திர போஸ் (18)
7. இராசசிங்கம் மனோ கரன் (38)
8. இராசசிங்கம் கௌரிதாஸ் (20)
9. நாகமுத்து தங்கம்மா (66)
10. நாகமுத்து தவராசா (27)
11. நாகராசா புஸ்பராசா (13)
12. நாகராசா தனலட்சுமி (21)
13. நாகராசா மகேஸ்வரி (41)
14. நாகராசா சண்முகராசா (10)
15. நல்லதம்பி இராசையா (56)
16. கனகு பொன்னு (57)
17. கந்தையா மனோன் மணி (58)
18. கந்தன் தங்கம் (51)
19. கந்தசாமி வைத்தீஸ்வர சர்மா (26)
20. வைத்திஸ்வரசர்மா கலைச்செல்வன் (02)
21. கந்தசாமி கெந்தீஸ்வரன் (20)
22. கார்த்திகேசு பெனடிக்ற் மத்தியூஸ் (32)
23. கணபதி மயில்வாகனம் (40)
24. பழனியாண்டி கனகரத்தினம் (34)
25. பிள்ளையாங்குட்டி துரைச்சாமி (49)
26. பிலிப்பு இராசேந்திரம் (42)
27. வைத்திலிங்கம் மயில்வாகனம் (45)
28. தம்பு ஜெயரத்தினம் (22)
29. தம்பிராசா சந்திரமோகன் (21)
30. மார்க்கண்டு துரைராசா (55)
31. முருகேசு நடராசா (50)
32. முருகேசு சிவசுப்பிரமணியம் (41)
33. ஆனந்தசாமி அருந்தவசிவனேசன் (25)
34. ஆறுமுகம் விஸ்வநாதன் (31)
35. அல்பிரட் நொபேட் லூயிஸ் ஸ்ரிப்ன (29)
36. ஜெயரத்தினம் வீரஜெயபரஞ்சோதி (23)
37. கோவிந்தசாமி மகேந்திரன் (27)
38. பொன்னுத்துரை கமமேஸ்வரி (10)
39. பொன்னுத்துரை தங்கரத்தினம் (56)
40. பொன்னுத்துரை மகேஸ்வரி (49)
41. பொன்னுத்துரை மஞ்சுளாதேவி (28)
42. பொன்னம்பலம் கனகசிங்கம் (41)
43. பொலோறஞ் அரியமலர் இராசசிங்கம் (65)
44. தேசிங்கன் செல்லையா (14)
45. டொனால்ட் நவீன் குண்டேக்ஸ் (20
46. சோமசுந்தரம் சின்னாச்சி (38)
47. செல்லத்துரை தயாபரன் (16)
48. செல்லத்துரை ரெங்கநாதன் (32)
49. வெற்றிவேலு சிவசிறி (18)
50. வேலுப்பிள்ளை குணபாலசிங்கம் (30)
51. வேலுப்பிள்ளை தங்கம்மா (72)
52. வேலுப்பிள்ளை யோகேஸ்வரன் (19)
53. ஞானமுத்து இரஞ்சிதமலர் (63)
54. சுப்பிரமணியம் பரந்தாமன் (12)
55. சுப்பையா பொன்னம்மா (60)
56. சின்னவன் நாகமுத்து (76)
57. சின்னவன் செல்லையன் (45)
58. சின்னராசா அருமைராசா (33)
59. சின்னையா அம்பிகைபாலன் (27)
60. சிதம்பரப்பிள்ளை குமாரசாமி (52)
61. சிவக்கொழுந்து மகேஸ்வரன் (55)
62. சண்முகம் பரராசசிங்கம் (34)
63. வன்னியசிங்கம் பாஸ்கரன் (19)
64. விசுவநாதன் கந்தையா (59)
65. எலியாஸ் சிறாயுதீன் (27)



# முல்லை. புதுக்குடியிருப்பு கைவேலிப் படுகொலை 16.10.2006

முல்லைத்தீவு மாவட்டம் புதக் குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிற் குட்பட்ட புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியிலுள்ள கைவேலி என்னும் கிராமம் மீது 2006 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 16 ஆம் நாள் மாலை 5:15 மணியளவில் சிறீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான நான்கு கிபிர் விமானங்கள் மேற்கொண்ட குண்டுத் தாக்குதலில் ஒரு மாதக் குழந்தை மற்றும் இரு சிறுவர்கள் உட்பட மூவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் பத்து பொதுமக்கள் காயமடைந்த நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களில் தவராசா இந்திரா என்பவர் நான் காம் நாள் சிகிச்சை பலனளிக்காது மருத்துவமனையில் சாவடைந்தார்.

**இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டவர்களது பெயர் விபரம்**

1. யூட்கிறிஸ்ரின் டன்சிபா (01)
2. சிவகுமார் தனுசிகா (14)
3. தவராஜா துசாந்தினி (14)
4. தவராசா இந்திரா (42)

**இச்சம்பவத்தின் போது காயமடைந்தவர்களது பெயர் விபரம்**

1. முருகானந்தன் தியாக ராஜா (22)
2. கந்தசாமி நாகேந்திரம் (34)
3. வீரசிங்கம் நிதர்சன் (12)
4. நாகராசா நிரோஜினி (13)
5. புவனச்சந்திரன் புஸ்பலதா (38)
6. பிறேமசிங் சிவாஜினி (32)
7. நாகேந்திரம் சுகந்தினி (29)
8. சர்மிலா (09)
9. மேலும் ஒருவர்







# பெரியமடுப் படுகொலை 25.10.2007

மன்னார் மாந்தை மேற்கில் விவசாயத்தினைப் பிரதான தொழிலாகக் கொண்டு மக்கள் செறிந்து வாழ்கின்ற கிராமங்களில் பெரியமடு கிராமமும் ஒன்றாகும். இடம்பெயர்ந்தோர் குடியிருப்பின் மீது 20.10.2007 அன்று நண்பகல் 12:00 மணியளவில் சிறீலங்காப் படையினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கர்ப்பிணித் தாய் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் கொல்லப்பட்டும் 09 பேர் காயமடைந்துள்ளனர்.

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவிலிருந்து 2007 ஒகஸ்ட் 25 ஆம் நாள் தொடக்கம் சிங்கள இராணுவத்தின் செல்வீச்சு காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான இடங்களில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்து வருகின்றனர். இவ்வாறு இடம் பெயர்ந்து வந்தவர்களில் பெரியமடு 30 வீட்டுத்திட்ட கிராமப் பகுதியில் 23 குடும்பத்தினர் தற்காலிக கொட்டகைகள் அமைத்து வசித்துக் கொண்டிருந்தனர்.

2007 ஒக்ரோபர் 25 ஆம் நாள் நண்பகல் 12:00 மணியளவில் இக் குடியிருப்பு பகுதி மீது மன்னார் தள்ளாடி சிங்கள இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட செல் வீட்டின் முற்றத்தில் வீழ்ந்து வெடித்ததால் வீட்டிற்குள்ளிருந்த நிறைமாதக் கர்ப்பிணியான செல்வநாதன் பரிமளா (வயது 19), அவரின் சகோதி தங்கவேல் கௌசல்யா (வயது 09), இவர்களின் தந்தை சோமசுந்தரம் ஜெயபாலசிங்கம் (வயது 61) ஆகியோர் உடல்சிதறிப் பலியானதுடன் பரிமளா, கௌசல்யா ஆகியோரின் தாயார் ஜெயபாலசிங்கம் திரவியம் (வயது 55) இவரது பேரப்பிள்ளை செல்வநாதன் கோகிலன் (வயது 03), பிரான்சிஸ் சுதர்சன் (வயது 45), இவர்களின் மகள் உமாதேவி (வயது 13), வசந்தன் றெபேக்கா (வயது05), சுப்பையா மோகன்ராஜ் (வயது 29), பா. சுப்பிரமணியம் (வயது 28) ஆகியோர் படுகாயமடைந்து, முழங்காவில், கிளிநொச்சி வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இதில் செல்வநாதன் கோகுலன் என்ற மூன்று வயதுக் குழந்தை மிகவும் கவலைக்கிடமான நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதில் குறிப்பாக நிறைமாதக் கர்ப்பிணியான பரிமாளவின் வயிற்றுப்பகுதியை செல்துண்டுகள் வெட்டி சென்றதனால் வயிற்றிலிருந்த இரணைச்சிசுக்களும் வயிற்றிலிருந்து வெளியே வந்திருந்த கோரநிகழ்வும் இடம்பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.














JATHU RENOVATION
Free! ESTIMATES
உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்
★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical
RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com


அகரம்
Akaram
வரைகலை வடிவமைப்பு ஆலோசகர்
Graphic Design Consultant
தங்களது அனைத்துவிதமான அச்சுக்கலை வடிவமைத்தல்
(Business Cards, Flyers, Posters, Logo, Banner
Advertisement Designing & Much More)...
இலட்சினை வடிவமைப்பு (Logo Design)
இவற்றிற்கான ஆலோசனைகளையும்,
தொடர்புகளையும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் (Call):
437.345.4203


The ESTATE BANQUET AND EVENT CENTRE
The ESTATE BANQUET AND EVENT CENTRE
The Estate Banquet and Event Centre can make your event "EXCLUSIVE"
The Estate Banquet and Event Centre is able to host,
• Wedding • Christenings • Baptisms
• Anniversary Parties • Corporate Events
and all other Special Occasions
For all events ranging from 50 - 500 Guests
International Menu with Premium Bar
430 Nugget Ave, Scarborough ON M1S 4A4
Tel:416 400 5993
info@estatebanquets.com www.estatebanquets.com


Call today to Save energy
Free Estimate!
Call today
$50 OFF
Broken Glass...?
We will fix it within 24 hour.
Let us help with...
Replacement (Door & Windows)
Custom Door & Windows
Front Door & Patio Door
Garden Door
Door & Windows Re-Caulking (Important)
Painting Doors & Windows
Basement Separate Entrance Door
Home Painting
Spotlights installation
California Shutters
PTR DOORS & WINDOWS
-Over 10 years experience-
Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com




# தொல்லியல் நோக்கில் கதிரமலை அரசு

பரமு புஷ்பரட்ணம்

இலங்கைத் தமிழரிடையே அரச மரபு தோன்றி வளர்ந்த வரலாற்றை ஆராய முற்படும் ஒருவர் அதன் தொடக்கப் புள்ளியாக தலைநகர் கதிரமலையைக் குறிப்பிடுவார். இதற்கு, 17 - 18 ஆம் நூற்றாண்டுகளில் எழுந்த கைலாய மாலை, யாழ்ப்பாண வைபவமாலை முதலான தமிழ் இலக்கியங்களில் கி.பி. 8 ஆம் நூற்றாண்டளவில் உக்கிரசிங்க மன்னன் சோழ இளவரசியான மாருதப்புரவல்லியை பட்டத்தரசியாகக் கொண்டு கதிரமலையில் இருந்து ஆட்சி செய்த வரலாறு கூறப்பட்டிருப்பது முக்கிய காரணமாகும். இக் கதிரமலையைக் கந்தரோடையென அடையாளப்படுத்திய முதலியார் இராசநாயகம், சுவாமி ஞானப் பிரகாசர் முதலான முன்னோடி வரலாற்று அறிஞர்கள், இது சிங்கை அரசுக்கு முன்னர் வடஇலங்கையில் தோன்றிய முதலாவது தமிழ் அரசின் தலைநகர் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால் தமிழ் இலக்கியங்களில் வரும் உக்கிரசிங்கன் - மாருதப்புரவல்லி கதையை நம்பகத்தன்மையற்ற புனைக் கதையெனக் கூறும் பிற்கால வரலாற்றறிஞர்கள் கி.பி.13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலங்கை மீது படையெடுத்த பாண்டியப் படைத்தளபதிகளான ஆரியச் சக்கரவர்த்திகள் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு தோற்றுவித்த அரசே முதலாவது தமிழ் அரசு என வாதிட்டனர். ஆனால் இக்கருத்தை முன்னிலைப்படுத்தி வாதிட்டு வந்த அறிஞர்களே இன்று சமகாலத் தொல்லியற் கண்டுபிடிப்புகளை ஆதாரமாகக் கொண்டு சங்க காலத்திற்குச் சமமான காலத்தில் இலங்கைத் தமிழரிடம் அரச மரபு உருவாகியிருக்கலாம் என்ற முடிவுக்கு வந்திருப்பதால், தமிழ் இலக்கியங்களில் கூறப்படும் கதிரமலை அரசுக்கு தொல்லியல், இலக்கிய ஆதாரங்களை எடுத்துக் கூறுவது இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.



கந்தரோடை

இலங்கையில் நிலையான கிராமக் குடியிருப்பு, இரும்பின் உபயோகம், நகரமயமாக்கம் என்பன தோன்றுவதற்கும், அவற்றின் பின்னணியில் அரச உருவாக்கம் நிகழ்வதற்கும், தென்னிந்தியாவில் இருந்து, அதிலும் குறிப்பாகத் தென்னிந்தியாவின் தென்பகுதியில் இருந்து, இற்றைக்கு 3000 ஆண்டளவில் புலம்பெயர்ந்து வந்த பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய திராவிட மக்களே காரணம் என்பது இன்று தொல்லியலாளரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான உண்மையாகும். வட இலங்கையில் இப்பண்பாட்டு மக்களது குடியேற்றம் நிகழ்ந்த இடங்களாக மாதோட்டம், பூநகரி, வெற்றிலைக்கேணி, அரியாலை, சாட்டி, காரைநகர், ஆனைக்கோட்டை, கந்தரோடை முதலான இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றுள் அநுராதபுரத்திற்கு அடுத்த நிலையில் மிகப்பரந்த அளவில் பெருங்கற்காலக் குடியிருப்பை கொண்டிருந்த இடமாக கந்தரோடை காணப்படுகிறது. இங்கு ஏறத்தாழ இரண்டரைக் கிலோ மீற்றர் நீள அகலத்தில் இப்பண்பாட்டு மக்களது குடியிருப்புக்கள் இருந்தமைக்கான சான்றுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. 1980 களில் குடா நாட்டின் புராதன குடியிருப்பு மையங்கள் பற்றி ஆய்வு நடாத்திய பேராசிரியர் பொ. இரகுபதி அக் குடியிருப்புகளின் தலைமைக் குடியிருப்பாகக் கந்தரோடை இருந்ததெனக் குறிப்பிடுகின்றார்.

பரந்த அளவில் பெருங்கற்காலக் குடியிருப்புக்குரிய சான்றுகள் காணப்படுவதும், அப்பண்பாடு தொட்டு தற்காலம் வரை அங்கு மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வருவதற்கான தொல்லியற் சான்றுகள் செறிவாகக் காணப்படுவதும் அவ்வாறு கூறியிருப்பதற்குக் காரணமாகும். அத்துடன் இப் பெருங்கற்காலப் பண்பாட்டுச் சின்னங்களுடன், மங்கிய நிலையில் பிற நாடுகளுக்குரிய கல்மணிகள், பல அளவுகளில் பல வடிவங்களில் அமைந்த மட்பாண்டங்கள், மதுச் சாடிகளின் உடைந்த பாகங்கள், கண்ணாடிப் பொருட்கள், நாணயங்கள் எனப் பலவகைச் சான்றுகளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இச் சான்றுகள், இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்னரே இப் பிரதேச மக்கள் இந்திய, கிரேக்க, உரோம, அரேபிய மற்றும் சீன நாடுகளுடன் வணிக - கலாசார உறவுகளைக் கொண்டிருந்ததைத் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன.

1917 இல் கந்தரோடையில் தொல்லியல் ஆய்வை மேற்கொண்ட போல் பீரிஸ் என்ற அறிஞர் அங்கு கிடைத்த பலதரப்பட்ட தொல்லியற் சின்னங்களை ஆதாரமாக எடுத்துக்காட்டி, புராதன காலத்தில் அநுராதபுரத்திற்கு அடுத்த தலைநகராக கந்தரோடை திகழ்ந்ததெனக் குறிப்பிட்டார். அவர் எடுத்துக் காட்டிய இந்திய, கிரேக்க, உரோம நாடுகளுக்குரிய ஆதாரங்கள், இலங்கையின் ஆரம்பகால அரசுகள் தோன்றிய அநுராதபுரம், மகாகமை போன்று கந்தரோடையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு முதிர்ச்சி நிலையில் நகரமயமாக்கமும், அரச உருவாக்கமும் ஏற்பட்டமைக்குச் சான்றாகும். இலங்கையின் அரச உருவாக்கம் நிகழ்ந்த வரலாற்றை ஆய்வு செய்த குணவர்த்தனா, பெரும்பாலும் பெருங்கற்காலக் குடியிருப்புகள் காணப்பட்ட மையங்களில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகளை ஆதாரமாகக் கொண்டு வரலாற்றுத் தொடக்க காலத்தில் ஏறத்தாழ 268 சிற்றரசுகள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். தமிழகத்தைப் போல் இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாடு வழியாக அரசு தோன்றியதாகக் கூறும் பேராசிரியர் சுதர்சன் செனிவரட்ன, அதை இனக்குழு நிலையில் இருந்து அரசு உருவாகுவதற்கு இடைக்கட்டமாகத் தோன்றிய அரசுகள் எனக் குறிப்பிடுகிறார். இலங்கையில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் இருந்து, அநுராதபுரத்தை அடுத்து மிகப் பரந்த அளவில் பெருங்கற்காலக் குடியிருப்புக்களைக் கொண்டிருந்த இடமாக கந்தரோடை அடையாளம் காணப்பட்டுதால், இங்கும் குறுநில அரசுகள் தோன்றில்ருக்கும் என்பதில் ஐயமில்லை. அவற்றிற்குச் சார்பாக இங்கு சில சான்றுகளை எடுத்துக்காட்டலாம்.

1988 அளவில் கந்தரோடையில் தொல்லியல் ஆய்வினை மேற்கொண்ட சேயோன் என்ற அறிஞர் அங்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பிராமி எழுத்துப் பொறித்த நாணயங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார். அவை இலங்கைக்குரிய தனித்துவமான நாணயங்களாகும். அந்நாணயங்கள் சிலவற்றில் தமிழுக்குரிய எழுத்துகளை தெளிவாகக் காணமுடிகிறது. அவற்றில் ஒரு நாணயத்தின் முற்பக்கத்தில் கஜலட்சுமியின் ஆரம்ப தோற்றமான ஸ்ரீத்ஸாவும், பின்பக்கத்தில் கபதிகன் என்ற தமிழ்ப் பெயரும் காணப்படுகின்றன. தென்னாசியாவில் பண்டு தொட்டு நாணயங்கள் வெளியிடும் அதிகாரம் அரசுக்கு அல்லது அரச அங்கீகாரம் பெற்ற தலைவனுக்கே இருந்து வந்துள்ளது. கந்தரோடையில் தனித்துவமான நாணய மரபு காணப்பட்டுள்ளமை, இங்கு அரசு இருந்ததற்குச் சான்றாகும். 1999 - 2000 ஆண்டு காலப் பகுதியில் கந்தரோடையில் தொல்லியல் ஆய்வினை மேற்கொண்ட பேராசிரியர் கிருஷ்ணராஜா, அங்கு 2000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்துப் பொறித்த மட்பாண்டங்கள் சிலவற்றைக் கண்டுபிடித்துள்ளார். இவ்வாதாரங்கள் இக் காலப் பகுதியிலேயே, எழுத்துவாசனை உடைய மக்கள் இப்பிராந்தியத்தில் வாழ்ந்துள்ளனர் என்பதற்குச் சான்றாகும். தமிழகத்திலும், இலங்கையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு வழிவந்த மக்கள் கி.மு. 3 ஆம் நூற்றாண்டளவில் எழுத்தின் பயன்பாட்டை அறிந்திருந்தமைக்குச் சான்றுகள் உண்டு. ஆனால் அவை எல்லாப் பெருங்கற்காலக் குடியிருப்பு மையங்களிலும் பரவலாக இருந்ததெனக் கூறமுடியாது. மாறாக அரச தோற்றம், கட்டமைப்புடைய சமூக உருவாக்கம் நிகழ்ந்த இடங்களிலேயே பரவலாக இருந்துள்ளன. இந்த அம்சம் கந்தரோடையில் காணப்பட்டமை அங்கு அரசு உருவாக்கம் நிகழ்ந்தமைக்கு இன்னொரு சான்றாகும்.



ஆனைக்கோட்டை பெருங்கற்கால மனித எலும்புக் கூடு

கந்தரோடைக்கு தென்மேற்கே ஆனைக்கோட்டை என்ற இடத்தில் 1980 களில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வு, கந்தரோடையிலும் பெருங்கற்காலப் பண்பாட்டு வழியாக அரசு தோன்றியிருக்கலாம் என்பதற்கு இன்னொரு சான்றாகக் காணப்படுகிறது. குடாநாட்டில் பெருங்கற்காலக் குடியிருப்போடு, அப் பண்பாட்டுக்குரிய ஈமச் சின்னம் கண்டுபிடிக்கப்பட்ட ஒரேயொரு இடமாக ஆனைக்கோட்டை காணப்படுகிறது. அங்கு கண்டுபிடிக்கப்பட்ட ஈமச் சின்னத்தின் தலைமாட்டுப் பகுதியில் வைக்கப்பட்ட பாத்திரம் ஒன்றில் ஈரெழுத்துப் பொறித்த முத்திரை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முத்திரையின் கீழ்ப்பகுதியில் பிராமி எழுத்தில் ‘கோவேத’ என்ற பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அதில் முதலெழுத்தாக வரும் ‘கோ’ என்ற சொல்லுக்கு அரசன், வேந்தன் என்ற பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இம் முத்திரைச் சாசனம் இங்கு தமிழ்ச் சிற்றரசு இருந்ததற்கான முக்கிய சான்றாக அமைகிறதெனப் பேராசிரியர் இந்திரபாலா குறிப்பிடுகிறார். ஆகவே நம்பகத் தன்மையுடைய தொல்லியல் ஆதாரங்களை வைத்து நோக்கும்போது தென்னிலங்கையைப் போல் சமகாலத்தில் வடஇலங்கையிலும் அரசுகள் தோன்றியிருந்ததெனக் கூறலாம். அதில் கந்தரோடை முக்கிய தலைமை அரசாக இருந்திருக்கலாம் என்பதையே அங்கு பரவலாகத் காணப்படும் தொல்லியற் சான்றுகள் உறுதிசெய்கின்றன. இதற்குச் சார்பாக, அநுராதபுரத்தை முன்னிலைப்படுத்திக் கூறும் பாளி இலக்கியங்களிலும் சில சான்றுகள் காணப்படுகின்றன.

பண்டுதொட்டு இலங்கை வரலாற்று மூலங்களில் தனித்து அடையாளப்படுத்தப்பட்ட பிராந்தியங்களில் ஒன்றாக வட இலங்கை காணப்படுகிறது. மஹா வம்ஸத்தில் நாகதீப (ம்) என அழைக்கப்பட்ட இப்பிராந்தியம், இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் குறிப்பில் 'நாகடிப' எனவும், வல்லிபுரத்தில் கிடைத்த கி.பி. 3 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பொற் சாசனத்தில் 'நகதிவ' எனவும் குறிப்பிடப்படுகிறது. தமிழில் இது நாக நாடு என அழைக்கப்பட்டதற்கு தமிழகத்தில் தோன்றிய இருபெரும் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலையிலும், வேலூர்ப்பாளையப் பல்லவச் செப்பேட்டிலும் ஆதாரங்கள் காணப்படுகின்றன. அநுராதபுரத்திற்கு வடக்கே கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 1 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமிச் சாசனம் ஒன்று வட இலங்கையில் இருந்த நாக நகர் பற்றிக் கூறுகிறது. இது நாகர்கள் வாழ்ந்த நகரம் என்ற பொருளில் அமைந்துள்ளது. பிராகிருத மொழியில் 'நஹநஹர' (யேபயயெசய) என எழுதப்படும் இப்பெயர், இச்சாசனத்தில் தமிழில் 'ந(ா)கநகர' (யேமயயெமயச) என எழுதப்பட்டுள்ளமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. பேராசிரியர் இரகுபதி இந்த 'நாகநகர்' அக்காலத்தில் கந்தரோடையின் தலைநகராக இருந்திருக்கலாம் அல்லது கந்தரோடையைக் குறித்திருக்கலாம் எனக் கருதுகிறார்.

அநுராதபுர அரசை முதன்மைப்படுத்திக் கூறும் முதல் வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான மஹாவம்ஸம் கி.மு. 6 ஆம் நூற்றாண்டில் புத்தர் இலங்கை வந்தபோது இந் நாக தீபத்தில் இரு நாக மன்னர்களிடையே ஏற்பட்ட சிம்மாசனப் போராட்டத்தை தீர்த்து வைத்ததாகக் கூறுகிறது. மஹாவம்ஸம் கூறும் புத்தர் வருகை ஒரு ஐதிகமாக இருப்பினும், இந்நூல் எழுதப்பட்ட கி.பி 6 ஆம் நூற்றாண்டில், அநுராதபுரத்திற்கு வடக்கில் இருந்த நாகதீபத்தில் அரச மரபு தோன்றி வளர்ந்ததை இது உறுதிப்படுத்துவதாக எடுத்துக்கொள்ளலாம். மிகிந்தலையில் கண்டுபிடிக்கப்பட்ட கி.மு. 2 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பிராமிச் சாசனம் ஒன்று 'தீபராஜா' என்ற பெயர் கொண்ட மன்னன் ஒருவனைப் பற்றிக் கூறுகிறது. இவன் நாகதீபத்தில் ஆட்சி செய்த மன்னனாக இருக்கவேண்டும் என பேராசிரியர் பரணவிதானா குறிப்பிடுகிறார். சமகால வரலாறு கூறும் 'ஸம்மோஹ விநோதனீ' என்ற பாளி நூல் நாகதீபத்து ஆட்சியாளன் 'தீபராஜ' என்ற விருதைப் பெற்றிருந்தான் எனக் கூறுகிறது. பேராசிரியர் இந்திரபாலா 'தீபராஜ' என்ற பெயரே பின்னர் தமிழில் 'தீபத்தரையன்' என மாறியதாகக் குறிப்பிடுகிறார். இந்த ஆதாரங்கள் அனைத்தும் நாகதீபம் எனப்பட்ட வடஇலங்கையில், கந்தரோடையை மையப்படுத்திய பலமான சிற்றரசு இருந்திருக்கின்றது என்பதினைக் கோடிட்டுக் காட்டுவதாக உள்ளது.



கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்ட அம்மிக்கல்

இந்த இடத்தில் கருத்தில் கொள்ள வேண்டிய முக்கிய அம்சம், ஏழாம் நூற்றாண்டுக்கு முன்னர் அநுராதபுரத்திற்கு தெற்கே மிகத் தொலைவிலமைந்த தென்னிலங்கையுடனும், அங்கு ஆட்சியிலிருந்த சிற்றரசுகளுடனும், அநுராதபுர அரசிற்கு இருந்த அரசியல் உறவுகளை விரிவாகக் கூறும் பாளி இலக்கியங்கள், அநுராதபுரத்திற்கு வடக்கே மிகக் கிட்டிய தொலைவில் இருந்த நாகதீபத்துடனான அரசியல் உறவு பற்றி, குறைந்த அளவு தானும் கூறவில்லை. இந்த வேறுபாட்டை நோக்கும் போது இக்காலத்தில் வட இலங்கை அநுராதபுர நாகரிக வட்டத்திற்குள் உட்பட்டிருக்கவில்லை என எண்ணத் தூண்டுகிறது. ஆனால் ஆறாம் நூற்றாண்டின் பின்னர் இந் நிலையில் மாற்றம் ஏற்படுவதைக் காணலாம். இதற்கு தமிழகத்தில் தோன்றிய பக்தி இயக்கத்தின் செல்வாக்கு ஒரு காரணம் எனக் கருதலாம். பேராசிரியர் கே.எம்.டீ. சில்வா, பக்தி இயக்கத்தின் செல்வாக்கே இலங்கையில் இந்து, பௌத்தம் என்ற சமய வேறுபாடு தோன்றி தமிழரும், சிங்களவரும் தமது இனத் தனித்துவத்தைப் பேணிப் பாதுகாப்பதில் முனைப்பு பெறுவதற்கும்,



ஆனைக்கோட்டை முத்திரை

அதன் விளைவால் தமிழர் வாழ்ந்த பிராந்தியங்கள் தென்னிந்தியப் படையெடுப்பாளருக்கு ஆதரவு வழங்கும் தளமாக மாறுவதற்கும் காரணமாக அமைந்தது என கூறுகிறார். இந்த மாற்றங்கள் முதலில் ஏற்பட்டதன் தொடக்க வாயிலாக நாகதீபம் காணப்பட்டதால் இங்கிருந்த ஆட்சி முறையிலும் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் எனக்கருத இடமுண்டு. ஏனெனில் இக் காலத்திலிருந்தே வடஇலங்கைக்கும் அநுராதபுர அரசிற்கும் இடையிலான அரசியல் உறவுகள் பற்றிய தகவல்கள் பாளி இலக்கியங்களில் காணப்படுகின்றன. அந்த உறவுகூட அநுராதபுர அரசின் மேலாதிக்கம் இங்கிருந்ததைக் கூறாது, அநுராதபுர அரசிற்கெதிராக வடஇலங்கையில் இருந்து ஏற்பட்ட படையெடுப்புகள், கிளர்ச்சிகள் பற்றியதாகவே உள்ளன. இது தொடர்பாக பேராசிரியர் இந்திரபாலா கூறும் கருத்துகளை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுவது பொருத்தமாகும்.

"உத்தரதேஸத்தைப் (வட இலங்கை அல்லது நாகதீபம்) பற்றிய குறிப்புகளை ஆய்வு செய்தால் அப் பிரதேசம் ஏனைய பிரதேசங்களைவிட வேறுபட்டதாக இருந்தது என்பதை அறியலாம். அநுராதபுரத்து மன்னர்கள் கட்டுப்பாட்டுக்குள் அடங்காத ஒரு பிரதேசமாக அதனைக் காணலாம். அநுராதபுர ஆட்சியை எதிர்த்தோர் அங்கு ஆதரவு பெற்றதையும் காணலாம். முற்பட்ட நூற்றாண்டுகளைப் போல் அல்லாது, ஆறாம் நூற்றாண்டின் பின், தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகள் வடபகுதியில் வந்து இறங்குவதையும் அவதானிக்க முடிகிறது. அப்படி வந்த படைகள் வடக்கில் தங்கள் அதிகாரத்தை உறுதிப்படுத்திய பின், அநுராதபுரத்தை நோக்கி முன்னேறின. இவற்றை நோக்குமிடத்து அநுராதபுரத்து ஆட்சியாளருக்குச் சாதகமான சூழ்நிலை வடபகுதியில் நிலவவில்லை என்பது தெளிவு."

இந்நிலை அநுராதபுர அரசின் வீழ்ச்சியைத் தொடர்ந்து நாக தீபத்தில் மேலும் தீவிரமடைந்ததைக் காணலாம். சோழர் கி.பி. 993 இல் அநுராதபுர அரசைக் கைப்பற்றி பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டு 77 ஆண்டுகள் நேரடி ஆட்சி நடத்தியதன் மூலம், இலங்கைப் பண்பாட்டு வரலாற்றில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அவர்களின் நேரடி ஆட்சியே இலங்கைத் தமிழர் வரலாறு தனிப்போக்குடன் வளர்வதற்கு முக்கிய காரணம் எனப் பேராசிரியர் பத்மநாதன் கூறுகிறார். முதலாம் இராஜராஜ சோழன் 993 இல் அநுராதபுர அரசைக் கைப்பற்றி பொலநறுவையைத் தலைநகராக மாற்றிய நிகழ்ச்சியே இலங்கையில் சோழர் ஆட்சியின் தொடக்கமாகக் கூறப்படுகிறது. ஆனால் தமிழகத்தில் சோழர் எழுச்சி பெற்ற காலத்தில் இருந்து அவர்கள் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்புகளையும் அவற்றின் விளைவுகளையும் நோக்கினால், சோழர் அநுராதபுர அரசை வெற்றி கொள்வதற்கு முன்னரே வடஇலங்கையில் அவர்களின் ஆதிக்கம் ஏற்பட்டதெனக் கூறலாம். இது பற்றிப் பேராசிரியர் இந்திரபாலா பின்வருமாறு கூறுகிறார்:

"சோழப் படையெடுப்புக்களின் (முதலாம், இரண்டாம் பராந்தகச் சோழன்) விளைவாக வடபகுதி, வடகிழக்குப் பகுதி ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு பிரதேசம் சோழர் ஆட்சிக்கு உட்பட்டது என்பதை ஏற்றுக்கொள்ள இடமுண்டு. ஏற்கனவே பல்லவர் தமிழ் நாட்டில் ஆதிக்கம் பெற்றிருந்த போது, இப் பிரதேசத்தில் பல்லவர் அதிகாரம் பரவியிருக்க கூடும் எனக் கூறப்பட்டது. இத்தகைய சூழ்நிலையில், சோழர் படைகள் வட பகுதியில் வந்திறங்குவதைக் காணலாம். பராந்தகச் சோழன் காலத்தில் இப்பிரதேசத்தில் சோழர் ஓரளவு அதிகாரம் பெற்றிருப்பர் என்றே தோன்றுகிறது. முதலாம் பராந்தகச் சோழன் காலத்திலேயே சோழர் பொலநறுவையில் தங்கள் நிர்வாகத்தை நிறுவியிருந்தார்களா என்று தெரியவில்லை. அவர்களின் அதிகார மையம் பொலநறுவைக்கு வடக்கே அல்லது கிழக்கே பதவியா அல்லது கந்தளாய் போன்ற ஓர் இடத்தில் இருந்து பின்னர் பொலநறுவைக்கு மாற்றப்பட்டிருத்தல் கூடும்.

இச் சோழரின் வருகையைத் தொடர்ந்தே உக்கிரசிங்கன் - மாருதப்புரவல்லியின் ஆட்சி தலைநகர் கதிரமலையில் இருந்து சிங்கை நகருக்கு இடமாறியதாக யாழ்ப்பாண அரசு தொடர்பாகத் தோன்றிய தமிழ் இலக்கியங்கள் சூசகமாகத் தெரிவிக்கின்றன. இவ்விலக்கியங்கள் பிற்காலத்தில் எழுந்திருந்தாலும் அவை தோன்றிய காலத்தில் சோழர் வரலாறு தமிழகத்திலோ அல்லது இலங்கையிலோ வெளிச்சத்திற்கு வரவில்லை. அவற்றைக் கண்டறியும் நோக்கில் தொல்லியல், வரலாற்று ஆய்வுகளும் வளரவில்லை. அப்படியிருந்தும் 800 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றி மறைந்த சோழரின் வரலாற்றுடன் கதிரமலை அரசைத் தொடர்புபடுத்தி தமிழ் இலக்கியங்கள் கூறியிருப்பது, கதிரமலை அரசின் வரலாற்று நினைவுகளை இலங்கைத் தமிழர்கள் மறக்கவில்லை என்பதையே காட்டுகிறது. ஆகவே வரலாற்று அறிஞர்கள் கதிரமலையைக் கந்தரோடையென அடையாளப்படுத்துவது பொருத்தமாயின் அங்கு ஒரு அரச மரபு தோன்றி வளர்ந்திருக்கும் என்பதை வெளிச்சம் போட்டுக் காட்டுவதில், அங்கு கிடைக்கும் நம்பகத்தன்மை கொண்ட தொல்லியற் சின்னங்களுக்கு என்றும் முக்கிய இடமுண்டு.

நன்றி: யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியரான பரமு புஷ்பரட்ணம்

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.**

**விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு**

**437.345.4203**

# உண்மை மறைக்கப்பட்ட ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்! நீதி மறுக்கப்பட்ட நவாலித் தேவாலய படுகொலை!

– நவீனன்

06.10.2024

**[ சிறீலங்காவின் புதிய அரசு ஈஸ்டர் தாக்குதலை மீள விசாரிக்க உள்ளதாக தெரிவித்தாலும், நவாலி தேவாலயப் படுகொலை-களை விசாரிக்குமா என்பது சாத்தியமற்றதே.**




**சர்வதேச நீதி கோரி நிற்கும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களைப் போல சர்வதேச நீதி கோரலில் நவாலி தேவாலய படுகொலையும் இடம் பெற வேண்டும். இதன் மூலமே சர்வதேசம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வழி செய்ய வேண்டும்]**

ஈஸ்டர் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியை முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்ச, ரணில் விக்ரமசிங்க ஆகியோர் மூடி மறைத்துள்ளதாக கொழும்பு பேராயர் இல்லத்தில் அருட்தந்தை சிரில் காமினி குற்றம்சாட்டியுள்ளார்.

அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இந்த மிலேச்சத்தனமான தாக்குதலை செய்ததாக அறியப்படுகிறது. ஐந்து வருடங்களாக எதற்காக இந்த ஈஸ்டர் தாக்குதல் விவகாரத்தை இழுத்துக் கொண்டு போகின்றார்கள் என்பது தெரியவில்லை.

நாட்டில் கொலை கலாசாரத்தை ஆரம்பித்தது யார்? இந்தக் கொலைகளை சாதாரணமாக்கியது யார்? அரசியல் அதிகாரத்திற்கு வர நாட்டு மக்களின் உயிர்களை பலியொடுத்த தரப்பினர் யார் என்பதை நாட்டு மக்களும் புரிந்து கொள்வார்கள்.

இதன் பின்னால் எந்த அரசியல் சக்தி உள்ளது? எந்த எந்த அரசியல் அதிகாரிகள் இதன் பின்னணியில் உள்ளார்கள் என்பதை நாம் தேட வேண்டும் என அருட்தந்தை சிரில் காமினி குற்றம்சாட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சனல் 4 ஊடகத்தில் வெளியான ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தகவல்களை ஆராய்வதற்காக குழுவொன்றை நியமித்திருந்தார்.

இந்தக் குழுவின் அறிக்கையும் அவரிடம் கையளிக்கப்பட்டது. இதனையடுத்து இந்த அறிக்கை சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், தற்போது குறித்த அறிக்கை காணாமல் ஆக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக மிகவும் உறுதியான சாட்சிகள் மற்றும் தரவுகள் காணப்பட்டன. முன்னாள் ஜனாதிபதிகளான கோட்டாபய ராஜபக்சவோ, ரணில் விக்ரமசிங்கவோ இது தொடர்பாக ஆணைக்குழுக்களை அமைத்தாலும், அடுத்தக்கட்ட நகர்வுகளை அவர்கள் மேற்கொள்ளவில்லை என்றும் அருட்தந்தை சிரில் காமினி குற்றம் சாட்டியுள்ளார்.

ஏன் இப்படி செய்ய வேண்டும்? ஒன்று இவர்கள் இந்தத் தாக்குதலுடன் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். அல்லது, தாக்குதலின் பிரதான சூத்திரதாரிகள் இவர்களது நெருங்கிய தரப்பினராக இருக்க வேண்டும். அப்படியானால் மட்டும் தான் இந்த விடயங்களை இவர்கள் மூடிமறைத்திருக்க வேண்டும் என்றும் அவர் அருட்தந்தை சிரில் காமினி தெரிவித்துள்ளார்.

### ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்:

அப்பாவி உயிர்கள் பல காவுகொள்ளப்பட்ட அந்த நாட்களை தென்இலங்கையர்கள் வாழ்வில் ஆறாத வடுக்களாக மாற்றியது. இன்றுவரை அது மனங்களில் கணன்று கொண்டிருக்கிறது. இலங்கையில் கடந்த 2019 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இலங்கையை மட்டுமல்ல சர்வதேச நாடுகளையும் உலுக்கிப் போட்டது.

கோரமிக்க இந்த குண்டு தாக்குதலில் 250க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதுடன் இதில் சில வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் உள்ளடங்குகின்றனர். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் பிரித்தானியாவின் செனல் 4 ஊடகம் வெளியிட்ட ஆவணப்படத்தில் பல உண்மைத் தகவல்கள் வெளியாகி உள்ளன.







உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் இரகசியங்கள் உடைக்கபடுமா அல்லது முடிவில்லாது விசாரணைகள், ஆணைக்குழுக்கள் என்று காலம் கடந்து கொண்டிருக்கிருமா எனத் தெரியவில்லை.

### நவாலி தேவாலயத் படுகொலை:

உயிர்த்த ஞாயிறு தாக்குதலைப் போலவே 29 வருடங்கள் முன்பாக, நவாலி தேவாலயப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் வலி, உயிர்தப்பியவர்கள், பாதிக்கப்பட்ட குடம்பங்கள் மற்றும் நவாலி சமூகத்தின் மனதிலும் இதயங்களிலும் என்றும் எஞ்சிநிற்பதுடன் அந்தப் படுகொலை எப்போதும் நினைவிலிருக்கும்.

### பொது மக்கள் என்று தெரிந்தே தாக்குதல்:

1995ம் ஆண்டு ஜூலை 9 இல் யாழ்ப்பாணம் நவாலி தேவாலயம் (சென். பீற்றர்ஸ்) மீது இலங்கை விமானப் படையினரால் நிகழ்த்தப்பட்ட குண்டுத்தாக்குதலில் 100க்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர். 150 பேருக்கு மேல் காயமடைந்தனர். வலிகாமம் பகுதியில் இலங்கை அரசினரால் முன்னோக்கிப் பாய்தல் (லீப் ஃவோர்வேட்) இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட நாளில் இத்தாக்குதல் நடத்தப்பட்டது.





நவாலி தேவாலயத் தாக்குதல் யாழ்ப்பாணம் (சென் பீட்டர் தேவாலய) மீது இலங்கை அரசு விமான குண்டு தாக்குதல் நடத்தி இன்று 29 வருடங்கள் கடந்து இருக்கின்றது.

யாழ். நவாலி தேவாலயத்தில் இருப்பது பொது மக்கள் என்று தெரிந்தே சிறீலங்காவின் விமானப் படையினர், தேவாலயத்தின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் மட்டுமல்ல, சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் தெரிவித்தன.

இலங்கை விமானப் படையினரே குற்றவாளிகள் எனக் கூறப்படும் சூழலில், நவாலி தேவாலய தாக்குதலில் உயிர்தப்பியவர்களாலும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினராலும் மற்றும் வடக்கிலுள்ள தமிழ் அமைப்புகளாலும் நீதி கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப்போய் விட்டது.

நவாலி சென் பீட்டர் தேவாலயத்தின் மீது இலங்கை அரசு விமான குண்டு தாக்குதல் நடத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு 29 வருடங்கள் கடந்தும் நீதி கிடைக்கவில்லை. ஆயினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச ஆதரவுகள் பல கிடைத்தன.

ஆனால் வடக்கு - கிழக்கில் அத்தகைய ஆதரவைப் பெற்றவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது கேள்விக் குறியாகும்.

யாழ். நகரப் பகுதியில் இருந்து அராலி நோக்கி வந்து கொண்டிருந்த புக்காரா விமானம் தொடர்ச்சியாக 13 குண்டுகளை வீசியது. மாலை 5.45 மணியளவில் இடம்பெற்ற தாக்குதலில் தேவாலயம் பலத்த சேதமடைந்தது.

### தமிழ் இனப் படுகொலை:

நவாலி தேவாலய படுகொலை நினைவு நாளில் இது தொடர்பாக கருத்து தெரிவித்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், "1995ஆம் ஆண்டு ஜூலை 9ஆம் திகதி கால கட்டத்தில் சிறீலங்கா விமானப் படையினரால் குண்டு தாக்குதல் நடாத்தி 100க்கும் மேற்பட்ட உயிர்கள் கோரமாக கொல்லப்பட்டு பல வருடங்கள் கடந்து இருக்கின்றது.

சந்திரிகா அரசின் ஆட்சி காலத்தில் தமிழர் தாயகப் பகுதியில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையின் போது பொது மக்கள் ஆலயங்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சமடைந்து இருந்தார்கள். அப்போது இலங்கையினுடைய விமானப் படைக்கு சொந்தமான இரண்டு 'புக்காரா' விமானங்களால் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் சிறுவர்கள் பெரியவர்கள் பெண்கள் முதியோர்கள் என்று வேறுபாடு இல்லாமல் உடல் சிதறி பலியானார்கள் பலர் படுகாயம் அடைந்தார்கள்.




இது ஒரு அப்பட்டமான தமிழ் இனப் படுகொலையாகத் தான் நாங்கள் பார்க்கின்றோம். அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த எந்த அரசாங்கத்தாலும் நீதி வழங்கப்படவில்லை.

### நினைவுச்சின்னங்களும் – நினைவு கூரும் வழிபாடுகளும்:

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நினைவுச்சின்னங்கள், கட்டுவாபிட்டி (நீர்கொழும்பு) மற்றும் கொச்சிக்கடை (கொழும்பு) ஆகிய இடங்களில் ஓரிரு மாதங்களிலேயே நிறுவப்பட்டதுடன், உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் முதலாவது வருட பூர்த்தியை நினைவுகூருவதற்கான விரிவான பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அரசாங்கத்தின் வெளிப்படையான ஆதரவுடன் கொழும்பு மறைமாவட்ட பேராயரால் முதல் வருட நினைவு நிகழ்வுகள் தேசிய அளவில் நிகழ்த்தப்பட்டன. அத்துடன் தேசிய தொலைக்காட்சிகளில் நினைவு நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்பட்டன.

கொழும்பு பேராயரின் நீதிக்கான கோரிக்கைக்கு தேசிய ஊடகங்களில் முக்கிய இடம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் உயிர்தப்பியவர்களின் அதிர்ச்சியை மதிப்பதற்கும் ஏற்றுக் கொள்வதற்கும் துன்பத்திற்கு கண்ணியமளித்தல், நீதி மற்றும் இழப்பீடு என்பனவற்றுக்கும் இந்த நிகழ்வுகள் முக்கியமானதாகும்.

### வடக்கில் நினைவுகூர மறுப்பு:

ஆயினும் தமிழர் பகுதிகளில் இத்தகைய நினைவுகூரலுக்கு உரிமை மறுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் நவாலியில் பாதிக்கப்பட்டவர்களுக்காக அச்சமூகம் எளிமையான நினைவுச்சின்னம் ஒன்றை நிர்மாணித்துள்ளனர். வருடாந்தம் நினைவு நிகழ்வுகள் உள்ளூர் சமூகத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்படுகின்றன.

பல வருடங்கள் கடந்தும் கூட அந்த சோகத்தின் வலி, உயிர்தப்பியவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் நவாலி சமூகத்தின் மனதிலும் இதயங்களிலும் எஞ்சிநிற்பதுடன் அந்தப் படுகொலைக்கான நீதி இன்னமும் கிடைக்கவில்லை.

தற்போது ஆண்டு தோறும் ஜூலை 9ம் நாள் நவாலி புனித பீற்றர்ஸ் ஆலயத்திலும், நவாலி சின்னக்கதிர்காமம் முருகன் ஆலயத்திலும் நினைவுகூரும் வழிபாடுகள் நடாத்தப்பட்டு வருகின்றன.

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதியிலும், நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலயப்பகுதியிலும் படுகொலைச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### மூன்று ஆண்டாக திட்டமிட்ட ஈஸ்டர் தாக்குதல்:

275க்கும் அதிகமானவர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின்னணியில் ராஜபக்ச அரசுக்கு விசுவாசமாக செயற்பட்டவர்கள், இருந்ததாக 2024 செப்டெம்பர் 05 பிரித்தானியாவின் சனல் 4 வெளியிட்ட அதிர்ச்சியூட்டும் ஆவணப்படத்தில் கூறப்பட்டுள்ளதாக ‘தி டைம்ஸ்’ பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல வருடங்கள் ராஜபச்சக்களின் விசுவாசியாக இருக்கும் பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் உதவியாளராக இருக்கும், ஹன்சீர் அசாத் மௌலானா என்பவர் வழங்கிய சாட்சியங்களின் அடிப்படையில் இந்த ஆவணப்படம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் ‘தி டைம்ஸ்’ ஊடகம் தெரிவிக்கின்றது.

இலங்கையில் பாதுகாப்பற்ற நிலைமை உருவாக்கப்பட வேண்டும் என ராஜபக்சக்கள் விரும்புவதாகவும் அவ்வாறான ஒரு சூழ்நிலை இருந்தால் மட்டுமே கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியாக ஆட்சி பீடம் ஏற முடியும் எனவும் அவர்கள் கருதுகின்றனர் என சுரேஸ் சாலே தம்மிடம் கூறியதாக குறித்த நபர் தெரிவித்துள்ளார்.

இந்த குண்டு தாக்குதல் ஒன்றிரண்டு நாட்களில் திட்டமிடப்படவில்லை எனவும் மூன்று ஆண்டுகளாக திட்டமிடப்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ராஜபக்சக்களை மீண்டும் ஆட்சி பீடம் ஏற்றுவதற்காக நாட்டை ஸ்திரமற்றதாக்கும் முயற்சியாக இந்த குண்டு தாக்குதல்




அமைந்திருந்தது என தெரிவித்துள்ளார்.

### அப்பட்டமான மனித உரிமை மீறல்:

நவாலி தேவாலயம் அகோர சம்பவத்தில் இறந்தவர்களுடைய உறவுகள் இன்னும் அந்த துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் உறவுகளுக்கு நினைவேந்தல் செய்வதற்கும் கூட அப்போதைய ஆட்சியாளர்கள் தடுத்து வந்தார்கள்.

படுகொலை செய்யப்பட்ட நினைவுச் சின்னங்கள் இருக்கின்ற இடங்களில் எல்லாம் கடந்த ஆண்டும் இம்முறையும் புலனாய்வாளர்கள் நிறுத்தப்பட்டு நினைவேந்தலை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தடை விதித்து வந்தது.

இது அப்பட்டமான ஒரு மனித உரிமை மீறலாகும். ஏனெனில் ஒரு உரிமைக்காக போராடிய இனம், அந்த போராட்ட காலத்தில் நடைபெற்ற படு கொலைகளை நினைவுகூற அரச ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் மறுத்து வருகின்ற நிலையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்படி இந்த நாட்டில் நீதி கிடைக்கும் என்ற ஒரு கேள்வி எல்லோர் மத்தியிலும் எழுந்து இருக்கின்றது.

### சர்வதேச நீதி வேண்டும் :

ஆகவே இவற்றிற்கு எல்லாம் ஒரு சர்வதேச நீதி பொறி முறை வேண்டும் என்பதற்காகத் தான் தமிழினம் சர்வதேச நீதி கோரி நிற்கின்றது. ஆகவே இந்த சர்வதேச நீதி கோரலில் நவாலி படுகொலையும் இடம் பெற வேண்டும். அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும்.

இவ்வாறான இந்த படுகொலைகளுக்கு நீதி கிடைக்கின்ற போது தான் எதிர் காலத்தில் தமிழ் மக்களுக்கு ஒரு உறுதியான பாதுகாப்பும் அவர்களுடைய உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற நியாயமான சூழ்நிலைகள் உருவாக சாத்தியமாகலாம்.



17th Year Veeravanakkam

# 17 ஆம் ஆண்டு வீரவணக்கம்





லெப். கேணல் அலெக்ஸ்


மேஜர் செல்வம்


மேஜர் மிகுதன்


மேஜர் கலையரசன்


லெப். ஆட்சிவேல்


லெப். மாவைக்குமரன்

## தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன்

**02.11.2007 அன்று கிளிநொச்சி, தமிழீழத்தில் சிறீலங்கா வான்படையின் தாக்குதலில் வீரச்சாவடைந்த தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் பிரிகேடியர் சு.ப. தமிழ்ச்செல்வன் உட்பட ஏழு மாவீரர்களின் 17ஆம் ஆண்டு வீரவணக்க நினைவு நாள்**

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

**The thirst of the Tamils is the Homeland of Tamileelam**

சங்கத்தமிழ்




லெப். கேணல் ராகவன்: இடர்களுக்குள் நிமிர்ந்து நின்று வெற்றிகளை பெற்றுத்தந்தவன்.

நியூட்டன் , நியூட்டன்... இராகவன் இராகவன் என்று நடை பேசியில் ஆவேசமாக அழைப்பது கேட்கிறது.

என்னதான் நடக்கிறது... என்று எவருக்குமே தெரியாத ஒரு அச்சம் நிகழ மறுமுனையில்...

ராகவண்ணை நியூட்டன் என்ற ஒருஅவசர குரல் பதில் சொல் கிறது. இந்த அவசர அழைப்பு இக்கட்டான சூழலை உணர்த் துகிறது.

டேய் நியூட்டன் அங்கால உடைச்சிட்டாங்கள், உன்னால முடியுமா, இல்லையா என்ற சொல் என கேட்கிறான் மாவீரன் லெப். கேணல் ராகவன்.

ராகவண்ணை இப்ப உடைச்சிருவன் என்று பதில் வர சில விநாடிகள் ஒரு சலனத்தையும் காணவில்லை.

அதே சம நேரத்தில் எதிர் எதிராக பிராதன, உபகட்டளை மையத்திலிருந்து தளபதி ஜெயம் அவர்களும், தளபதி சொர் ணம் அவர்களும் ராகவனை தொடர்பு கொண்டு நிலை மையை விசாரிக்ககிறார்கள்.

கலோ... 5.2 என்ன மாதிரி மச்சான் நிலைமை.

இங்கால உடைச்சிட்டாங்கள் கெதியா உடையுங்கோ என் றதும்...

இந்தா இப்ப உடைக்கிறன் என்று தெளிவான குரலில் ராகவன் சொல்லும் போதே எதிரியின் படைமுகாம் நோக்கி பக்கவாட்டாக நகர்ந்த அணி பாதை உடைத்துவிட்டதற்கு அறிகுறியாக பெரி தொரு வெடியோசையும் பல நூறு வேட்டோசையும் தொடர்ந்து கேட்கத்தொடங்கிவிட்டன. எமது பக்கம் மிக இடர் சூழ்ந்து விட்டது. நிச்சயமாக எதிரி உசாரடையப்போகிறான். என்பது புலனாகி விட்டது. அப்படி எதிரி உசாரகிவிட்டால் நிலைமை மிகமோசமாக இருக்கப்போகிறது என்பதை அனைவரும் உணர்ந்துவிட்டனர்.

உயிரை பணயம் வைத்து எதிரியை எதிர்கொள்ளும் விடய மல்ல இது. மாறாக உயிரின் மேலாக நின்று உயிரை அழுத்தி நாடிபார்கின்ற ரணகளம் இது என்பதை எல்லோரும் உணர் ந்து விட்டதனால் தடை உடைப்பிற்கான உத்வேகத்தை அதிகரித்துவிட்டனர். முற்றிலும் திசைமாறப்பார்த்தனால், விடுதலைப்புலிகளுக்கே உரிய சீரிய பண்புடன் தனது கட மையை செய்ய தீர்மானித்துவிட்டான். ஏற்கனவே நடைபேசி யில் உத்வேகம் பெற்றபரல் மேலும் கடும் சீற்றத்துடன் எழுகிறது. கலோ... 5.3... 5.2, ... 5.2 (எனகனல் பறக்கின்ற குரல்களில் கேட்கிறது)

5.2,5.3 சொல்லுங்கோ இந்தா இப்ப வாறன் நீ வேகப்படுத்து.

இப்படித்தான் ராகவனின் குரல் சீற்றத்துடன் ஒலித்தது. எதிர் பக்கம் எதிரிமுகாமிற்கள் புகுவதற்கு எம்மவர்கள் திட்ட மிட்டத்தாக்குதல் களை தொடர்ந்த நடத்திக்கொண்டிருந் தார்க்ள. அந்த நேரத்தில்தான் ராகவன், தடையணி எதிரியின் தடைகளை உடைக்க பிரயத்தனப் படும் அந்த இக்கட்டான பகுதிக்குள் வந்தான்.

தம்பி நீ, அதிலிருந்து அடி

தம்பி நீ ஓடி அங்கே போ.

டேய் அடிங்கடா எல்லோரும் சேட்டை விடுறாங்கள்.

இப்ப நாங்கள் யாரெண்டு காட்டுவம். தம்பி டேய் ஓடிப்போய் வேகமாக டோபிற்ரோவை வை என்று வேகமாக கட் டளைகளை ராகவன் தெளிவாக வழங்கியபடியே தடையுடைப் பணியோடு சண்டையிட்டாவாறே முன்னேற தொடங்கி விட்டான்.

தடையணி தனது செயற்பாட்டை வேகப்படுத்தி விட்டது. என் பதைவிட, தடையணியானது மிகுந்த ஓர்மத்துடன் எதிரியின் தடைகளை உடைதெறிந்திட காப்புச் சூடுகளை வழங்கத் தொடங்கிவிட்டது. அந்த வேகத்தின் உச்சம் எரிக்குத் மட்டுமே தெரிந்திருக்கவேண்டும்.

வலம் இடமாக இரண்டு 50 கனரக உயர்வலு துப்பாக்கிகளும், இரண்டு பொதுபயண்பாட்டு இடைவலு துப்பாக்கிகளும் உந்துகணைச் செலுத்திகளும், இயந்திரத் துப்பாக்கிகளும், மின்னிடும் வேகத்துடன் அணலை கக்கத் தொடங்கின.

தாக்குதலில் உச்சத்தால் எதிரி நிலைகுலைந்திருக்க வேண் டும். காரணம் அவனிடமிருந்து பல நிமிடங்கள் எதுவித சூடும் வரவில்லை என்பதை உணரமுடிந்தது.

காரிருள் விண்ணை படர்ந்திருக்க அந்த இருளை வர்ண ஜாலமிட்டு ரவைகளம் எறிகணை வெடிப்பொறிகளும் அதிசய மாக்கி காட்டிய அதேவேளை, காரிருளை கிழித்த பெரியதொரு தீப்பிழம்பு முடிவில் ஒட்டுசுட்டான் பிரதேச அமைதியை குலைந் துவிட்டது.

ஆம் வெடிமருந்து பொமி (ரோபிற்ரோ) வெடித்து தடையும் உடைக்கப்பட்டது.

ஒன்று.. இரண்டு... மூன்று... நான்கு என பல தொடர்ரான தடைகள் உடைக்கப்பட்டு அணிகள் உள்நுழைகின்றன. அதே நேரத்தில் வெடியோசையும் கடந்த ராகவனின் குரலோசை இடியாய் அதிர்கிறது.

ராகவனின் பாதுகாவலன் ஒருவன் அண்ண போகவேண்டாம். அண்ண போகவேண்டாம். என கத்தியவாறே இழுத்துப்பிடிக் கிறான். என்னை விடடா என்றவாறு அவனை தள்ளிவிட்டு முன்னே செல்கிறான்.

அவனது வருகையை கண்ட போராளிகள் ராகவண்ணை நீங்கள் வரவேண்டாம். நாங்கள் வேகமாக பிடித்து தாரம் என கத்தியதையும் கேளாது ராகவன் முன்னேறுகிறான்.

ராகவன் புலிப்படையின் தளபதியல்லவா. அப்படி இருக்கையில் உறங்கி விடுவானா என்ன? சிறுத்தை சீறத்தொடங்கியது.

அந்தச் சீற்றத்தின் உச்சம் உடன் தெரியத்தொடங்கியது. ஒட்டுச் சுட்டான் எதிரியின் குகைக்குள் புலிகள் சேனை புகுந்துவிட்டது. சண்டை ஆரம்பித்த உடனேயே வெற்றி எமதென நினைத்து சந்தோசப்பட முடியாது போய்விட்டது.

நெஞ்சில ரவவைக்கூட்டு அங்கியுடன், ஒரு கையில் இயந்திர துப்பாக்கியுடனும் தலையிலே உருமறைப்பு சாக்குத் தொப்பி யுடனும் மறுகையில் நடைபேசியில் விரைவான கட்டளையை வழங்கிக்கொண்டிருந்த ராகவனின் தலையில் எதிரியின் ரவை ஒன்று நுழைந்துவிட்டது.

சாக்குத்தொப்பியை துளைத்து மண்டை ஓட்டினூடாக ரவை வெளியேறிவிட்டது. ராகவனின் தலையிலிருந்த இரத்தம் பெருகத் தொடங்கியது.

சிறு முனகலுடன் ராகவன், தமிழ் மண்ணிலே சரிந்துவிட்டான், ஆனால் எமது வேகம் சரியவில்லை மாறாக பன்மடங்கு வேக முடன் உருப்பெற்று “ஓயாத அலைகள் O3... வேகம் பெறத் தொடங்கியது.

மாவீரன் லெப் .கேணல் ராகவன் சண்டடைக்கு வெளிக்கிடும் போதே சொன்னான் “நானென்றால் இந்தச்சண்டையில் திருப்பி வருவேனோ தெரியாது” ஆனால் சண்டை பெரியளவில் வெற்றிபெரும். என்றைக்கும் அண்ணையின்ர திட்டம் பிழைத் ததில்லை என்று சொல்லிவிட்டே சென்றான்.

“ஓயாத அலைகள் O3” என்ற வரலாற்றுக் காவியம் வெற்றியை நோக்கி ஆரம்பிக்கும் போதே அந்த வெற்றிச் சமரிற்காய் தன் உயிர் விலையை முதலாய் கொடுத்தவன் ராகவன்.

எனவேதான் ஓயாத அலைகள் மூன்றில் முதல் களப்பலி யானவன் என்ற பெருமையை தனதாக்கிக்கொண்டான்.

மேன்மையான தேசபக்தியும், விடுதலையின் பால் மிகுந்த நேசிப்பும் கடமையுணர்வும், தவைவரின் கலக்கமில்லா சுவாசமும் கொண்டவன் ராகவன்.

வீரம், வேகம், விவேகம், படைநகர்த்தும் தந்திரம் என்பன வற்றில் ராகவன் தனிசிறப்பு பெற்றவன் என்பதை அவனது சண்டைகள் பல நிரூபித்திருக்கிறது.

மாவீரன் லெப். கேணல் ராகவன் எல்லோராலும் நேசிக்கப்பட்ட போற்றப்பட்ட போர்த்தளபதி. அவனை எப்போது பார்த்தாலும் ஒரு இராணுவ மேல் அதிகாரிக்கே உயரிய தோற்றத்துடன் இருப்பான். போராளிகளிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவன். ஆனால், சண்டைக்களங்களில் முழுமையாக எதிரியை

பகைமைகொண்டு தாக்குவான். சண்டைகளங்களில் அவனது கட்டளைகள் உறுதியும், இறுதியுமிக்க தெளிவான கட்டளை யாகவே இருக்கும், தலைவரால் தரப்படுகின்ற எந்த இக்கட்டான கடமைகளையும் உடன் செய்து முடிப்பதில் மிகுந்த அக்கறை யுள்ளவன். அவனது சண்டைகள் மிகவும் வித்தியாச மானவை.



1990 ஆம் ஆண்டு எதிரிகளின் கொடுமைகளை கண்டு வெகுண்டெழுந்த ராகவன் போராட்டத்தில் தன்னையும் இணைத்துக்கொண்டான். ஆரம்பப்பயிற்சிகளை முடித்துக் கொண்டு வெளியேறிய அந்தப் போராளிக்கு உடனடியாகவே களம் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்தது. அவனது தாயக தாகம் நிறைவேறும் நாளும் தொடர்ந்தது.

1990 ஆம் ஆண்டு வவுனியா மாவட்டத்தில் நடந்த சிறு சிறு தாக்குதல்களுக்கெல்லாம் ராகவனும் தொடர்ந்து சென்ற தனது போர்திறமையை வளர்த்துக்கொண்டான். அவனது வேகமான கள அனுபவமே போராட்டத்தில் அவனை களத்தளபதி யாக்கியது.

சிங்களப் பேரினவாதிகள் வன்னிமண்ணை ஆக்கிரமிக்க பெரும் படைகொண்டு வந்த "மின்னல்" நடவடிக்கையில் திறம் பட சண்டை செய்தவன். அந்தக் களத்திலேயே தளபதி தீபன் அவர்களால் சிறந்த சண்டை வீரன் என போற்றப்பட்டவன். "மின்னல்" நடவடிக்கை ஊடாக சண்டையில் சாதனை செய்யத் தொடங்கியவன் இறுதிவரை "ஓயாத அலைகள் 03" தொடங் கும் நாள்வரை தனது திறமைகளையும், வீரத்தையும் சண்டை யில் காட்டி புலிகளின் தளபதிகளில் ஒருவனகாவும் மாறியிருந் தான்.

தமிழீழத்தின் சுதந்திர விடிவிற்காய் நடந்த பெரும்பாலான சண்டைகளில் ராகவன் பங்குபற்றி சாதனைகள் செய்திருக் கிறான். அவனது சண்டை வரிசையில் ஓயாத அலைகள் 01.02.03 மற்றும் ஆனையிறவு பரந்தன் சண்டைகள் புகழ் பூத்தச் சண்டையாகும். இவற்றை விட ஜெயசிக்குறு எதிர்ச் சமரில் பெரும்பாலான நாட்கள் எதிரிக்கு முகம்கொடுத்தப் பெருமையும் ராகவனையே சேரும்.

ஜெயசிக்குறு எதிர்ச்சமர் நடவடிக்கையில் ஒரு நாள் நாம் முகாமிட்டிருந்த புளியங்குளம் முகாமிற்குள் சிங்கள எதிரிப் பட்டாளங்கள் உட்புகுந்துவிட்டன. இராணுவ கவசவாகனங்கள் பல உள்ளே நூழைந்து தாக்குதலைத் தொடர்ந்தன. முகாமின் மையப்பகுதியான கண்டி வீதியையும், அதனோடு அமைந் திருந்த எமது கட்டளை நிலைகளையும் கைப்பற்றுவதே எதிரி யின் திட்டமாக இருந்தது என்பதை ராகவன் உணர்ந்து கொண்டவன்.

சண்டையின் கடும் உக்கிரகத்துக்குள்ளும் தனது துப்பாக்கி யுடன் நடைபேசியுடனும் பாதுகாப்பு அரணுக்குள்ளிருந்து வெளியே வந்துவிட்டான். கட்டளைகளை வேகமாக வழங்கிய வாறு தற்காப்பு நிலை எடுத்து தாக்கத்தொடங்கினான். அவ னோடு நின்ற போராளிகளை ஒழுங்குபடுத்தி எல்லா இடங் களிலும் ஆக்கிரமித்த எதிரிகளை தாக்கும் படி சொன்னான்.

ராகவன் கட்டளைகளை எதிரியின் தலைமையகம் ஒட்டுக் கேட்டிருக்க வேண்டும். காரணம் எதிரியின் நிலை தடு மாறியது. வெளிப்படையாக தெரிந்தது. புளியங்குள முகாமிற்கு பொறுப்பாக இருந்த ராகவன் தொடக்கம் அனைவரும் வெளி யில் வந்து சண்டையிட தொடங்கிவிட்டனர். மூர்க்கத்தனமான தாக்குதல்களின் உச்சத்தால் எதிரியின் கவசங்கள் எரியத் தொடங்கிட எதிரியும் பின்வாங்கி ஓடத்தொடங்கினான்.

அதிர்ச்சியூட்டும் நடவடிக்கைகள் மூலம் புளியங்குள முகாமை கடைசிவரை பாதுகாத்த பெருமை எங்கள் ராகவனை சாரும், தனது மன உறுதியின் வெளிப்பாட்டை சண்டைக் களங்களில் காட்டியவனாக புளியங்குளத்தை புரட்சிக்குளமாக மாற்றியவன் ராகவன்.

மாவீரன் ராகவனின் வீரத்தில் என்றுமே சிறிதேனும் கலங்கம் இருக்கவில்லை. சண்டையின் போது அவனது செயற்பாடே தனிரகம்தான், ராகவன் சண்டைக்கு வரப்போகிறான் என் றாலே எல்லோரது முகமும் பிரகாசிக்கும். அதேபோல் ராகவன் சண்டையில் புகுந்துவிட்டால் அந்தச் சண்டை எந்த இக்கட்டை யும் கடந்தவிடும் என்பது உண்மை.

ஜெயசிக்குறு காலப்பகுதியிலே நடந்த ஓமந்தை, தாண்டிக்குள் சண்டைகளில் ராகவனின் அதி உச்சமான சண்டையும், மிக வும் இக்கட்டான நிலையில் அவன் எடுக்கின்ற முடிவுகளோடு அவனத நிர்வாகத் திறமையும் வெளிப்பட்டது.

தாண்டிக்குளச் சண்டைக்கென அணிகளை தாயார்படுத்தி, நீண்டதூரம் சென்று குறுகிய நேரத்தில் சண்டைக் களத்துக்குள் புகுந்தவன். தனது வேகமான படை நகர்த்தும் ஆற்றலால் பல வெற்றிகளை பெற்றுத்தந்தவன்.




ஓமந்தை தாக்குதல் தொடங்கிவிட்டது. எதிரியின் தாக்குதல்கள் உக்கிரமடைந்த நிலையில் அணிகள் செய்ய வேண்டிய வேலைகளை குறித்த நேரத்திற்குள் செய்ய முடியாது போக ராகவன் களம் இறக்குகிறான்.

"டேய் என்னடா" என்று அடிக்கடி சொல்லும் அவனது மொழியி லேயே உரையாடுகிறான்.

"டேய் என்னடா செய்யிறியல்" என்ன செய்யனும் சொல், உவங் களுக்கு என்ன கொம்மா முளைச்சிருக்கு என்று சொல்லிய வாறே ராகவன் களம் இறங்கிவிட்டான்.

எதிரியின் பலத்த தாக்குதல், இடைவிடாத எறிகணை வீச்சு, கவசங்களின் தொடர் தாக்குதல் இத்தனைக்கும் மத்தியில் சுட்டுக்கொண்டு தனது சில போராளிகளுடன் முன்னேறத் தொடங்கினான்.

ஓரிடத்தில் இருந்த தாக்கி கொண்டிருக்கும் போது எதிரி எமது மற்றுமொரு அணியை தாக்க விரைந்ததை கண்டு கொண்டான்.

டேய் எல்லோரும் மாறி இந்தப்பக்கம் அடியுங்கோ என்று சொல்லியவாறே எதிரி யைப் பார்த்து சுடத்தொடங்கினான். எதிரி நிலை குலைந்துவிட்டான். முன்னேறி வந்தப் பக்கமாகவே ஓடத்தொடங்கினான். ஆனால், எதிரி நாமிருந்த இடத்தை நன்கு கண்டுவிட்டான். எனவே, நேரத்தையும், வரப்போகும் ஆபத்தையும் தனது அனு பவத்தினால் கணிப்பிட்டு எல்லோரை யும் எழும்பிச் ஓடச்சொல்லிவிட்டு தானும் நிலையை மாற்றினான். அவன் சொன்னது சில விநாடிகளில் நடந்தது. நாமிருந்த இடத்தை எதிரி சல்லடையாக்கினான். எதிரியின் கவசவாகனம் ஒன்று எமது இடத்தை குறி தவறாது சுட்டது. அங்கிருந்த மரங்கள் சிதைவுண்டு தூளாக்கிப் பறந்தன. அதே நேரத்தில் எதிரி எம்மை நோக்கி வருவதை அவதானித்தவன் மீண்டும் தாக்கும்படி கட்டளை இட்டான். அதன்படி தாக்கத் தொடங்கினோம். அந்தச்சண்டையில் எதிரிக்கு பலத்த இழப்பை ஏற்படுத்திய மன நிறைவோடு திரும்பினோம்.

ஆனால் ராகவன் மட்டும் மனக்கவலையுடன் திரும்பிவந்தான். செய்றன் வேலை இவனுக்கு என்று கர்ச்சித்தபடி வந்தான். ஓமந்தை தாக்குதல் முடிந்து சில நாட்களில் பின் எதிரியை தாக்குவதற்கு திட்டமிட்டு, பழையவாடிக்கும் - நெடுங்கேணி வீதிக்கும் இடையில் 07.08.1997 அன்று காலை ஒரு அதிரடித் தாக்குதலை ஆரம்பித்தான்.

காலை நேரம் ஜெயசிக்குறு எதிரி மிக உற்சாகமாக இருந்தான். ஓமந்தையில் திளைத்தவனை திகைக்கவைக்க தாக்குதலைத் தொடர்ந்த காலையிலேயே எதிரிக்கு பாரிய சேதத்தை ஏற்படுத் தினான்.

எதிரிக்கு எப்போதுமே இடியாய் இமயமாய் இருந்தவன் ராகவன். ஓமந்தையை விட்டு வெளியேறிய போது திரும்பவும் பிடிப்போம் என்று கூறியே வந்தான். அவனது மனம் எதை நினைத்ததோ அதே போல் அவன் உயிர்விலை கொடுத்து ஆரம்பித்து வைத்த "ஓயாத அலைகள் 03" இல் புலிகள் பெரும் வெற்றியைப் பெற்றனர். ராகவன் இருந்திருந்தால் இன்னும் பெரிய வெற்றிகளைப் பெற்றிருப்போம் என்பதை எதிரியே சொன்னான்.

"கலோ உங்கட 5.2 செத்ததா! நல்லம், நல்லம் அவனுக்குத் தான் பயம்" என்ற எதிரியின் உரையாடல் இராகவனின் தேசப்பற்று மிக்க வீரத்தை சுட்டிக்காட்டுகிறது.

நினைவுப்பகிர்வு: க.மிரேசு.
நன்றி - வெள்ளிநாதம் இதழ் (17 - 23.09.2004).

# ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஜெனிவா தொடர் கூட்டம்: தமிழ் மக்களின் ஏக்கம், அரசுக்கு கலக்கம்? – ஐங்கரன்

04.10.2024

05.10.2024

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான தொடர் கூட்டம் தற்போது ஜெனீவா நகரில் நடைபெற்று வரு கிறது. இந்த கூட்டத் தொடரில் இலங்கையின் மனித உரிமைகள் குறித்த ஆய்வும் கலந்துரையாடல்களும் இடம்பெற்று வருவதோடு இலங்கை தொடர்பான ஒரு பிர கடனம்மும்




நிறைவேற்றப்பட உள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



இலங்கையில் இடம்பெற்றுள்ள அரசு அதிபர் மாற்றம் இந்த பிரகடனம் மீது எந்த வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்புகளும் தற்போது அனைத்து தரப்பாலும் கூர்ந்து அவதானிக்கப்பட்டு வருகிறது.

இந்தப் பின்னணியில் குறிப்பிடத்தக்க அறிக்கையாக இலங் கையில் இடம் பெற்று வரும் மனித உரிமைகள் மீறல்கள் சம்பந்தப்பட்ட பூரண அறிக்கையின் முதல் எழுத்து வடிவ அறிக்கையொன்று (முற்கூட்டிய அறிக்கை - Advance Report) கடந்த ஆகஸ்ட் மாதம் 22 ஆம் தேதி வெளியிடப் பட்டுள்ளது.

இதன் முக்கிய நோக்கம் மனித உரிமை பேரவையில் அங்கம் வகிக்கும். உறுப்பு நாடுகளின் அங்கத்தவர்களின் கவனத்தை பெற்று தொடர் கூட்டத்தில் இலங்கை மனித உரிமைகள் மீதான ஒரு கருத்துருவாக்கத்தை உருவாக் குவதே. இதனடிப்படையில் இலங்கையில் இடம்பெற்ற வரும் மனித உரிமைகள் பற்றிய விபர கோர்வை ஒன்று இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளது.

## OHCHR இன் பரிந்துரைகள்:

இந்த முற்கூட்டிய அறிக்கை (Advance Report) முழுவது மாக முன்னைய உறுதிமொழிகள் இலங்கையினால் அமுல்படுத்தப்படாமையை ஆவணப்படுத்தி இருப்பதோடு மனித உரிமை மீறல்களுக்கு உறுதியான தண்டனை யின்மை மீது நடவடிக்கை எடுக்க இலங்கை வெளிப்படை யாக வேண்டுமென்றே மறுப்பதையும் வெளிப்படுத் துகிறது.

அறிக்கையில் பின்வரும் காரணங்கள் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.

★ பாதிக்கப்பட்டவர்களின் துன்பங்களை குறிப்பாக அங்கீ கரிக்கத் தவறியமை.

★ மனித உரிமை மீறல்களில் இராணுவம் மற்றும் பிற பாதுகாப்புப் படைகளின் பங்கை ஒப்புக்கொள்வது.

★ அத்துடன் கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் மேற் கொள்ளப்பட்ட மீறல்கள், சட்டத்தின் ஆட்சிக்கும், ஜன நாயகத்திற்கும், நல்லாட்சிக்கும் முக்கிய தடையாக உள் ளதை வெளிப்படுத்த வேண்டும்.

★ பாரதூரமான குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் களில் நம்பத்தகுந்த வகையில் சம்பந்தப்பட்ட அரச இயந் திரத்தின் பல கட்டமைப்புகள், மற்றும் பல அரச உறுப் பினர்களும், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமை மீறல்களை நிலைநிறுத்துவதில் அர்த்தமுள்ள முன்னேற் றத்தைத் தடுக்கும் வகையில் நடைமுறையில் உள்ளனர்.

★ 51வது மனித உரிமைகள் பேரவை அமர்வின் அறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, 2022 இல் பொருளாதார நெருக்கடிக்கு பங்களித்த மற்றும் மக்கள் போராட்டங் களைத் தூண்டியதுடன், ஊழல் மற்றும் அதிகார துஷ் பிரயோகத்தில் வேரூன்றிய தண்டனையின்மை வெளிப் படுகிறது.

மேற்குறிப்பிட்ட அனைத்தையும் மீறி, மொத்த மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கான இரண்டு பரிந்துரைகளின் பரிந்துரைகளை அறிக்கை தொடர்ந்து முன்வைத்துள்ளது. அதாவது ஒன்று இலங்கைக்கும் மற் றொன்று சர்வதேச சமூகத்திற்கும் ஆகும்.

★ பெரும்பான்மையான துஷ்பிரயோகங்களைச் செய்த அரசு - சர்வதேச சமூகத்திற்கு வழங்கப்பட்ட பரிந்துரை களையும் அவற்றின் முன்னேற்றத்தையும், நீதி வழங்க வேண்டும் என்ற இயல்புநிலை அனுமானத்தை இலங்கை தவறாக பயன்படுத்தியுள்ளது.

★ பல ஆண்டுகளாக வழங்கப்பட்ட தொடர்ச்சியான கோரிக் கைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்த ஜூன் 2024 இல் மேலதிக ஆலோசனைகளுக்காக OHCHR குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்தது, மேலும் 2023 பெப்ரவரியில் இலங்கை மீதான தனது நான்காவது சுழற்சியான உலகளாவிய கால மீளாய்வை (UPR) உட்படுத்தியது.

கடந்த 15 வருடங்கள் மேலாக OHCHR/HRC இலங்கை மனித உரிமைகள் ஈடுபாட்டில் உறுதியாக இருந்து வருகிறது. ஆயினும் மனித உரிமைகள் ஆணையத்தின் தீர்மானங்களின் ஆணைகள் அல்லது இலங்கையால் நடைமுறைப் படுத்தப்பட்ட எந்த ஒரு பகுதிக்கும் இது சம்பந்த மாக எந்த பயனும் இல்லை என்பது அறிந்ததே.

இந்த எழுத்துமூல அறிக்கையை தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை பேரவையின் தலைவர் மதிப்புக்கு உரிய Hon Volker Turk அவர்கள் தனது உரையை தொடர் கூட்டத்தின் முதல் நாள் செப்டெம்பர் ஒன் பதாம் திகதி அன்று சபையில் நிகழ்த்தினார். இதில் அவர் இலங்கை தனது பழைய மனித உரிமை மீறல் பின்னணியில் இருந்து மீண்டு புதிய பாதையொன்றில் பயணம் செய்ய முயல வேண்டும் என்று வலியுறுத்தி கூறினார்.

மனித உரிமைகள் சபையின் உயர்ஸ்தானிகரின் இந்த வேண்டுகோளை அடுத்து மனித உரிமைகள் பேரவை கூட்டத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள்லின் பரிசீலனைக்கு ஒரு பரிசாத்த பிரகடனம் ஒன்று செப்டெம்பர் பதினாறாம் திகதி அன்று வெளியிடப்பட்டுள்ளது.


★ சர்வதேச அமைப்புகள் மற்றும் பரஸ்பர சட்ட உதவி செயன்முறைகள் மற்றும் ஒத்துழைப்பின் ஊடாக, இலங்கை யில் உள்ள அனைத்துத் தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட சர்வதேச குற்றங்களில் ஈடுபட்டதாகக் கூறப்படும் குற்ற வாளிகளை விசாரிப்பதற்கும், விசாரணை செய்வதற்கும் ஒத்துழைக்கவும். உயிர் பிழைத்தவர்கள், குடும்பங்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளுடன் தொடர்பு கொள்ளுதல்.

★ இலங்கையில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கு ஏனைய சர்வதேச சட்ட விருப்பங்களைப் பயன்படுத்து வதைக் முதன்மையாக கவனித்தல்.

★ பரந்த அளவிலான பொறுப்புக்கூறல் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவும், சர்வதேச சட்டத்திற்கு இணங்கவும், மொத்த சர்வதேச மனித உரிமை மீறல்கள் அல்லது கடுமை யான மனிதாபிமான சட்ட மீறல்களைச் செய்ததாக நம்பத் தகுந்ததாகக் கூறப்படும் தனிநபர்களுக்கு எதிரான சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் போன்ற மேலும் இலக்கு விதிக்கப்பட்ட தடைகளை ஆராய்தல்.

★ இலங்கைப் பிரஜைகள் தொடர்பான புகலிட நடவடிக் கைகளை மறுபரிசீலனை செய்யவும், பழிவாங்கல்களை





எதிர்கொள்பவர்களைப் பாதுகாப்பதற்காகவும், சித்திரவதை அல்லது பிற கடுமையான மனித உரிமை மீறல்களின் உண்மையான ஆபத்தை முன்வைக்கும் வழக்குகளில் எந்தவிதமான மறுபரிசீலனையிலிருந்தும் தவிர்த்தல்.

★ OHCHRஐ தொடர்ந்து கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்கும் மற்றும் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் தொடர்புடைய குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் குறித்த அதன் பலப்படுத்தப்பட்ட பணிகளுக்கு ஆதர வளித்தல்.

★ மேலே குறிப்பிடப்பட்டுள்ள "மற்ற சர்வதேச சட்ட விருப் பங்களை" ஒன்றாகப் பயன்படுத்த HRC உறுப்பு நாடுகளை யும் மற்றவர்களையும் வலுவாக ஊக்குவித்தல்.

OHCHR அறிக்கை சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் மற்றும் சர்வதேச நீதிமன்றத்தின் முக்கியத்துவத்தை குறிப் பிடுகிறது. மொத்த மனித உரிமை மீறல்களுக்கான சர்வ தேச நீதி மன்றங்களுக்கான வழிகள் கிடைக்கவில்லை என் றால், கடந்த காலத்தில் சிறப்பு குற்றவியல் நீதிமன்றங்கள் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டன.

★ HRC உறுப்பு நாடு மற்றும் பிறரை OHCHR இன் இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்துடன் (OSLAP) இணைந்து செயல்படுமாறு பேரவை வேண்டுகிறது.

★ மேலும் OSLAP கடந்த சில வருடங்களாக ஆர்வத்துடன் சேகரித்து வரும் சான்றுகள் மற்றும் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி உண்மையான சட்ட வழக்குகள் மற்றும் பிற பொறுப்புக்கூறல்களை விரைவாகத் தொடர்வது

★ தமிழர்களுக்கு எதிராக இலங்கை அரசு செய்த போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைகள் உட்பட அந்தச் சட்டங்களின் மொத்த மீறல்களுக்கு தண்டனையின்மை, சட்டத்தை புறக்கணிக்க மற்றவர்களை ஊக்குவிக்கிறது மற்றும் அதன் பொருத்த மற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது.

★ சர்வதேச விதி அடிப்படையிலான ஒழுங்கை பராமரிக்க உடனடி நடவடிக்கையை இப்பேரவை அவசரமாக பரிந் துரைக்கிறது.

இந்த பரீட்சார்த்த பிரகடனம் உறுப்பு நாடுகளின் பரிசீல னைக்கு தற்போது உட்படுத்தப்பட்டு இதனுடைய இறுதி வடிவம் எதிர்வரும் ஒக்டோபர் மாத முதல் அல்லது இரண் டாவது வாரத்தில் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு விடும் வாய்ப்புகள் உள்ளதாகவே ஜெனிவாவில் இருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

பொறுத்திருந்து பார்ப்போம் !

இதேவேளை இந்த பிரகடனத்துக்கு மேலும் வலுச்சேர்க்கும் வண்ணம் புலம்பெயர்ந்த நாடுகளின் ஒன்பது தமிழ் அமைப் புகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை உறுப்பு நாடுகளுக்கு சமர்ப்பித்து உள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதே வேளை புலம் பெயர்ந்த அமைப்புக்களும் மற்றும் தாயகத் தில் செய்யப்படும் மனித உரிமை அமைப்புகள், மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க பிரதிநிதிகளும் தொடர்ச் சியாக சந்திப்புகள் மற்றும் தாயகசூழ்நிலை, மனித உரிமை மீறல்கள் பற்றிய விளக்க கூட்டங்கள் என ஜெனிவாவில் தற்போது களம் அமைத்து செய்யப்பட்டு வருகிறார்கள்.

இவ்வாறு. இடையறாது செய்யப்படும் தொடர் கோரிக்கை களும் அழுத்தங்களும் இந்த மனித உரிமை பேரவையின் பிரகடனத்தில் இடம்பெற்று தமிழ் மக்களுக்கு சாதகமாக அமையுமா? அல்லது வெறும் கனவாகவே இந்த பிரகடனம் வும் கடந்து விடுமா ? அதையும் பொருத்திருந்தே பார்க்க வேண்டும்.

பின்வரும் புலம்பெயர் ஒன்பது தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்து இக்கூட்டறிக்கையில் கோரியுள்ளன.

1. அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ். (ATC - AustralianTamil Congress)

2. வட கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர் களின் உறவினர்களுக்கான சங்கம். (ARED-Association for Relatives of the Enforced Disappearances, North & East Provinces, Sri Lanka)

3. வட அமெரிக்க தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு. (FeTNA - Federation of Tamil Sangams of North America)

4. இலங்கைத் தமிழ்ச் சங்கம், அமெரிக்கா. (Ilankai Tamil Sangam)

5.பிரான்ஸ் தமிழீழ அவை (Maison du Tamil Eelam, France)

6. இலங்கையில் சமத்துவம் மற்றும் நீதிக்கான மக்கள். (Pearl Action - People for Equality And Relief in Lanka)

7. ஐக்கிய தமிழ் அமெரிக்கர்கள். (PAC - Tamil Americans United)

8. ஐக்கிய அமெரிக்க தமிழ் செயல் குழு (USTAG - United States Tamil Action Group)

9. உலகத் தமிழர் அமைப்பு, அமெரிக்கா. (WTO - World Thamil Organization, USA)



# நீதி மறுக்கப்பட்ட லசந்த – நிமலராஜன் கொலைகள்: ஊடக அடக்குமுறைக்கு அநுரவின் அரசு நீதிவழங்குமா?

– நவீனன்

01.10.2024

இலங்கை தீவில் சுயாதீனமாக கருத்துக்களை வெளிக் கொண்டுவந்த சிங்கள, ஆங்கில, தமிழ் ஊடகவியலாளர் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள இடதுசாரி முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு ஊடகர்கள் படுகொலைகளுக்கு நீதியை வழங்க வேண்டும் என பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.



ஆயினும் தற்போது அநுரவின் புதிய அரசு நீதி வழங்குமா என்பது கேள்விக்குறியே?

### ஊடகங்களுக்கு எதிரான அடக்குமுறை:

சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை கடும் நெருக்கடிக்கு உள்ளாகியது. ஈழப்போர் உச்சமடைந்திருந்த 2009இல் லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையை அடுத்து இலங்கையின் ஊடகத்துறை சில மாதங்களாக மௌனமாகியது.

சிங்கள ஊடகவியலாளர்கள் அடக்கப்படுவதிலும் மேலாக, ஈழத்தில் தமிழ் சுயாதீன ஊடகங்களை அடக்குவதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதிலும், அரச படைகளின் கொடூர தாக்குதல்களும் நீண்ட வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாகப் பணியாற்ற முடியாத ஒரு சூழலுக்குள் தள்ளப்பட்டிருந்தார்கள்.








ஈழநாடு 1981இல் எரிப்புமுதல், பின்னர் இந்திய இராணுவத்தால் முரசொலி, ஈழமுரசு, நிதர்சனம் தகர்க்கப்பட்டதில் இருந்து தமிழ் ஊடகங்களின் மீதான அடக்குமுறை பல்வேறு காலங்களில் ஆதிக்க சக்திகளினால் பிரயோகிக்கப்பட்டது.

குறிப்பாக, ஊடகவியலாளர்களான நிமலராஜன், ஐயாத்துரை நடேசன், தர்மரட்னம் சிவராம், சுப்பிரமணியம் சுகிர்தராஜன், செல்வராஜா ரஜீவர்மன், லசந்த விக்கிரமதுங்க, பரணிரூப சிங்கம் தேவகுமார், என சுதந்திர ஊடகத்துறையை காக்கவென அயராது உழைத்த எத்தனையோ தமிழ் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

### சிங்கள ஊடகவியலாளர் கொலை:

சிறீலங்காவில் 1990ம் ஆண்டு இன்ரர் பிறஸ் சேர்வீஸ் நிறுவனத்தின் ஊடகவியலாளன் ரிச்சேட் டி சொய்சா கடத்தப்பட்டு கொல்லப்பட்டதோடு இந்த நீண்ட கறைபடைந்த வரலாறு தொடர்ந்தது எனலாம். 28 ஏப்ரல் 1990 ஆம் ஆண்டு நிச்சட் டி சொய்சாவின் உடல் கண்டெடுக்கப்படுகிறது. அவரது உடலை அடையாளங்கண்டு கொண்டவர் தராகி என்ற தர்மரட்ணம் சிவராம் தமிழ் நெற் இணையத்தினுடய ஆசிரியரான இருந்தவர். பின்னர் 28 ஏப்பரல் 2005 அன்று சிவராம் கடத்தப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைப்பட்டியல் பின்னர் நீண்டு அதிகரித்து வந்துள்ளது. இதன்பின் தமிழ் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளார்கள். உண்மைத்தகவல்களை வெளிக் கொண்டு வந்தார்கள் என்பதற்காக இவர்கள் கொலை செய்யப்பட்டார்கள்.

தமிழ் ஊடகத்துறையில் தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகளையும் ஒடுக்குமுறைகளையும் வெளிக்கொண்டு வந்த ஊடகவியலாளர்கள் பலர் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதுபோன்று சுயாதீனமாக கருத்துக்களை வெளிக்கொண்டுவந்த சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

### லசந்த விக்ரமதுங்க படுகொலை :

2015 தேர்தலுக்கு முன்னரும் அதற்குப் பின்னரும் லசந்த விக்ரமதுங்கவின் குடும்பத்தாருக்கு கொலையில் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று முன்னாள் அதிபர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்ததாக கூறப்படுகிறது.

லசந்த விக்கிரமதுங்க இலங்கை அரசுக்கெதிராகவும் பல அரசியல்வாதிகள் தொடர்பாகவும் ஆயுதக் குழுக்கள் தொடர்



பாகவும் மிக நீண்டகாலமாக மிகக் கடுமையான கட்டுரைகளை “சண்டே லீடர்’, மோர்னிங் லீடர் மற்றும் ஞாயிறு சிங்களப் பத்திரிகையான “இருதின” என்பன வெளியிட்டு வந்ததால் இவர் பல ஆண்டுகளாக்க தொடர்ந்து கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகி வந்திருந்தார்.

ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க படுகொலை செய்யப்பட்டு 15 வருடங்கள் ஆகின்றன. 2009ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் திகதி, சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர், சிரேஷ்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார். ஆயினும் இதுவரை முழுமையான தீர்ப்பு வரவில்லை.

### லசந்த மீதான கொலை முயற்சிகள் :


லசந்தவைக் கொலை செய்வதற்கு பல முயற்சிகள் மேற்கொள்

ளப்பட்டிருந்தன. 1995 பெப்ரவரியில் லசந்த அவரது வாகனத்திற்குள் வைத்துத் தாக்கப்பட்டார். 1998 ஜூனில் அவரது வீட்டின் மீது கிரனேட் வீசப்பட்டது. 2005 அக்டோபரிலும் 2007 நவம்பரிலும் சண்டே லீடர் அச்சகத்திற்கு தீவைத்து நிர்மூலஞ் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

2009, ஜனவரி 8 வியாழக்கிழமை காலை 09:30 மணியளவில் கொழும்பு கல்கிசையில் உள்ள 'லீடர் பப்ளிகேஷன்' அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போதே துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர். தலையிலும் மார்பிலும் குண்டுகள் பாய்ந்து படுகாயமடைந்து மிகவும் ஆபத்தான நிலையில் இவர் உடனடியாக களுபோவில மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைக்குட்பட்டாலும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.




## நிமலராஜன் படுகொலை:



கொடூரமான போரால் இலங்கையில் பதற்றமான சூழல் நிலவிக் கொண்டிருந்த வேளையில் பலத்த அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி வந்த நிமலராஜன் கடந்த 2000 ஆண்டு அக்டோபர் 19ஆம் தேதி கொல்லப்பட்டார்.

ஆபத்துகளுக்கு மத்தியில் தொடர்ந்து போர் குறித்தும், மனித உரிமை மீறல்கள் மற்றும் அரசியல் நிகழ்வுகள் குறித்தும் பிபிசி தமிழ் உட்பட பல ஊடகங்களுக்கு செய்திகளை வழங்கி கொண்டிருந்தவர் நிமலராஜன்.

நிமலராஜனின் ஊடகப்பணி என்பது கடுமையான பணியாக தான் இருந்தது.

ஈழப் போரின் மையப்புள்ளியாக இருந்த யாழ்ப்பாணத்திலிருந்து செய்திகளை வழங்கி கொண்டிருந்த மயில்வாகனம் நிமலராஜன் அவரது வீட்டில் வைத்து கொலை செய்யப்பட்டார். அவருக்கு ஆபத்துகளும் அதிகம் இருந்தன. பலதரப்பட்ட அரசியல் அச்சுறுத்தல்களும் இருந்தன.

போர்க்காலத்தில் இலங்கையில் நடைபெற்ற பொதுதேர்தலில் ஏற்பட்ட வன்முறைகள் குறித்து அவர் செய்தி வழங்கினார். இலங்கையில் அரசியல் கட்சியாக இருக்கும் ஓர் கட்சி மோசடி செய்ததாகவும், மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகவும்



குறிப்பிட்டிருந்தார்.

நிமலராஜன் கொல்லப்பட்ட அன்றும் பத்திரிகை செய்தி ஒன்றை எழுதி கொண்டிருந்தார். அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் வீட்டிற்குள் புகுந்து நிமலராஜனை துப்பாக்கியால் சுட்டனர். நிமலராஜன் கொலை தொடர்பாக சில கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டாலும் இன்று வரை இந்த கொலை குற்றம் யார் மீதும் நிரூபிக்கப்படவில்லை.

## நீதி மறுக்கப்பட்ட பத்திரிகையாளர்கள்:

அமெரிக்காவிலிருந்து பத்திரிகையாளர்களுக்காக செயல்படும் "கமிட்டி டு ப்ரொடக்ட் ஜர்னலிஸ்ட்ஸ்" என்ற அமைப்பு 45 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டதாக தெரிவிக்கிறது.

ஆனால் இந்த எண்ணிக்கை 100க்கும் அதிகம் என்பதே உண்மையாகும்.


வட கிழக்கு தமிழர் தாயக பகுதிகளில் மட்டும் 59க்கும் மேற்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் அல்லது காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

இந்த படுகொலை செய்யப்பட்ட அல்லது காணாமல் ஆக்கப்பட்ட ஊடக பணியாளர்கள் அல்லது ஊடகவியலாளர்கள் தொடர்பாக இதுவரை சொல்லிக் கொள்ளத் தக்க வகையில் இலங்கை சார்பாக எந்த விசாரணைகளும் முன்னெடுக்கப்படவில்லை என்பதே வரலாற்று உண்மையாகும்.


ஆயினும் தற்போது ஆட்சி பீடம் ஏறியுள்ள மார்க்சிச முலாம் பூசப்பட்ட அநுரவின் புதிய அரசு ஊடகர்கள் படுகொலைகளுக்கு நீதியை வழங்க வேண்டும் என பத்திரிகையாளர் சங்கம் கோரியுள்ளது.



# பண்டாரநாயக்கா ஜே.ஆர். (?)



பண்டாரநாயக்கா



ஜே.ஆர்.

## சிங்கள இனவாதிகளான இரண்டு தமிழர்கள்

ஜே.ஆருக்கு 90 வயதாகிற்று கடந்த மாதம் (17.09.1996). சிறீலங்காவின் முக்கிய சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் அனைத்து இதையொட்டி அவருடனான பேட்டிகளையும், கட்டுரைகளையும் அவரது வாழ்க்கை பற்றிய படங்களையும் வெளியிட்டன.

இனப்பிரச்சினை 1950-களிலிருந்து கூர்மையடைந்து ஆயுதப் போராட்டமாக வெடித்ததற்கு ஜே.ஆரின் சிங்கள பேரினவாத நிலைப்பாடும் ஒரு முக்கிய காரணி என்பது தெரிந்த விடயமே.

ஜே.ஆரை ஒரு பெரும் தேசிய அரசயில் வாதியாக பலரும் கண்டு எழுதுகின்ற இந்த நேரத்தில் நாம் அவரது இனவாதத்தின் உளவியலை சற்று மீட்டுப் பார்ப்பது இனப்பிரச்சினையின் இருள் படர்ந்த மூலை முடுக்குகள் சிலவற்றுள் ஒளி பாய்ச்சுவது போலாகும்.

1956-ல் 24 மணி நேரத்தில் தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வருவதாகக் கூறி சிங்களப் பேரினவாத அலையில் ஆட்சிக்கு வந்தார் பண்டாரநாயக்கா. களனித் தொகுதியில் தோற்றுப் போனார் ஜே.ஆர்., ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா 1957 யூலையில் தமிழரசுக் கட்சியுடன் மாநில சுயாட்சிக்கான ஒப்பந்தம் ஒன்றில் ஈடுபட்டார். ஆனால் பண்டா உருவாக்கிய சிங்கள இனவாத அலையே அதற்கெதிராக திரும்புகிறது. ஒப்பந்தத்திற்கு கடும் எதிர்ப்பு தோற்றுப் போயிருந்த ஜே.ஆரிடமிருந்தே கிளம்பிற்று. 2500 வருடங்களாக தனது மொழியையும், மத்தையும் மிகக் கரிசனையுடன் காத்துவரும் சிங்கள இனம், தன்னுடைய பிறப்புரிமையைக் காக்க இம்மியளவேனும் விட்டுக் கொடுக்காமல் போராட வேண்டிய காலம் வந்துவிட்டது எனக் கூக்குரலிட்ட ஜே.ஆர். சிங்கள இனத் துவேசத் தைக் கிளறிவிட்டு அந்தப் பிரபல பாதயாத்திரையிலும் (05.10.1957) ஈடுபட்டார்.

இந்தக் கால கட்டத்தில் எஸ்.பி. அமரசிங்கம் என்பவர் வெளியிட்டு வந்த டிரிபியூன் என்ற பத்திரிகையில் ஆய்வறிஞர் ஜேம்ஸ் ரி. ரத்னம், பண்டாரநாயக்கா ஒரு தமிழ் பரம்ரையில் தோன்றியவர் என் ஆதாரங்களுடன் நிறுவி ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தார்.

15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அல்லது 16ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்த நவகொமுவ தேவாலயத்தின் முதலாவது பூசாரியாக விளங்கிய நீலப்பெருமாள் என்பவரது நேரடி ஆண்சந்ததியிற் தேன்றியவரே பண்டாரநாயக்கா என்று அவரது குடும்ப ஆவணங்களையும், ஒல்லாந்தர் காலப் பதிவுகளையும் ஆதாரமாகக் கொண்டு எழுதியிருந்தார் ரத்னம்.

பண்டாரநாயக்கா குடும்பத்தின் பரம்பரைப்பெயர் கழுகாப்புகே என்பதாகும். இது நீலப்பெருமாள்கே அதாவது நீலப்பெருமாளின் வீட்டவர் எனப் பொருள்படும். இக் குடும்பப் பெயரையே பண்டாரநாயக்கா பரம்பரையினர் முற்காலத்தில் பயன்படுத்தி வந்தனர். (கே- சிங்களத்தில் வீடு எனப்படும். குடும்பப் பெயருடன் “கே”) யையும் சேர்த்து பாவிக்கும் வழக்கம் ஒன்று சிங்கள மக்கள் மத்தியில் வழங்கி வருகிறது.) தாம் நீலப் பெருமாளின் சந்ததி எனக் கூறிப் பெருமையுற்றனர்.

1760 இல் பழைய அரச பிரதானிகள் ஒல்லாந்தருக்கு எதிராகக் கலகத்தில் இறங்கி கண்டிக்கு ஓடிவிட்டபின் தமக்கு விசுவாசிகளாக இரந்த சில உள்ளூர் காரர்களை, ஒல்லாந்தர் மேற்குக் கரையோர நிர்வாகத்தில் அமர்த்தினர். இதில் நீலப்பெருமாளின் மகன் வழிவாரிசான தொன் பிரான்சிஸ்கோ டயஸ் விஜேதுங்க பண்டாரநாயக்கா (பிறப்பு 1720 அளவில்) என்பவர் ஹேவகம் கோறளைக்கு முதலியாராக நியமனமானார். இவரது மகன் டானியல் பண்டாரநாயக்கா. இவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள்.

டானியல் ஞானஸ்நானம் பெற்றது 16.02.1748இல். இவரது மகன் தொன்சொலமன் பண்டாரநாயக்கா, இவர் டச் கிழக்கிந்தியக் கம்பனியின் படையில் ஒரு லெப்டினன்ராக இருந்த ஜான் கிறிஸ்டோபல் ஸ்கார்ப் என்னும் ஒரு ஜேர்மன் நாட்டவரது மகளான சூசான்னா என்பவரது பேத்தியை மணமுடித்தார். இந்த ஜேர்மன் நாட்டவருடைய குடும்ப இலச்சினையில் காணப்பட்ட (Coat of Arms) “சேபர்” எனும் ஒருவகை வாளைத்தூக்கிப் பிடித்த ஒரு வலது கை, பண்டாரநாயக்கா பரம்பரையின் ஐரோப்பிய பாணியிலான குடும்ப இலச்சினையில் சேர்த்துக்கொள்ளப் பட்டது.

தொன் சொலமன் பண்டாரநாயக்கா பிரிட்டிஷாருக்கு மிகுந்த விசுவாசியாக நீண்ட காலம் வாழ்ந்தார். 1818ல் பிரிட்டிஷாருக்கு எதிராக கண்டியில் கிளர்ச்சி வெடித்த போது அதை அடக்க தமக்கு பெரும் உதவிசெய்தவர் எனப் பாராட்டி அப்போதைய பிரிட்டிஷ் ஆளுனர் பிரவுன்றிக், தொன் சொலமனுக்கு ஒரு பதக்கம் வழங்கினர். தொன் சொலமன் பண்டாரநாயக்காவின் மகன் தொன் கிறிஸ்டபல் ஹென்றிக்கல் டயஸ் பண்டாரநாயக்கா. இவர் மணமுடித்தது அன்னா புளொரென்டீனா பிலிப்ஸ் என்னும் பெண்ணை. ஒல்லாந்தர் காலத்தில் கிறிஸ்தவக் கல்விகற்று பாதிரியாராகுவதற்கென ஒல்லாந்து சென்று வந்த பிலிப்ஸ் என்பவரின் மிக விசுவாகமான கிறிஸ்துவக் குடும்பத்தின் வழித்தோன்றலே இப் பெண்மணி. ஏற்கெனவே திருமணவகையில் இவர் தொன்சொலமனுக்கு உறவுக்காரார்.

பயபக்தியான கிறிஸ்தவர்களாயிருந்த தொன் கிறிஸ்டபல் பண்டாரநாயக்காவிற்கும், அன்னா புளோரன்டீனாவிற்கும் பிறந்தவரே தொன் சொலமன் டயஸ் அபயவிக்ரம ஜயத்திலக்க செனிவரத்தின ரஜகுமாரண கடுகேரளு பண்டாரநாயக்கா. தான் ஒரு பெரும் ராஜ பரம்பரை எனக் காட்டவே இவ்வாறு ஒரு நீண்ட பெயரை அவர் சூட்டிக் கொண்டார் எனத் தெரிகிறது. இவரும் பயபக்தியான கிறிஸ்தவர். இவரது புத்திரர்தான் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா.

இவ் வரலாறுகளை மிக விரிவாக ஆராயப்புகுந்த ஜேம்ஸ் ரத்தினம் சுட்டிக்காட்ட முற்பட்டது என்னவெனில், தூய சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் பிதாமகராகவும், பேரினவாதத்தை தமிழருக்கு எதிராக தட்டி எழுப்பிக் கொண்டிருந்தவருமான பண்டாவில் ஒடுவது சுத்தத் தமிழரான நீலப்பெருமாளின் இரத்தமும் சுத்த ஜேர்மன் காரரான ஸ்கார்பின் இரத்தமும் தூய கிறிஸ்தவர்களான பிலிப்ஸ் குடும்ப இரத்தமுமே என்பதாகும். அத்துடன் பண்டா பரம்பரையின் அனைத்து மூலவர்களும், அவர்களுடன் திருமண உறவு கொண்ட அனைத்துக் குடம்பங்களும் சிங்கள மக்களின் தேசிய நலனுக்கெதிராக ஒல்லாந்தருக்கும் பின்னர் பிரிட்டிஷாருக்கும் மிகுந்த ராஜ விசுவாசிகளாகவும், எட்டப்பர்களாகவும் இருந்து வந்தவர்களே என்பதையும் ரத்னம் சுட்டிக்காட்டினார்.

இந் நிலையில் தானே சிங்கள பௌத்த தேசிய உணர்வின் தூய வழித்தோன்றல் என பண்டா எங்ஙனம் வாய் கூசாமல் பேச முடியும் என்பதே அவரது ஆய்வில் தொக்கி நின்ற கேள்வி.

ரத்தினத்தின் கட்டுரையை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டார் ஜே.ஆர்.

ஐ.தே. கவின் அதிகார பூர்வ ஏடான சியரட்டவில் ரத்தினத்தின் தகவல்களைக் கொண்டு பண்டாவின் மீது தாக்குதல் தொடுத்தார் அவர். பண்டா தமிழ்ப் பரம்பரை என்பதாலேயே சிங்கள இனத்தை விற்க முனைந்து விட்டார். தமிழருடன் மாநில சுயாட்சி பற்றிப் பேசி சிங்கள பௌத்த பாரம்பரியத்தயே குழி தோண்டிப் புதைக்க முற்படுகிறார் என்றெல்லாம் கடுமையாக எழுதிற்று சியரட்ட பண்டா தூய சிங்கள பௌத்தர் அல்ல, தமிழர். ஆனால் நானே தூய சிங்கள பௌத்த வம்சத்தவன்,

### சிங்கள இனவாதியான பண்டாராநாயக்கா

**தூய சிங்கள பௌத்த தேசிய வாதத்தின் பிதா மகனாகவும், பேரினவாதத்தை தமிழருக்கு எதிராக தட்டி எழுப்பிக் கொண்டிருந்தவருமான பண்டாவில் ஒடுவது சுத்தத் தமிழரான நீலப்பொருமானின் இரத்தமும் சுத்த ஜேர்மன் காரரான ஸ்கார்பின் இரத்தமும் தூய கிறிஸ்தவர்களான பிலிப்ஸ் குடும்ப இரத்தமுமே.**

எனவே எனது வழிநடத்தலின் கீழேயே தூய சிங்கள பௌத்தர் அணிதிரளவேண்டும் என்ற வகையில் அமைந்தன ஜே.ஆரின் பேச்சும், எழுத்தும்.

இதைக் கண்டு ஆத்திரமுற்ற ஜேம்ஸ் ரத்தினம் ஜே. ஆரின் பரம்பரையைப்பற்றி பதிலடியாக ஒரு ஆய்வை வரைந்தார். பண்டாவை தமிழ்ப் பரம்பரையினர் எனத் தாக்குவதற்கு ஜே. ஆருக்கு எந்த அருகதையுமில்லை எனவும், ஏனெனில், அவர் 2500 வருடப் பழமைவாய்ந்த தூய ஆரிய சிங்கள பௌத்த சந்ததியில் தோன்றியவரல்ல எனவும், 18ம் நூற்றாண்டில் தமிழகத்திலிருந்து இலங்கை வந்து வெல்கம எனும் கிராமத்தில் குடியேறிய ஒரு தமிழரின் மகனான தம்பி முதலியார் என்பவரின் கொள்ளுப் பேரனே ஜே.ஆர் எனவும் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவினர் ஜேம்ஸ் ரத்னம். (Tambi Mudaliyar's Legacy. Tribun 30.08.1957) ஜே.ஆரின் கொள்ளுப் பாட்டனாரான தம்பி முதலியாரின் தந்தை ஆச்சாரி வகுப்பைச் சேர்ந்த சுத்தத் தமிழர்.

தம்பி முதலியார் மிகச் சிறு குழந்தையாக இருக்கையிலேயே இந்தத் தமிழ் ஆச்சாரி இறந்து போய்விட்டார். இதனால் இளமையில் வறுமையில் வாடிய இப் பையன் 14 வயதில் கொழும்பில் ஒல்லாந்தப் படையதிகாரியாக இருந்த கேணல் டிரைபேக் என்பவரது வீட்டில் வேலைக்குச் சேர்ந்தான். பின்பு இப் பையன் ஒல்லாந்தரின் உள்ளூர்க் காலாட்படையில் ஒரு ஆராச்சியாக நியமிக்கப்பட்டான். ஒல்லாந்தருக்கு எதிராக பிரிட்டிஷார் கொழும்பை நோக்கிப் படையெடுத்த பொழுது தம்பி முதலியாரை ஒரு ஒற்றனாக பிரிட்டிஷ் பகுதிக்குள் அனுப்பினர் ஒல்லாந்தர். ஆனால் பிரிட்டிஷார் தம்பி முதலியாரைப் பிடித்து விட்டனர். முதலியாருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. பிரிட்டிஷாருக்கு ஒல்லாந்தரைப் பற்றி உளவு பார்த்துத் தருவதாக தம்பி முதலியார் மன்றாடியதன் பேரில் அவர் விடுவிக்கப்பட்டார். இதன் பின் பிரிட்டிஷாரின் சிறந்த ஒற்றனாக செயல்பட தம்பி முதலியார் சிங்கள பிரதானிகளின் பாணியில் தொன் ஏட்றியன் விஜசிங்க ஜெயவர்த்தனா என தனக்குப் பெயர் சூட்டிக் கொண்டார். ஒல்லாந்த மொழி பேசியவர் இப்போது ஆங்கிலம் கற்றுக் கொண்டார். ஒல்லாந்த திருச்சபையிலிருந்து ஆங்கிலிக்கன் சபைக்கு மதமும் மாறிக்கொண்டார்.

15.05.1950 அன்று டைம்ஸ் ஒப் சிலோன் பத்திரிகையில் வின்சன் டி சில்வா, தம்பி முதலியாரைப்பற்றி வருமாறு எழுதினார். “பீட்டிஷாருக்கு என்றும் இவரைப்போல் ஒரு விசுவாசி இருந்தது கிடையாது. அது போல சிங்களவருக்கு இது போன்ற ஒரு பச்சைத் துரோகியும் இருந்தது கிடையாது. பலிமத்தலாவ, எகலப்பொல போன்ற துரோகிகள் தவறான வழியில் மீண்டும் சிங்கள ஆட்சியை நிலைநாட்டுவதற்காகவே முயற்சித்தனர். ஆனால் ஏட்றியன் ஜெயவர்த்தனா (தம்பி முதலியார்) பிழைப்புக்காக துரோகத்தில் ஈடுபட்ட ஒரு நபராவார். தம்பி முதலியாரின் மகன் ஜேம்ஸ் அல்பிரட் ஜெயவர்த்தனா. இவரது மகன் யூறின் வில்பிரட் ஜயவர்த்தனா. இவர்கள் அனைவரும் கடும் கிறிஸ்தவர்கள். யூறின் வில்பிரட்டின் மகனே ஜே.ஆர். ஜெயவர்த்தனா, அரசியலில் இறங்கும் வரை இவரும் கிறிஸ்தவரே.

தம்பி முதலியாரின் வாழ்க்கை எல்லா இலங்கையருக்கும் ஒரு பாடம். குறிப்பாக தன்னையே இறுதியில் எரித்துவிடும் என அறியாமல் இப்போது நெருப்புடன் விளையாடப் போவதாகப் பயமுறுத்தும் முதலியாரின் கொள்ளுப் பேரனான ஜே.ஆருக்கு அது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்.

“...இலங்கையில் இருக்கும் மனிதர்களுக்குள் ஜெயவர்த்தனாவே தமிழருக்கு எதிராக ஜிகாத் (புனித யுத்தம்) நடத்துவேன் எனக் கூறுவது என்ன கேலிக் கூத்து” என எழுதினார் ஜேம்ஸ் ரத்னம்.

இலங்கை நாளை ஏதே காரணத்தால் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தால் இங்கு நபிகள் நாயகத்தின் புதல்வர்களுள் ஒருவராக ஜூன்னியஸ் றிச்சட் ஜயவர்த்தனா இருப்பது ஒன்றும் அதிசயிக்கத் தக்கதல்ல. அப்படியான அரசியல்வாதிக்கு “தான்” என்பதே எல்லாம். நாடு என்பது துச்சம். இப்படியானவர்கள் ஆபத்தானவர்கள். கடவுள்தான் எமது நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என தமது ஆய்வை முடிக்கிறார் ஜேம்ஸ் ரத்னம்.

“எங்கே நமது தமிழ் மூலம் தெரிந்துவிடுமோ என்ற மனச்சஞ்சலமும்”, “என்னில் தமிழ்க் கலப்பு உள்ளது” என்ற அக அரிப்பால் ஏற்படுகின்ற ஒரு வகை இரண்டக ஆழ் உளச்சிக்கலும் தென்னிலங்கை வாழ் அரசியல்வாதிகள், அறிஞர்கள், இனவாதிகள் எனப் பலரை கடும் தூய சிங்கள பௌத்த பேரினவாதிகளாக மாற்றினவோ என இவையும் இது போன்ற வேறும் சில வரலாறுகளும் எண்ணத் தூண்டுகின்றன.

உதாரணமாக இன்று மிக முரட்டுத் தனமான சிங்கள இனவாதத்தை உழிழ்ந்து கொண்டிருக்கும் கலாநிதி நளின் த சில்வாவைக் குறிப்பிடலாம். இவரது குடும்பத்தவர் தமிழகத்தின் தென் கிழக்கு, மற்றும் கிழக்குக் கரைப்பகுதியிலிருந்து 18ஆம் அல்லது 19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வந்து குடியேறிய பட்டணவர் வகுப்பைச் சேர்ந்த தமிழர். இதை அவரிடம் ஒரு முறை நான் கேட்ட போது மிகச் சங்கடப்பட்டார். ஆனால் சமாளித்துவிட்டார்.

இன்றைய நிலையில் நாம் இப்படியாக சிங்களப் பேரினவாதத்தின் சில உளவியல் உட்கிடைகளையும் ஆராய்வது பிரச்சினையைச் சற்று ஆழமாகப் புரிந்து கொள்ள உதவும்.

- டி.சிவராம்
நன்றி: சரிநிகர் ஒக்டோபர் 1996

# சிங்கள இனவாதியான ஜே.ஆர்.

**இலங்கை வந்து வெல்கம எனும் கிராமத்தில் குடியேறிய ஒரு தமிழரின் மகனான தம்பி முதலியார் என்பவரின் கொள்ளுப்பேரனே ஜே.ஆர் எனவும் தகுந்த ஆதாரங்களுடன் நிறுவினர் ஜேம்ஸ் ரத்னம். (Tambi Mudaliyar's Legacy. Tribun 30.08.1957) ஜே.ஆரின் கொள்ளுப் பாட்டனாரான தம்பி முதலியாரின் தந்தை ஆச்சாரரி வகுப்பைச் சேர்ந்த சுத்தத் தமிழர்.**

# புதியதொரு அரசியற் பண்பாட்டினால் புத்துயிர் பெறட்டும் தமிழர் தேசம்!

## யாழ்ப்பண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

04.10.2024




சிறீலங்காவின் அரச தலைவர் தேர்தல் முடிவுகள் வாக்களிப் பின் வெவ்வேறு பரிமானங்களையும், மக்களின் அரசியற் சிந்தனைகளையும் வெளிப்படுத்தியுள்ளது. தமிழ்த் தேசிய நோக்கு நிலையிலிருந்து முன்னெடுக்கப்பட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் மற்றும் தேர்தல் புறக்கணிப்பு என்பன கனிச மானளவு தமிழ் மக்களை அணி திரட்டுவதில் முன்நகர்ந் துள்ளமை தமிழ் அரசியற்பரப்பில் புதிய திருப்பம்.

கடும்போக்கு சிங்கள - பௌத்த பேரினவாதத்தை வெளிப்படுத்தி தெற்கில் வெல்லக் கூடியவராக கணிக்கப்படும் பேரினவாதத் தின் முகவர் வென்றுவிடக் கூடாதென்ற அச்ச நிலையானது பிறிதொரு பேரினவாதத்தின் முகவரிற்கு வாக்களிப்பதற்கு மக்களை வழிநடத்தியிருப்பதும் வெள்ளிடைமலை.

சிங்கள - பௌத்த பேரினவாதம் முழுவீச்சில் செயற்படுவதற் கான வாய்ப்புக்களைப் பொருளாதார நெருக்கடி தற்காலிகமாக மட்டுப்படுத்தியுள்ள நிலையில் சிங்கள மக்கள் மாற்றமொன் றினை எதிர்பார்த்து வாக்களித்துள்ளனர். எனினும் சிங்கள மக்களின் வாக்களிப்பு முறைக்கு நேர்மாறாக வாக்களித்ததன் மூலம் எம்மிடையே நிலவுவது பொருளாதார நெருக்கடி மட்டு மல்ல என்பதை தமிழ் மக்கள் தெளிவாக எடுத்துரைத்துள் ளனர்.

15 ஆண்டுகளாக தலைமைத்துவ வெற்றிடம் நிலவும் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகத்தில் தெற்கில் ஏற்பட்டுள்ள ஊழலற்ற ஆட்சி, இளையோர்களின் அரசியற் பங்கேற்பு உள்ளிட் டவைகளின் தாக்கம் உணரப்படாமலுமில்லை. தமிழ்த் தேசிய சித்தாந்தத்தை சமூக, பொருண்மிய, பண்பாட்டுத் தளங்களில் மக்களுக்கானதாகக் கொண்டு போய்ச் சேர்ப்பதில் எந்த முனைப்பையும் காட்டாத தமிழ்த் தேசிய முலாம் பூசிய அரசியல் வாதிகள், அரசியற் கட்சிகள் மீதான பெரும் அதிருப்தி வெகுவாக மக்கள் மத்தியில் உணரப்பட்டு வருகின்றது.

தமிழ்த் தேசியத்தை மக்களின் இருப்புக்கானதாக மாற்றியமைப் பதற்கு உளச்சுத்தியோடு முனைந்து விடாத தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் தமிழ்த் தேசியத்தை மக்களின் வாழ்வியலில் இருந்து அகற்றி, கட்சிகளின் தேர்தல் கால கோசங்களாக மாற்றி யமைத்துள்ளன. தேர்தலில் போட்டியிடுவதையே இலக்காகக் கொண்ட இவர்களின் இயலாமைகள், தமிழ் மக்களின் கூட்டு முகவராண்மையினை தகர்த்தெறிவதிலும் மக்களின் உயிர் வாழ்தலுக்கு அவசியமற்றதொன்றாக தமிழ்த் தேசியத்தைக் கட்டமைப்பதிலும் சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் புலனாய் வுத்துறை உள்ளிட்ட சிறீலங்கா அரச இயந்திரத்திற்கு பெரு மளவு துணைபுரிந்துள்ளன.

### புதியவற்றை உள்ளீர்த்து முற்போக்குக் கருத்தியலாய்ப் பரிணமிக்கட்டும் தமிழ்த் தேசியம் !

தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் ஏற்பட்ட அலையில் தமிழ் மக்களிடையே குறிப்பாக இளையோர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மாற்றம் குறித்த கரிசனை தமிழ்த் தேசிய அரசியற்பரப்பில் தவிர்த்துப் புறமொதுக்க முடியாதவொன் றாகும். தமிழ் மக்களின் அரசியல் விடுதலைக்கும், அரசியற் பண்பாட்டிற்கும் முற்றிலும் எதிரான அரசியலை முன்னெடுத்த தமிழ்த் தேசியப் போலிகளை இந்த மண்ணிலிருந்து துடைத் தெறிந்து புதிய தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டை தோற்று விப்பதே உண்மையான மாற்றமாகும். மாறாக ஊழல் எதிர்ப்பு, கவர்ச்சி அரசியலினால் தென்னிலங்கைத் தரப்புக்களை தமிழ் அரசியலிற்கு மாற்றாக முன்னிறுத்துவது அரசியல் தற் கொலைக்குச் சமமாகும்.

தமிழ் அரசியலானது முன்நகர முடியாமைக்கு அகவயமான முற்போக்கு மாற்றங்களை காலத்திற்குக் காலம் மேற்கொள்ளத் தவறியமையும், எம்மிடையே நிலவும் சில போதாமைகளுமே காரணம். அவ்வாறிருக்கையில் மக்கள் மத்தியில் நிலவும் சில முன்மொழிவுகளை தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளை நோக்கி முன்வைக்கின்றோம்.

1. சமூக, பொருண்மிய, அரசியல், கல்வி, பண்பாடு, சூழலியல் தளங்களிலிருந்து தமிழ்த் தேசியத்தில் முற்போக்கான, ஆழ மான, பரந்த பார்வை கொண்ட செயற்பாட்டாளர்களை, துறை சார் வல்லுனர்களை வேட்பாளர்களாக முன்நிறுத்த முன்வர வேண்டும்.

2. இதுவரை காலமும் இரண்டு தடவைகளுக்கு மேல் நாடாளு மன்ற பிரதிநிதித்துவத்தைப் பெற்றவர்கள் தேர்தல் அரசியலிற்கு ஓய்வு கொடுத்து மக்கள் அரசியற் தளத்தில் செயற்பட வேண்டும்.

3. 40 - 50 சதவீதத்திற்குக் குறையாமல் இளைவர்களிற்கு வாய்ப்பளிக்க வேண்டும்.

4. தமிழ்த் தேசியம் முற்போக்கானதாக நிலைமாற்றம் கொள் வதற்கு பெண்கள், சிறுவர்கள், மாற்றுப்பாலினத்தவர்கள், ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்கள் உள்ளிட்டோரை பிரதி நிதித்துவம் செய்யக் கூடியவர்களுக்கு வாய்ப்பளித்தல் கட்டாயக் கடமையாகும்.

5. வேட்பாளர் தெரிவின் போது உணர்ச்சி நிலையிலிருந்து மட்டும் அணுகுபவர்கள் தவிர்க்கப்பட்டு, தமிழ்த் தேசியத்தை உணர்வுடன் கூடிய அறிவுசார் தளத்தில் முன்னெடுக்க கூடிய வர்களிற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்.

6. தேசியப் பட்டியல் பிரதிநிதித்துவத்தில் தேர்தலில் தோற்றவர் களிற்கு வாய்ப்பளித்தல் மக்களாணைக்கு எதிரானதாகும். மேலும் கட்சி உறுப்பினர்கள் என்று பாராமல், கற்றறிந்த செயற்பாட்டாளர்களிற்கு வாய்ப்பளிப்பதற்கு முன்வர வேண்டும்.

தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகளை அகவயமான முற்போக்கு மாற்றங்களை நோக்கித் தூண்டுவதும், அவற்றைத் தொடர்ந்து கண்காணிப்பதிலுமே உண்மையான மாற்றம் தமிழ்த் தேசியப் பரப்பில் தங்கியுள்ளது. இளையோருக்கான பிரதிநிதித்துவம் வழுங்குவதில் தனியே வாக்குகளைத் திரட்டக் கூடியவர், கவர்ச் சிகர - பிரமுகர் அரசியல் என்பவற்றிற்கு முன்னுரிமை வழங் குதல் அல்லது கற்றறிந்தவர் என்று தமிழ்த் தேசிய விடு தலைக்கு அப்பால் சிந்திக்க கூடிய கொழும்பு மைய மேட்டுக்குடி அரசியற் பண்பாட்டிற்குப் பழக்கப்பட்டவர்களை முன்னிறுத் துதல் என்பவயும் பழைய குருடி கதவைத் திற என்பதற்குச் சமனானது.

### கிழக்கில் தமிழர் இருப்பையும் பிரதிநிதித்துவத்தையும் காத்திடுவோம் !

தமிழ்ப் பிரதிநிதித்துவம் ஏற்கனவே இல்லாமற் போய்விட்ட அம்பாறை மற்றும் இல்லாமற் போகக் கூடிய திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கூடிய கவனம் செலுத்த வேண்டிய நிலையில் உள்ளோம். தமிழ்த் தேசியக் கட்சிகள் கட்சி வேறு பாடுகள் கடந்து போட்டித் தவிர்ப்பு, விட்டுக் கொடுத்தல் அல்லது இணைந்து போட்டியிடக் கூடிய பொருத்தமான பொறிமுறை களின் ஊடாக அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தையாவது காத்திட முன்வர வேண்டுகின்றோம்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியில் தமிழ்த் தேசிய அரசியற் கட்சிகள் போட்டியிட முயற்சிப்பதென்பது தமிழ்த் தேசிய அரசியலை வலிந்து தூக்கிலிடுவதற்கு ஒப்பானது. இதுபோன்ற நகர்வுகள் தமிழ்த் தேசிய இறைமை அரசியலை அடையாள அரசியலிற் குள் சுருக்கும் முயற்சிகளாகும் என்பதைப் பதிவு செய்யக் கடமைப்பட்டுள்ளோம். இது தாயகத்தில் நிலவும் உரிமைசார் போராட்டங்கள் ஒவ்வொன்றினையும் சிங்கள - பௌத்த பேரின வாதத்தின் நிகழ்ச்சி நிரலிற்குட்பட்டு ஒரு நாடு - ஒரு தேசம் நீரோட்டத்தினுள் வலிந்து இழுத்துச் செல்லும் நுண் அரசிய லாகும்.

வடக்கு - கிழக்கிற்கு வெளியில் போட்டியிடத் தமிழ்த் தேசிய அர சியற் கட்சிகள் முயல்வதென்பது தாயக நில ஒருமைப்பாட்டிற்கு அப்பாலானது என்பதோடு, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திற்காகவேயன்றி வெறெதற்குமல்ல. இந்த முயற்சி தாயகத்திற்கு வெளியிலுள்ள ஈழத்தமிழர்களின் உரி மைசார் நட்பு சக்திகளை நாம் இழப்பதற்கு வழிகோலும் என் பதனையும் எச்சரிக்கையுடன் பதிவு செய்கின்றோம்.

### தமிழ்த் தேசியப் போலிகளை தமிழ் மக்கள் இனங்கண்டு புறமொதுக்க வேண்டும்!

தமிழ் மக்களை அணி திரட்டும் நோக்கில் குடிமக்கள் அமைப் புக்கள் (Civil Society) மற்றும் சில அரசியல் கட்சிகளால் கூட் டாக இணைந்து நிறுத்தப்பட்ட தமிழ்ப் பொது வேட்பாளர் தமிழ் மக்களைத் தேசமாகத் திரட்டுதல், கடந்த கால வரலாற்றுத் தவறுகளை மீள மேற்கொள்வதைத் தவிர்த்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டே நிறுத்தப்பட்டார்.

தமிழ்ப் பொது வேட்பாளரிற்கு அவரை முன்நிறுத்திய தமிழ்த் தேசிய பொதுக் கட்டமைப்பிற்கு அப்பால் பல குடிமக்கள் அமைப் புக்கள் மற்றும் அரசியற் கட்சிகள் தேசத்திரட்சிக்காக பணி யாற்றின என்பதோடு, மக்களும் தமிழர் தேசம் என்ற அழைப் படையிலே தங்கள் வாக்குகளை அளித்தார்கள் என்பதை யாரும் மறுக்கவியலாது.

பொது வேட்பாளரிற்காக வழங்கப்படும் கட்சிச் சின்னம் அடுத்து வரும் சில தேர்தல்களிற்கு பயன்படுத்தக் கூடாது எனும் குடி மக்கள் அமைப்புக்களின் அறம் சார் நிபந்தனைகளை அரசியற் கட்சிகள் எவையும் ஏற்றுக் கொள்ள மறுத்த நிலையில் சுயேட் சையாக வேட்பாளர் களமிறக்கப்பட்டார் என்பது அறியக்கூடிய தாகவுள்ளது.

எனினும் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவதற்கு உடன் பட்ட தரப்புக்களில் குடிமக்கள் சமூகங்களினதும் (Civil Society) ஏனைய கட்சிகளினதும் உடன்பாடுகள் ஏதுமின்றி தங்களிற் கிருந்த அறம்சார் கடப்பாட்டினை மீறி மக்களால் புறக்கணிக்கப் பட்ட அரசியற் கட்சிகளின் கூட்டணியொன்று தேர்தல் ஆணைக் குழுவில் பொது வேட்பாளரின் சின்னத்தினைக் கோரிப் பெற்றுள்ளது.

குடிமக்கள் சமூகங்களின் கூட்டிணைவிற்குள் (Civil Society) செயற்படும் சிலர் தங்கள் சிந்தனைகளோடு குடிமக்கள் சமூகத் தினரை நகர்த்திச் செல்ல முயற்சிப்பது வருந்தத்தக்கது. தொடர்ந் தும் மக்களை மடையர்கள் என்றெண்ணிச் செயலாற்றும் இது போன்ற அறம் பிழைத்தவர்களை மக்கள் நாங்கள் தோலுரித் தல் அவசியமாகும்.

தமிழ் மக்களை தேசமாகத் திரட்டுவதிலும் ஒரு சில அரசியற் கட்சிகளினதும் குடிமக்கள் அமைப்புக்களினதும் உழைப் பினால் மக்களிடம் கொண்டு போய்ச் சேர்க்கப்பட்ட சின்னத் தினைக் கைப்பற்றுவதன் ஊடாக மக்களின் இந்தத் தேசத்திரட் சியைக் கேலிக்குரியதொன்றாக்கியுள்ளதோடு, தொடர்ந்தும் மக்களையும் உழைத்த தரப்புக்களையும் ஏமாற்ற முயலும் மக் களால் புறக்கணிக்கப்பட்ட இந்த தமிழ்த் தேசியப் போலிகளை மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

இது போன்ற தமிழ்த் தேசியப் போலிகள் மக்களிடையே தமிழர் தேசத்திரட்சியின் மீது நம்பிக்கையீனத்தை ஏற்படுத்துவதோடு, கூட்டு வேட்கையினையும், கூட்டு மனோபலத்தையும் தகர்த் தெறிந்து தென்னிலங்கைக் கட்சிகளை நோக்கி மக்களை நகர்த் துவதற்கு தமிழ்த் தேசியத்தின் பெயரால் முயன்று கொண்டிருக் கின்றன.

சில தமிழ்த் தேசியப் போலிகள் அரச தலைவர் தேர்தலில் ஒரு பக்கம் தென்னிலங்கைக் கட்சிகளுடன் இருட்டு ஒப்பந்தமும், மறுபக்கம் தமிழ் மக்களின் வாக்குகளிற்காக பொது வேட்பாளர் தரப்புடன் இணைந்து கொண்டிருந்தமையினையும் யாரும் அறியாமலில்லை. அதற்காக உழைக்காத தரப்புக்கள் அரசியல் சூழ்ச்சிகளினால் இன்று பொது வேட்பாளரின் சின்னத்தைக் கைப்பற்றுவதனூடாக நாடாளுமன்றத் தேர்தலில் மக்க ளாணை பெற பகற்கனவு காணுகின்றன. பொது வேட்பாளரின் சின்னம் தற்பொழுது அவரை நிறுத்திய தரப்புக்களுடையதல்ல, வேறு கட்சிகளினுடையது என்பதனை அனைவரிடமும் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும்.

### புதிய அரசியற் பண்பாட்டினால் மேலெழட்டும் தமிழர் தேசம் !

தமிழ் மக்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசியல் மயப்படுத்தப் படாமையும் தேசமாய் அணி திரட்டப்படாமையுமே அனைத்துத் தளங்களிலும் பலவீனப்பட்ட மக்களாய்ப் போகக் காரணம். தமிழ் மக்களின் அரசியல் தனியே அடையாளத்திற்கானதன்று; அது இறைமைக்கானது. தமிழ்த் தேசியம் என்பது வாழ்க்கை முறை, அதனை தேர்தல்க் கால வெற்றுக் கோசமாக மாற்றி யமைத்தது சிங்கள - பௌத்த நிகழ்ச்சி நிரலிற்கு துணை போன தமிழ் அரசியற் கட்சிகளே!

நாங்கள் எமது தாயகத்தின் இயற்கை வளங்களைப் பாதுகாத்து சுற்றுச்சூழல் சமநிலையைப் பேணுதல் மற்றும் பொருண்மிய வளங்களை ஒன்று திரட்டி தற்சார்புப் பொருளாதாரத்தை முன் னெடுக்காமையும், ஆதிக்க சக்திகளையும் பகை முரண்களை யும் கையாள்வதில் உரிய தந்திரோபாயங்களை வகுக்காமை யுமே அவர்களிடமே சரணாகதியடைந்த தமிழ் அரசியலினால் இதுவரைகாலமும் விளைந்ததொன்று.

அகவயமாக முற்போக்கு அம்சங்களைக் கொண்ட புதிய மாறுதல்களிற்குத் தமிழ்த் தேசிய அரசியல் தயாராக வேண்டிய தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. தமிழ் மக்களின் கூட்டு முகவராண்மையைச் சிதைப்பதற்கு தமிழ்த் தேசிய போலிகள் களமிறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்கள் நாங்கள் அனைவரும் தமிழ்த் தேசிய அரசியற் பண்பாட்டினை அறிவுபூர்வமாக விழிப்புடன் அணுகுவதற்கு முன்வர வேண்டும் என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் சமூகமாக அனைவரையும் சமூகப் பொறுப்புடன் வேண்டி நிற்கின்றோம்.


e Wallet
Google Play
App Store
Reward Points
Gift Card
EVRP
EVERYDAY REWARD POINTS
JOIN, SHOP, & COLLECT EVR POINTS WHILE SHOPPING WITH OUR MERCHANTS & GIFT CARDS
EVERYDAY SHOPPING
MEMBER
MERCHANT
MERCHANT LIST
4 WAYS TO EARN
WHAT IS MYEVERYDAYSHOPPING?
REWARDING YOUR EVERYDAY
MyEverydayShopping is a one-stop-shopping-platform for your everyday essential needs. It is integrated with an efficacious platform to create a better economy with a profitable Points Program that benefits all of our shoppers and merchants.
Merchant Benefits
Website Template: Modern design for improved user experience.
Personalized Marketing Tools: Push notifications, personalized gift cards, and electronic flyers.
Convenient Payment Options: EV gift wallet for seamless transactions.
Comprehensive Analytics: Access full reporting and tracking online.
Customer Engagement: Loyalty programs and "Find Me" feature to attract and retain customers.
Financial Security: Build income for future sale or retirement.
One-time Registration Fee: $199 to unlock these benefits.
And more...
Member User Benefits
Point Accumulation: Earn 4% to 60% on purchases.
Diverse Product Range: Access everyday essentials and a wide variety of products and services.
Shopping Flexibility: Enjoy convenience with both local and online shopping options.
Gift Card Rewards: Benefit from gift cards and an EV gift wallet.
Simple Tracking: Easily monitor progress with our user-friendly tracking system.
Networking Opportunities: Build your own shopping network effortlessly.
Exclusive Privileges: Gain mining rights worth $60.
And more...
Register Now
40
80
20
160
10
320
WWW.MYEVERYDAYSHOPPING.COM

# பயம் வேண்டாம்!

– இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

அது மெதுவாகத் தான் நகர்ந்து வந்தது. அது வந்த பாதை காட்டுப்பாதை. மனிதர்கள் உள்ள கிராமம் வரை துணிந்து வருவதாகக் காட்டிக் கொண்டாலும் அது தயங்கித் தயங்கித் தான் வந்தது. அதற்கு அதன் கால்களில் போட்டிருந்த இரும்புத் தகடுகள்தான் காரணமா? அது முறைத்து முறைத்து பாதையின் இருபக்க காடுகளைப் பார்த்தது. மரங்களின் உச்சிகளை எட்டி உதைத்தது.

அதனைத் தெருப் புழுதி தான் முதலிற் கண்டது. கண்டதும் வாலைச் சுருட்டிக் கொண்டு காட்டு மரங்களின் உயரத்தைத் தாண்டித் துள்ளியது. மனமில்லாததுபோல் சோர்ந்து துவண்டு அதன் பின்னாலேயே அரைந்தது.

காட்டு மரக் கிளைகளில் இருந்த குருவிகள் அச்சங்கொண்டு ஒடுங்கியபடி எழுவானில் தெரிந்த சூரியனைச் சபித்தன.

“ஏய் சூரியனே! உலகத்துக்குப் பொதுவாக இருந்து என்ன பயன்?”

“இதுகளை ஏன் அரைய விடுகின்றாய்?” என்று சொல்ல நினைத்து மௌனம் சாதித்தன.

குரங்குகள் வசதியான மரக்கொப்புகளில் மறைந்தபடி வேவு பார்த்தன.

“ஐயைய்யோ ஆபத்து!” என்றது ஒரு பெருங்குரங்கு.

“என்ன!”

“காடு தொலைந்தது!”

“ஏன்?”

“கைத்தடியைத் தேடித்தான் இது வருகின்றது. இத்தனை இடங்களும் திரிந்தும் இன்னமும் சரியான கைத்தடி கிடைக்கவில்லையாம்!”

“அப்ப மனிதர்களை இரட்சிக்க வரேல்ல”



குரங்குள் குசுகுசுத்து குட்டிகளை அலேட்டாக்கின.

காட்டுப் பூக்கள் பொலிந்து நின்ற செடிகள் யௌவனம் துறந்தன. பூக்களின் நிறம் வெளிறி உருமாறிக்கொண்டன.

யௌவனம் துறக்கத் தவறிய செடிகளை ஏனைய செடிகள் கோபமாகப் பார்த்தன.

“எல்லோருக்கும் முடிவு ஒன்றுதானே! பிறகேன் யௌவனத்தைத் துறப்பான்?”

“அது உண்மைதான் ஆனால் எலும்புக் கூடாவது மனமுள்ளதாக மிஞ்சுமே!”



காடு தளர்ந்து வெட்டை ஒன்று வந்தது. வயல் வெளியாகப் பரவியது. ஆழமும் மனவிரிவும் கொண்ட பெருங்கவிஞனின் கவிவரிகள் போல நெற்கதிர்கள் துள்ளி விளையாடின.

வயலைப் பார்த்து அது நின்றது. மனிதர்கள் வசிக்கும் கிராமம் வரப் போகிறது என்ற ஆனந்தமா?

அறுவடைக்கு முன் வந்துவிட்டோம் என்ற பெருமிதமா? புரியவில்லை.

தண்ணீர் கசிந்து கொண்டிருந்த டச்சுக் காலத்து மதவடியில் நின்று நிதானித்தது. கூடவே வந்த புழுதி ஒரே ஓட்டமாக ஓடிவிட்டது.

தண்ணீரில் சுதந்திரமாக ஒற்றைக் காலில் நின்ற கொக்குகள் தங்கள் சுதந்திரத்தை தக்கவைத்துக் கொள்ள வாய்க்கால்களின் ஓரம் மருவிக்கொண்டன. தண்ணீர் குடிக்கப்போகிறதா? முகம் கழுவப் போகிறாதா? என மருளும் கண்களால் அவை பார்த்தன.

ஒன்றும் நடக்கவில்லை. அது மெதுவாக அந்தப் பாதையைத் தின்று பார்த்தது. பாதையின் இடது பக்கத்தை பின் வலது பக்கத்தை பிறகு நடுப்பக்கத்தை சப்பிக்கொண்டது.




ருசி பிடிபடவில்லையோ அதன் கொழுப்பேறிய நாவுக்கு பதமாக வரவில்லையோ அது பாதையைத் தின்பதை நிறுத்திக் கொண்டு நகரத்தொடங்கியது.

மதவினைத் தாண்ட மதவு பொரித்த அப்பளமாக நொருங்கிப் போனது. கொக்குகள் அதை வியப்போடு பார்த்தன.

“வானம்பாடி நிற்கிறதா பார்!”

ஒரு கொக்கு கேட்டது. மற்றது தண்ணீரைப் பார்த்தது.

“அட மடச் சகோதரமே! வானத்தைப் பார்! வானலைகளைப் பார்!”

மற்றது கழுத்தை மடக்கி முறித்துப்பார்த்தது.

"காற்று உதைத்து வீசி மதவினை உடைத்துவிட்டது என்று அவை வானலை ஊடாகச் சொல்லப் போகின்றன" நமட்டுச் சிரிப்போடு முதல் கொக்கு சொன்னது.

வயல் வெளிகளில் ஆங்காங்கே சில மூளையுள்ள மனிதர்கள் தெரிந்தார்கள். வயலைப்பார்த்துப் பெருமைப்பட்டுக்கொண்டு எப்போது கதிர்களை அறுவடை செய்யவேண்டும் என்பது தொடர்பாகவும் அவர்கள் கதைத்துக் கொண்டிருந்தனரே தவிர பாதை ஊடாக அது நகர்வதை அவர்கள் காணவில்லை.

வானில் நகர்ந்த சிறிய முகிற்கூட்டம் ஒன்று தயங்கியபடி பாதை யில் அது நகர்வதை மனிதர்களுக்குச் சொன்னது தான், என் றாலும் அதனை மனிதர்கள் கவனிக்கவில்லை.

புழுதி வேகமாகச் சுழன்றது. காட்டில் இருந்தவை என்ன மாதிரிப் புரிந்துகொண்டன. சா! என்ன மனிதர்கள் இவர்கள்? என்று சலித்தது புழுதி.

மனிதர்களைக் கண்ட அது மீண்டும் நகர்வை நிறுத்தி, மனிதர்களைப் பார்த்து பதுங்கியது.

மனிதர்கள் கையில் மண்வெட்டி, கத்தி எதுவுமே இல்லை.

அது கைகளைத்தட்டியது. பிறகு கைகளை அசைத்து, "போங்க, போங்க" என்றது. கரகரத்த சத்தம் காற்றில் கலந்தது.

காற்று அதனைப் பக்குவமாகக் காவிக்கொணடு மனிதர்களிடம் சென்றது. நலுங்காமல் குலுங்காமல் கொண்டு சென்றால் "அது" ஏதாவது நன்மை செய்யும் என்று!

மனிதர்கள் அப்போது தான் பாதையைப் பார்த்தார்கள்.

பாதையை மறைத்துக்கொண்டு அது உணவு எடுத்துக்கொண் டிருப்பதைக் கண்டார்கள்.

"ஐயய்யோ" என்றான் ஒருவன், "மோசம் போய்விட்டோம்!

மற்றவன் "போங்க, போங்க எண்டு தானே சொல்லுது போவம்"

"அப்பிடி இல்லை. போங்க போங்க எண்டால், வாங்க வாங்க எண்டுதான் கருத்து! வா போவம்"

"எனக்குப் பயமாயிருக்கு"

"எனக்குந்தான்"

"இப்படியே போறதா?"

"வேறை"

"பொறு" என்றான் ஒருவன்.

வேட்டி மடிப்புக்குள் இருந்து ஒன்றினை எடுத்தான். இது முக மூடி. கறுப்பும் வெள்ளையும் கலந்து நரை நிறங்கொண்ட அதனை எடுத்துப் போட்டான்.

"அடடா அற்புதமான மூளை!"

என மற்றவர்கள் சந்தோசப்பட்டார்கள்.

"எங்கள மடிக்குள் இருப்பது எங்களுக்கா ஞாபகம் வரவில்லை என்றபடி எல்லோரும் தங்கள் தங்கள் முகமூடிகளைப் போட்டுக் கொண்டார்கள்.

"அப்பாடா" என்படி வயல் வரம்புகளின் வழியே நடக்கத் தொடங்கி பாதையை அண்மித்தார்கள்.

"நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு போகாதே, சற்று வளைந்துபோ!" என்றான் பின்னால் வந்தவன்.

"அவசரப்படாதே அதை அதுவே செய்யும்" நடுவில் போனவன் சொன்னான்.

வயல் வரம்பால் பாதையில் ஏற, முகமூடிகளை சரி செய்ய முனைந்தார்கள். ஆனால் அது அதற்கிடையில் அவர்களின் முகங்களோடு இயல்பாகி விட்டது.

"அட பாரன், ஒரு மாலை இல்லை!"

"ஓமடாப்பா"

"ஒரு வெள்ளைப் புறாவைப் பறக்கவிட்டிருக்கலாம்!"

இந்த உரையாடல்களை அது கேட்டதாகத் தெரியவில்லை. அதற்கு முன்னே கணிசமான தூரத்திற்கு அப்பால் அவர்கள் நிறுத்தப்பட்டார்கள்.

"உங்கள் காப்பாற்ற நாம் வந்திற்றம். இப்ப சந்தோசம்தானே? அது கேட்டது.

மனிதர்கள் இடப்பக்கமாகவும், வலப்பக்கமாகவும் தலைகளைப் படபடவென ஆட்டினார்கள்.

"உங்கட ஆக்கள் எல்லாரிலையும் நாம சந்தோசம். எல்லாரும் போளினில பள்ளிக்கூட கிறவுண்சுக்கு போகணும் சரியா! அங்க போறது. போனா நாங்க சாப்பிட புல்லுத்தாறது, தண்ணி தாறது, படுக்க சாக்கு தாறது இனிக்குறை இருக்காது. போங்க போங்க போளின்ல போங்க"

அவர்களின் முகமூடி முகங்கள் சிரித்தன. கைகூப்பி விடை பெற்று முன்னே நடக்கத்தொடங்க, அதுவும் பின்னால் நகரத் தொடங்கியது.

நெடு நெடு மரங்கள் எதையோ பறிகொடுத்தவை போல சரிந்து நிழல் தராமல் இருந்தன. மரங்களின் கீழே இருக்கப் பயந்த மனிதர்கள் அப்பால் விரிந்த மனமாய்ப் பரந்திருந்த விளை யாட்டு மைதானத்தில் சூரியனின் உச்சிக் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தார்கள்.

வடக்குப் புறத்தே இருந்த பாடசாலைக் கட்டிடங்களின் மெழுகு சீலை கூரைகள் காற்றில் முட்டிமோதிக்கொண்டிருந்தன.

"வந்திட்டுது வந்திட்டுது இனி நிரந்தரக்கூரை போடும். ஆனால் படிக்க பிள்ளளைகள் தான் இருக்கமாட்டார்கள். இருப்பவர் களையும் படிக்கவிட மாட்டுது!" என்றது காற்று இரகசியமாக.

மேற்குப் புறத்தே இருந்த கோயிலின் முன்னே தனித்து அமர்ந் திருந்த அது அமீபாக்கள் போல பிரிந்து, பிரிந்து, அந்தப் பெருவெளி எங்கும் விரியத்தொடங்கியது.

மனிதர்கள் மாத்திரம் எங்கெல்லாமோ இருந்து வந்து சொல்லி வைத்த மாதிரி மைதானத்தின் நடுவே படியத் தொடங்கினர், அழுது பழக்கமில்லாத சின்னப் பிள்ளைகள் கூட சிரிக்க மறந்து விழிகளால் பேந்திக்கொண்டிருந்தன.

மனிதர்கள் சேரச் சேர விளையாட்டு மைதானத்துக்கு மாத்திரம் பயம் வலுக்கத் தொடங்கியது. என் கொள்ளளவு இவர்களைத் தாங்குமா? இடம் காணாவிட்டால் என்ன ஆழமாக அல்லவா வெட்டும்.

மைதானம் கவலைப்பட்டுக்கொண்டிருக்க, மைதானத்தின் ஒரு புறத்தே கிடாரங்களில் கஞ்சி தயாராகிக் கொண்டிருந்தது. அதை மனிதர்களுக்கு விநியோகிக்க வைக்கப்பட்டிருந்த அந்தக் கோப்பைகளை இவ்வளவு நுட்பமாக, சின்னதாக செய்திருக் கின்றார்களே என்றுதான் நடுக்கத்தினிடையேயும் மனிதர்கள் கதைத்தார்கள்!

- இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்
எரிமலை ஒக்டோபர் 1999

# 28ஆம் ஆண்டு
# வீரவணக்கம்

## வீரச்சாவு
## 26.10.1996



உயிர் வற்றிய மனிதம்
விழிகளில் ஜீவன் தேக்கி
மௌனப் புலம்பலுடன்
வைகறை வரம் தேடி
தவம் செய்து கிடக்கும்
மானிடத் தேடலில்
இந்த மரணங்கள்
மறுபடியும் உயிர்க்கும்
புலம் பெயர்ந்த மண்ணிலும்
தாய்நிலம் விடிய

வையமெல்லாம்
சுதந்திரப்பாடல் இசைத்துத்
திரிந்த இந்த விடுதலைப்
பறவைகள் பாரிஸ் நகரத்து
வீதியில் கடந்த 26.10.1996
அன்று கொடிய
கொலைக்கரங்களால்
வீழ்த்தப்பட்டார்கள்
விதையாய்...!



**லெப். கேணல் நாதன்**
கந்தையா பேரின்பநாதன்
அரியாலை -யாழ்ப்பாணம்



**கப்டன் கஜன்**
கந்தையா கஜேந்திரன்
கோண்டாவில் -யாழ்ப்பாணம்

# 2025ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.ulagavanikam.ca
thamilarvanikam@gmail.com

# இன அழிப்பிற்கெதிரான ஐ.நா சாசனத்தினை முன்வைத்து ‘தமிழினப் படுகொலைகள்: 1956–2008’ நூலின் ஆவணப் பெறுமதியும் உள்ளடக்கமும்!

பௌத்த சிங்கள பேரினவாத அரச இயந்திரத்தின் தமிழர் மீதான திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை நேரடிச் சாட்சியங்களுடனும், நேர்த்தியான தரவுகளுடனும் ஆவணப்படுத்தி, பதிவு செய்த நூலாக ‘தமிழினப் படுகொலைகள்: 1956 - 2008’ ஆவணம் 2010 ஆம் ஆண்டு வெளிவந்தது. வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் மையம் (North East Secretariat On Human Rights – NESOHR) இந்நூலினை உருவாக்கியுள்ளது. தமிழகத்தில் ‘மனித உரிமைகள் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு’ தளங்களில் இயங்குகின்ற ‘மனிதம்’ எனும் அமைப்பு இந்நூலினை வெளியீடு செய்திருக்கின்றது.

ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இரு மொழிகளில் தனித்தனிப் பதிப்பாக இது உருவாக்கப்பட்டுள்ளமை பயனுள்ளது. இதன் ஆங்கிலப் பதிப்பு, அமெரிக்காவின் பழமை வாய்ந்ததும் புகழ் பெற்ற நூலகமுமான ‘அமெரிக்க கொங்கிரஸ்’ நூலகத்தில் (Library of Congress) வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்காதாகும் (http://lccn.loc.gov/20103185).

2009 இறுதிப் போரின் போதான இன அழிப்பு, அதன் பின்னரான சூழ்நிலைகளின் பின்னணியிலும் இந்நூலுக்கு ஒரு வரலாற்று முக்கியத்துவம் உள்ளது. இனப்படுகொலை மட்டும் இன அழிப்பு அல்ல. இன அழிப்பு என்பது, ஒரு இனத்தை பகுதியாகவோ, வேருடனோ அழித்தொழிக்கும் திட்டமிட்ட நோக்கம் கொண்டது. 1948 இல் இன அழிப்பிற்கு (Genocide) எதிரான சாசனம் ஐக்கிய நாடுகள் பேரவையினால் உருவாக்கப்பட்டது.

### இன அழிப்பிற்கெதிரான ஐ.நா சாசனம்

இன அழிப்பு நடவடிக்கையின் கூறுகளை ஐ.நா சாசனம் பின்வருமாறு வரையறை செய்கின்றது:

ஒரு தேசிய இனத்தின் அல்லது குழுமத்தின் உறுப்பினர்களைக் கொல்வது.

ஒரு இனத்திற்கு அல்லது குழுமத்திற்கு வலிந்தும் திட்டுமிட்டும் பாரிய உடல் - உள ரீதியான இன்னல்களை விளைவிப்பது.

சொந்த வாழ்விடங்களிலிருந்து பலவந்தமாக வெளியேற்றுவது.

இனத்தின் மத்தியில் குழந்தைகள் பிறக்காத வகையில் (இன விருத்தியைத் தடுக்கும் வகையில்) கொடுமைகளைப் புரிதல்.

பண்பாட்டு வாழ்வியலின் தனித்துவங்களை, அடையாளங்களை அழித்தல்.

இன அழிப்பு நடவடிக்கைகளாக கருதப்படுபவை எவை என்பதை எடுத்துரைக்கும் சட்ட அடிப்படையிலான விளக்கங்களாக மேற்கூறப்பட்டவை உள்ளன.


உலக வரலாற்றுப் பட்டறிவினூடு நோக்குகையில் அரசுகளும் அரசுகளால் இயக்கப்படுகின்ற சக்திகளுமே இன அழிப்பினை அரங்கேற்றியிருக்கின்றன, அரங்கேற்றுகின்றன. முதலாம் உலகப்போரின் போது நடந்தேறிய இனப் படுகொலைகளின் பாதிப்பே இன அழிப்பிற்கெதிரான அனைத்துலகச் சட்ட உருவாக்கத்திற்குரிய தூண்டுதலாக இருந்துள்ளது. போலந்து நாட்டைச் சேர்ந்த சட்டவாளர் Raphael Lemkin என்பவராலேயே இன அழிப்பிற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென்ற சட்ட அலோசனை 1933 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டது. இவர் யூத இனத்தைச் சேர்ந்தவர். ஆனபோதும், 2 ஆம் உலகப் போரிற்கு பிற்பட்ட காலத்திலேயே ஐக்கிய நாடுகள் அவையில் இன அழிப்பிற்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஹிட்லரின் நாசிப் படைகள், யூதர்களைத் தேடித் தேடி அழித்த கொடுமைகளின் பின்னரே இன அழிப்பிற்கு எதிரான சாசனம் சட்ட அமுலாக்கம் கண்டது.

### தண்டனை பெற்ற நாடுகள்

1990 களிலேயே முதன் முதலாக இன அழிப்பிற்கெதிரான சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டது. Rwanda இல் நடந்தேறிய இன அழிப்புக்கு பொறுப்பானவர்கள் அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தில் முன்நிறுத்தப்பட்டனர். ஹிட்லரின் யூத இன அழிப்பிற்கு அடுத்ததாக, பாரிய இன அழிப்பாக 1994 ஆம் ஆண்டு நடந்தேறிய Rwanda இன அழிப்பு குறிப்பிடப்படுகின்றது. 100 நாட்களில் 800,000 வரையான மக்கள் அழித்தொழிக்கப்பட்டனர்.

கூற்டு (Hutu) இனவாதிகளால் றுற்சி (Tutis) இன மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட பாரிய இன அழிப்புக் கொடூரம் இது. ஐ.நாவின் அமைதிப்படைகள் 1993 ஆம் ஆண்டிலிருந்து Rwanda இல் நிலைகொண்டிருந்தன. ஐ.நா படைகளின் பிரசன்னம் இருந்த காலப் பகுதியிலேயே இன அழிப்பு நடந்தேறியது. பிரான்ஸ் நாடும் Rwanda இன அழிப்புக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் உடந்தையாக இருந்ததாக பிந்திய காலப்பகுதியில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. பில் கிளின்ரன்




தலைமையிலான அன்றைய அமெரிக்க அரசாங்கமும் பாரா முகமாய் இருந்தது.

கொசவோ, போஸ்னியா, குறுவாட்சியா, ஸ்லோவேனியா போன்ற முந்நாள் யூகொஸ்லாவியா குடியரசு நாடுகள் மீது நடத்தப்பட்ட இன அழிப்பு நடடிக்கைகளுக்காக சேர்பிய அரசுத் தலைவர் ஸ்லோவடான் மிலோசவிச் மீது இன அழிப்பு போர்க் குற்றம் சுமத்தப்பட்டு, 2001 ஆம் ஆண்டு அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்பட்டமை கவனிப்பிற்குரியது.

குர்தீஸ் மக்கள் மீதான சதாம் உசேனின் இன அழிப்பு, 1975 - 1979 காலப்பகுதியில் கம்போடியாவில் நடந்தேறிய இன அழிப்பு, சூடானின் டார்பர் பிரதேசம், கிழக்கு கொங்கோ மற்றும் இன்றைய சமகாலத்தில் பலஸ்தீனம் என்பன இன அழிப்பினை எதிர்கொண்டுள்ள நாடுகளாகும். சூடானின் டார்பர் பிரதேச மக்கள் மீதான இன அழிப்பு மற்றும் போர்க் குற்றங்களுக்காக சூடானின் அரசுத் தலைவர் ஓமர் ஹசான் அல் பசிர் மீது அனைத்துலக குற்றவியல் நீதி மன்றம் (International Criminal Court) 2009 ஆம் ஆண்டு கைது ஆணை பிறப்பித்தது.

காசா மீதான இசுரவேலின் இன அழிப்புப் போர் நடவடிக்கைகளுக்கான எதிர்வினைகளாக சட்ட ரீதியானதும் அரசியல் ரீதியானதுமான இரண்டு முக்கிய நிகழ்வுகள் சர்வதேச மட்டத்தில் இந்த ஆண்டு (2024) நிகழ்ந்து வருகின்றன. ஒன்று, சர்வதேச நீதிமன்றத்தில் (IJC) 2024 ஜனவரி மாதம் தென் ஆபிரிக்கா இசுரவேல் மீது இன அழிப்பு, போர்க்குற்ற வழக்குத் தொடுத்தமையும் சர்வதேச நீதிமன்றம் அவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டமையும். இரண்டாவது, சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) தலைமை வழக்கறிஞர் காரீம் கான் (Karim Khan) இசுரவேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, அந்நாட்டின் பாதுகாப்பு அமைச்சர் Yoav Galant மற்றும் ஹமாஸ் இயக்கத்தின் மூன்று தலைவர்கள் மீது கைது ஆணை பிறப்பிக்கக் கோரி 2024 மே மாத இறுதியில் விண்ணப்பித்திருக்கின்றமையும். அதன் பொருள் கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதல்ல. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத் தலைமை வழக்கறிஞரின் இந்த விண்ணப்பத்தினை சர்வதேச நீதிமன்றத்தின் பிரத்தியேக ஆணைக்குழு விசாரணை மற்றும் பரிசீலனைக்கு உட்படுத்தி, மேற்சொன்ன நபர்கள் மீது கைது ஆணை பிறப்பிப்பதா இல்லையா என்ற தீர்மானத்தினை எடுக்கும் என்ற அளவிலேயே இந்நிகழ்வினைப் பார்க்கலாம். ஆனால் சர்வதேச நீதித்துறை சார்ந்த ஒரு அமைப்பு, அமெரிக்காவின் செல்லப்பிள்ளையும், சர்வதேசத் தீர்மானங்கள், அழுத்தங்கள் எதனையும் இதுவரை பல தசாப்தங்களாகப் பொருட்படுத்தாததுமான இசுரவேலின் உயர் மட்டத் தலைவர்கள் மீது கைது ஆணை பிறப்பிக்கக்கூடிய புறச் சூழல் எழுந்துள்ளது. இது போர்க் குற்றத்திற்கு எதிரான மிக முன்னுதாரணமான நகர்வு, மாற்றம் என்பதை மறுக்க முடியாது.

இராணுவ இயந்திர மேலாதிக்க அடக்குமுறைக்கு ஊடாக தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை முற்று முழுதாக நசுக்குவது பௌத்த சிங்களப் பேரினவாதத்தின் மூலோபாயமாக இருந்து வந்துள்ளது. மாறி மாறி ஆட்சிக்கு வந்த சிங்களத் தலைமைகள், இராணுவ அடக்குமுறையைக் கருவியாகக் கொண்ட மூலோபாயத்தையே கையாண்டன. 2009 இற்குப் பின்னர் போர் முடிவுக்கு வந்தபோதும், கட்டமைக்கப்பட்ட ரீதியில் தமிழர் தாயகம் முழுவதும் சிங்கள அரசினது மேலாதிக்கமும், இராணுவ ஆக்கிரமிப்பும், அரசியல் உரிமை மறுப்பும் தொடர்கின்றன.

### இன அழிப்பு – போர்க் குற்றம் – மனிதத்திற்கு எதிரான குற்றம்

ஐ.நா சாசனத்தில் இன அழிப்புக் குற்றங்களென எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ - போர்க் குற்றங்களென எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ - மனிதத்திற்கு எதிரான குற்றங்களென எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ - இன அழிப்பின் கூறுகள் என எவை வரையறுக்கப்பட்டுள்ளனவோ அவை அனைத்தையும் சிறீலங்கா பேரினவாத அரச இயந்திரம் தமிழீழ மக்கள் மீது நிகழ்த்தியிருக்கின்றது.

தமிழர்களின் இருப்பைக் கேள்விக்கு உள்ளாக்குவதற்குரிய மூலோபாய திட்டங்களை வகுத்து, படிப்படியாக அவற்றை நடைமுறைப்படுத்தி வந்திருக்கின்றது. பாராளுமன்றப் பெரும்பான்மை மூலமாக தமிழரெதிர்ப்பு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சட்டங்களாக்கப்பட்டன. சட்டங்களின் துணையோடு இராணுவ இயந்திரம் தமிழ் மக்கள் மீது ஏவிவிடப்பட்டு, அடக்குமுறை படிப்படியாக கட்டவிழ்த்துவிடப்பட்டது.

### ‘வடக்கு – கிழக்கு மனித உரிமைகள் செயலகம்’

‘வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம்’ வடக்குக் கிழக்கில் நடந்தேறிய மனித உரிமை மீறல்களை உரிய தரவுகள், தகவல்கள், ஆதாரங்களுடன், நேரடிச் சாட்சியங்கள் மூலம் ஆவணப்படுத்தி உடனுக்குடன் அறிக்கையிடும் பணியினை முன்னெடுத்துவந்த அமைப்பாகும். 2004 ஆண்டு ஜூலை மாதம் இச் செயலகம் அமைக்கப்பட்டது. ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலிருந்து, சிறீலங்கா பேரினவாத அரச படைகளினது தமிழ் மக்களுக்கெதிரான அரச பயங்கரவாத - இனப்படுகொலை நடவடிக்கைகளை ஆவணப்படுத்தி வெளியிட்டு வந்துள்ளது.

இந்நூலுக்குரிய தரவுகள், ஒளிப்படங்கள் என்பன வடக்கு - கிழக்கு புள்ளிவிபர மையத்திடமிருந்து பெறப்பட்டுள்ளன.


Attack on satyagrahis


S.W.R.D. speaking about the Sinhala Only Act


Mob attacks in Colombo


The mob in action


Burning of Emroy


Chelvanayakam'ssatygraha

# தனிச் சிங்கள மொழி எதிர்ப்பின் போது இடம்பெற்ற சில நிகழ்வுகளின் தொகுப்பு

2009 இல் சிறீலங்கா அரசினால் நடாத்தப்பட்ட இன அழிப்பு வன்போரின் விளைவாக நேுளுமுஉசு இன் ஆவணங்கள் அனைத்தும் அழித்தொழிக்கப்பட்டன. ஆனபோதும் உருவாக்கப்பட்ட அறிக்கைகள் அவ்வப்போது உரிய முறையில் அதன் இணையத்தளத்தில் (www.nesohr.org) தரவேற்றப்பட்டமையால் அவை பாதுகாக்கப்பட்டுள்ளன. அந்த ஆவணங்கள் உடனுக்குடன் இணையத்தளத்தில் ஏற்றப்படாது விடப்பட்டிருப்பின், முக்கிய ஆவணங்கள் இன்று வரலாற்றிலிருந்தே அழிக்கப்பட்டிருக்கும்.

## முள்ளிவாய்க்கால் : இன அழிப்பின் உச்சம்

2009 இல் சிறீலங்கா அரச படைகள், புதுமாத்தளனிலும் முள்ளிவாய்க்காலிலும் 5 மாதங்களில் ஐம்பதாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களைக் கொன்றழித்து, பாரிய இனப் படுகொலையை அரங்கேற்றின. வேதியல் ஆயுதங்கள் (Chemical Weapons), நச்சுக் குண்டுகள், கொத்தணிக் குண்டுகள் (Cluster bombs) என உலக நாடுகளால் தடைசெய்யப்பட்ட அனைத்து நாசகார ஆயுதங்களையும் பேரினவாத அரசு போரில் பயன்படுத்தியுள்ளது. மே 16, 17 ஆகிய இரு நாட்களிலும் நடாத்தப்பட்ட கடைசி நேர இனவெறித் தாக்குதல்களில் மட்டும் 40,000 உயிர்கள் பலியெடுக்கப்பட்டதாக ஐக்கிய நாடுகள் அவையை மேற்கோள் காட்டிய தகவல்கள் வெளிவந்தமை உலகறிந்ததே. அனைத்துலகப் போர் நெறிகளை மீறியதற்கான தடயங்களை, சாட்சியங்களை அழித்தொழிக்கும் நடவடிக்கைகளில் அரசு மும்முரமாக ஈடுபட்டிருந்தது. ஆக்கிரமிப்பு வன்போர் முடிவடைந்து பல மாதங்கள் கடந்த பின்னர்கூட அனைத்துலகப் பிரதிநிதிகளோ, ஊடகங்களோ போர் நடைபெற்ற பகுதிகளுக்குள் அனுமதிக்கப்படவில்லை.



பிரித்தானியக் கொலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கைத் தீவு விடுபட்ட காலத்திலிருந்து தமிழர்களுக்கெதிரான சிங்கள மேலாதிக்கப் பிடி, படிப்படியாக இறுக்கமடைந்து வந்துள்ளது. தமிழ் மக்கள் மீதான பாரிய படுகொலைகள், நிலப்பறிப்பு, மொழியுரிமைப் பறிப்பு, அரசியல் உரிமை மறுப்பு, கல்வி - பண்பாட்டு அழிப்பு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் என நீள்கிறது தமிழர் மீதான ஒடுக்குமுறை வரலாறு. இவற்றில் 2009 வரையான 60 ஆண்டு கால பின்-கொலனித்துவ வரலாற்றில் எண்ணற்ற படுகொலைகளைத் திட்டமிட்ட முறையில் பேரினவாதம் நடாத்தியிருக்கின்றது.

## நேரடிச் சாட்சியங்கள் – ஆதாரங்கள்

இந்நூலில் 1956 இல் இருந்து 2008 வரையான 52 ஆண்டு காலங்கள் சிறீலங்காவின் பௌத்த, சிங்கள, பெருந்தேசியவாத அரச இயந்திரத்தினால் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இனப் படுகொலைகள் பற்றிய நேரடிச் சாட்சியங்கள் உட்பட்ட பல்வேறு ஆதாரங்களுடனான பதிவு முதன்மையாக இடம்பெற்றுள்ளது. கால வரிசையில் படுகொலைகள் கிரமமாகத் தொகுக்கப்பட்டுள்ளன. கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் பெயர் - வயது - சொந்த இடம் போன்ற விபரங்களோடு பதிவுகள் இடம் பெற்றுள்ளன.

அத்தோடு சிறீலங்கா அரசின் தமிழர்கள் மீதான இன அழிப்பின் பல்வேறு கூறுகள் வரலாற்றுப் பின்னணியோடு, உரிய ஆதாரங்களோடு, வரலாற்று நிகழ்வுகள் பற்றிய எடுத்துரைப்புகளோடு சொல்லப்பட்டிருக்கின்றன. மென்முறை தழுவிய அறப்போராட்டம் எவ்வாறான புறநிலையில் வன்முறை தழுவிய ஆயுதப் போராட்டமாக மாற்றப்பட்டது என்ற வரலாற்றுப் பின்னணி எடுத்துரைக்கப்படுள்ளது.

நூலின் ஆரம்பத்தில், 1940 இல் அம்பாறை மாவட்டத்தில் அரச நிதியுதவியுடன் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் (State Sponsored Colonization) நிறுவப்பட்டமை தொடர்பான குறிப்பு இடம்பெற்றுள்ளது. தென்னிலங்கையிலிருந்து (வெளி மாவட்டங்களிலிருந்து) சிங்கள மக்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலங்களில் குடியேற்றப்பட்டார்கள், சிறீலங்கா பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்புடன் சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு எவ்வகையில் சிங்களக் குடியேற்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன போன்ற விபரங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுருங்கக் கூறின் தமிழ் மக்களுக்குச் சொந்தமான பாரம்பரிய நிலங்கள் எவ்வாறு திட்டமிட்ட முறையில் சூறையாடப்பட்டன என்ற வரலாறு நூலின் ஆரம்பப் பகுதியில் பதிவாகியுள்ளது.

கிழக்கில் தமிழ் மக்களின் நிலங்கள், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் பெருமளவு விழுங்கப்பட்டுள்ளது. தமிழ் மக்கள் பெரும்பான்மையாக இருந்த அம்பாறை, திருமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் பல பகுதிகளில் சிங்களவர்கள் பெரும்பான்மையாகியுள்ள நிலையும் ஏற்பட்டுள்ளது. இனப் படுகொலை பற்றிய பகுதி 'இங்கினியாகலை படுகொலையுடன்' தொடங்குகின்றது. இது 1956 ஜூன் 5 நடந்தேறிய படுகொலையாகும். அம்பாறையில் குடியேற்றப்பட்ட சிங்களக் காடையர்களால், இங்கினியாகல பிரதேசத்தில் கரும்புத் தொழிற்சாலையில் வேலை செய்த 150 வரையிலான தமிழ்த் தொழிலாளர்கள், கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டும், குற்றுயிராகத் துடித்தவர்கள் தீயிலிட்டு எரிக்கப்பட்டும் கோரமான முறையில் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இதுவாகும்.

## சிங்களம் மட்டும்

இலங்கைத் தீவில் தங்கியிருந்த புகழ்பெற்ற ஆங்கில ஊடகவியலாளரான டாசி வித்தாச்சி அவர்கள் எழுதிய 'அவசர காலச் சட்டம் ஐம்பத்தெட்டு' என்ற நூலை ஆதாரமாகவும், அன்றைய காலப்பகுதியில் வெளிவந்த நாளேடுகளிலிருந்து பெறப்பட்ட தகவல்களை அடியொற்றியும் இங்கினியாகலைப் படுகொலை பற்றிய பதிவுகள் இடம்பெற்றுள்ளன.

'சிங்களம் மட்டும்' சட்டத்திற்கு எதிராக தமிழரசுக் கட்சி தலைமையில், அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் இணைந்து நடாத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் வன்முறையைப் பிரயோகித்தமை, 1974 இல் யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டைக் குழப்பும் சதியுடன் கட்டவிழ்த்துவிடப்பட்ட படுகொலை, 1977 இல் நாடு முழுவதும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகள் (திருகோணமலை, வவுனியா, பதுளை, இரத்தினபுரி), 1981 இல் தமிழ் மக்களின் கல்விச் சொத்தான யாழ் நூலக எரிப்பு, 1983 - கறுப்பு ஜூலை படுகொலைகள் என தமிழர் மீதான அழிப்பின் ஆரம்பம் முதல், அதன் தொடர்ச்சி எவ்வாறு சிறீலங்கா பேரினவாதிகளால் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டதென்பதை இந்நூல் பதிவு செய்துள்ளது. இவை மட்டுமல்ல நிலப்பறிப்பையும் சிங்களக் குடியேற்றத்தையும் மூலநோக்காகக் கொண்டு, சிங்கள அரசினால் வழிநடத்தப்பட்ட படுகொலைகள் எண்ணிலடங்காதவை.

## நிறுவனமயப்படுத்தப்பட்ட அடக்குமுறை

தமிழர் தாயகக் கோட்பாட்டை (வடக்கும் கிழக்கும் இணைந்த தொடர்ச்சியுடைய நிலப்பரப்பைக் கொண்ட தமிழர் தாயகம்) உடைப்பதும், வடக்கு - கிழக்கு மக்கள் தம்மை ஒரு தேசமாக (Nation) அடையாளப்படுத்துவதை முறியடிப்பதுமே சிங்களத்தின் மூலோபாயம். நிர்வாகம் மற்றும் நில அமைவிடம் ஆகிய இருநிலைகளிலும் தமிழர் தாயகக் கோட்பாட்டை மழுங்கடிப்பதே இனவாதத்தின் இலக்கு!

பிரித்தானியர் இலங்கைத் தீவிலிருந்து வெளியேறிய (1948 ஆம் ஆண்டு) தறுவாயிலிருந்தே, பௌத்த - சிங்கள இன மேலாதிக்கம், தமிழர் அழிப்பு என்ற பேரினவாத நிகழ்ச்சி நிரலுக்கு செயல் வடிவம் கொடுக்கத் தொடங்கியது. சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் மீதான அழிப்பினை மிக நுட்பமாகத் திட்டமிட்டு செயற்படுத்தி வந்துள்ளனர்.

1949 இல் மலையகத் தமிழர் குடியுரிமைப் பறிப்பிலிருந்து இன்றைய முட்கம்பி வேலி வதைமுகாம்கள் வரை தொடர்கின்றது பௌத்த - சிங்கள இன மேலாதிக்கத்தின் தமிழின அழிப்பு. 1956 இல் 'சிங்களம் மட்டும்' (Sinhala Only) சட்டம் மூலம் தமிழ் மக்களின் மொழி உரிமை பறிக்கப்பட்டது. மொழியுரிமை பறிப்பு என்பது இனத்துவ அடையாளம், சமூக பண்பாட்டு வாழ்வியல் ஆகியவற்றின் தனித்துவத்தை இழக்கச் செய்யும் சூட்சும் கொண்டதாகும். அரச நிர்வாகங்களில் 'சிங்களம் மட்டும்' பயன்பாட்டினால், தமிழர்கள் தொழில் வாய்ப்புகளை இழக்க நேரிட்டது.

தொடர்ச்சியாக 1972 இல் கல்வித் தரப்படுத்தல் சட்டமாக்கப்பட்டது. சிங்கள மாணவர்களை விட தமிழ் மாணவர்கள் அதிக மதிப்பெண்களைப் பெற்றால் மட்டுமே பல்கலைக்கழக உள்நுழைவுக்கு தெரிவாக முடியுமென்ற பாரபட்ச நிபந்தனை கல்வித் தரப்படுத்தல் சட்டம் மூலம் கொண்டுவரப்பட்டது. தமிழ்ச் சமூகத்தின் கல்வி வளத்தினையும் மேம்பாட்டினையும் தடுப்பதற்குரிய மூலோபாயம் இதுவாகும்.

1981 இல் நிகழ்ந்த யாழ் நூலக எரிப்பென்பது, தமிழ்க் கல்விச் சமூகத்தைச் சிதைக்கும் திட்டமிட்ட இன அழிப்பு நோக்கம் கொண்டது. தெற்காசியாவிலேயே மிகப்பெரிய நூலகமென்று பெயர் பெற்ற, நூறாயிரம் வரையான அரிய பல்துறை நூல்களையும், தமிழர்சார் வரலாற்று ஆவணங்களையும் யாழ் நூலகம் கொண்டிருந்தது என்பது பலரும் அறிந்ததே.

ஒட்டுமொத்தமாக இவ்வாறான தமிழர் விரோதச் சட்டங்கள் மூலம், தமிழ் மக்கள் இன - மொழி - அரசியல் - சமூக - பொருளாதார - கல்வி அடிப்படைகளில் பல முனைகளிலும், நிறுவனமயப்படுத்தப்பட்ட ஒடுக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டனர். ஆட்சியதிகாரம், பாராளுமன்ற ஜனநாயகம், நீதித்துறை என்பன சிங்கள ஆட்சியாளர்களால் அரசியல் விழுமியங்களின் தார்மீக ஒழுக்க அடிப்படையில் கைக்கொள்ளப்படவில்லை. நாட்டின் அரசியல் யாப்பு தமிழ் மக்களின் பிரதிநிதித்துவம் இல்லாது உருவாக்கப்பட்டதாகும். சிங்களப் பேரினவாத, பௌத்த மதவாத அரச இயந்திரமாகவே அது இயக்கப்பட்டு வந்திருக்கின்றது.

## குடியேற்றம் :
## தாயகக் கோட்பாட்டை மறுதலிக்கும் மூலோபாயம்

தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்ட, வடக்கு - கிழக்கு தமிழர்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்களில் திட்டமிட்ட முறையில் சிங்களக் குடியேறறங்கள் ஏற்படுத்தப்பட்டன. இது மக்கள் தொகைச் சமநிலையை - மக்கள் தொகைப் பரம்பலை



(Demographic Balance) குழப்பும் நோக்கம் கொண்டது. திட்டமிட்ட குடியேற்றங்களால் தென் தமிழீழம் பாரிய அளவு விழுங்கப்பட்டடுள்ளது. இன அழிப்பினை இலக்காகக் கொண்ட அரசுகள் கையாளும் முதன்மை மூலோபாயங்களில் இதுவும் ஒன்றாகும். இவ்வாறே பலஸ்தீன மக்களின் பாரம்பரிய நிலங்களை யூதக் குடியேற்றங்கள் மூலம் இசுரவேல் விழுங்கி வருகின்றது.

தமிழர் தாயகப் பிரதேசங்களில் 1940களிலிருந்து சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்ட முறையில் நிறுவப்பட்டன. தாயகப் பிரதேசங்களை அபகரித்து சிங்களவர்களின் பரம்பலை அதிகரிப்பதன் மூலம், தமிழர்கள் சிறுபான்மையினர் என்ற கருத்துருவாக்கத்தை வேரூன்றச் செய்வதே பேரினவாத அரச இயந்திரத்தின் நோக்கம். தொடர்ச்சியான நிலப்பரப்பைக் கொண்ட வடக்கும் கிழக்கும் இணைந்ததே தமிழர்களின் பாரம்பரிய தாயகம் என்ற யதார்த்தத்தினை மறுதலித்து வடக்கினையும் கிழக்கினையும் துண்டாடும் சூழ்ச்சிக்கு திட்டமிட்ட குடியேற்றம் கருவியாய் கைக்கொள்ளப்பட்டது.

1983 ஆம் ஆண்டு ஜூலைப் படுகொலைகளை அடுத்து தொடர்ச்சியாக தமிழர் பிரதேசங்களில் - கிழக்கில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பிரதேசங்களிலும், வடக்கில் - மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களிலும் அடுத்தடுத்து எண்ணிலடங்காத படுகொலைகள் நடாத்தப்பட்டுள்ளன.

1985 இல் திருகோணமலையில் 'நிலாவெளிப் படுகொலைகள்', அதே ஆண்டு 'கந்தளாய்ப் படுகொலை', 1990 இல் 'திரியாய்ப் படுகொலை', 1987 இலும் 1991 இலும் கட்டவிழ்த்துவிடப்பட்ட மட்டக்களப்பு 'கொக்கட்டிச்சோலைப் படுகொலை', 1990 இல் கிழக்குப் பல்கலைக்கழகப் படுகொலை, அதே ஆண்டு நடந்தேறிய 'வந்தாறுமூலைப் படுகொலை', 'சத்துருக்கொண்டான் படுகொலை', 1990 இல் அம்பாறையில் 'வீரமுனைப் படுகொலை' என கிழக்கு மாகாணத்தில் கோரமான பல படுகொலைகள் நடாத்தப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இந்நூலில் விரிவாகத் தொகுக்கப்பட்டுள்ளன.

## போர் நிறுத்த காலப் படுகொலைகள்

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்ட, போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருந்த காலகட்டங்களில் கூட சிறீலங்கா அரச படைகள் பொது மக்கள், தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், ஊடகவியலாளர்கள் என பல ஆயிரக் கணக்கானவர்களைப் படுகொலை செய்தது.

போர் நிறுத்தம் நடைமுறைக்கு வந்த 2002 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான 5 ஆண்டுகளுக்குள் மாத்திரம் 4000 பேர் வரை கொல்லப்பட்டதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புள்ளிவிபரங்கள் தெரிவித்தன. போர் நிறுத்த உடன்படிக்கை நடைமுறையில் இருந்த காலத்தில் நடாத்தப்பட்ட படுகொலைகள் உரிய ஆதாரங்களுடன் விரிவாக ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

2006 ஆம் ஆண்டு கிழக்கில் பாரிய வன்போர் நடவடிக்கையைத் தொடங்கிய இலங்கைப் படையினரால் நடாத்தப்பட்ட படுகொலைகளிலிருந்து, வடக்குக்கு விரிவுபடுத்தப்பட்ட போரில் 2008 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை நடாத்தப்பட்ட முரசுமோட்டை விமானக் குண்டு வீச்சுப் படுகொலைகள் வரை இந்நூலில் ஆதாரங்களுடன் பதிவுக்குள்ளாகியுள்ளன.

2009 இல் இறுதிப் போரில் கட்டவிழ்த்துவிடப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் குறித்த விரிவான பதிவு இந்நூலில் உள்ளடக்கப்படவில்லை. எனவே இந்நூலினை சிங்கள, இனவாத அரச இயந்திரத்தினால் தமிழ் மக்கள் மீது நடாத்தப்பட்ட இன அழிப்பின் ஒரு முழுமையான பதிவாகக் கொள்ள வேண்டாமென வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் வாசகர்களை எச்சரித்துள்ளது.

இன அழிப்பு வன்போரினை நடாத்திய சிறீலங்கா அரசு, தமிழ்ச் சமூகத்தின் மத்தியில் பாரிய மனிதப் பேரவலங்களையும், சமூகச் சிதைவுகளையும், பிளவுகளையும் ஏற்படுத்தியுள்ளது. சொந்த நிலங்களில் மீளக் குடியேற வழியின்றி அல்லற்படுவோர், உடல் உறுப்புகளை இழந்தோர், வாழ்க்கைத் துணையை இழந்தோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்றோர் என பெரும் மனித அவலங்களை எதிர் கொண்ட தமிழர் தாயகப் பிரதேச மக்கள் அடிப்படை மனித உரிமைகள், அரசியல் வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே வாழ்கின்றனர்.

## வரலாற்றுத் திரிபுக்கும் மறைப்பிற்கும் உட்படாதிருக்க இந்நூலின் பங்களிப்பு

முள்ளிவாய்க்கால் பேரழிவுக்குப் பின்னர், அனைத்துலக மட்டத்தில் சிறீலங்காவின் அரச படைகளின் போர் மீறல்கள், மனித உரிமை மீறல்கள் குறித்த கண்டனங்களும் விசாரணைகள் பற்றிய குரல்களும் ஓங்கியிருந்த காலட்டத்தில் இந்த நூல் வெளிவந்தது. 2009 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரம் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டதிலிருந்து முள்ளிவாய்க்காலில் போர் முடிவுக்கு வந்த காலம் வரையான சாட்சியங்கள் அற்ற இலங்கைப் படைகளின் இன அழிப்பு தொடர்பான பதிவுகள் இந்நூலில் இடம்பெறவில்லை. சிறிலங்காப் படைகளின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வு, சிறீலங்காப் படைகளின் கண்மூடித்தனமான தாக்குதல்களால் 2008 இன் இறுதிப் பகுதியுடன் NESOHR இன் இயங்குநிலை முற்றிலும் முடக்கப்பட்டுவிட்டமை அதற்கான காரணங்களாகும். 2009 இல் நடந்த நிகழ்வுகளின் களத் தகவல்கள், அறிக்கைகளைத் தம்மாற் சேகரிக்க முடியவில்லை எனக் NESOHR குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், அந்தக் காலகட்டப் படுகொலைகள் சார்ந்த சில ஆதாரத் தொகுப்புகள், ஒளிப்படங்களை நூலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலைகள் வரலாற்றிலிருந்து அழிக்கப்படாமலும், காலப்போக்கில் திரிபுபடுத்தப்படாமலும், மறைக்கப்படாமலும் இருப்பதற்கு இந்நூல் பாரிய பங்களிப்பாக அமைந்துள்ளது. படுகொலைகளை மட்டும் ஆவணப்படுத்தும் ஒரு தொகுப்பாக அல்லாமல், சிங்களத்தின் தமிழர்சார் அழிப்பின் மூலங்களை அடையாளப்படுத்தி அரசியல் ரீதியில், வரலாற்று ரீதியில் புரிதலை ஏற்படுத்தும் வகையில் இதன் பதிவுகள் அமைந்துள்ளன.

அவ்வாறு நோக்குகையில், தமிழர்கள் மீதான படுகொலைகள் பற்றிய முழுமையான நூலாக இல்லாவிடினும் 2009 இற்கு முன்னான படுகொலைகளை கூடியளவு தகவல் ரீதியாகப் பதிவு செய்யும் நூலாக இதனைக் கருத முடியும்.

நன்றி: சிவராஜா ரூபன் - முகநூல் பதிவு

# இருள் சூழ்ந்த நகரத்தின் விடுதலைக் கதை!

சுதந்திரம்! அதை விரும்பாதார் இவ்வுலகில் யார்தான் இருக்கிறார்கள். அதில் ஒரு நிகரில்லா உன்னதம் இருப்பதால் தான், உலகில் அதன் பெறுமதிக்கு நிகராக எதுவுமே இருப்பதில்லை. பசி, பஞ்சம், பட்டினி என்பவற்றுக்கு அப்பால் சாவுகள், அழிவுகளுக்கும் அப்பால் நம்பிக்கையுடன் தொடரும் போராட்டங்கள் தான் ஒடுக்கப்படும் இனத்திற்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுக்கிறது. வாழ்வதற்கான எந்த அனுகூலங்களும் மறுக்கப்பட்ட நிலையிலும் அடிமை வாழ்வில் கிடைக்கும் கீழ்த்தரமான சுகபோகங்களைப் பற்றிப் பிடித்து ஏதோ வாழ்ந்து விட்டு போவோம் என்று எண்ணாது விடுதலைக்காக விலைகொடுத்து போராடத் துணியும் மனிதர்களுக்கே இவ்வுலகில் சுதந்திரம் சொந்தமாக்கப் படுகிறது.


அசுர பலத்தோடு வந்த ஆக்கிரமிப்பாளர்களுக்கு அடி பணியாது மரணப் புயலின் மையத்தில் நின்று 900 நாள் முற்றுகையில் வாழ்வையும், உயிரையும் விடுதலையைக் கொடுத்து, வந்த எதிரிகளுக்கு மரணத்தைப் பரிசளித்த மகத்தான மனிதர்கள் "லெனின்கிராட்" மக்கள். உலக வரலாற்றில் ஒப்பற்ற சுமைகளைத் தாங்கி, தியாகங்கள் புரிந்து, அடிபணியாது தமது இறைமையை நிலை நாட்டிய அந்த மக்களின் விடுதலை உணர்வு ஒடுக்கப்படும் மக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு.

1941 யூன் மாதம் லெனின்கிராட் நகரம் இனவெறிகொண்ட கிட்லரின் படைகளின் இறுக்கமான முற்றுகைக்குள் சிக்கியது. உலகை பேரழிவுக்குள்ளாக்கிய இரண்டாம் உலகப் பெரும் யுத்தத்தில் சோவியத் யூனியனை வீழ்த்துவதற்காக கிட்லர் எடுத்த "ஒப்பரேசன் பார்பரோசா" (Operation Barbarossa) வின் ஒரு சமர்முனை லெனின்கிராட் நகர் மீது திறக்கப்பட்டது. எல்லா வகையிலுமே மிகக்கொடூரமான முற்றுகை அது. முப்பது இலட்சம் மக்கள் அந்த முற்றுகைக்குள் அகப்பட்டார்கள். தம்மிலும் பலங்கொண்ட எதிரியை இறுதிவரை எதிர்கொள்வதென லெனின் கிராட்டுக்கள் உறுதி கொண்டார்கள்.

1941ஆம் ஆண்டு யூன் 21ஆம் நாள், ஒப்பரேசன் பார்பரோசாவின் தொடக்க நாள். லெனின்கிராட் முனையில் ஜேர்மன் படைகள் மின்னல் வேகத்தில் முன்னேறத் தொடங்கின. ஜேர்மனியரின் படையெடுப்பை அவ்வளவு விரைவிலேயே எதிர்பார்க்காத ரஷ்யப் படைகள் பேரழிவைச் சந்தித்துக்கொண்டிருந்தன. முதல் நாள் சமரிலேயே ரஷ்ய வான்படை தனது ஆயிரத்து இருநூறு வானூர்திகளை இழந்தது. சுமார் இரண்டு வாரங்களிலேயே 300 மைல்கள் கடந்து, ஜேர்மன் படைகள் முன்னேறிக்கொண்டிருந்தன. ரஷ்யப் படைகளோ, தமது ஆளணியில் மிகப்பெரும் அழிவுகளைச் சந்தித்திருந்தது. இருபத்தெட்டு "டிவிசன்"களைச் சேர்ந்த நான்கு இலட்சத்து இருபதினாயிரம் ரஷ்யப் படையினர் அழிந்து போயினர். மேலும் எழுபது டிவிசன் படையணிகள் தமது அரைவாசி ஆளணியை இழந்திருந்தன.

ரஷ்யர்களின் ஆட்லறி படையணிகள் தமது பலத்தில் அரைவாசியை இழந்த இந்நிலையில் லெனின்கிராட் நகரின் பாதுகாப்பு கேள்விக்குள்ளாகியது. அது விரைவிலேயே ஜேர்மனியரின் காலடியில் அடிபணிந்துவிடுமென்றே உலகம் நம்பியது.

கிட்லர் தனது படைகளின் முன்னேற்றத்தில் பெரும் நம்பிக்கை வைத்தான். இன்றைய சிங்களத் தலைமைகள் தமது இராணுவ பலத்தில் நம்பிக்கைகொண்டு காலக்கெடுக்கள் விதிப்பது போலவே கிட்லரும் கூழுரைத்தான். எண்ணி நான்கே நான்கு வாரத்தில் லெனின்கிராட்டை தமது காலடியின் கீழ் கொண்டுவருவதாக சபதம் செய்தான். "யூலை-21 ற்கு முன்னரேயே லெனின்கிராட் மாளிகைச் சதுக்கத்தில் வெற்றி விழா கொண்டாடுவேன்" என பிரகடனம் செய்தான்.




இவையெல்லாம் லெனின்கிராட் மக்களை நம்பிக்கையிழக்கச் செய்துவிடவில்லை. அவர்கள் நம்பிக்கை கொள்ளக்கூடியதாய் அங்கு எதுவுமே நடக்காதபோதும் தமது கைகளை மட்டுமே அவர்கள் நம்பினார்கள். நம்பிக்கையின் முன் எல்லாமே தூசு என்பதில் அவர்களுக்கு அசையாத நம்பிக்கையிருந்தது. "உங்களது நகரைக்காக்க லெனின்கிராட் மக்ளே அணிதிரளுங்கள்" என்ற கோரிக்கையை உடனடியாகவே அந்த மக்கள் ஏற்றுக் கொண்டார்கள். ஒரு வாரத்தில் மட்டுமே இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் போருக்குப் புறப்பட்டார்கள். அனைத்து மக்களையும் படையணிகளாக்குவதற் குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

"இதுவரை சமாதானத்திற்கான வேலைகள் மட்டுமே எனக்குத் தெரிந்தது. இப்போதிலிருந்து ஆயுதமேந்துவதற்கு நான் தயாராகிவிட்டேன். சண்டையிடுவதால் மாத்திரமே நாங்கள் அழிவிலிருந்து மனித இனத்தைக் காப்பாற்ற முடியும்" எனக் கூறிவிட்டுப் போருக்காகப் புறப்பட்டுப்போனார் ஒரு பாடலாசிரியர். இவ்வாறு மக்கள் எல்லோருமே போர்க்களத் திலே ஓய்வுறக்கமின்றி அல்லும் பகலுமாய் உழைத்தார்கள். போர்க்களங்களில் இருந்து தம்மால் மீண்டு உயிருடன் திரும்ப முடிகிறதோ, இல்லையோ தங்களுடைய நகருக்கு மீண்டும் விடியலைக் கொண்டுவந்துவிடவேண்டும் என்றே அவர்கள் விரும்பினார்கள்.

போருக்கென புறப்பட்டவர்களுக்கு இராணுவப் பயிற்சிகளை வழங்குவதற்குக்கூட ஜேர்மனியர்கள் அவகாசம் கொடுக்கவில்லை. அவர்களுக்குத் தேவைக்கான ஆயுதங்களைக் கூட உடனடியாக வழங்கமுடியவில்லை. பயிற்சிகள் இன்றியே போர்க்களங்களிற்கு அவர்கள் புறப்பட்டார்கள். கையில் அகப்பட்ட கோடாரிகள், மண்வெட்டிகள், கத்திகள், அலவாங்குகள் என்பவற்றையும் தங்களுடைய ஆயுதங்களாக அவர்கள் எடுத்துச்சென்றார்கள். போர்க்களங்களிலே அவர்கள் காட்டிய வீரமும், தியாகமும் ஜேர்மனியர்களுக்கு பேரதிர்ச்சியைக் கொடுத்தது. எதிரியின் முக்கியத்துவம் வாய்ந்த நகர்வுகளை யெல்லாம் பல சமயங்களில் அவர்கள் தனித்து நின்றே வெற்றிகொண்டார்கள்.

சோவியத் படைகள் ஆரம்பத்தில் அடைந்த பேரழிவுகளை வைத்து, ஜேர்மனியர் கட்டிய வெற்றிபற்றிய கற்பனைகளெல்லாம் லெனின்கிராட் மக்களின் எழுச்சியால் சுக்கு நூறாகியது. தொடர்ச்சியான சண்டைகளில் ஏற்பட்ட தோல் வியின் இழப்புக்களால் லெனின்கிராட் நோக்கிய தமது முன்னேற்றப் பாதையை தமது "சாவுக்கான பாதை" என வர்ணித்து மனமுடைந்து போனார்கள் கிட்லரின் தளபதிகள். "ரஷ்யர்களின் பெரும் படைபற்றி நாம் குறைவாக மதிப்பீடு செய்துவிட்டோம்" என்றான் கிட்லரின் படைக்கல முதன்மை அதிகாரியொருவன்.

இப்படியே தனது படை வீரர்களும், தளபதிகளும் மன முடைவதை நன்கு அவதானித்த கிட்லர், எழுச்சிகொண்ட லெனின்கிராட் மக்களை முற்றுகைக்குள்ளாக்கி, தனிமைப் படுத்துவதன் மூலம் அவர்களை அடிமைப்படுத்துவதற்கென திட்டங்களைத் தீட்டினான். லெனின்கிராட் நகருக்கும், சோவியத் யூனியனின் ஏனைய பகுதிகளுக்கும் தரைத்தொடர்பாக இருந்த இரண்டு பாதைகள் 1941 செப்டெம்பர் எட்டாம் நாள் ஜேர்மன் படைகளிடம் வீழ்ச்சி கண்டது. முற்றுகைக்குள்ளான லெனின்கிராட் மீது மேலும் தாக்குதலை தீவிரப்படுத்தி அந்த மக்களை விரைவிலேயே சரணடைய வைத்துவிடலாம் என்று கிட்லர் சந்தேகத்திற்கிடமின்றி நம்பினான். லெனின்கிராட் மக்கள் என்ன செய்யப்போகிறார்களோ என்று உலகம் கண்ணீர் சிந்தியது. எல்லோருடைய கணிப்பீட்டின்படியும், லெனின்கிராட் மக்களுக்கு சரணடை வதைத் தவிர வேறுவழியேதும் இல்லையென்றே நம்பப்பட்டது. ஆனாலும், லெனின்கிராட் மக்கள் தொடர்ந்தும் போரிட்டார்கள். என்றோ ஒருநாள் அந்த முற்றுகையை உடைத்து புதியவழியமைப்போம் என்ற நம்பிக்கை அவர் களுக்குள் இருந்தது.

தமது நகருக்குள் எதிரிகள் உட்புகுந்து விடுவார்களானால், தாம் வியர்வை சிந்தி உருவாக்கிய எதையுமே எதிரி அனுபவித்து விடக்கூடாது என்பதில் லெனின்கிராட் மக்கள் உறுதியாக இருந்தார்கள். தமது வீடுகள், வைத்தியசாலைகள், பாடசாலைகள், பூங்காக்கள், வீதிகள் எல்லாமே எந்த நிமிடமும்

# லெனின் கிராட் நகரில் தற்காப்புச் சமருக்கு தயாராகும் ருஸ்சிய மக்கள்



அழிக்கப்படடிக்கூடிய நிலையில் வெடிகுண்டுகளைப் பொருத்தி வைத்திருந்தார்கள்.

முற்றுகை லெனின்கிராட் மக்களை வாட்டத்தொடங்கியது. பட்டினியால் நாளாந்தம் ஆயிரக்கணக்கான மக்கள் அங்கு இறந்தார்கள். பெரிய உணவுக் களஞ்சியங்கள் கூட ஜேர்மனியத் தாக்குதல்களால் அழிந்துபோயிரந்தன. எஞ்சியிருந்த உணவுப்பொருட்களில் மிகச்சிறிய அளவை தமக்குள் பங்கீடு செய்து கொண்டு ஏனையவற்றை போர்க்களங்களில் கடுமையாக உழைப்பவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் அனுப்பிவைத்தார்கள். லெனின்கிராட்டில் இருந்த நாய்கள், காகங்கள், எலிகள் என்பனகூட உணவில்லாத தால் அங்கிருந்து வெளியேறி ஜேர்மன் படைகள் நிலை கொண்டிருந்த பகுதிகளுக்குச் சென்றன. மக்களோ பசிக்கொடுமையால் கையில் கிடைத்தவைகளையெல்லாம் உண்ணத் தொடங்கினார்கள். ஜேர்மனியார்களால் அழிக்கப்பட்ட களஞ்சியம் ஒன்றில் தொன்கணக்கான சீனி நிலத்தோடு அழிந்து போயிருந்தது. பல மாதங்களின் பின் அந்த சீனி கலந்த மண் வெட்டியெடுக்கப்பட்டு அங்கு விற்பனை செய்யப்பட்டது. சாவின் மையத்தில் நின்ற இத்தகைய நிலையிலும் லெனின்கிராட் மக்கள் அடிபணிய மறுத்தனர். இந்த இறுமாப்பே அவர்களைப் பின்னர் மனிதர்களாக வாழ வைத்தது; உலகத்தை அவர்கள் பற்றிப் பேசவைத்தது.

உணவுக்கு மாற்றீடாக உண்ணக்கூடியவைகளையெல்லாம் கண்டுபிடித்து பசி தீர்த்துக்கொண்டு தமது இறைமையைக் காக்க அவர்கள் போரிட்டார்கள். போர்க்களம் தவிர்ந்த இடங்களில் எல்லா மக்களுமாக உற்பத்தியில் இறங்கினார்கள். இலாபம் என்பதற்கு அப்பால் எல்லாமே போரை வென்றெடுப்பதற்காகச் செய்யப்பட்டது. குளிரால் பனிக்கட்டியாக உறைந்திருந்த "லெடேகா" என்ற நீளமான ஏரியூடாக தமது நாட்டினுடனான தொடர்புகளை ஏற்படுத்தினார்கள் லெனின்கிராட்டுக்கள். அது மட்டுமே அவர்களுக்குரிய ஒரோயொரு தொடர்புப் பாதையாக இருந்தது.

அதனால்தான் அந்தப்பாதையை அவர்கள் "வாழ்விற்கான பாதை" என்று அழைத்துக் கொண்டார்கள். அதனூடாக மிகச் சொற்பமனா உணவுப் பொருட்களையே அவர்களால் கொண்டுவர முடிந்தது. அதனூடாக பயணம் செய்த வேளைகளில் குளிரால் உறைந்து இறந்து போனவர்கள் பலர். ஜேர்மனியரின் பீரங்கிகளும், விமானங்களும் முழுமூச்சுடன் செயற்பட்டு அந்தப் பாதையை தடைசெய்துவிட முயன்றபோதும் வாழ்விற்கான பயணம் தொடர்ந்தது. அது வெறுமனே உயிர் வாழ்தல் என்பதற்கப்பால் போரை வெற்றிகொள்வதற்காய் இருந்தது.

"வெற்றி ஒரு சிறந்த நாளைக் கொண்டு வரும்" என்ற நம்பிக்கையில் அந்த வெற்றிக்காக லெனின்கிராட் காத்திருந்தது.

அதற்காக உழைத்தது. இயலாத, நோயுள்ள நிலையில் இருந்த மக்கள் லெனின்கிராட்டிலிருந்து "டெடேகா" ஏரியூடாக அப்புறப்படுத்தப்பட்டார்கள். போர்க்களங்களிற்கு இலட்சக்கணக்கில் திரண்டு வந்த மக்களும், உற்பத்தியில் ஈடுபட்டு லெனின்கிராட்டை முற்றுகைக்குள் வாழ் உதவிய உழைப்பாளர்களும், ரஷ்யப்படைகளின் வலிந்த தாக்குதலுக்கான தயார்ப்படுத்தலுக்கு உதவினார்கள். புதிதாக அணிதிரண்ட மக்கள் படையணிகளாலே முக்கணிப்பகுதிகள் காவல்காக்கப்பட்டன. லெனின்கிராட் மக்களின் கைகளில், நகரைக் காவல்காக்கும் பொறுப்பை ஒப்படைத்த முன்னணி இராணுவப்படைகள், தமது மண்ணில் காலடி வைத்திருக்கும் ஜேர்மன் படைகளைத் துவம்சம் செய்து தமது நகரை மீட்டெடுப்பதற்காக கடுமையான பயிற்சிகளிலும், தயார்ப்படுத்தலிலும் ஈடுபட்டன. இறுதியில், அந்த மக்கள் தமது உழைப்பின் அறுவடையைப் பெறத் தொடங்கினார். பெரும் ஆட்பலத்தைப் பெற்றிருந்த ரஷ்யப் படைகளுக்கு இப்போது போதிய ஆயுதங்களும் வந்து சேர்ந்தன. முற்றுகையின் சரியாக 506ம் நாள் லெனின்கிராட்டுக்குரிய தரைப்பாதைகளில் ஒன்றான "சிலில்பேர்" ரஷ்யப் படைகளிடம் வீழ்ந்தது. அப்போது லெனின் கிராட்டில் ஓடிய கார்களின் "கோன்" ஒலிகளும், மக்களின் இசைநிகழ்ச்சிகளும், கூக்குரலும், மகிழ்ச்சி ஆரவாரங்களும் ஜேர்மன் படைகளை எரிச்சலடைய வைத்தது.

அன்றிலிருந்து படிப்படியாக வெற்றிகளைப் பெற்று உறுதியாக முன்னேறினார்கள் லெனின்கிராட் மக்கள். முற்றுகையின் 880ம் நாள் ஜேர்மன் படைகள் முற்று முழுதாகவே அவர்களால் வெற்றிகொள்ளப்பட்டது. அந்த மக்களின் உறுதி, இறுதியில் வெற்றிபெற்றது. பஞ்சமும், பட்டினியும், விடுதலைக்காக அவர்கள் அர்ப்பணித்த வாழ்வும், இறுதியில் அவர்களின் இறைமையைக் காப்பாற்றியது. மின்னலெனப் புறப்பட்ட ஜேர்மன் படைகளை தமது மனவுறுதியால் தடுத்து நிறுத்திய மக்கள், தமது சண்டைப் படைகளுக்கு கால அவசாகத்தைப் பெற்றுக் கொடுத்து இறுதி வெற்றிக்கு வழிகோலினார்கள். அந்த மக்களின் அசையாத உறுதி, கிட்லரின் ஆக்கிரமிப்புப் படைகளை ரஷ்யாவின் எல்லைக் கோட்டோடு மட்டும் விட்டுவிடாது ஜேர்மனியரின் "பேர்லின்" சுவர்வரை விரட்டிச்சென்றது. அந்தத் தோல்வியின் முடிவில் இலட்சக்கணக்கான தனது படைவீரர்களை பறிகொடுத்த கிட்லர் இறுதியில் தற்கொலை செய்துகொண்டான். இன்று தமிழர் போராட்டம் சந்திக்கும் இத்தகைய நிலை, வரைவுபடுத்தப்படப்போகும் விடுதலையின் நாட்களை நினைத்துப்பார்க்க வைக்கிறது.

"வெற்றி ஓர் நிம்மதியான நாளைக் கொண்டு வரும்" என்ற தமது எதிர்பார்ப்பை எமது மக்கள் வென்றெடுக்கப்போகிறார்கள். "சாவுக்கும் அழிவுக்கும் அப்பால், பசிக்கும் பஞ்சத்திற்கும் அப்பால், சுயநல வாழ்வின் சுகபோகங்களுக்கும் அப்பால், ஒரு சுதந்திரமான கௌரவமான வாழ்வில் காதல் கொண்டு நிற்கும் எமது மக்களின் இலட்சியப்பற்றை நான் பாராட்டுகின்றேன்" என தலைவர் அவர்களை நம்பிக்கை கொள்ளச் செய்த மக்கள், இன்று எதையும் தாங்கிக் கொள்ளும் உறுதியுடன் மேலும் எழுச்சி கொண்டு நிற்பது தமிழீழ விடுதலையின் நாட்கள் எண்ணப்பட்டு வருவதை உணர்த்தி நிற்கிறது.




லெனின்கிராட் எல்லையில் ஜேர்மனியத் துருப்புக்கள்.

- ஒக்டோபர் 2000 – எரிமலை


கனடாவில்
ஐங்கரன்
விக்கினேஸ்வராவின்
நூல்கள் வெளியீடு
கனடாவில் நூல் வெளியீடும்
இலக்கிய அரங்கும்;
இடம் : ஸ்கார்பரோ ரீகிரியேசன் சென்டர் மண்டபம்.
Scarborough Recreation Centre
3600 Kingston Rd, Scarborough
ON M1M 1R9
காலம்: 3/11 2024
ஞாயிற்றுக்கிழமை
16.00 மணி
முதல் 19.00 வரை


பாலஸ்தீனம்
எரியும் தேசம்
– நிகழ்கால பாலஸ்தீன போர்க்கள நிகழ்வுகளின் ஆய்வு –
ஐங்கரன் விக்கினேஸ்வரா


ஓர்மத்தின் உறைவிடம்
இஸ்ரேல்
ஐங்கரன் விக்கினேஸ்வரா


இலங்கை இதழியலில்
சிவகுருநாதன்
ஐங்கரன் விக்கினேஸ்வரா
இலங்கை பத்திரிகையியலில் வரலாற்றுச் சாதனைப் படைத்த
இரத்தினதுரை சிவகுருநாதன் அவர்களின் இருபதாம் ஆண்டு நினைவாக...

நவம்பர் - 27

# மாவீரர் நாள்



" உங்கள் சுவடுகளில் – தொடரும்
எங்கள் பாதங்கள்... "